இறக்கை: 14 இறகு: 4

# காக்கைச் சிறகினிலே

இலக்கிய மாத இதழ்

ஏப்ரல் 2025 | விலை ₹ 50



**பெரியாரைப் பெட்டிக்குள் பூட்டவில்லை**

▪ மே.து.ராசுகுமார்

**மருத்துவத்தில் தமிழை பயிற்று மொழியாக்க எந்தத் தடையும் இல்லை!**

▪ சு. நரேந்திரன்

**பூமியைத் தாக்குமா 2024 YR4 சிறுகோள்?**

▪ துருவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சனாதனம் அறிவோம்

சாதி குறித்தும், சடங்குகள் குறித்தும், தினகரன் செல்லையா முகநூலில் ஏதாவது எழுதிக்கொண்டே இருப்பார். அந்த அறிமுகத்தின் தொடர்ச்சியாக, செ.தினகர ஞானகுருசாமி என்ற பெயரில் அவர் எழுதி, கடந்த ஜூலையில் வெளியான, 'சனாதனம் அறிவோம் - Sanathana Leaks ' - முதல் பாகம் நூலை புத்தகக் கண்காட்சியில், வாங்கினேன். படிக்க சுவாரசியமான இந்த நூல் தமிழகத்தின் சிந்தனைப் போக்கில் மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் எனக்கு இல்லை.

'ஆண்பிள்ளை வேண்டும்!' என்று என்று பலர் சொல்லுவது ஏன்? 'திருமணத்தின் போது பூணூல் போடுவது ஏன்?' 'பிரபஸ்பதி!' என்று விளிக்கிறார்களே - யார் அவர்! 'முப்புரி நூல்' என்பது எதைக் குறிக்கிறது. சனாதனம் என்றால் என்ன! மனுநீதிச் சோழன் யார்! (ஏன் பாண்டியன் என்றோ, சேரன் என்றோ இல்லை). பித்ரு கடனால் யாருக்கு பலன்? புண்ணியம் செய்வதற்கும் விதி இருக்க முடியுமா? - இப்படி பல்லாண்டுகளாக, காரணமே தெரியாமல் நடக்கும் பல நிகழ்வுகளுக்கும், விடை தெரியாத பல கேள்விகளுக்கும் இந்த நூல் பதில் சொல்கிறது.

நான்கு வர்ணம், சூத்திரன், சண்டாளன் போன்ற சொற்கள் நாம் கேட்டதுதான். பெயர் சூட்டல், தீட்டு கழித்தல், திருமணம், மரணம், நீத்தார் நினைவு என அன்றாட வாழ்வில் நடக்கும் பல்வேறு சடங்குகளுக்கு நமக்கு விளக்கம் தெரிவது இல்லை. சாதிக்குரிய தன்மைகளோடு பல சடங்குககள் நடைபெறுகின்றன. இந்த நூலைப் படிக்கும்போதே, அதற்கான காரணங்களை புரிந்துகொள்ள முடியும். சில இடங்களில் ரசித்து சிரிக்கவும் முடியும். பகுத்தறிவாளர்களை விட, கடவுளை நம்பிக்கை உள்ள ஆத்திகவாதிகள் இதனைப் படிக்க வேண்டும்.

ஆங்கிலேயர்கள் கொடுத்த 'இந்துமதம்' என்ற பெயரை விரும்பாத மடாதிபதிகள் வைத்த பெயர்தான் சனாதன தர்மம் . இந்த நூலாசிரியர் எதையும் அவராகச் சொல்லவில்லை. ஏற்கெனவே வெளிவந்த நூட்கள், சஞ்சிகைகள், உரைகள் ஆகியவற்றை ஆராய்ந்து, அவைகளை மேற்கோள் காட்டி, அதிலிருந்து தனது விளக்கங்களை தருகிறார். அப்படிச் சொல்பவை அனைத்துமே ஆர்ய தர்மம், தெய்வத்தின் குரல், தர்ம விமர்சனம், வர்ணாச்ரம தர்மம் போன்ற - அந்த மதம் சார்ந்த நூல்கள்தான். பெரும்பாலும் 1920 காலகட்டங்களில் வந்தவை. பார்;ப்பனர்கள் புழங்கிய பகுதிகளில் இருந்து (உ- ம்: கும்பகோணம்) வந்தவை. நூலாசிரியரை குறை சொல்ல இதில் ஏதுமில்லை. அவர் தேர்ந்தெடுத்து கொடுத்துள்ளார்; அதற்கு விளக்கம் தருகிறார். சில புத்தகங்களின் அட்டைகளையும் பின்னிணைப்பாகக் கொடுத்துள்ளார்.

கடவுள் உண்டா, இல்லையா என்று இந்த நூல் பேசவில்லை. மார்தட்டிக் கொண்டு, சமூக மாற்றம் என்றெல்லாம் ஆசிரியர் பேசவில்லை. ஆனால் சனாதனத்தில் 'சூத்திரன், பெண்கள், ஒடுக்கப்பட்டவர்களுக்கு கெட்ட விசயங்கள் மட்டுமே உண்டு. மெஜாரிட்டி மக்களை உள்ளடக்காத ஆன்மீகம், தர்மம், தத்துவம், ஞானம், பிரம்மம் இவற்றில் உண்மை எப்படி இருக்கும்?' என்று முன்னுரையில் தனது நிலை என்னவென்று தெளிவாகக் கூறிவிடுகிறார் செ.தினகர ஞானகுருசாமி. 'பிராம்மணர்களைத் தவிர வேறு யாருக்கும் தானம் வழங்குவதை வைதிக சனாதன நூல்கள் ஆதரிக்கவில்லை. வேறு யாருக்கும் தானம் வழங்கினால் பத்து பிறவிகள் ஓணானாகப் பிறக்க நேரிடும்' என்று விதிகள் பார்ப்பனர்களுக்கு சாதகமாக உள்ளன.

- தொடர்ச்சி 83ஆம் பக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காக்கைச் சிறகினிலே

இறக்கை: 14
இறகு: 4

திருவள்ளுவராண்டு 2055

பங்குனி - சித்திரை
ஏப்ரல் 2025

ஆசிரியர்
வி. முத்தையா
9841457503

ஆசிரியர் குழு
முகிலன்
இரா.எட்வின்

தொடக்க கால நெறியாளர்கள்
காலஞ்சென்ற
கி. பி. அரவிந்தன்
வீர. சந்தானம்

உலகளாவியத் தொடர்பாளர்:
க. முகுந்தன்
K. Mukunthan
kmukunthan@gmail. com

முகப்பு ஓவியம்:
தமிழ்பித்தன்

உள் ஓவியங்கள்:
லெசி

தொடர்பு முகவரி:
காக்கை, 22, MJB தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை- 600 005.
செல்பேசி: 98414 57503

மின்னஞ்சல்:
**kaakkaicirakinile@gmail.com**

இணைய முகவரி: kaakkai.in
www.facebook.com/kaakkai.cirakinile


## உரிமைகளை மறுப்பது: வாழ்வாதாரங்களை பறிப்பது

அமெரிக்காவைத் தலைமையிடமாகக்கொண்ட "இந்தியா ஹேட் லேப்" என்னும் நிறுவனமானது 2024ஆம் ஆண்டில் இந்தியாவில், சிறுபான்மையினர்களுக்கு எதிரான வெறுப்புப்பேச்சுகள் 74 சதவீதம் அதிகரித்திருப்பதாகக் கூறுகிறது. இதுதவிர, வெறுப்பு பேச்சு சார்ந்து பதிவுசெய்யப்பட்ட வழக்குகளில் 98.5 சதவீதம் இஸ்லாமியர்களை குறிவைத்து பதிவாகியுள்ளதாக அந்த ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. வெறுப்புப்பேச்சுக்கு கிறித்துவர்களும் உள்ளாகியுள்ளனர், ஆனால் இஸ்லாமியர்களைவிட குறைவுதான். இந்த வெறுப்புப்பேச்சு நிகழ்வுகளில் 79.9 சதவீதம் பிஜெபி ஆளும் மாநிலங்களில்தான் நடந்திருக்கின்றன.

சிறுபான்மையினர்களுக்கெதிரான வெறுப்புப்பேச்சுகள் 2025 ஆண்டின் இதுநாள் வரையிலும் அதன் வீச்சு குறையாமல் தொடருவதை ஊடகங்களின் வழியாக அறிய முடிகிறது. மிகச்சமீபத்தில் பிஜெபி ஆளும் மாநிலங்களான உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், அசாம், உத்தரகாண்ட் போன்றவற்றில், இஸ்லாமியர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட வன்முறைகளைக் கவனிக்கும்போது, கிரிக்கெட் விளையாட்டு வெற்றிக்கொண்டாட்டத்தின்போது; பண்டிகையை முன்வைத்து; திரைப்படத்தை முன்வைத்து நடப்பதாக இருக்கிறது. இதுமட்டுமல்லாது, இஸ்லாமியரின் வணிகத்திற்கு இடையூறு, மதக்கட்டமைப்புகளைக்கைப்பற்றுதல், வாழிடங்களைத்தாக்கி சொத்துக்களைச் சூறையாடுவது உள்ளிட்டவைகள் என்பதாகவும் இருக்கிறது. இன்னும் சற்று சுருக்கமாகக்கூறினால், இஸ்லாமியர்கள் பொதுவெளிகளில் நடமுடியாத அளவுக்கு கண்காணிப்பது; எங்கும் எதிலும் ஒதுக்கி அல்லது விலக்கிவைப்பது; அவர்களுக்கு எதிராக சமயம் கிடைக்கும்போதெல்லாம் வன்முறைகளை நிகழ்த்துவதென்பதும் வாடிக்கையாக இருப்பதைக்காண முடிகிறது.

ஒன்றியத்திலும் மாநிலத்திலும் ஆட்சியிலிருக்கும் வலதுசாரி பிஜெபி ஆட்சியாளர்கள் சிறுபான்மையினர்களுக்கெதிராக இரண்டு வழிகளில் செயல்படுவதைக்கவனிக்கமுடிகிறது. ஒன்று, ஒன்றிய-மாநில ஆட்சியதிகாரத்தின் உதவியுடன் இஸ்லாமிய குடிமக்களின் உரிமைகளைப் பறிக்கும் விதமாக சட்டங்களை இயற்றி அம்மக்களை ஒடுக்குவதாக இருப்பது. அடுத்தது, வலதுசாரி பாஸிச அமைப்புகளின் துணையுடன் பொதுவெளிகளில் உற்பத்தி செய்யப்பட்ட பிரச்சினைகளை முரணாக்கி (MANUFACTURING CONFLICT) அம்மக்களுக்கு எதிராக வன்முறை நிகழ்த்துவது என்பதாக இருக்கிறது.

வலதுசாரி பாஸிச அமைப்புகளும், ஒன்றிய-மாநில ஆட்சியாளர்களும் சிறுபான்மை இஸ்லாமியர்களுக்கெதிராக மதவெறிச்செயலில் ஈடுபடுவது ஒருபுறமிருக்க, இன்னொருபுறம் ஒன்றிய ஆட்சியாளர்கள் திராவிட இன எதிர்ப்பு, மொழிக்கெதிராக தேசியக்கல்விக்கொள்கை மூலம் இந்தித்திணிப்பு மற்றும் தொகுதி மறு வரையறை மூலம் மக்கள் பிரதிநிதித்துவத்தை குறைப்பதற்கான முயற்சிகளில் இறங்கியிருப்பதைக் கவனிக்கமுடிகிறது. ஒன்றிய அரசின் இத்தகைய செய்கைகளானது, அரசியல் அமைப்புச்சட்டத்தில் உறுதிசெய்யப்பட்டுள்ள சட்டப் பாதுகாப்பு அம்சங்கள் யாவற்றையும் அத்துமீறுவதாகவே இருக்கிறது.

வலதுசாரிகள் அரசியலமைப்புச்சட்டத்தின்படி, தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைக்கின்றனர். ஆட்சியிலமர்ந்ததும் அரசியலமைப்புச்சட்டத்தினை ஒதுக்கிவைத்துவிட்டு ஏற்றத்தாழ்வு கொண்ட சனாதன அரசியலை கையிலெடுக்கின்றனர். சனாதனமிக்க மதக் கலாச்சாரத்தினை படிநிலையில் வாழும் மக்களிடம் கொண்டுசென்றால் எடுபடாது என்பதால், பிற மத வெறுப்பினையூட்டி மதத்தினை வளர்க்கப்பார்க்கின்றனர். மதத்திலிருந்து அரசியலைப்பிரித்து ஜனநாயகம் மலர்ந்த காலம்போய், மீளவும் மதமும் அரசியலும் கார்ப்பரேட்டுகளுடன் இணைந்து சிறுபான்மையினர்களை ஒடுக்குவது, பெரும்பான்மையான மக்களின் ஜனநாயக உரிமைகளையும், வாழ்வாதாரங்களையும் மறுப்பதென்பது கொடுமையிலும் கொடுமை. •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கைச் சிறகினிலே

ஒவ்வொரு மாதமும்
1 ஆம் தேதி உங்கள் கைகளில்

ஒவ்வொரு மாதமும்
29 அல்லது 30ஆம் தேதியில்
'காக்கைச் சிறகினிலே' இதழ்
அஞ்சல் செய்யப்படுகிறது.
அடுத்து வருகிற 5ஆம் தேதிக்குள் இதழ்
கிடைக்கப் பெறாதவர்கள்
தொடர்புகொள்ள வேண்டிய
செல்பேசி எண்: 98414 57503

தனிஇதழ் விலை ரூ. 50.00
ஆண்டு சந்தா ரூ. 500.00
இரண்டாண்டு சந்தா ரூ. 750.00
ஐந்தாண்டு சந்தா ரூ. 2000.00

வெளிநாடு

ஆண்டு சந்தா $ 50.00

வங்கி விவரம்
A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
IFSC: CNRB0000914

Google Pay மூலம் செலுத்த:
செல்பேசி எண்: 98414 57503

வெளிநாட்டு வாசகர்கள் சந்தா செலுத்த:
A/C Name : kaakkai
A/C No : 60111010005660
CANARA BANK
TRIPLICANE BRANCH
CHENNAI - 600 005
SWIFT CODE : CNRBINBBBFD

விளம்பரக் கட்டணம்
பின் அட்டை வண்ணம் ரூ.15000
உள் அட்டை வண்ணம் ரூ.10000
உள்பக்கம் கருப்பு - வெள்ளை ரூ.5000

காக்கையில் வெளியாகும் கதை, கவிதை மற்றும் கட்டுரைகளின் கருத்துகள், எழுத்தாளர்களின் கருத்தாகும். காக்கையின் கருத்தாகாது.

## சிறகுக்குள்ளே...

பெரியாரைப் பெட்டிக்குள் பூட்டவில்லை
► மே.து.ராசுகுமார் ........ 05

தி.மு.க. எதிர்ப்பு அரசியல்.. யாருக்காக?
► தி.சிகாமணி ........ 13

வஞ்சிக்கப்படும் தென் மாநிலங்கள்
► கௌசிக் ........ 17

தமிழ்நாட்டின் பொருளாதார ஆய்வறிக்கையும் பட்ஜெட்டும்
► மாதவன் ........ 20

காவிமய அரசின் சட்ட ஆயுதங்கள்!
► மதுரை குமரன் ........ 24

எலோன் மஸ்க் கைகளில் அமெரிக்க ஆட்சி நிர்வாகம்!
► ரூபன் சிவராஜா ........ 29

தொல் தமிழ்நாட்டில் இரும்பு யுகம்
► நெல்லை சு.முத்து ........ 35

வரலாற்றுப்போக்கில் தென்னகச் சமூகம்
► கி.இரா.சங்கரன் ........ 39

இதுபோல இன்னொன்று எளிதில் வராது!
► எம். பாண்டியராஜன் ........ 42

ஆரஞ்சு நிறத்தைக் கபளீகரம் செய்த காவி
► சுப்ரபாரதி மணியன் ........ 48

ஏன் இந்த புதிய விவாதம்?
► க. பழனித்துரை ........ 50

தமிழை பயிற்றுமொழியாக்க எந்தத் தடையும் இல்லை!
► டாக்டர் சு. நரேந்திரன் ........ 54

ஆன்மீகத்தின் மூலம் ஒரு சமூகப் புரட்சி
► இரா.முரளி ........ 56

விருதை சிவஞான யோகிகள்
► கு. மகுடீஸ்வரன் ........ 61

65/66
► இரா.எட்வின் ........ 65

நவதாராளமயமாகும் கடல் வளங்கள்
► மு.வெற்றிச்செல்வன் ........ 67

அடுத்தது, நீலப் புரட்சி!
► சுகதேவ் ........ 70

மனிதர்நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை
► பொன். தனசேகரன் ........ 75

தாயே தாரக மந்திரம்
► ஜெ.பார்வதி ........ 78

பூமியைத் தாக்குமா 2024 YR4 சிறுகோள்?
► துருவன் ........ 80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | மே.து.ராசுகுமார்

# பெரியாரைப் பெட்டிக்குள் பூட்டவில்லை




தந்தை பெரியார் வாழ்ந்த காலத்தைவிட மிகுதியான தனிநபர் தாக்குதல்கள் தற்போது அவர் மேல் தொடுக்கப்பட்டு வருகின்றன.

1. பெரியார் கன்னடியர்
2. தமிழருக்கும் தமிழ்நாட்டுக்கும் பகையானவர்
3. தமிழர் உரிமைகளைப் பறிக்கவே திராவிடம் என்பதை முன்னிறுத்தினார்
4. பெண்களைத் துய்க்கும் பொருளாக இழிவுபடுத்தினார்
5. தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று தாழ்த்திப் பேசினார்
6. தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்கவில்லை

என்பன போன்ற குற்றச்சாட்டுகள் இப்போது பெரியாரைப் பற்றி எழுப்பப்படுகின்றன. காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகித் தனி இயக்கம் கண்ட நாளிலிருந்து பெரியார் எதிர்கொண்ட தாக்குதல்கள் பல. அவற்றையெல்லாம் எதிர்த்து நின்றுதான் பெரியார் தன்னை நிலைநிறுத்திக்கொண்டார். தமிழர்களைத் தலைநிமிரச் செய்தார்.

வெளிப்படையாகவே துணிச்சலுடன் தனது பரப்புரைகளைத் தொடர்ந்துகொண்டிருந்தவர் பெரியார். அப்போதெல்லாம் பெரியார் மேல் இத்தகைய தனிப்பட்ட தாக்குதல்களும் உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுகளும் எந்தக் கட்டத்திலும் எழுந்ததாகத் தெரியவில்லை. கருத்தளவிலும் கொள்கை நிலையிலும் அரசியல் சார்பிலும் சமூகப் பார்வையிலும் தத்துவக் கோட்பாடுகளிலும் போராட்டப் போக்குகளிலும் முரண்பட்டுப் பேசியோரும் எழுதியோரும் இயங்கியோரும் பெரியார் காலத்தில் இருக்கத்தான் செய்தார்கள். அவர் மறைந்து அய்ம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

பார்ப்பனர், இந்துச் சமயப் பித்தர், கடவுள் பற்றாளர், மக்களைக் கீழ்ப்படுத்திய மேல்நிலையினர், மாற்று அரசியல் இயக்கத்தினர் எனப் பெரியாரோடு பகைமை கொண்டோர் அன்றும் இருந்தார்கள், இன்றும் இருக்கிறார்கள். இவர்கள் பெரியாரை ஏற்காவிடினும், அவரது செயல்பாடுகளில் உள்நோக்கம் கண்டதாகத் தெரியவில்லை. ஆனால், இன்று பெரியார் குறித்து எழுப்பப்படும் அய்யங்கள் அல்லது வினாக்கள் உள்நோக்கம் கொண்டவையாக அமைந்திருக்கின்றன என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

1. பார்ப்பனர்
2. இந்துப் பித்தர்
3. அடித்தள மக்களை மேலேற்ற மறுப்போர்
4. உண்மையான தமிழ்த் தேசியரில் சிலர்
5. அரசியலுக்காக மட்டுமே தேசியம் பேசும் சீமான்

போன்றோரிடமிருந்து பெரியார் மறுப்புக் குரல்கள் இப்போது மேலோங்கி எழுகின்றன. இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமெனில், தமிழ்த் தேசியர்களில் சிலரும் சீமான் குழுவினரும் மட்டும்தான் இத்தகைய பெரியார் இழிவுப் பரப்பலில், பொய்மைகளைப் புனைந்துரைத்து வருகின்றனர். இவர்களில் சீமான் தமிழ்த் தேசியப் போர்வையில் தேர்தல் அரசியலில் ஈடுபட்டுள்ளதால், அவரது பரப்புரையின் பகுதியாக நாள்தோறும் வெவ்வேறு சொற்களில் பெரியாரைத் தரம் தாழ்த்தித் தூற்றும் முயற்சிகளை முன்னெடுத்து வருகிறார். தன்னுடைய இழிவுப் பணிகளைத் தானாக சீமான் மேற்கொண்டு வருவதாலோ அல்லது அவருக்குத் தந்த பணிகளைச் செம்மையாகச் செய்துவருவதாலோ, பிற பெரியார் எதிர்ப்பாளர்களின் நோக்கங்கள் முழுமையாக நிறைவேறி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால்தான், தமிழ்த் தேசியர் சிலரும் பாரதிய சனதாக் கட்சியினரும், மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் சீமானது வெறுப்பு அரசியலுக்கு அவ்வப்போது முட்டுக்கொடுத்து ஏற்பளித்து வருகின்றனர். இதைப் போன்று, சீமானும் பா.ச.க.வினரின் அடிப்படையான இந்துத்துவ அரசியலுக்கு அவ்வப்போது வெளிப்படையாகவே இணக்கம் காட்டிவருகிறார்.

பெரியார் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர் என்ற குற்றச்சாட்டு முழுமையாக முறியடிக்கப்பட்டுவிட்டது என்றுதான் கூறவேண்டும். கேரள, ஆந்திர, கன்னடப் பகுதிகள் சில சென்னை மாமாநிலத்தில் இணைந்திருந்தபோது பெரியார் கொண்டாடிய 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற எதிர்பார்ப்பு நிலைப்பாடு முன்னது. மொழிவழி மாநிலங்கள் அமைந்து, தமிழ் மொழி பேசுகின்ற தனி மாநிலம் உருவான பின்னர் பெரியார் தனது முந்தைய நிலைப்பாடுகளைத் தயக்கமில்லாமல் மாற்றிக்கொண்டு, 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற புதிய முழக்கத்தினை ஏற்றுக்கொண்டுவிட்டார்.

இன்னும் சொல்லப்போனால், தொடக்கத்தில் பெரியார் முன்னெடுத்தது 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம்தான். திணிப்பு இந்தியை எதிர்த்து, 100 பேர், 42 நாள்கள் திருச்சியிலிருந்து நடைபயணமாக 11-09-1938 அன்று சென்னை வந்து சேர்ந்தபோது நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று அறிவித்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டப் பின்னணியில் தளைப்படுத்தப்பட்டு பெல்லாரி சிறையில் இருந்தபோதுதான், கி.ஆ.பெ. விசுவநாதன் போன்றோரின் வேண்டுகோளினை ஏற்று நீதிக் கட்சியின் தலைமைப் பொறுப்பைப் பெரியார் ஏற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து, 1938 திசம்பர் 29-31 ஆகிய நாள்களில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டின் தலைமையுரையிலும், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற தனது எதிர்பார்ப்பினைப் பெரியார் உறுதி செய்துவிட்டார். பெரியார் சிறையில் இருந்தபோது எழுதித் தந்த தலைமையுரை இது.

பெரியார் சிறையிலிருந்து வெளிவந்த பின்னர், சென்னையிலுள்ள செட்டிநாடு மாளிகையில் தமிழகம், கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய பகுதிகளிலிருந்து கலந்துகொண்ட நீதிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில்தான் அனைவரது வேண்டுகோளினையும் ஏற்று, அன்றைய சென்னை மாமாநிலத்தின் அமைவையும் கணக்கில் கொண்டு 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற புதிய முழக்கத்தினைப் பெரியார் ஒப்புக்கொண்டார்.

இதனையொட்டி, 'குடியரசு' இதழின் முகப்பில், 1939 திசம்பர் திங்களிலிருந்து 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற சொற்கள் இடம் பெற்றுவந்தன. அடுத்து, 1949 மே திங்களில் திராவிட நாட்டின் அரசமைப்புச் சட்டம் என்ற பெயரில் வரைவு ஒன்று வெளியிடப்பட்டது. அதில், தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கர்நாடகம் உள்ளிட்ட பகுதிகள் திராவிட நாட்டில் அடங்கியிருக்குமென்றும், மாநிலங்கள் தனியாகப் பிரிந்து செல்லும் உரிமை உடையன என்றும் கூறப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். திராவிட நாடு என்ற ஒன்றியத்துள்ளும். தமிழ்நாட்டின் தனியுரிமை கைவிடப்படவில்லை.

1956 நவம்பர் முதல் நாள் மொழிவழி மாநிலங்கள் உருவான பின்னர், நவம்பர் 5ஆம் நாள் திருச்சியில் கூடிய திராவிடர் கழகப் பொதுக் குழுக் கூட்டத்தில், 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் மீண்டும் உயிர்பெற்றது. இதனையடுத்து, 'விடுதலை' இதழ் முகப்பிலும் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதற்கு மாற்றாக, 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற முழக்கம் மாற்றி அமைக்கப்பட்டது.

பெரியாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காமராசர் தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பிலிருந்தபோதுதான் 05-05-1960ஆம் நாள் தமிழ்நாடு நீங்கலான இந்திய ஒன்றிய வரைபடத்தினை எரிக்கும் போராட்டம் நடைபெற்றது. பெரியாரும் தளைப்படுத்தப்பட்டார். பின்னர் தனது உயிர்மூச்சு இருக்கும் வரை, பெரியாரின் செயல்பாடுகள் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்பதாகவே நீடித்திருந்தன. அவரது உயிர்மூச்சு நிற்பதற்கு முன்னர் தனது பிறந்த நாள் செய்தியிலும், சென்னை தியாகராயநகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் நிகழ்த்திய இறுதிப் பேருரையிலும் தனித் தமிழ்நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோளினையே அவர் நடுவப்படுத்தியிருந்தார்.

அண்ணா தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகம் தனது திராவிட நாடு வேண்டுகோளினைக் கைவிடுவதற்குப் பல்லாண்டுகள் முன்னரே பெரியார் திராவிட நாட்டுக்கு மாறாகத் தனித் தமிழ்நாட்டினை முன்மொழிந்து விட்டார் என்பதுதான் வரலாறு.



இவற்றால், பெரியார் தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர், கன்னடியர் என்பன போன்ற குற்றச்சாட்டுகள் மக்களிடையே எப்போதும் எடுபடவில்லை. பெரியாரின் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை மறைக்கவும் சாதி மறுப்பு, சமய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, பார்ப்பனிய எதிர்ப்பு, பெண் விடுதலை, பகுத்தறிவு, தமிழ்த் தேசியம் போன்றவற்றிலான பெரும் பங்களிப்பினைக் குறைக்கவும் பகையாளர்களால் எப்போதும் முடியவில்லை.

இன்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், பா.ச.க.வின் மாநிலத் தலைவர் அண்ணாமலை, எச். ராசா, நிர்மலா சீதாராமன் போன்றோர் மக்களிடையே மதிப்பு ஏதும் கொண்டோர் இல்லை. நுட்ப முன்னேற்றத்தினால் வளர்ந்திருக்கும் ஊடகங்கள் வாயிலாகவே அவர்கள் தங்களது தாக்குதல்களைப் பெரிதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். மக்களிடையே சென்று பரப்புரை செய்யுமளவுக்கான ஈர்ப்பு ஆற்றல் அவர்களுக்கு அமையவில்லை. நாம் தமிழர் கட்சியினரோ, பா.ச.க.வினரோ மக்களைத் திரட்டும் கொள்கைகளைக் கொண்டிருக்கவில்லை. இவர்களுக்குப் பல பத்தாண்டுகளுக்கு முன்னரே இருளில் கிடந்த தமிழகத்தின் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று பெரியார் தனது கருத்துக்களை விதைத்துவிட்டார். அவரது இயக்கத்தினரான திராவிடர் கழகத்தினரும் பணிகளைத் தொடர்கின்றனர். அய்யா ஆனைமுத்து அவர்கள் தொடங்கித் தற்போது வாலாசா வல்லவன் தலைமையில் இயங்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, விடுதலை ராசேந்திரன், கொளத்தூர் மணி ஆகியோரது தலைமையில் செயல்படும் பெரியார் திராவிடர் கழகம், கோவை இராமகிருட்டிணன் தலைமையிலான பெரியார் இயக்கம் போன்றவையும் பெரியாருடைய பணிகளை முன்னெடுத்து வருகின்றன. இவையன்றி, திருமுருகன் காந்தி தலைமையிலான மே 17 இயக்கம் போன்ற பல அமைப்புகள் பெரியார் பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

பெரியார் இயக்கம் பிளவுபட்டுப் பல்வேறு பெயர்களில் செயல்பட்டுவந்தாலும், அரசியலுக்கு அப்பால் கொள்கைகளைப் பரப்புரை செய்யும் எடுத்துக்காட்டுகளாகப் பலரும் விளங்குகின்றனர் என்பதையும் புறக்கணித்துவிட முடியாது.

இதனால்தான், பெரியார் வெறுப்புக் கருத்துக்களை முன்வைத்துச் செல்வாக்குப் பெறப் பகையாளர்களால் முடியவில்லை. இந்தக் கருத்துக்களையெல்லாம் பெரியாருக்கு முன்னரே சித்தர், வள்ளலார், அயோத்திதாச பண்டிதர் போன்றோர் கூறிவிட்டதாகக் குரல் எழுப்புகின்றனர். இவற்றில் உண்மைகளும் இல்லாமல்இல்லை.ஆனால்,இவற்றையெல்லாம் முன்னெடுத்துப் பெரியார் இயங்கியதையும் இயக்கம் கண்டதையும் மறுப்பார் எவருமில்லை. தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளெல்லாம் பயணம் செய்து தனது கொள்கைகளைப் பரப்புரை செய்ததில்தான் பெரியாரின் பங்களிப்புத் தனித்து மேலோங்குகிறது. சுயமரியாதை இயக்கம் தொடங்கிய காலத்திலிருந்து ஏறக்குறைய அய்ம்பது ஆண்டுகள் பணியாற்றிய பெரியாரின் பங்களிப்புகளைக் குறைத்து மதிப்பிட இயலாத நிலைதான் தொடர்ந்துகொண்டிருக்கிறது. வேறு எதையும் எடுத்துப் பெரியாரைத் தாழ்த்த முடியாது என்ற நிலையில், தற்போது பெண்களை வரையற்ற துய்த்தலுக்குப் பெரியார் பரிந்துரைத்து இழிவுபடுத்தியுள்ளார் என்பதாகவும், தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று தாழ்வுபடுத்தியுள்ளதாகவும் பொய்யுரைத்துத் தமிழரிடையே செல்வாக்குப் பெறமுடியும் என்று சிலர் நம்புகின்றனர்.

கடவுளர் புராணங்களில் நிகழ்வதாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பனர் கற்பித்துக் கூறியிருக்கும் கட்டுக் கதைகளில் உள்ளவற்றையே பெரியார் சுட்டிக்காட்டியுள்ளார் என்பதை மறைத்துவிடுகின்றனர். தாய், மகள், உடன்பிறந்தார் என்னும் வேறுபாடின்றி இன்பம் பெறுவதாகக் காட்டப்படும் புராணங்களையே பெரியார் எடுத்துக்காட்டியுள்ளார். முன் பின் கூறியவற்றை மறைத்து, அவை பெரியார் கருத்துக்கள் போன்று காட்டப்படுகின்றன. மகளிர் உறவுகளுக்குள் உறவுகொள்ளலாம் எனப் பெரியார் மொழிந்ததாகச் சீமான் போன்றோர் பிதற்றி வருகின்றனர்.

உலகெங்குமுள்ள பெண்ணியலாளர்களே வியக்கும் வண்ணம் மகளிர் மாண்புகளையும் உரிமைகளையும் பெருமைகளையும் சிறப்புக்களையும் விளக்கிப் 'பெண் விடுதலை' என்ற பெயரில் நூல் வகுத்த பெரியார், பெண்களைச் சிறுமைப்படுத்துவதாகப் பேசவும் துணிந்துள்ளனர்.

தமிழ் காட்டுமிராண்டி நிலையில் இருந்தபோது பேசிய மொழியாகவே தொடரக்கூடாது, நீடிக்கக்கூடாது என்னும் பொருளில் பெரியார் பேசியதைப் பிரித்தெடுத்துக்கொண்டு, தமிழைத் தாழ்த்திவிட்டதாகச் சீமான் பேசி வருகிறார். சீமானுக்குத் துணையாக அண்ணாமலை நிற்கிறார். இப்போது நாடாளுமன்றத்தில் நிர்மலா சீதாராமன் நிலை தவறிப் பேசும் அளவிற்கு இது சென்றுவிட்டது.

எழுத்திலும் பேச்சிலும் தனக்குப் பிடிக்காதவற்றை வன்மையுடன் தாக்கிப் பேசுவதும், பிடித்ததை வற்புறுத்தி வலியுறுத்துவதும் பெரியார் இயல்புதான். ஆனால், பெரியார் கூற்றுகளின் முழுமையைப் புரிந்துகொள்ளாமல், எந்தச் சூழலில், எதற்காகச் சொல்லப்பட்டது என்பவற்றை மறைத்து, பெரியாரின் கருத்துக்களுக்கு முரணாக எடுத்துரைப்பது நேர்மையான போக்கல்ல. மேலும், தான் கூறியவை அனைத்தையும் ஆழ்ந்து எண்ணிப் பார்த்து உண்மை இருப்பதாக நம்பினால் மட்டுமே அவற்றை எடுத்துக்கொள்ளவேண்டுமெனப் பெரியார் தனது உரைகளிலும் எடுத்துக்களிலும் தெளிவாகச் சொல்வதையும் இவர்கள் மறந்துவிடுகின்றனர்.

பெண் இழிவு, தமிழ்த் தாழ்வு ஆகியன பற்றிப் பெரியார் கூறியதாகக் கற்பித்துச் சொல்லப்படும் கூற்றுகளுக்கான சான்றுகளைக் கேட்டால் மழுப்பலாகவே விளக்கங்கள் வெளிவருகின்றன.

1. பெரியார் படைப்புகள் முழுமையாகக் கிடைக்காமல் மறைக்கப்பட்டுவிட்டன
2. பெரியார் படைப்புகளை இன்னும் நாட்டுடைமை ஆக்கவில்லை

என்றெல்லாம் திக்குத் திருப்பும் முயற்சிகள் நடக்கின்றன. தி.மு.க. பிரிந்தபோது அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்கள் குறித்துப் பெரியார் எழுதிய மற்றும் பேசிய இழிவுரைகள் வெளியில் தெரிந்துவிடக்கூடாது என்பதால்தான் பெரியார் படைப்புகள் நாட்டுடைமையாக்கப்படாமல் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்று சில தமிழ்த் தேசியர்களும் சீமான் போன்றோரும் குறை கூறிவருகின்றனர். இதனால்தான், பெரியார் கூறியதாகச் சொல்லப்படும் கருத்துகளுக்கான சான்றுகளைத் தர முடியவில்லை என்று சீமான் கூறுகிறார். இதற்கான சான்றுகள் தன்னிடம் இருப்பதாகவும் அவற்றைச் சீமானுக்குத் தரப்போவதாகவும் அண்ணாமலை அறிவிக்கிறார்.

பெண் இழிவு, தமிழ்த் தாழ்வு குறித்துப் பெரியார் கூறியதாக எடுத்தாளப்படும் கருத்துக்களைப் பெற முடிந்தபோது, அவற்றுக்கான சான்றுகள் கிடைக்கவில்லை என்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. முழு பகுதிகளும் கிடைப்பதால்தானே, அதிலிருந்து வேண்டியவற்றை எடுக்க முடியும். எங்கிருந்து இந்தப் பகுதிகளை அவர்கள் தேர்ந்தெடுத்தார்களோ அங்கேயே இவற்றுக்கான முழுமையான விளக்கங்களும் விரிவுரைகளும் இருக்கின்றன என்பதை மறந்துவிடுகின்றனர். இதைப்போன்று அண்ணாமலையிடம் சான்றுகள் இருக்கின்றன என்றால், அவை யாவும் பொதுவெளியில் இருப்பதாகத்தானே ஆகிறது. உண்மை நிலை இப்படியிருக்க, சீமான் ஓடி ஒளிவதற்கான பின்புலம் யாது?

வேறொன்றுமில்லை. சீமானுடைய புனைவுகள் எல்லாம் கற்பனைகள் என்று தெளிவாகத் தெரிந்துவிட்டது. அதனால்தான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ் மொழி குறித்துப் பெரியாருடைய கருத்துகள் எப்போதுமே மொழிக்கு எதிரானதாக, தமிழர்களுக்கு மாறானதாக இருந்ததில்லை. அறிவுறுத்தலாகக் கடுஞ்சொற்கள் வந்திருக்கலாம். ஆக்கத்தின்பாற்பட்டதாகவே அவை அமைந்திருக்கின்றன. அவருடைய நிலைப்பாடு அடுத்தடுத்த காலங்களில் மேலும் செழுமை பெற்றிருக்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.**

---

தப்பிக்கக் காரணிகளைத் தேடுகிறார்.

உலக வரலாற்றில் பெரியார் தொடங்கிவைத்த முறையொன்று தனித்துவமாக இன்றும் நீடித்து வருகிறது எனலாம். எழுத்துக்களுக்கு மேலாக, பொதுக்கூட்டங்களில் பெரியார் பேசியனவெல்லாம் பெரும்பாலும் 'குடியரசு,' 'விடுதலை' போன்ற அவர்களது இதழ்களில் முழுமையாகவோ, வேண்டியளவோ வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்த நடைமுறையினைத் தி.மு.க.வும் தொடர்ந்தது. அண்ணாவின் சொற்பொழிவுகள் 'நம் நாடு' நாளிதழில் முழுமையாக வெளிவந்தன. கலைஞரின் எழுத்துக்களோடு, சொற்பொழிவுகளும் 'முரசொலி'யில் பதிவு பெற்றன.

சோவியத் ஒன்றியத்திலும் இந்த நடைமுறை பின்னர் ஏற்பட்டது. குருச்சேவ், பிரெஷ்னேவ் போன்றோரது சொற்பொழிவுகளை 'பிராவ்தா'வும் 'இசுவெசுதியா'வும் வெளியிட்டன. கியூபாவின் தலைவர் காஸ்ட்ரோ எழுத்துக்களுடன், பேச்சுக்களெல்லாம் 'கிரன்மா'வில் அச்சுருப்பெற்றன.

இந்திய ஒன்றியத்தைப் பொருத்தவரை, தி.க. மற்றும் தி.மு.க. ஆகியன இந்த நடைமுறையை, கொள்கை மற்றும் அரசியல் பரப்புரையாக இன்று வரை தொடர்ந்து வருகின்றன. இந்திய ஒன்றியத்தில், பிற மாநிலக் கட்சிகளும் தேசியக் கட்சிகளாக இருப்பவையும் இதனைப் பரவலாகப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை.

எனவே. பெரியாரது எழுத்துக்களோடு உரைகளும் பெரிதும் மறைந்துவிடவில்லை என்று கூறிவிட முடியும். இவையெல்லாம் கல்வெட்டுகள் போல, 'குடியரசு,' 'விடுதலை' போன்ற நாளேடுகளில் எளிதில் கிடைக்குமாறு காணக் கிடைக்கின்றன. இவற்றில் தாக்குதல்களும் இருக்கும், தாங்கிப் பிடித்தலும் இருக்கும். ஆனால், எதையும் பெரியார் இயக்கத்தினர் மறைத்து வைக்கவில்லை. இவற்றில் பெரும்பாலானவை நூல்களாகவும் தொகுக்கப்பட்டிருக்கின்றன.

அரசு ஆவணங்கள் போன்றோ, மறைவுக் குறிப்புகள் போன்றோ, இவற்றையெல்லாம் அலுவலக அறைகளுக்குள் அல்லது பெட்டிகளுக்குள் அவர்கள் பூட்டி வைத்திருக்கவில்லை.

பெரியாரின் படைப்புகள் சிலவற்றை மறைத்துவிட்டார்கள் என்ற கூற்றில் எத்தகைய உண்மையும் இல்லை. கொள்கை மற்றும் கருத்துக்களில் மக்கள் தெளிவு பெறுவதற்காக வேண்டியவற்றையெல்லாம், பகுத்தறிவுப் பரப்பலுக்கும், சீர்திருத்தச் சிறப்புகளுக்கும் சமூக மாறுதல்களுக்கும் பயனாகும் பொருட்டு. திராவிட இயக்கத்தினர் வெளியிட்டுக்கொண்டுதான் இருக்கின்றனர்.

தி.மு.க. பிரிந்தபோது அண்ணா, கலைஞர் பற்றிப் பெரியார் எழுதியவற்றையும் பேசியவற்றயும் மறைத்துவிட எவரும் நினைப்பதாகத் தெரியவில்லை. பெரியார் பற்றாளர்களைப் பொருத்துத் தி.மு.க. எதிர்ப்பு நிலை இப்போது இல்லை. அதனால், அன்றைய கருத்துக்கள் பல இன்று பொருத்தமற்றதாக இருப்பதால் அவற்றை வெளியிடவில்லை. ஆனால், இவை குறித்த பதிவுகளை எவரும் மறைத்துவிடவில்லை; அழித்துவிடவுமில்லை.

இவற்றை சீமானோ, அண்ணாமலையோ அல்லது வேறு ஒருவரோ வேண்டியவாறு வெளியிட எத்தகைய தடையும் இருக்கவில்லை.

இவை யாவும் 'விடுதலை' அலுவலகத்திலும் அண்ணா அறிவாலய நூலகத்திலும் காக்கப்பட்டு வருகின்றன. இவையன்றி, பெரியார் பற்றாளர்கள், திராவிட இயக்கத்தினர் என நூற்றுக்கணக்கானோர் பெரியார் எழுத்து மற்றும் பேச்சு ஆவணங்களாக அமையும் 'குடியரசு,' 'விடுதலை' போன்ற இதழ்களைப் பொன்னைக் காப்பது போலக் காத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றனர் என்பதையும் நோக்க வேண்டும்.

இவ்வாறு பொதுவெளியில் வேண்டியவாறு கிடைக்கின்ற படைப்புகளை உள்நோக்குடன் மறைத்துவிட்டதாகப் பெரியார் மறுப்பாளர்கள் புலம்பித் திரிகின்றனர்.

அண்ணா, கலைஞர் போன்றோரைத் தாக்கி எழுதப்பட்டவை வெளியில் கிடைக்காதக்கூடாது என்பதற்காகத்தான் பெரியார் படைப்புகள் நாட்டுடைமையாகவில்லை என்பதிலும் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை.

அண்ணா படைப்புகள் பல்லாண்டுகளுக்கு முன்னரே நாட்டுடைமையாக்கப்பட்டுவிட்டன. உரிமைத் தொகையில்லாமல், கலைஞர் படைப்புகளும் தற்போது காப்புரிமை நீக்கப்பட்டுள்ளன. இவர்கள் இருவரும், பெரியார் குறித்து மறுப்பாகப் பேசியவையும் எழுதியவையும் சேர்ந்துதான் பொதுவெளிக்கு வந்துள்ளன. காந்தி, நேரு, காமராசர், ராசாசி, பொதுவுடைமையினர் போன்றோரைப் பற்றிய தாக்குதல்களும் கருத்துக்களும் இவற்றில் அடங்கும். இவற்றைத் தி.மு.க.வினர் இப்போதைக்கு நூலாக்காமல் இருப்பதால், வெளியிடத் தடையிருக்கிறது என்று எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

பாரதியில் தொடங்கி, பாரதிதாசன் உள்ளிட்டு, அண்ணாவிலிருந்து கலைஞர் வரை பலரது படைப்புகளும் நாட்டுடைமையாக்கப்பட்டபோது, பெரியாரது எழுத்துக்கள் மட்டும் ஏன் காப்புரிமை கொண்டதாக இருக்கவேண்டும் என்ற வினா இந்த இடத்தில் எழுவது இயல்புதான்.

இந்தியக் காப்புரிமைச் சட்டத்தின் அடிப்படையில் ஒருவரது படைப்புகளுக்கான காப்புரிமை அவரது வாழ்நாள் முழுமைக்கும் இருக்கும். மேலும், அவர் மறைந்த பின்னரும் அடுத்த ஆண்டிலிருந்து அறுபது ஆண்டுகள் வரை தொடர்ந்து நீடித்திருக்கும். இந்த வகையில் 24-12-1973 அன்று மறைந்த பெரியாரது படைப்புகளின் காப்புரிமை 2033ஆம் ஆண்டின் இறுதி வரை நீடித்திருக்கும். தற்போது சட்டப்படியான காப்புரிமை பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்திடம் இருக்கிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நான் பி.ஓ.எல். பட்டப் படிப்பு பயின்றபோது (1965-1968), எனக்கு இளவலாக இளம் அறிவியல் படித்தவர் வாழப்பாடி வி. சுகுமார் அவர்கள். பெரியார் இயக்கம் குறித்து என்னுடைய தொடக்க அறிதல்களுக்கு அடித்தளமிட்டவர் தோழர் சுகுமார்தான். பின்னர் திராவிடர் கழகத்தின் சேலம் மாவட்டச் செயலாளராகவும் அவர் பணியாற்றினார். அவரது மூத்த மகன் சு. பகுத்தறிவு-சுமதி ஆகியோர் மணவிழா 24-01-1999 அன்று ஆசிரியர் க. வீரமணி அவர்களது தலைமையில் சேலத்தில் நடைபெற்றது. மணவிழா என்றாலும் திராவிடர் கழக மாநாடு போலத்தான் அது இருந்தது. அதில் கலந்துகொண்டு வாழ்த்திப் பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

நான் பேசும்போது, மார்க்சு, எங்கல்சு, லெனின் ஆகியோரின் படைப்புகள், தொகுப்பு நூல்களாகக் கால வரிசையில் வந்திருப்பது போன்று, பெரியார் படைப்புகள் அனைத்தையும் கால வரிசையில் வெளியிடவேண்டும் என எனது விருப்பத்தினை வேண்டுகோளாகத் தெரிவித்தேன். அப்போது சோவியத் நாட்டில் இருந்து வெளிவரும் பல நூல்களில், ‘மேற்கோள் குறிப்புடன் பயன்படுத்துவது வரவேற்கப்படுகிறது’ (*Acknowledgement of reproduction will be appreciated*) என்னும் பொருளில் சொற்கள் அச்சிடப்பட்டிருக்கும். இதனைச் சுட்டிக்காட்டி, அறிவுப் பகிர்தலுக்குக் காப்புரிமை ஏதும் இல்லை, பெரியார் படைப்புகளுக்கும் காப்புரிமை தனியே இல்லையென நினைக்கிறேன் என்றும் கூறினேன்.

இதனை மறுக்காத ஆசிரியர் அவர்கள், பெரியார் படைப்புகள் முழுமையாக வெளியிடப்படும் என்று உறுதியளித்தார்.

வாக்கு வங்கிக் களத்தில் இயங்காமல், கருத்துக் களத்தில் மட்டும் இயங்கிய பெரியாரது படைப்புகளைப் பிறர் பதிப்பிக்கும்போது, அடிப்படைக் கருத்துகளும் நடுவப் பொருளும் மாறுபடும் வகையில் வெட்டியும் ஒட்டியும் வெளியிடும் வாய்ப்புகள் இருந்தன. இதனால்தான், பெரியாரது படைப்புகளை நாட்டுடைமையாக்குவதற்கு ஆர்வம் காட்டப்படவில்லை. இருப்பினும், ஆர்வம் கொண்டோர் வெளியிடத் தடையும் செய்யப்படவில்லை என்று கூற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியார் காலத்திலேயே அவரது ஒப்புதல் பெற்று, ஆனைமுத்து அய்யா அவர்கள் 'பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்' என்ற பெயரில் மூன்று தொகுதிகளை 2200 பக்கங்களாகப் பொருள் அடிப்படையில் தொகுத்து 1974இல் வெளியிட்டார். இவை மீண்டும் விரிவான குறிப்புகளுடனும் விவரங்களுடனும் திருத்தப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பெற்று 15-12-2009இல் 20 தொகுதிகளாக வெளியிடப்பட்டன. திராவிடர் கழகத்தின் சார்பில் 'பெரியார் களஞ்சியம்' தொகுப்புகள் பல்வேறு பொருள்களில் வெளியிடப்பட்டு வருகின்றன. இதுவரை 42 தொகுதிகள் வந்துள்ளன.

'குடியரசு 1925 பெரியாரின் எழுத்தும் பேச்சும்' எனத் தலைப்பிட்டு, கொளத்தூர் தா.செ. மணி மற்றும் விடுதலை ராசேந்திரன் ஆகியோரது முயற்சியில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் 2010இல் 27 தொகுதிகள் வெளியிடப்பட்டன.

பேராசிரியர் நன்னன் அவர்கள் 'பெரியார் கணினி' என்னும் தலைப்பில் 1136 பக்கங்கள் கொண்ட தொகுப்பினை 2016இல் வெளியிட்டுள்ளார். பெரியார் பற்றாளர் பசு. கவுதமன் அவர்களது தொகுப்பில் 'நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்' என்னும் தலைப்பில் நியூ செஞ்சுரி நூல் நிறுவன வெளியீடாக 5 தொகுதிகள் 2017இல் முதலாம் பதிப்பாக வெளிவந்தன.

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் துறையின் பேராசிரியரும் தந்தை பெரியார் இருக்கையின் இயக்குநருமான பேரா. இரா. சுப்பிரமணி அவர்கள் 'குடியரசு' ஏட்டில் வந்த இதழியல் தொடர்பான பெரியாரின் கட்டுரைகளைத் தொகுத்து 800 பக்கங்களில் விடியல் பதிப்பகத்தின் வழியாக 2022இல் பதிப்பித்துள்ளார். மேலும், இவரது தொகுப்பில் 'இதழியல் களத்தில் பெரியார்' என்னும் தலைப்பில் 1936 முதல் 1973 வரை 'விடுதலை'யில் வெளியான இதழ்கள் தொடர்பான பெரியாரின் எழுத்துக்கள் 1500 பக்கங்களில் கருஞ்சட்டைப் பதிப்பகம் சார்பில் வெளியிட அணியமாகியுள்ளன. 'ரிவோல்ட்' ஆங்கில இதழில் வெளியான பெரியாரின் எழுத்துக்கள் எஸ்.வி. ராசதுரை மற்றும் வ. கீதா ஆகியோரால் தொகுக்கப்பட்டு நூலாக அச்சிடப்பட்டுள்ளன.

இவையல்லாமல், 'பெரியார் அன்றும் இன்றும்' என 2017இல் கோவை விடியல் பதிப்பகம் தொகுப்பு நூல் ஒன்றினைத் தந்துள்ளது. இவையின்றி வேறு சில வெளியீட்டு முயற்சிகளும் இருக்கலாம். பெரியார் காலத்திலிருந்தே. அவரது உரை அல்லது எழுத்தினைச் சிறு வெளியீடுகளாக ஆங்காங்கே இயக்கத்தினர் வெளியிடும் வழக்கம் பரவலாக இருந்தது. ஒருபுறம் காப்புரிமை இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், பெரியார் எழுத்துக்களும் பேச்சுக்களும் வெவ்வேறு வழிகளில் நூல் வடிவம் பெற்றுக்கொண்டுதான் இருந்தன - இருக்கின்றன. இவ்வாறு பதிப்பித்தோர் பலரும் காப்புரிமை கொண்டது எனக் குறித்து வந்திருப்பதையும் இங்கு வியப்புடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. காப்புரிமை ஒருபுறம் இருந்தாலும், வெளியிடும் வாய்ப்பும் இல்லாமல் இல்லை என்பதுதான் இதன் பொருளாகும்.

பெரியாரது படைப்புகளின் காப்புரிமை குறித்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆசிரியர் வீரமணி அவர்களால் வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டது. நீதியர் கே. சந்துரு அவர்கள் 27-07-2009 அன்று அளித்த தீர்ப்பில், பெரியாருடைய எழுத்துக்கள் மக்களுக்கு உரியவை என்ற பொருளில் தீர்ப்பினை வழங்கியுள்ளார். இந்தியக் காப்புரிமைச் சட்டத்தின் அடிப்படையில் இந்தத் தீர்வு அல்லது தீர்ப்பு சட்டத்துக்கு முற்றிலும் முரணாகத்தான் அமைந்திருந்தது. பின்னர், உச்ச நீதிமன்ற மேல்முறையீட்டிலும் பெரியார் படைப்புகளுக்கான காப்புரிமை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதனை நீதிமன்றத்தின் கருத்து என்று கருதுவதைவிட, சமூகத்தின் கருத்து அல்லது மக்களின் எதிர்பார்ப்பு அல்லது பற்றாளர்களின் உரிமை என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

காந்தி, அம்பேத்கர், நேரு, தாகூர் போன்றோர் படைப்புகள்கூட இத்தகைய பெருமையையும் சிறப்பையும் பெறவில்லை என்பதை இங்கு நினைக்காமல் இருக்க முடியவில்லை. உண்மையில் தாகூரின் படைப்புகளுக்கான காப்புரிமையை நீடிக்கவேண்டும் என்பதால்தான், மறைந்த பின் 50 ஆண்டுகள் என்ற வரையறை 60 ஆண்டுகள் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியமைக்கப்பட்டது. உலகம் முழுவதும் காப்புரிமைச் சட்டம் 50 ஆண்டுகளைத்தான் வரையறையாகக் கொண்டிருக்கிறது என்பதையும் இங்குச் சுட்டிக்காட்டலாம்.

ஆனால், பெரியார் உயிரிழக்கும் முன்னரும் பின்னரும் அவரது படைப்புகள் யாவும் மக்களுக்கு உரியனவாகவே இருந்தன - இருக்கின்றன. இந்த நிலைமைகளில், பெரியாரின் கருத்துக்களைத் திரித்துப் பேசும் சீமான், அண்ணாமலை போன்றோர், பெரியார் படைப்புகள் மறைக்கப்பட்டதால்தான் தங்களால் உரிய சான்றுகளைத் தர முடியவில்லை என்று கூறுவது உண்மை அல்ல என்பது உறுதியாகிறது.

அவர்கள் சுட்டிக்காட்டும் பெண் இழிவு, தமிழ்த் தாழ்வு ஆகியன குறித்துப் பெரியார் பேசியதாகக் கூறுவதை மறுக்க வேறு எங்கும் செல்லவேண்டியதில்லை. தன்னுடைய வாழ்நாளில் ஏறத்தாழ 50 ஆண்டுகள் எழுதியும் பேசியும் வந்த பெரியார், பெண்மை குறித்தும் தமிழ் மொழி குறித்தும் எழுதியவை பலவாகப் பரந்து கிடக்கின்றன. பெரியார் படைப்புகளின் தொகுப்புகளில் பெண், மொழி ஆகிய தலைப்புகளில் தனித்தனியான தொகுதிகளே பல பக்கங்களாக வந்திருக்கின்றன.

பெண் மற்றும் தமிழ் மொழி குறித்துப் பெரியார் முன்னரும் பின்னரும் என்னென்ன பேசியிருக்கிறார் என்ற விவரங்களை அந்தப் பதிவுகளில் இருந்தே தெரிந்துகொள்ள இயலும்.

பெரியாரை வெறுப்போர் எடுத்துக்காட்டும் பெண்மை மற்றும் தமிழ் மொழி குறித்த அந்தக் கூற்றுகளுக்கு முன்னரும் பின்னரும் பெரியார் என்ன எழுதியிருக்கிறார் என்பதைப் பார்த்தாலே உண்மைகள் தெரிந்துவிடும்.

“உடலிச்சையைத் தீர்த்துக் கொள்வதற்காகத் தாய், அக்காள், தங்கை, மகள் யாருடனும் உடலுறவு கொள்ளலாம்” என்று பெரியார் சொன்னதாகக் கூறிய சீமான், இன்று வரை சான்றுகள் எதையும் தரவில்லை. இது தொடர்பாகச் சிலர் தந்த சான்றுகளான, ‘விடுதலை’ 11-05-1953 நாளிட்ட இதழ், வேறொருவர் பெரியார் கூறியதாக எழுதிய மேற்கோள் ஆகியன உண்மையானவையாக இருக்கவில்லை.

22-06-1971இல் மேட்டுப்பாளையம் நகரில், ‘பகுத்தறிவாளர் மன்ற’த்தினைத் தொடக்கி வைத்துப் பெரியார் ஆற்றிய உரை, 1971ஆம் ஆண்டிலேயே ‘சிந்தனையும் பகுத்தறிவும்’ என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது.

“நான் சொல்வதை நம்பாதீர்கள்....... உங்களுக்கு எது சரி என்று பட்டதோ அதை ஒத்துக்கொள்ள வேண்டும். மற்றும் எந்த காரியம் செய்ய வேண்டும் என்று தோன்றுகிறதோ அதைச் செய்ய வேண்டும்” என்று தொடங்கிய பெரியார், புராணங்களில் உள்ள கடவுளர்களின் உடலுறவு அவலங்களை விவரித்திருக்கிறார். இது ‘விடுதலை’ ஏட்டிலும் வந்திருக்கும். இது குறித்த தெளிவான பதிவினை முகநூலில் மேட்டுப்பாளையம் தோழர் வீ. வெள்ளிங்கிரி அவர்கள் தந்திருக்கிறார்.

வேறு பல இடங்களிலும் இந்தப் புராண அவலங்களைப் பெரியார் பேசியிருக்கலாம். கடவுளர் கதைகளை மறைத்துவிட்டு, பெண்களைப் பெரியார் இழிவாகப் பேசினார் என்று சீமான் உண்மைக்கு மாறாகப் பழித்துரைத்துவருகிறார்.

தமிழ் மொழி குறித்துப் பெரியாருடைய கருத்துகள் எப்போதுமே மொழிக்கு எதிரானதாக, தமிழர்களுக்கு மாறானதாக இருந்ததில்லை. அறிவுறுத்தலாகக் கடுஞ்சொற்கள் வந்திருக்கலாம். ஆக்கத்தின் பாற்பட்டதாகவே அவை அமைந்திருக்கின்றன. அவருடைய நிலைப்பாடு அடுத்தடுத்த காலங்களில் மேலும் செழுமை பெற்றிருக்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை.

பெரியார் எழுதியவை, பேசியவை என அனைத்தும் பொதுவெளியில் எளிதில் பெறத்தக்கனவாகவே இருக்கின்றன. எவரும் பூட்டி மறைக்கவில்லை. பெரியாரின் கருத்துக்களை முன்வைத்து, முரண்படவும் மறுத்துப் பேசவும் மாற்றுக் கூறவும் கலந்துரையாடவும் உள்ள உரிமைகளை எவரும் புறக்கணிக்கவில்லை. நேரிடையாகக் கருத்துப் போர் நடத்தலாம். திரித்துப் பேசித் திக்குத் திருப்ப முயற்சிக்க வேண்டியதில்லை.

இன்றைய அரசியல், சமூகப் பின்புலத்தில் பெரியாரின் வேண்டல் நீடிக்கிறது என்பதையே எதிராளர்கள் உறுதிப்படுத்தி வருகின்றனர். ●

கட்டுரையாளர்: பேராசிரியர், வரலாற்று ஆய்வாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | தி.சிகாமணி

# தி.மு.க. எதிர்ப்பு அரசியல்.. யாருக்காக?

சட்டமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள நிலையில் தமிழ்நாட்டு அரசியல் பல வினோதங்களைச் சந்தித்து வருகிறது. திமுகவை முறியடிப்பது தான் முதல் நோக்கம் என்று பல எதிர்க்கட்சிகள் அறிவித்து விட்டன. குறிப்பாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி திமுகவை வீழ்த்த யாரிடமும் கூட்டணி சேர்வேன் என்று தெரிவித்துவிட்டார். 2024 தேர்தலுக்குப் பின்பு பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி இல்லை என்று சொல்லி வந்தார் எடப்பாடி. எனினும் தமிழ்நாடு மக்களுக்கு ஒன்றிய அரசு செய்யும் அநீதிகளை.. துரோகங்களை எதிர்க்க அவர் வாய் திறக்கவில்லை. தமிழ்நாட்டு மக்களின் முழு எதிரியாக மாறிவிட்டது பாரதிய ஜனதா. மதரீதியான மோதல்களை தூண்டி மக்களை பிளவுபடுத்தும் அக்கட்சியின் இந்துத்துவ கொள்கையை எடப்பாடி விமர்சிக்கவில்லை. தமிழ்நாட்டிலும் கோயிலை முன்வைத்து செய்யப்படும் சதி அரசியலை அவர் கண்டு கொள்ளவில்லை. அதனால் பாரதிய ஜனதா கட்சியுடன் அதிமுகவின் மறைமுக கூட்டணி தொடர்கிறது என்ற விமர்சனமும் இருந்தது. பாரதிய ஜனதா எத்தகைய மிரட்டலை விட்டதோ தெரியவில்லை. இப்போது எடப்பாடி, பாரதிய ஜனதாவுடன் குழைவு காட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். ஓ பன்னீர்செல்வம், சசிகலா, தினகரன் ஆகியோர் மூலம் எடப்பாடிக்கு நெருக்கடி கொடுத்து வந்த பாரதிய ஜனதா தற்போது செங்கோட்டையன் மூலம் நெருக்கடியை தந்து கொண்டிருக்கிறது.

அதே சமயத்தில் 2024 போல் தனித்துப் போட்டியிட்டால் ஒட்டுமொத்தமாக அம்பலமாகி செல்வாக்கு இழப்பு தெரிந்துவிடும் என்ற அச்சம் எடப்பாடிக்கு ஏற்பட்டிருக்கிறது. அதிகாரத்தைப் பிடிப்பது ஒவ்வொரு கட்சியின் லட்சியமாக இருக்கலாம். அதற்காக தமிழ்நாட்டின் அனைத்து உரிமைகளையும் காவு கொடுக்க முன்வருவது பெரிய அவலம். அண்ணா இருந்திருந்தால் மும்மொழிக் கொள்கையை ஆதரித்து இருப்பார் என்று அ.ம.மு.க பொதுச்செயலாளர் தினகரன் சொல்வதெல்லாம் காது கொடுத்து கேட்கச் சகிக்கவில்லை. இந்தக் கட்சியும் தன்னை திராவிட கட்சி என்று சொல்லிக் கொள்கிறது.

திமுகவை தோற்கடிக்க வேண்டும் என்ற கட்சிகளின் வரிசையில் தமிழக வெற்றி கழகம் இப்போது சேர்ந்துள்ளது. 2024 மக்களவை தேர்தலுக்கு முன்பே கட்சியை தொடங்கி விட்டாலும் அந்தத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கி நின்றதோடு மோடி ஆதரவா எதிர்ப்பா என்பதை வெளிப்படுத்தாமல் இருந்துவிட்டார் விஜய். தற்போது தேர்தலுக்கு முன்னதாக கடைசி நேரத்தில் விஜய் அதிமுகவுடன் கூட்டணி சேர்ந்து திமுகவை வீழ்த்த முயற்சிக்கலாம். திமுக மீது ஊழல் புகார் கூறிவிட்டு அதிமுகவுடன் விஜய் கூட்டணி சேர்ந்தால் மக்கள் கை கொட்டி சிரிப்பார்கள்தான். சுயநலம், நிர்பந்தம் இவரை ஆட்டிப் படைக்கிறது.

நாம் தமிழர் கட்சியின் சீமான் தொடக்கம் முதலே திமுக எதிர்ப்பு நிலை எடுத்து இலை மலர்ந்தால் ஈழம் மலரும் என்று ஜெயலலிதாவுக்காக பிரச்சாரம் செய்தவர். அவரும் திமுக எதிர்ப்புக்காக நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக செயல்படுவார்.

எல்லோரும் திமுக ஆட்சியை எதிர்க்கிறார்கள். திமுக ஆட்சி அப்படி என்ன மோசமான ஆட்சி? சமூகநீதி கண்ணோட்டத்தில் இந்தத் திராவிட மாடல் ஆட்சி கொண்டு வந்துள்ள காலை உணவு திட்டம், மகளிருக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டணம் இல்லா பயணம், புதுமைப்பெண் திட்டம், குடும்பத் தலைவிக்கு ஆயிரம் ரூபாய் திட்டம் தவப்புதல்வன் திட்டம் ஆகியவற்றை அவர்கள் எதிர்க்கத் தயாரா? அந்த அடிப்படையில் பிரச்சாரம் செய்ய தயார் ஆவார்களா? நிச்சயம் செய்ய மாட்டார்கள்.

இந்தியா முழுவதும் ஆதிக்கம் செலுத்தும் சனாதன பிராமணிய சக்திகள் தமிழ்நாட்டில் அரசியல்ரீதியாக ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. அந்தக் கோபம் பல வடிவங்களில் உக்கரமாக வெளிப்படுகிறது.

திமுகவை எதிர்க்க அவர்கள் எடுத்திருக்கும் கருவி சட்டம் ஒழுங்கு. அது வழக்கமான பல்லவிதான். கொலைகள் நடக்கின்றன பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பது போன்ற குற்றச்சாட்டுகள்தான். இந்த குற்றச்சாட்டுகளை தினந்தோறும் எடப்பாடி, அண்ணாமலை, சீமான் போன்றவர்கள் தினந்தோறும் சொல்கிறார்கள். பாரதிய ஜனதா கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களில் சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றி ஒப்பிட்டு பேசி திமுக ஆட்சியை நியாயப்படுத்த தேவையில்லை.

**பாரதிய ஜனதா கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களில் சட்டம் ஒழுங்கு நிலைமை பற்றி ஒப்பிட்டு பேசி திமுக ஆட்சியை நியாயப்படுத்த தேவையில்லை. ஆனால் சமீபத்தில் ராஜஸ்தானில் இஸ்லாமியர் ஒருவர் வீட்டில் ஒரு மாத பெண் குழந்தையை போலீசார் மிதித்துக் கொன்ற சம்பவம் நடந்துள்ளது. இஸ்லாமியர், தலித்துகளை பசுக் குண்டர்கள் அடித்துக் கொல்வதும் உயிருடன் எரிப்பதும் உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் நடக்கின்றன. இஸ்லாமியருக்கு எதிரான புல்டோசர் அரசியல் பாஜகவின் பாசிச முகத்துக்கு எடுத்துக்காட்டு.**

ஆனால் சமீபத்தில் ராஜஸ்தானில் இஸ்லாமியர் ஒருவர் வீட்டில் ஒரு மாத பெண் குழந்தையை போலீசார் மிதித்துக் கொன்ற சம்பவம் நடந்துள்ளது. இஸ்லாமியர், தலித்துகளை பசுக் குண்டர்கள் அடித்துக் கொல்வதும் உயிருடன் எரிப்பதும் உத்தரப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் நடக்கின்றன. இஸ்லாமியருக்கு எதிரான புல்டோசர் அரசியல் பாஜகவின் பாசிச முகத்துக்கு எடுத்துக்காட்டு.

குற்றச் சம்பவங்கள் விஷயத்தில் ஓர் அரசு குற்றம் நடப்பதற்கு முன்பு அதைத் தடுக்க வேண்டியது கடமை ஆனால் குற்றம் நடந்து விட்டால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதே முக்கியம். அந்த வகையில் திமுக கழக அரசு முனைப்புடன் செயல்படுகிறது. இன்னமும் வேகமாக செயல்பட வேண்டும் என்று வேண்டுமென்றால் கேட்டுக் கொள்ளலாம். கஞ்சா புழக்கத்துக்கு முடிவு கட்டக் கோரலாம்.

### ஏவல் துறை அமலாக்கத்துறை

அடுத்ததாக அதிமுக,பா.ஜ.க எடுக்கும் ஆயுதம் ஊழல் குற்றச்சாட்டு. திமுகழக ஆட்சிகளில் நடந்தது என எந்த ஒரு ஊழல் குற்றச்சாட்டும் நிரூபிக்கப்படவில்லை. ஆனால் அதற்கு மாறாக முதல்வராக இருந்த போதே ஜெயலலிதா கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். வருமானத்துக்கு அதிகமாக 66 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாக அவர் மீது நடந்த வழக்கு இன்று வரை செய்திகளில் அடிபட்டு வருகிறது. ஜெயலலிதா சொத்துக்களை தங்களுக்கு தர வேண்டும் என்று ஜெ. தீபா, ஜெதீபக் தொடர்ந்த வழக்கில் சமீபத்தில் ஒரு தீர்ப்பு வந்தது. ஜெயலலிதா குற்றம் செய்யாதவர் என்று விடுவிக்கப்பட்டவர் அல்ல. அவர் உயிரிழந்து விட்டார் என்பதால் அவர் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.வி. நாகரத்தினா, சதீஸ் சந்திரா ஆகியோர் தீர்ப்பளித்தனர். இதற்கு முன்பே உச்ச நீதிமன்றம் அளித்த இறுதி தீர்ப்பில் ஜெயலலிதா வீட்டில் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் தங்கி இருந்து சொத்துக்களை சேர்த்தது ஜெயலலிதாவுக்கு தெரியாது என்று சொல்வது ஏற்கத்தக்கதல்ல. இவர்களை ஜெயலலிதா தன் வீட்டில் தங்க வைத்தது கொடைத்தன்மை (*philanthropy* )கொண்ட நடவடிக்கை அல்ல. பினாமியாக பயன்படுத்தத்தான் என்று நீதிபதிகள் பினாகி சந்திரகோஷ், அமிதவ் ராய் பெஞ்ச் தெரிவித்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடரட்டும் கூட்டாட்சி உரிமைப் போர்

மக்களவை தொகுதி மறுவரையறை குறித்து தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் நடத்திய கூட்டுக் குழு கூட்டத்தில் மறுசீரமைப்பை மேலும் 25 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தக் கூட்டம் மார்ச் 22 ஆம் தேதி நடந்தது .இந்தியக் கூட்டாட்சியைக் காக்கும் வரலாற்றில் இந்த நாள் மிக மிக முக்கிய நாளாக அமையப் போகிறது என்று ஸ்டாலின் கணித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் ஏழு மாநிலங்கள் மற்றும் 14 கட்சிகள் பங்கேற்றன. முதலமைச்சர்கள் பினராயி விஜயன் தெலுங்கானா முதல்வர் ரேவந்த் ரெட்டி பஞ்சாப் முதல்வர் பகவந்த்மான் மற்றும் கர்நாடக துணை முதல்வர் வி கே சிவகுமார் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர். ஒரே மாநிலத்தைச் சேர்ந்த ஆளும் கட்சி, எதிர்க்கட்சி பிரதிநிதிகள் பங்கேற்றது வரவேற்கத்தக்க மாற்றம். ஜனநாயகத்தை பாதுகாக்க, கூட்டாட்சி தத்துவத்தை வலுப்படுத்த உரிமைகளை மீட்டெடுக்க நாம் ஒற்றுமையோடு ஒன்றிணைந்து போராடுவோம் என்று ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.

மறு சீரமைப்பை தமிழ்நாடு பிரச்னையாக்குவது ஊழலை மறைக்கவே என்று அமித்ஷா சொல்லி உள்ளார். சட்டம் ஒழுங்கு பிரச்சனையை மறைக்கவே இந்த கூட்டம் நடத்தப்படுகிறது என்று எடப்பாடியும் சொல்கிறார். இந்தப் பிரச்சனை குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க ஒன்றிய அரசு முன்வரவில்லை. பெரிய அளவில் போராட்டங்கள் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நடந்த போதிலும் பிரதமர் வாய் திறக்க மறுக்கிறார்

தமிழ்நாடு வந்திருந்த அமித்ஷா தமிழ்நாட்டு மக்களவை இடங்கள் குறையாது என்று சொன்னார். ஆனால் உத்திரபிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு இடங்கள் உயருமா உயராதா என்பதையும் சொல்ல வேண்டும். இந்த பிரச்னை திமுகவின் கற்பனையில் எழுந்தது என்று சிலர் விமர்சிக்கிறார்கள். ஆனால் பிரச்சினையை எழுப்பியதே பிரதமர் தான். 2023-ல் தெலுங்கானாவில் தேர்தல் பிரச்சாரத்தின் போது தென் மாநிலங்களுக்கு 100 இடங்கள் குறையும் என்று அவர் சொன்னார். நயவஞ்சகமான இந்த செயல் திட்டம் முன்கூட்டியே அவர்களிடம் உள்ளது. ஆனால் இப்போது அதற்கான விளக்கத்தை தர முன்வரவில்லையே ஏன்? உதாரணமாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் இருபது சதவீத இடங்கள் விகிதாச்சார அடிப்படையில் இடங்கள் உயரும் என்ற அறிவிப்பு வந்தால் கூட பரிசீலிக்கலாம். இது வெறும் எண்ணிக்கையை பற்றியது மட்டுமல்ல; நமது அதிகாரம் நமது உரிமைகள் மற்றும் நமது எதிர்காலத்தின் நலன்களை பற்றியது. தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்க அனுமதித்தால் நம் சொந்த நாட்டில் நாமே அரசியல் அதிகாரம் இழந்த குடிமக்களாக மாறும் அபாயம் உள்ளது. நியாயமான அரசியல் பிரதிநிதித்துவத்துக்கான போராட்டம். இந்தப் போராட்டம் இதோடு நின்று விடக்கூடாது. மாநிலப் பட்டியலில் கல்வியை கொண்டு வருவது, புதிய கல்விக் கொள்கை மூலம் இந்தி திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம் காட்டுவது உள்ளிட்ட பிரச்சினைகளை இந்த கூட்டு நடவடிக்கைக் குழு தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

கர்நாடக அரசிடம் இருந்து தமிழக அரசிடம் கருவூலத்தில் வைப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட ஜெயலலிதாவின் சொத்துக்களான 27 கிலோ தங்கம். 1,116 கிலோ வெள்ளி 1,526 ஏக்கர் நிலத்திற்கான ஆவணங்கள் இருந்தன.

இப்படி ஆதாரங்கள் இருந்தாலும் திமுக மீது மட்டும் குறிவைத்து ஊழல் குற்றச்சாட்டு கூறுவதற்கு உள்நோக்கம் இருக்கிறது.

கூட்டணி சேர்வதற்கு முன்பு அதிமுக மீதும் ஊழல் புகார் கூறி வந்த பாரதிய ஜனதா கட்சி இப்போது திமுக தான் ஊழல் செய்கிறது என்று பிரச்சாரம் செய்கிறது. அண்ணாமலையின் இவ்வகை பொய்ப் பிரச்சாரத்திற்கு ஊடகங்களில் நல்ல விளம்பரம் தரப்படுகிறது. ஊடகங்கள் மிரட்டலுக்கு பயந்தும் ஏதோ ஒரு வகையில் ஆதிக்க சாதி மனப்பான்மையில் திமுகழகத்தை காழ்ப்புணர்வுடன் அணுகுகின்றன. நிர்வாகத் திறமையற்ற ஆட்சி தந்த எம்.ஜி. ராமச்சந்திரன் புகழைப் பாடுவதில் போட்டி போடுகின்றன. இது எம்ஜிஆர் மீதுள்ள கரிசனம் அல்ல. திமுக எதிர்ப்பு தான் இதற்கு அடிப்படை.

### ஊழல் எதிர்ப்பு கபட வேடம்

இந்தியா முழுவதும் அமலாக்கத்துறையை பயன்படுத்தி கட்சி பிரமுகர்களை மிரட்டி தங்கள் கட்சியில் சேர்த்துக் கொண்ட பாரதிய ஜனதா கட்சி மற்ற கட்சிகளை ஊழல் என்று சொல்வது வேடிக்கையிலும் வேடிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலாக்கத்துறை மூலம் யார் யாரை சேர்த்தார்கள் என்பதை மிக நீண்ட பட்டியலாகத் தர முடியும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால் 70 ஆயிரம் கோடி நீர்ப்பாசன ஊழல் புகார் சொல்லப்பட்ட அஜித் பவர் பாரதிய ஜனதா கட்சியுடன் கூட்டணி சேர்ந்தவுடன் அது தொடர்பான வழக்குகள் கைவிடப்பட்டன. இதேபோல் அமலாக்கத்துறை ரெய்டுகள் நடத்திய பின் பல பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் பாரதிய ஜனதா கட்சிக்கு தேர்தல் நிதியை அள்ளித் தந்ததும் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஏழரை லட்சம் கோடி முறைகேடு நடந்துள்ளது என சிபிஐயும் அறிக்கை தந்துள்ளது.

தமிழ்நாட்டில் திண்டுக்கல்லில் அங்கிட் திவாரி என்ற அமலாக்கத்துறை அதிகாரி ஒரு டாக்டரிடம் மிரட்டி 20 லட்சம் ரூபாய் பெற்றபோது கையும் களவுமாக பிடிபட்டார்.

தற்போது தமிழ்நாட்டில் அமலாக்கத்துறை மூலம் டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் சோதனை நடத்தப்பட்டுள்ளது. அரசு அலுவலகத்தில் சோதனை செய்வதற்கான உரிய அனுமதி இல்லாமல் அதே சமயத்தில் அங்கு இருக்கும் ஊழியர்களை வெளியே செல்லவிடாமல் அலுவலகத்தில் இருக்க வைத்து நெருக்கடி கொடுத்தது அமலாக்கத்துறை. அதை சென்னை உயர்நீதிமன்றம் கண்டித்துள்ளது. இந்த சோதனைக்கு சில வழக்குகளை காரணம் சொல்கிறது அமலாக்கத்துறை. ஆனால் முக்கால் வாசிக்கும் மேற்பட்ட வழக்குகள் அதிமுக ஆட்சி காலத்தில் தொடரப்பட்டவை என்று சொல்ல முன்வரவில்லை. ஆயிரம் கோடி ஊழல் என்று சொல்லி அவதூறு கற்பிக்கும் வேலையில் இறங்கி உள்ளார்கள்.

அடுத்ததாக திமுகவுக்கு எதிராக எடுக்கப்படும் வாரிசு அரசியல் புகார். எம்ஜிஆர் கட்சி துவங்குவதற்கு காரணம் அப்போதைய இந்திரா காந்தி வருமானவரித் துறை மூலம் கொடுத்த நெருக்கடி என்பது பலருக்கு தெரிந்த விஷயம். அந்த எம்.ஜி.ஆர் இறந்த பின்பு நான் உடன்கட்டை ஏற நினைத்தேன் என்று ஒரு பேட்டியில் ஜெயலலிதா சொன்னார். பின்னர் அவர் அதிமுக தலைமைக்கு வந்தது எப்படி? எம்ஜிஆர் உடன் இருந்த நெருக்கம் காரணம் இல்லையா? இது வாரிசு அரசியல் இல்லை என்றால் ஜெயலலிதா வீட்டில் தங்கி இருந்த சசிகலா அதிமுக பொதுச் செயலாளர் ஆனாரே? அது எப்படி? பாரதிய ஜனதா கட்சியில் எத்தனை வாரிசுகள் பதவிக்கு வந்திருக்கிறார்கள் என்ற பட்டியலும் நீளமானது.

இலங்கை, வங்கதேசம், பாகிஸ்தான் உள்ளிட்ட தெற்காசியா நாடுகள் முழுவதும் வாரிசு அரசியல் என்பது ஒரு பொதுவான போக்கு. திமுகவில் வாரிசு அரசியல் இருக்கிறதென்றால் அது ஒரு கொள்கைத் தொடர்ச்சி சார்ந்தது. சனாதன எதிர்ப்பில் உதயநிதி காட்டிய உறுதி இதற்கு உதாரணம். சனாதன எதிர்ப்பில் திமுக காட்டும் எதிர்ப்பு ஆர் எஸ் எஸ் சக்திகளை அச்சுறுத்துகிறது. பெரியார்தான் திராவிட அரசியலின் அடிப்படை என்பதால் சீமான் போன்றவர்களை அடியாளாக பயன்படுத்தி அவதூறு பிரச்சாரம் செய்கிறது. இட ஒதுக்கீட்டிற்கு வருமான வரம்பை கொண்டு வந்த எம்ஜிஆர், மதமாற்ற தடைச் சட்டம் ஆடு, கோழி பலியிடத் தடைச் சட்டம் (பின்வாங்கப்பட்டவை) ராமர் கோயில் கரசேவைக்கு ஆதரவு தந்த ஜெயலலிதா திராவிட அரசியலை நீர்த்துப் போக முயற்சி செய்தவர்கள். எடப்பாடி தலைமையிலான அதிமுகவும் சிறுபான்மையினர் எதிர்ப்பு சட்டங்களுக்கு ஆதரவு தந்தது. இத்தகைய போக்கை யார் மூலமாவது நிறைவேற்ற பாஜக இரவும் பகலுமாக வேலை செய்கிறது.

இங்கு நாம் குறிப்பிட வேண்டியது சாதி ஆதிக்க உணர்வு, சடங்கு, சம்பிரதாய மூடநம்பிக்கை ஆகியவற்றில் இருந்து முற்றாக தமிழ்நாட்டு மக்கள் விடுதலை பெற வேண்டும். கோகுல்ராஜ் கொலை வழக்கில் தண்டனை பெற்ற யுவராஜ் சமீபத்தில் பரோலில் வந்தபோது அவருக்கு தரப்பட்ட வரவேற்பை சாதி அரசியல் செல்வாக்குடன் இருப்பதற்கான ஆபத்தான அறிகுறியாக கவனத்தில் கொள்ள வேண்டும். தற்போது தமிழ்நாட்டின் அறிவு சார் பாரம்பரியத்திற்கு சவால் வந்து கொண்டே இருக்கிறது. இந்நிலையில் திராவிட பண்பாட்டு அரசியலின் அடித்தளத்தை வலுவாக கட்டமைக்க வேண்டியது கடமை.

●

---

**கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வஞ்சிக்கப்படும் தென் மாநிலங்கள்

"இருபது அம்ச திட்டம், அது இந்தியாவின் சட்டம்" என்ற விளம்பர வரிகள் 1975-களுக்குப் பிந்தைய கால கட்டத்தில் அகில இந்திய வானொலியில் தினசரி ஒலித்த பிரபலமான அரசு விளம்பரப் பாடல். பிரதமர் இந்திரா காந்தியால் 1975ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இருபது அம்ச திட்டங்களில் குடும்ப கட்டுப்பாடு திட்டமும் ஒன்று. "நாம் இருவர், நமக்கு இருவர்" என்பது பிரதான முழக்கமானது. பின்னாளில் இதுவே "நாம் இருவர், நமக்கு ஒருவர்" என்றானது.

இதை வலியுறுத்தும் விதமாக வானொலியில் ஒலித்த பிரபலமான பாடல் இதுதான் - "மூட்டை முடிச்சைக் குறையுங்கள், வண்டிப் பயணம் எளிதாகும், குடும்ப சுமையைக் குறையுங்கள் வாழ்க்கைப் பயணம் எளிதாகும். வண்டியாயினும், வாழ்க்கையாயினும் சுமை குறையட்டும், சுகம் பெருகட்டும்" என்ற பாடல் வரிகள் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை மக்களிடையே வலியுறுத்தி வந்தன.

இருபது அம்சத்திட்டத்தின் முக்கிய நோக்கமான குடும்ப கட்டுப்பாடு திட்டம் செயல்முறைக்கு வந்து ஏறக்குறைய 50 ஆண்டுகளாகிறது. இந்திய சுதந்திரமடைந்தபோது நாட்டின் மக்கள் தொகை 30 கோடி. அடுத்த 25 ஆண்டுகளில் இது இரு மடங்கானது. 75 ஆண்டுகளில் மக்கள் தொகை 140 கோடியைத் தொட்டு உலகில் மக்கள்தொகை பெருக்கத்தில் சீனாவை மிஞ்சி முதலிடத்துக்கு முன்னேறிவிட்டது.

மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி வரையறை 1971ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. மக்கள் தொகை எண்ணிக்கைக்கேற்ப நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை 2026இல் தீர்மானிப்பதென முடிவு செய்யப்பட்டது. பிரதிநிதிகளின் எண்ணிக்கை மட்டுமல்ல, பகிர்ந்தளிக்கப்படும் நிதியும் மக்கள் தொகைக்கேற்ப அளிக்கப்படும் என்பதுதான் தற்போதைய நிலவரம். மத்திய அரசின் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்களுக்கு காத்திருக்கும் வெகுமதிதான் என்ன?.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து 2022ஆம்ஆண்டு டிசம்பர் கடைசி வாரத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில் இப்பிரச்சினையை எழுப்பினார் திமுக மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி என்.வி.என். சோமு.

2019ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன்னதாக வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையின்படி 2026-க்குப் பிறகு நடத்தப்பட உள்ள எல்லை நிர்ணயப் பயிற்சிக்குப் பிறகு இந்தியாவின் மக்களவைத் தொகுதிகள் வரையறுக்கப்படும். இவ்விதம் மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகள் கணக்கிடப்பட்டால் வட மாநிலங்களுக்கு 32 இடங்களுக்கு மேல் கூடுதலாக பிரதிநிதிகள் கிடைப்பர். அதேசமயம் தென் மாநிலங்கள் தோராயமாக 24 பிரதிநிதிகளை இழக்க நேரிடும்.

மத்திய அரசால் முன்மொழியப்பட்ட குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நேர்மையாகவும், வெற்றிகரமாகவும் செயல்படுத்திய ஒரே மாநிலம் தமிழ்நாடு என அவர் சுட்டிக்காட்டினார். தமிழ்நாடு மக்கள் தொகை வளர்ச்சியை 6 சதவீதமாக கட்டுப்படுத்தியுள்ளது. அதேசமயம் வட மாநிலங்கள் குறிப்பாக உத்தரப் பிரதேசம், பிகார் போன்ற மாநிலங்களில் மக்கள் தொகை பெருகியுள்ளது. இதனால் இந்த மாநிலங்களுக்கு பிரதிநிதிகள் எண்ணிக்கை அதிகரிப்பதோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகிர்ந்தளிக்கப்படும் தொகையின் அளவும் அதிகரிக்கும்.

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை செய்யப்படும்போது, மாநிலத்தில் பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களைப் பிரிப்பதிலும் பிரச்சினை உருவாகும். இவர்களுக்கான பிரதிநிதித்துவம் குறையும் அபாயமும் உள்ளது.

**அசாமில் ஆரம்பம்**

அசாமில் தொகுதி மறுவரையறை செய்யும் பணியை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 170இன் படி 2001ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தொகுதி வரையறை மேற்கொள்ளப்போவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கென ஒதுக்கப்பட்ட இட ஒதுக்கீடு இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 330 மற்றும் 332இன் படி மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில் தொகுதியை வரையறை செய்வதற்குத் தேர்தல் ஆணையம் தனக்கென வகுத்துள்ள விதிமுறைகள்படி செயல்படுத்தும். வழிகாட்டு நெறிமுறைகளின்படி கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வரைவு அறிக்கையை தாக்கல் செய்ய உள்ளது. இது மத்திய அரசு மற்றும் மாநில அரசு கெஜட்டுகளில் வெளியிடப்பட்டு மக்களிடம் கருத்து கேட்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தொகுதி வரையறை சட்டம் 1972இன்படி 1976இல் அசாமில் தொகுதி வரையறை செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

**2019ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன்னதாக வெளியிடப்பட்ட ஆய்வறிக்கையின்படி 2026–க்குப் பிறகு நடத்தப்பட உள்ள எல்லை நிர்ணயப் பயிற்சிக்குப் பிறகு இந்தியாவின் மக்களவைத் தொகுதிகள் வரையறுக்கப்படும். இவ்விதம் மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகள் கணக்கிடப்பட்டால் வட மாநிலங்களுக்கு 32 இடங்களுக்கு மேல் கூடுதலாக பிரதிநிதிகள் கிடைப்பர். அதேசமயம் தென் மாநிலங்கள் தோராயமாக 24 பிரதிநிதிகளை இழக்க நேரிடும்.**

தொகுதி மறுவரையால் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறையும் அபாயம் உள்ளதை உணர்ந்தே மாநிலங்களவையில் பிரச்சினையை எழுப்பியிருந்தார் கனிமொழி என்.வி.என். சோமு. தற்போது இப்பிரச்சினையில் தென் மாநிலங்கள் ஒன்று திரள வேண்டும் என குரல் கொடுத்துள்ளார் தெலங்கானா மாநிலத்தில் பாரத் ராஷ்ட்ரிய சமிதி அமைப்பின் செயல் தலைவரும், முன்னாள் தகவல் தொழில்நுட்ப அமைச்சருமான கே.டி. ராமாராவ், தென் மாநிலங்களுக்கு நேர உள்ள பாரபட்சமான செயலுக்கு எதிராக கட்சி பாகுபாடின்றி அனைவரும் ஒன்று திரள வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் தொகை அதிகரிப்பு நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் என்பதை உணர்ந்து மத்திய அரசு கொண்டு வந்த குடும்ப நலத் திட்டத்தை தீவிரமாக செயல்படுத்திய தென் மாநிலங்கள் இதனால் பாதிக்கப்படுவது அநியாயமானது.

மத்திய அரசின் கொள்கையை செயல்படுத்தாமல் மக்கள் தொகை பெருக்கத்துக்கு வழிவகுத்திட்ட வட மாநிலங்களைக் கவுரவிப்பது போல மறுவரையறை அமைந்துவிடும் அபாயம் உள்ளது.

தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தெலங்கானா ஆகிய மாநிலங்கள் மிகச் சிறப்பான மக்கள் நல திட்டங்களைச் செயல்படுத்தி முன்னேறிய மாநிலங்களாக உருவெடுத்து வருகின்றன. இதனால் அனைத்து மனித வளக் குறியீடுகளிலும் வளர்ச்சிபெற்ற மாநிலங்களாக தென் மாநிலங்கள் உருவெடுத்துள்ளன.

நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 18 சதவீத மக்களே தென் மாநிலத்தில் உள்ளனர். ஆனால் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) தென் மாநிலங்களின் பங்களிப்பு 35 சதவீத அளவுக்கு உள்ளது.

தொகுதி மறுவரையறை என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னதான் தீர்வு?

தொகுதி வரையறை செய்வதால் தமிழ்நாட்டின் மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கை குறையாது என்று இதுவரை திட்டவட்டமாக எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. சமீபத்தில் கோவை வந்திருந்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, தமிழ்நாட்டிற்கான தொகுதிகளின் எண்ணிக்கை மறுவரையறை செய்வதால் குறையாது என்று கூறியதாக தெரிகிறது. ஆனால் பிரச்சினை அதுவல்ல.

மக்கள் தொகை பெருக்கத்தால் வட மாநிலங்களுக்கு கூடுதல் எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் கிடைப்பர். இதனால் மக்களவையில் தமிழக உறுப்பினர்கள் தங்கள் தரப்பு கருத்துகளைத் தெரிவிப்பதற்கான நேரம் கணிசமாகக் குறையும். இது ஒருபுறம் என்றாலும் நீண்ட கால அடிப்படையில் குறைவான மக்களவை கொண்ட மாநிலங்களில் கவனம் செலுத்துவதை விட வட மாநிலங்களில் கவனம் செலுத்தலாம் என்ற மனோ நிலைக்கு ஒன்றிய ஆட்சியாளர்கள் முற்படுவர். இதனால் தென் மாநிலங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படும் அபாயம் உள்ளது.

தொகுதி மறுவரையறையை இன்னும் 30 ஆண்டுகளுக்கு தள்ளி வைக்க வேண்டும் என்ற கோரிக்கை முதல்வர் தலைமையில் கூடிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் தொகுதி மறுவரையறை தொடர்பாக தென் மாநிலங்களின் எம்.பி.க்கள் அடங்கிய கூட்டு நடவடிக்கை குழு அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் உள்ளிட்ட 7 தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

இந்தப் பிரச்சினையில் நாம் அமெரிக்காவை ஏன் முன்மாதிரியாக பின்பற்றக் கூடாது என்ற கேள்வியையும் பலர் முன்வைத்துள்ளனர். அங்கு கடந்த 112 ஆண்டுகளில் மக்கள் தொகை 4 மடங்கு அதிகரித்துள்ளது. ஆனால் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை கூட்டாட்சி தத்துவத்தை நிலைநிறுத்தும் வகையில் மாற்றப்படவே இல்லை. அதே உறுப்பினர்களின் எண்ணிக்கைதான் தொடர்கிறது. இதை இந்தியாவும் பின்பற்றினால் எந்த மாநிலத்திற்கும் பாதிப்பு வராது என்பது பொதுவான கருத்தாகும்.

கண்மூடித்தனமாக இருக்கக் கூடாது, இதை செயல்படுத்தினால் மத்திய அரசின் கூட்டாட்சி செயல்பாட்டில் பாரபட்சமாக நடப்பது வெளிப்படும். இது கூட்டாட்சி தத்துவத்திற்கு உகந்தது அல்ல என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

தலைக்கு மேலே கத்தி தொங்குகிறது. இதற்கு இப்போதே ஒருமித்த குரலில் எதிர்ப்பு தெரிவிக்காமல் போனால் அது தென் மாநில மக்களுக்கு செய்யும் துரோகமாக அமைந்துவிடும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

“வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது” என்ற நிலை மாறி, தற்போது மக்கள் நலத் திட்டங்களால் தெற்கு வளர்ந்து வருகிறது. அதை பின்னோக்கிச் செல்வதற்கு திராவிட மாடல் அரசு அனுமதிக்காது என்பதற்கான முதல் குரலை மாநிலங்களவையில் திமுக உறுப்பினர் எழுப்பியுள்ளார்.

நாடு முழுவதும் ஒரே சீரான வரி என்ற முறையால் மாநிலங்களுக்கு இருந்த வரி விதிப்பு முறையும் மத்திய அரசிடம் சென்றுவிட்டது. இப்போது பட்ஜெட்டில் மக்கள் நலத் திட்டங்களை அறிவித்தாலும், அதை செயல்படுத்த மத்திய அரசை நம்பியிருக்க வேண்டிய நிலை மாநிலங்களுக்கு உள்ளது. பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைந்தால் தென் மாநிலங்களின் குரல் வடக்கே உள்ளவர்களுக்கு விழுவதற்கு வாய்ப்பே இருக்காது. இப்போதிருந்தே விழிப்புடன் செயல்பட வேண்டிய நிலைக்கு தென் மாநிலங்கள் தள்ளப்பட்டுள்ளன என்பதே யதார்த்த நிலை.

அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தி இதற்கென தனி குழுவை ஏற்படுத்தி போராட வேண்டும் என்ற தமிழ்நாடு முதல்வரின் முயற்சி, இப்பிரச்சினையில் அவர் அசிரத்தையாக இல்லை என்பதையே புலப்படுத்துகிறது. ஒன்றிய அரசிடம் குவிந்துள்ள அதிகாரங்களிலிருந்து உரிமைகளைப் பெற மாநிலங்கள் இனி போராட வேண்டித்தானிருக்கும் என்பதையே இது உணர்த்துகிறது.

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டின் பொருளாதார ஆய்வறிக்கையும் பட்ஜெட்டும்

தமிழ்நாட்டில் வழக்கமாக பிப்ரவரி மாதத்தில் தாக்கல் செய்யப்படும் நிதி நிலை அறிக்கை இம்முறை மார்ச் மாதம் இரண்டாவது வாரத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அத்தோடு முதல் முறையாக பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு முதல் நாளன்று (மார்ச் 13) 2024-25ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஆய்வறிக்கையை முதலமைச்சர் வெளியிட்டார். தமிழக அரசின் திட்டக் குழு இந்த ஆய்வறிக்கையைத் தயாரித்திருந்தது. பொருளாதார ஆய்வறிக்கையும், நிதி நிலை அறிக்கையும் ஒன்றுக்கொன்று மிகவும் தொடர்புடையவை.

பொதுவாக பட்ஜெட் என்றாலே அதில் பெரும்பாலானோர்க்கு ஆர்வம் இருப்பதில்லை. சம்பந்தப்பட்ட துறையினர், வர்த்தகர்கள், அரசுத்துறையினர் மட்டுமே பட்ஜெட் அறிவிப்புகளில் தங்களுக்கு சாதகமான அம்சங்கள் என்ன இருக்கிறது என்று உன்னிப்பாகக் கவனிப்பர். பொருளாதார ஆய்வறிக்கை மீதான கவனம் அதைவிட மிகவும் சொற்பம்தான். வெறும் பொருளாதாரம் பயிலும் மாணவர்களோ அல்லது அத்துறை சார்ந்தவர்களோதான் அதில் ஈடுபாடு காட்டுவர். ஆனால் பொருளாதார ஆய்வறிக்கையை இணையதளத்தில் பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை நான்கு நாளில் 6 ஆயிரத்திற்கும் அதிகமாகவும், பதிவிறக்கம் செய்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகமாக இருந்தது மக்களிடையே இதுபோன்ற விஷயங்களை படிக்கும் ஆர்வம் மேலோங்கி இருப்பதைப் பார்க்க முடிந்தது.

பட்ஜெட் உரை பரவலாக அனைத்து தரப்பு மக்களையும் சென்று சேர வேண்டும் என்று சிறப்புக் கவனம் செலுத்தி மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களில் நேரலை நிகழ்ச்சிகளை காணும் வாய்ப்பை அரசு செய்திருந்தது.

முதலாவதாக பொருளாதார ஆய்வறிக்கையைப் பார்ப்போம். பெரும்பாலான மாநிலங்கள் பொருளாதார ஆய்வறிக்கையை தாக்கல் செய்து வந்த நிலையில் இப்போதுதான் முதல் முறையாக தமிழ்நாடு அரசு தயாரித்து வெளியிட்டுள்ளது. இதற்கான அவசியம் என்ன என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாது.

தமிழக அரசு பெரும் கடன் சுமையில் இருக்கிறது. உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிர மாநிலங்களை மிஞ்சும் வகையில் அதிகக் கடன் சுமை தமிழ்நாட்டு மக்கள் மீது சுமத்தப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வந்தன. அதற்கெல்லாம் விளக்கம் தரும் விதமாகவும், பல முன்னோடி மாநிலங்களை மிஞ்சும் வகையில் தமிழ்நாடு எத்தகைய வளர்ச்சியை எட்டியுள்ளது என்பதை வெளிப்படுத்தும் விதமாகவே ஆய்வறிக்கையின் புள்ளி விவரங்கள் அமைந்திருந்தன.

தமிழ்நாட்டின் கடன் சுமை குறித்து வெள்ளை அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்ற எதிர்க்கட்சியினரின் தொடர் வற்புறுத்தலுக்குப் பதிலுரையாகவே இந்தப் பொருளாதார ஆய்வறிக்கை அமைந்துள்ளது என்றே கூறலாம். அகில இந்திய சராசரியைக் காட்டிலும் தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் 1.64 மடங்கு அதிகமாக உள்ளதை ஆய்வறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

2021-22ஆம் நிதி ஆண்டிலிருந்து மாநிலம் தொடர்ந்து 8% மேலான பொருளாதார வளர்ச்சியை எட்டிவந்துள்ளது. தேசிய அளவிலான வளர்ச்சி விகிதத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்பட்ட போதிலும் தமிழ்நாடு சராசரியாக 8 சதவீதம் மற்றும் அதற்கு மேலான வளர்ச்சி விகிதத்தை நடப்பு ஆண்டிலும் எட்டும் என ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.

இந்திய மக்கள் தொகையில் 6% உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு ஒட்டுமொத்த இந்திய உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 9.21 சதவீத பங்களிப்பை அளித்துள்ளது. மாநிலத்தின் உள்நாட்டு உற்பத்தியானது (ஜிஎஸ்டிபி) நடப்பு விலையில் ரூ.27.22 லட்சம் கோடியை எட்டியுள்ளது.

மோட்டார் வாகனங்கள், ஜவுளி, தோல்பொருள் ஆகியவற்றில் முக்கிய ஏற்றுமதி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. அதேபோல தமிழ்நாட்டில் தனிநபர் ஆண்டு வருமானம் சராசரி ரூ. 2.78 லட்சமாகும். தேசிய சராசரியான ரூ. 1.69 லட்சத்தை விட 1.64 மடங்கு இங்கு அதிகமாக உள்ளது. 2019-20ஆம் ஆண்டில் 6% என்றிருந்த நகர்ப்புற பணவீக்கம் தற்போது 4.5% ஆகக் குறைந்துள்ளதாக ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பணவீக்கத்தால் மக்களின் வாங்கும் திறன் குறையும் என்பதை உணர்ந்த மாநில அரசு பருப்பு வகைகள், தானியங்கள், சமையல் எண்ணெய் போன்றவற்றை பொது விநியோகத்திட்டம் மூலம் மானிய விலையில் வழங்கி மக்களின் மீதான பணவீக்கத்தின் தாக்கத்தைப் பெருமளவில் குறைத்தையும் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

மாநிலத்தின் முதுகெலும்பாக விளங்கும் வேளாண் துறையை ஊக்குவிக்க பல்வேறு முன்னெடுப்புகளை அரசு மேற்கொண்டதன் வாயிலாக சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. இதனால் எண்ணெய் வித்துகள், நிலக்கடலை, கரும்பு உற்பத்தியில் முதலிடத்தில் தமிழ்நாடு உள்ளது. மக்காச்சோள உற்பத்தியில் இரண்டாமிடத்திலும், நெல் சாகுபடியில் மூன்றாமிடத்திலும் தமிழ்நாடு தனது முன்னிலையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

விவசாயிகளுக்கு எளிதாகக் கடன் கிடைக்கவும், கொள்முதலுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அதிகமாக அளிப்பதன் மூலமும் விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றும் முயற்சியில் அரசு தீவிரம் காட்டி வருவதை அறிக்கை கோடிட்டு காட்டுகிறது. வேளாண் துறைக்கென தொடர்ந்து தனி பட்ஜெட் தயாரித்து தாக்கல் செய்யப்படுவதும் இதற்குக் காரணமாகும்.

தொழில்துறை கேந்திரமாக தமிழ்நாடு விளங்குவதால் இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு தொழில்துறை உற்பத்தியில் மாநிலத்தின் பங்களிப்பு 11.90% அளவுக்கு உள்ளது. இந்தியாவிலேயே மிக அதிக அளவிலான சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் (35.56 லட்சம்) இங்குதான் உள்ளன என்பதும் தொழில்துறை பங்களிப்பு அதிகரிப்புக்கு முக்கியக் காரணமாக விளங்குகிறது. மாநிலத்தில் உற்பத்தித் துறை 8.33% வளர்ச்சியையும், கட்டுமானத்துறை 9.03% வளர்ச்சியையும் எட்டியுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அன்னிய முதலீடுகளை ஈர்ப்பதில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. 2024ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் ரூ. 6.64 லட்சம் கோடிக்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 14.55 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என கணிக்கப்பட்டுள்ளது. திறன்மிகு பணியாளர்களை உருவாக்க அதாவது மாறிவரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை எதிர்கொள்ள இளைஞர்களுக்கு மறுதிறன் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஆய்வறிக்கை வலியுறுத்தியுள்ளது.**

மாநிலத்தில் தொழில்துறை வளர்ச்சியை நிர்ணயிப்பதில் வங்கிக் கடன் முக்கிய பங்கு வகிக்கிறது. வர்த்தக வங்கிகள் அளித்துள்ள கடன் ரூ. 3.01 லட்சம் கோடியாக உயர்ந்திருப்பதிலிருந்தே தொழில்துறை வளர்ச்சியை ஊகிக்கலாம் என்கிறது ஆய்வறிக்கை. தொழில்துறை மட்டுமின்றி சேவைத்துறையிலும் தமிழ்நாடு தன்னிகரில்லா முன்னிலை வகிக்கிறது. சேவைத்துறைக்கு வங்கிகள் அளித்துள்ள கடன் அளவு ரூ. 4.46 லட்சம் கோடியாகும். மாநிலத்தில் மொத்தமுள்ள பணியாளர்களில் 54.6% பேர் சேவைத்துறை சார்ந்த பணிகளில் ஈடுபட்டிருப்பதிலிருந்தே சேவைத்துறையின் வளர்ச்சியை உணர முடிகிறது.

சமூக முன்னேற்றக் குறியீடு, உயர்கல்வி சேர்க்கை விகிதத்தில் அகில இந்திய அளவில் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குவதிலிருந்தே மாநிலத்தின் முன்னேற்றத்தை தெரிந்து கொள்ளலாம். சிசு மரணங்கள் குறைவு, பிறப்பு விகிதம் குறைவு, வறுமை நிலை குறைவு (1.43%) ஆகியன மாநிலத்தை முன்னேறிய மாநிலமாக முன்னிறுத்தும் காரணிகளாக விளங்குகின்றன. ஒருங்கிணைந்த வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டுள்ள மாநில அரசு சமூகத் துறைக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒதுக்கீடுகளை தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வந்துள்ளது. இத்துறைக்கு 2023-24-ம் நிதி ஆண்டில் ரூ.1.16 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில், முதலமைச்சரின் காலை சத்துணவு திட்டம் மாணவர்களின் வருகை அதிகரிப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதி செய்துள்ளது. மகளிர்க்கான கட்டணமில்லா பேருந்து பயண வசதி, மாதந்தோறும் ரூ. 1,000 உரிமைத் தொகை ஆகியன மாநில அரசு மேற்கொண்ட சமூக மேம்பாட்டுத்திட்டங்களில் குறிப்பிடத்தக்கவை என்றும் அறிக்கை கோடிட்டு காட்டியுள்ளது. முன்னேறிய சமூகத்தை உருவாக்க கல்வி மிகவும் அவசியம் என்பதை பன்னெடுங்காலமாக உணர்ந்து அதற்கான முன்னெடுப்புகளை மாநில அரசு தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளது. சத்துணவு திட்டம், காலை உணவு திட்டம், மிதிவண்டி, மடிக் கணினி, விலையில்லா பாட நூல், சீருடை உள்ளிட்ட சலுகைகள் மாநிலத்தில் இடைநிற்றலை பெருமளவு குறைத்துள்ளன.

மகளிர் உயர் கல்வி பயில்வதை ஊக்குவிக்க மாதம் ரூ. 1,000 உதவித்தொகை பெண் கல்வி வளர்ச்சிக்கு பெருமளவு உத்வேகம் அளித்துள்ளது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. உயர்கல்வியிலும் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குவதற்கு இங்குள்ள ஆராய்ச்சி நிறுவனங்களும், பல்கலைக் கழகங்களும் காரணமாக உள்ளன. 506 பொறியியல் கல்லூரி, 492 பல்தொழில்நுட்பப் பயிலகங்கள் இங்கு சிறந்த மாணவ சமுதாயத்தை உருவாக்குவதோடு திறன்மிகு பணியாளர் உருவாக்கத்துக்கும் களமாக அமைகின்றன.

வளர்ச்சிக்கான அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் மாநிலம் தன்னகத்தே கொண்டிருந்தாலும் வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகளாக காலநிலை மாற்றம் உள்ளது. இயற்கை சீற்றங்களான பெருவெள்ளம், சூறாவளிப் புயல் ஆகியன மாநிலத்தின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போடுவதும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கால நிலை மாற்றத்தை சமாளிக்க 2023-30ஆம் ஆண்டுக்கான ரூ. 1,000 கோடி பசுமை நிதியத்தை மாநில அரசு உருவாக்கியுள்ளதை மிக முக்கியமான முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்றும் ஆய்வறிக்கை பாராட்டியுள்ளது.

2030ஆம் ஆண்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார இலக்கை எட்டுவதற்கு சில சவால்களையும் மாநில அரசு சந்தித்தாக வேண்டும் என்பதை ஆய்வறிக்கை தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது. அதில் திறன் மேம்பாடு, உள்கட்டமைப்பு வசதி உருவாக்கம் முக்கியமாக உள்ளன.

### பட்ஜெட்

தமிழ்நாடு பட்ஜெட் இம்முறை அகில இந்திய அளவில் பேசுபொருளானது. ரூபாய் குறியீடைத் தவிர்த்திருப்பதை தேசிய ஊடகங்கள் ஊதிப் பெரிதாக்க, தமிழக பட்ஜெட் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இதை எதிர்பார்த்துதான் இந்த உத்தியைக் கையாண்டனரோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

முந்தைய பட்ஜெட்டைப் போலவே இம்முறையும் இலக்கிய ரசனையோடு பொருளாதார அறிஞர்களின் மேற்கோள்களோடு மிகச் சிறப்பாக நிதித்துறையால் வடிவமைக்கப்பட்டிருந்தது. திருவள்ளுவர் தொடங்கி, பாவேந்தர் பாரதிதாசன், புறநானூற்றுப் பாடலும், ஜப்பானிய ஹைக்கூ கவிதை, அமெரிக்க கவிஞரின் இலக்கிய வரிகளோடு, பொருளாதாரப் பேராசிரியர் தாமஸ் பிக்கட்டி, பேரறிஞர் அண்ணா, கலைஞர் ஆகியோரது அரிய கருத்துகளும் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றிருந்தன. 181 பக்கங்களைக் கொண்டிருந்த இந்த பட்ஜெட் உரையை சிறிதும் பிசிறின்றி வெகு நேர்த்தியாக படித்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தார் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு. குறிப்பாக அன்புச்சோலை மையங்கள் 10 மாநகராட்சிகளில் ரூ. 10 கோடி செலவில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பின்போது, முதியவர்கள் மீதான அக்கறை அவரது உரையில் வெளிப்பட்டது.

தமிழ்நாடு பட்ஜெட் மதிப்பீடு ரூ. 35.67 லட்சம் கோடியாகும். வரவு ரூ. 3,32,330 கோர்டியாகவும், செலவு ரூ. 4,39,293 கோடியாகவும் உள்ளது. முந்தைய ஆண்டை விட செலவு 9.95 சதவீதம் உயர்ந்துள்ளது.

பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் மூலதனப் பணிகளுக்கான ஒதுக்கீடு கடந்த ஆண்டைக் காட்டிலும் 22.4 சதவீதம் அதிகரிக்கப்பட்டு ரூ.57,231 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் கட்டுமானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ரூ.18,197 கோடி), போக்குவரத்து மற்றும் எரிசக்தி (ரூ. 10,973 கோடி), நகர்ப்புற வளர்ச்சிக்கு (ரூ. 6,292 கோடி), குடிநீர் வழங்கலுக்கு (ரூ. 6,231 கோடி), நீர் நிலைகள் (ரூ.4,465 கோடி), கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு (ரூ. 3,851 கோடி) ஒதுக்கப்பட்டுள்ளது.

வருவாய் பற்றாக்குறை கடந்த நிதி ஆண்டில் ரூ. 46,467 கோடி என திருத்திய மதிப்பீடு குறிப்பிட்டுள்ளது. 2025-26ஆம் நிதி ஆண்டில் பற்றாக்குறை ரூ. 41,635 கோடியாகக் குறையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறையானது 2024-25ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.26 சதவீதமாக இருந்தது. இது 2025-26ஆம் ஆண்டில் 3 சதவீதமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 7,73,94,000 இங்கு மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 0.30% ஆக உள்ளது. பரப்பளவில் பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்திலுள்ள மக்கள் தொகை 24,12,65,000. இங்கு மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1% ஆக உள்ளது. உத்தரப் பிரதேசத்தின் மொத்த செலவினம் ரூ. 8,08,736 கோடி. வரவு ரூ. 7,79,243 கோடி. வருவாய் பற்றாக்குறை ரூ.91,399 கோடி (2.97%). மாநிலத்தின் கடன் அளவு ரூ. 9,03,924 கோடி.

இந்த ஒப்பீடு எதற்கெனில் தமிழ்நாட்டை விட உத்தரப் பிரதேசத்தின் மக்கள் தொகை மூன்று மடங்கு அதிகம். ஆனால் தமிழகத்தின் பட்ஜெட் ரூ. 35 லட்சம் கோடி. உத்தரப் பிரதேசத்தின் பட்ஜெட் ரூ. 80 லட்சம் கோடி.

தமிழகத்தைவிட மூன்று மடங்கு அதிக மக்கள் தொகை கொண்ட மாநிலத்தின் பட்ஜெட் சுமார் ரூ. 105 லட்சம் கோடியைத் தாண்டியிருக்க வேண்டும். ஆனால் அதற்கான வாய்ப்புகளோ வளங்களோ இல்லை என்பதை இதன் மூலம் உணரலாம். தமிழ்நாட்டுடன் ஒப்பிடுகையில் பல்வேறு இனங்களில் உத்தரப் பிரதேச மாநிலம் பின்தங்கியிருப்பதையும் புரிந்து கொள்ளலாம். வடக்கு வளரவில்லை, தெற்கு பிரகாசிக்கிறது என்பதற்கு தமிழ்நாடு மிகச் சிறந்த உதாரணம் என்பதை பட்ஜெட்டும், பொருளாதார ஆய்வறிக்கைகளும் உள்ளங்கை நெல்லிக்கனி போல விளக்குகின்றன.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

கவிதை | ஆர் வத்ஸலா



# வயது

வயது தொண்ணூறுக்கு மேல்தான்
அதிகம் நடமாட்டம் கிடையாதுதான்
கடைசி முப்பது நாட்கள்
படுக்கையில்தான் எல்லாம்
சுயசார்புடைய அவருக்கு
அது சித்ரவதைதான்

மறதி அதிகரித்து
கடைசி நான்கு நாட்கள்
என்னைக் கூட
அடையாளம் தெரியவில்லைதான்

அவர் பட்டபாட்டை கண்டு
கொண்டுபோகச் சொல்லி
வேண்டத்தான்
செய்தேன் கடவுளை

போய்விட்டார்

சொல்லி விடுகிறேன் இப்போதே
கண்களில் ஈரமில்லை என்பதால்
கேட்டுவிடாதீர் யாரும்
'என்ன வயசாச்சு?'
என்று -

அப்பாவை இழந்த அநாதை
நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவிமய அரசின் சட்ட ஆயுதங்கள்!

வரலாற்றின் மத்திய காலத்தில் அரசும் மதமும் ஒன்றோடொன்று பிரிக்கமுடியாதபடி பிணைக்கப்பட்டிருந்தன. கடவுளின் பெயரால் மண்ணுலகத்தில் ஆட்சிபுரிபவராக மன்னர்கள் அங்கீகார அதிகாரம் கொண்டிருந்தனர். இத்தகைய மத்திய கால நிலையை எதிர்த்து பிரெஞ்சுப் புரட்சி, இங்கிலாந்து புரட்சி நடைபெற்று, நாடாளுமன்றங்கள் அமைந்தது வரலாறு. இப்போது மத்திய காலத்தின் பிற்போக்கு நிலைக்குத் திரும்புவதைப்போல, மதம் அரசோடு கைகோக்கும் செயற்போக்கு எழுந்துவருகிறது. பல ஐரோப்பிய நாடுகளும் பிற்போக்கு மதவழித் தேசியத்தை மீளக் கட்டமைக்க முயன்றுவருகின்றன. தெற்காசியாவில் குறிப்பாக இந்திய அரசும் இதில் அணிசேரத் துடித்துவருகிறது.

பார்ப்பனிய வருண தர்மத்தைப் போதிக்கும் இந்து மதத்தை முதன்மைப்படுத்தி, அரசின் மதச்சார்பின்மைக் கோட்பாட்டைக் காலாவதியாக்க முயல்கிறது. இன்னொரு கூறாக, மதச் சிறுபான்மையினரை எதிரியாகக் காட்டுவதும் நடக்கிறது.

இசுலாமியர்களை சொந்த நாட்டிலே ஏதுமற்ற மக்களாக மாற்றி அவர்களை அந்நியர்கள், ஆக்கிரமிப்பாளர்கள், பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி ஒடுக்கிவருகிறது. இதையும் சட்டரீதியாகவே செய்துவருகிறது. இராமர் கோயில், காசுமீர் சிறப்புச் சட்டம், குடியுரிமைத் திருத்தச் சட்டம், தேசிய மக்கள் பதிவேடு ஆகியவற்றைத் தொடர்ந்து, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் லவ்ஜிகாத் சட்டம், பசுவதைத் தடுப்புச் சட்டம், மதமாற்றத் தடைச் சட்டம் என சிறுபான்மை மதத்தினரைக் குறிவைத்து சட்டங்களை இயற்றிவருகிறது.

இப்போது நாடளவில் வக்பு திருத்தச் சட்டம், மாநிலவாரியாக பொது சிவில் சட்டம் ஆகியவற்றைக் கையில் எடுத்திருக்கிறது.

#### உத்தரகண்ட் பொது சிவில் சட்டம் - பாலின சமத்துவம் எனும் பெயரில் ஒடுக்குமுறை

பொதுசிவில் சட்டம் என்றவுடன் இந்த நாட்டில் குறிப்பிட்ட மதங்களுக்கு மட்டும் தனிச்சட்டங்கள் இருக்கலாமா என சங்பரிவாரங்கள் அறிவுப்பூர்வம்போலக் கேட்டுவருகின்றன. இச்சட்டம் பற்றிய வெகுமக்களின் அறியாமையை இந்தக் கூட்டம் சாதகமாகப் பிடித்துக்கொண்டுள்ளன.

1985இல் ஷா பானு வழக்கின் தீர்ப்பையொட்டி முசுலிம் சமூகத்தில் முத்தலாக் எனும் அநீதியான மணமுறிவு முறை வழக்கத்தில் இருப்பது போலவும் முசுலிம் பெண்களின் உரிமையைக் காக்கும் போராளிகளைப் போல ஆர்எஸ்எஸ், அதன் துணை அமைப்புகள் கூறிவருகின்றன.

1996 முதல் பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கையில் பொது சிவில் சட்டத்தை உருவாக்குவோம் என்ற வாக்குறுதி இருந்துவருகிறது. ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்சா, “மதச்சார்பற்ற நாட்டில் மத அடிப்படையில் மட்டும் தனிநபர் சட்டங்கள் நீடிக்கலாமா” என்றவாறு நாடாளுமன்றத்தில் பேசினார். மீனா லேகி என்ற மாநிலங்களவை பா.ஜ.க. உறுப்பினர் 2022 ஆம் ஆண்டில் பொது சிவில் சட்டம் தொடர்பாக தனிநபர் சட்டமுன்முடிவைக் கொண்டுவந்தார். அது நிறைவேற்றப்படவில்லை என்றாலும், அது எப்போதும் ஒன்றிய அரசால் கொண்டுவரப்படலாம் என்கிற சாத்தியமே அதிகம்.

அதன் தொடக்க முயற்சியாகத்தான் நாட்டிலேயே முதல் மாநிலமாக உத்தரகண்ட்டில் பா.ஜ.க.வின் புஷ்கர் சிங் தாமி அரசால் பொது சிவில் சட்டமானது கடந்த ஆண்டு இயற்றப்பட்டு இந்த ஆண்டு சனவரியில் குடியரசுத்தலைவரின் ஒப்புதலைப் பெற்றுச் சட்டமாக்கி நடைமுறைக்கும் வந்துவிட்டது.

ஏனைய பா.ஜ.க. ஆளும் அசாம், உ.பி., ம.பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய மாநிலங்களின் அரசுகளும் இதேபோன்ற சட்டத்தைக் கொண்டு வரவுள்ளதாக அறிவித்துள்ளன.

### ஆபத்தான அம்சங்கள் என்னென்ன?

உத்தரகண்ட் அரசின் பொது சிவில் சட்டம் பிரிவு 6,7 ஆகியவை திருமணப் பதிவைக் கட்டாயமாக்குகின்றன. ஏற்கெனவே உத்தரகண்டின் திருமண கட்டாயப் பதிவுச் சட்டம் 2010 வழக்கில் இருந்தபோதும், புதிய சட்டப்படி நியமிக்கப்பட்டுள்ள பதிவாளர்களின் கீழ் அவற்றைப் பதிவு செய்ய வேண்டும் என்கிறது. இச்சட்டப்படி பதிவு செய்யப்பட்ட திருமணம் தொடர்பான தகவல்களைப் பொதுவெளியில் அனைவரின் பார்வைக்கு படும்வகையில் வைக்கப்படவேண்டும். மதம்கடந்து, சாதிகடந்து நடைபெறும் திருமணங்களைத் தடுக்கவே இந்தப் பிரிவுகள் வழிசெய்கின்றன.

குறிப்பாக, ஏற்கெனவே பண்பாட்டுக் காவலர்கள் எனும் பெயரில் கொலைவரை வன்முறையில் ஈடுபடும் பஜ்ரங்தள் போன்ற அமைப்புகளின் கண்காணிப்புக்கும் தாக்குதலுக்கும் புதுமண இணையர் ஆளாகும் ஆபத்து உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் வராததற்கு முன்னரே இந்த வன்முறை கும்பல்கள் பல மாநிலங்களில் சாதி, மத மறுப்புத் திருமணங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுவருகின்றனர் என்றால், இனி எப்படி இருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். தமிழ்நாட்டில் கோகுல்ராஜ் படுகொலையை நடத்திய யுவராஜ் போன்ற சாதிவாத கொலை கும்பல்களுக்கு இதுபோன்ற சட்ட விதிகள் துணையாக இருக்கும். இச்சட்டத்தில், திருமணத்தைப் பதிவு செய்யாமல் விடுத்தவர்களுக்கு ரூ.25000, சிறைத் தண்டனை அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், திருமண முறிவு தொடர்பான தகவல்களையும் சேர்ந்து வாழும் இணையரின் தகவல்களையும் கட்டாயமாக்குகிறது.

திருமணத்தைப் பதிவு செய்யாமல் விடுவது குற்றம் என்பதாக எந்தச் சட்டமும் கூறவில்லை. ஏனெனில் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு குறைவும் ஒரு காரணம் என்பதால் அதனைச் சட்டங்கள் வலியுறுத்தவில்லை. திருமண முறிவு தொடர்பாக நீதிமன்றத் தீர்ப்புகள் இருந்தபோதும் அவற்றைக் கட்டாயப்படுத்துவதன் உள்நோக்கத்தை ஆழமாக நோக்க வேண்டியுள்ளது.

அரசமைப்புச்சட்டத்தின்படி 18 வயது நிரம்பிய இளையோர் யாரும் தங்கள் வாழ்விணையரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. அவர்களுடைய இந்தத் தனியுரிமையில் தலையிட எவருக்கும் உரிமை இல்லை என உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில் கூறியிருக்கிறது.

**சான்றுகள்:**

***Lata Singh v. State of U.P., Arumugam Servai v. State of Tamil Nadu, Shakti Vahini vs. Union of India and Shafin Jahan v. Asokan K.M.***

உத்தரகண்டின் பொது சிவில் சட்டமோ வயதுவந்தோர், பெற்றோர், குடும்பம், தான்சார்ந்த சாதி, மத, ஊர் குல வழக்கத்தை மீறிச் செயல்படுகையில், இச்சட்டப்படி அமைக்கப்பட்டுள்ள பதிவாளர்கள் தயவை நாடி இருக்கச் செய்கிறது. தம்பதியர் இருவருக்கும் 18 வயதுக்கு மேல் 21 வயதுக்குக் கீழ் இருந்தால் அவர்கள் திருமணம் செய்வதைத் திருமணங்களைப் பதிவு செய்யும் பதிவாளரே தடுக்க முடியும். திருமணப் பதிவு, முறிவு, திருமணமில்லாமல் சேர்ந்து வாழும் இணையர் ஆகியோர் பதிவுசெய்யும்போது உள்ளூர்த் தலைவர்கள், மதத் தலைவர்கள் ஆகியோரிடம் பதிவாளர் விசாரித்துத் தனது முடிவை இறுதி செய்பவராகச் சட்டம் கூறுகிறது. பதிவாளர்கள், நாட்டுப் பஞ்சாயத்துத் தலைவர்கள்போலச் செயல்படுவதற்கு வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

இது இராஜஸ்தானின் கப் பஞ்சாயத்தைப் போன்று நாடு முழுவதும் ஊர்ப்புறங்களில் செயல்படும் சாதிப் பஞ்சாயத்துகளைச் சட்டப்பூர்வமானதாக மாற்றும் வேலையே தவிர வேறு இல்லை. உத்தரகண்டைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமல்ல உத்தரகண்டிற்குச் செல்லும் வெளி மாநிலச் சேர்ந்த ஆண் - பெண் இணையரும் அரசிடம் பதிவு செய்துகொள்ளமாம். கதை எப்படி இருக்கிறது, பாருங்கள்!

பொது இடங்களில் ஆண் - பெண் சேர்ந்து செல்வதையோ, பேசுவதையோ குற்றமயமாக்கி அவர்களைச் சட்ட நடவடிக்கைகளுக்கு ஆளாக்கும் கொடுந்தீங்கும் இச்சட்டத்தில் உள்ளது. பணி சார்ந்தோ ஆண்- பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்கள் பொது இடத்தில் சந்திப்பதைத் தடுக்கும் இந்துத்துவ வன்முறைக் கும்பலுக்கு இச்சட்டம் வலுச்சேர்த்துள்ளது.

**சட்ட ஆணையத்தின் பரிந்துரை**

21 ஆவது சட்ட ஆணையம் இந்துத் திருமணச் சட்டம், சிறப்புத் திருமணச் சட்டம் ஆகியவற்றில் உள்ள மணவுரிமை மீட்டளிப்பு (Restitution of conjugal rights) பிரிவுகள், திருமணம் செய்துகொண்ட காரணத்திற்காகவே பெண்கள் குடும்ப வன்முறைக்கு ஆளாவதைப் பொறுத்துக்கொள்ள வைக்கும் கொடுமை வாய்ந்த பிரிவுகளாக உள்ளன எனக் கூறியிருக்கிறது. அத்துடன், அதனைப் பாலின சமத்துவ நோக்கில் திருத்த வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளது. பொது சிவில் சட்டம் தேவையற்றது, விரும்பத்தகாதது எனவும் அந்த ஆணையம் கூறியுள்ளது. ஆனால் சனாதனவாதிகளுக்கு அரசமைப்பு பற்றியோ பாலின சமத்துவம் பற்றியோ அக்கறையில்லை. மரபான இந்துச் சமூகம் கட்டமைக்க விரும்பும் சாதி, மத பழமைவாதச் சகதியில் பெண்களை அடிமைப்படுத்துவதே அவர்களின் நோக்கம்.

இந்த உண்மைகளை மறைக்க முசுலிம் பெண்களின் சமத்துவத்தை நிலைநாட்டப் போவதாகவும் மத அடிப்படையிலான பாகுபாட்டை ஒழிக்கப் போவதாகவும் கூறி சிறுபான்மைச் சமூகங்களை வெகுமக்களுக்கு எதிராகத் திருப்ப பொது சிவில் சட்டத்தை ஒரு கருவியாக பா.ஜ.க.வும் சங்பரிவார் அமைப்புகளும் பயன்படுத்துகின்றன.

**மனுதர்மத்தைக் கொண்டுவர பொது சிவில் சட்டம்!**

பா.ஜ.க.வின் பொது சிவில் சட்டத்தின் உண்மையான முகத்தை அறிந்துகொள்ள அவர்களை வழிநடத்தும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் பெண்கள் பற்றிய நிலைப்பாட்டைப் புரிந்துகொள்வது அவசியம். ஆர்எஸ்எஸ், இந்து மகாசபா அமைப்புகளின் சிந்தனை மூலவர்களின் நிலைப்பாட்டிலிருந்தே இது தொடங்கிவிடுகிறது.

பெண்களையும் சூத்திரர்களையும் இழிபிறவிகளாக, அடிமைகளாக சித்தரிக்கிறது மனுதர்மம். பெண்கள் பிறர் நாட்டம் விருப்பம் உள்ளவர்கள் அவர்களைச் சந்தேகத்துடனே அணுக வேண்டும் என்றும் சொல்கிறது. மனுதர்மத்தைப் பொருத்தவரை பெண்களுக்குத் தனியான சிந்தனை இருக்கக்கூடாது. அவர்களுக்கு கல்வி, சொத்து ஆகியவை கூடாது எனவும் கூறுகிறது. இதுமட்டுமல்ல, வருணத் தகுதியை மீறி திருமணம் செய்கிறவர்களை தாழ்ந்த பிரிவினராக்கி சமூக விலக்கம் செய்யக் கோருகிறது. இத்தகைய மனுதர்மத்தையும் அதன் ஆசிரியராக அறியப்படும் மனுவையும் உலகிலேயே முதல் சட்ட வல்லுநர் என்றும் மனுநூலைப் போற்றி வணங்க வேண்டும் என கோல்வால்கர், சாவர்க்கர் போன்ற இந்துத்துவத் தலைவர்கள் எழுதியும் பேசியும் உள்ளனர்.

வேலைக்குச் செல்லும் பெண்களை ஒழுக்கங்கெட்டவர்களென இழிவுபடுத்தினார், காஞ்சி மடாதிபதி.

பிரிட்டிஷ் வருகைக்குப் பின் உருவான சீர்திருத்த இயக்கங்களின் முயற்சியால் பெண்களுக்குக் கிடைத்த கல்வி, சமூக, பொருளியல் பலன்களை வெறுப்பவர்களாகவும் தடுப்பவர்களாகவும் இந்தச் சனாதனிகள் இருந்தனர் என்பதே வரலாறு. குழந்தை திருமணத் தடைச்சட்டம், விதவை மறுமணச் சட்டம் ஆகியவை இந்துப் பண்பாட்டின் மீதான தாக்குதலெனப் பரப்புரை செய்தனர். அவர்களில் தொடக்க கால சனாதனிகளான மதன்மோகன் மாளவியா, திலகர் ஆகியோர் முக்கியமானவர்கள். இப்படிப்பட்டவர்கள் முசுலிம் பெண்களின் சமத்துவ உரிமைக்காகப் பேசுவதுதான் அவலச் சுவையாக உள்ளது.

அரசியல் நிர்ணய அவையில் சமத்துவ நோக்கில் பொது சிவில் சட்டம் வேண்டும் எனக் கோரிய அண்ணல் அம்பேத்கரின் வாதத்தை இந்துமகாசபா கடுமையாக எதிர்த்தது என்பது வரலாறு. ஆனால் தற்போது அதே வழிவந்த பா.ஜ.க. பொது சிவில் சட்டம் குறித்து நீலிக் கண்ணீர் வடிக்கிறது.

இந்துப் பெண்களின் சொத்துரிமை, சமத்துவ உரிமைகளை வலியுறுத்தும் பொது சிவில் சட்டத் தொகுப்பை அண்ணல் அம்பேத்கர் கொண்டுவந்தபோது, சனாதனிகள் அந்தச் சட்டத் தொகுப்பை நிறைவேற்ற மறுத்துவிட்டனர் என்பது வரலாறு.

ஆர்எஸ்எஸ் தலைவர் சுதர்சன் ஒரு முறை மேற்கத்திய கருத்துகளின் தாக்கத்தால் பெண்கள் சமத்துவ உரிமைக்காகவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதுவரை நடைமுறையில் இருந்த வக்பு சட்டத்தில் வக்பு வாரியங்களுக்கு வக்பு சொத்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் இருந்தது. அந்த உரிமை தற்போது மாவட்ட ஆட்சியருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அவர் நினைத்தால் ஆவணங்கள் இல்லை என காரணங்காட்டி வக்பு சொத்துகளை அரசுச் சொத்துகளாக மாற்ற முடியும். அடுத்ததாக, வக்பு கவுன்சிலில் முசுலிம் அல்லாதோரை உறுப்பினர்களாக நியமிக்கலாம் என திருத்தச் சட்டம் கூறுகிறது.**

பொருளியல் சுதந்திரத்திற்காவும் போராடுவதால் பெண்களிடம் அன்பு, தியாகம், சேவை ஆகியவை குறைந்திருப்பதாக வருத்தப்பட்டார்.

இந்து சமூகம் ஏற்காததால் ஆர்எஸ்எஸ் அமைப்பில் பெண்களைச் சேர்த்துக்கொள்ளவில்லை என எட்கேவர் கூறினார். ஆனால், பல துறைகளிலும் பெண்கள் கோலோச்சும் நிலை வந்ததும் பெண்களை இந்துத்துவ சித்தாந்த வலைப்பின்னலுக்குள் கொண்டுவருவதை ஆர்எஸ்எஸ் தீவிரப்படுத்தியது. வேறு வழியின்றி பா.ஜ.க. மகிளா மோர்ச்சா, துர்கவாகினி போன்ற பெண் அமைப்புகளை உருவாக்கியது. பெண்களை நாடாளுமன்றத்திற்கும் தங்கள் சார்பாக அனுப்பியது.

உடன்கட்டை ஏறச் சொல்லும் சதிக் கொடுமையைத் தடைசெய்ய பிரச்னை எழுந்தபோது 'சதி' இந்துப் பெண்களின் உரிமை என முழங்கினார், பா.ஜ.க.வின் மேனாள் ஒன்றிய அமைச்சர் வசுந்தரா ராஜே.

இவ்வாறான ஆணாதிக்கச் சிந்தனையும் பழமைவாதக் கொள்கையையும் உயர்த்திப் பிடிக்கும் ஆர்எஸ்எஸ்சின் சனாதனக் கொள்கையிலிருந்து இந்துப் பெண்கள் மீளத்தான் பொது சிவில் சட்டம் தேவை. ஆனால் சங்பரிவாரங்களோ அனைத்துப் பெண்களின் சமத்துவ உரிமையை முசுலிம் பெண்களின் உரிமையை நிலைநாட்டுகிறோம் எனும் பெயரில் பொது சிவில் சட்டம் குறித்து தவறான கருத்துகளைப் பரப்பி வருகிறது.

உண்மையில் அவர்களின் நோக்கம் செர்மனியில் இட்லர் பெண்களின் உலகம் தேவாலயம், குழந்தைகள், சமையலறை ஆகியவற்றைச் சுற்றியே இருக்க வேண்டும் எனச் சிந்தித்தது போலவேயாகும். பொது சிவில் சட்டம் எனும் பெயரில் பெண்கள் இந்துத்துவ வன்முறை அமைப்புகளின் பொய் வாய்மாலங்களுக்கு ஆட்படாமல் தங்கள் சமத்துவ உரிமையை நிலைநாட்ட மதங்களைக் கடந்து ஒன்று சேர வேண்டும்.

**வக்புச் சட்டத்திருத்தம் (2024)**

**முசுலிம்களின் உடைமைகளைப் பறிக்கும் சதி**

வக்பு என்பது இசுலாமியர்களின் வழிபாட்டு உரிமையோடு இரண்டறக் கலந்தது. முசுலிம்களின் சமய நலன், மத நிறுவனம், அறப்பணிகள் ஆகிய நோக்கங்களுக்காக எவரொருவரும் இலவசமாக அசையும் அசையாச் சொத்துகளை அறக்கொடையாக வழங்குவதாகும்.

பிரிட்டீசு ஆட்சிக் காலத்திலேயே இத்தகைய அறக்கொடையை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டம் 1890இல் (*Charitable Endowments Act* ) இயற்றப்பட்டுவிட்டது. நாட்டு விடுதலைக்குப் பிறகு இந்து அறநிலையத்துறைச் சட்டங்கள் இயற்றப்பட்டதைப்போல வக்புச் சட்டம்1954இல் இயற்றப்பட்டது. அது பல்வேறு திருத்தங்களுக்கும் ஆளாகிவந்துள்ளது. கடந்த 1995இல் வக்பு சொத்துகளை ஒழுங்குபடுத்துவதற்கான பல்வேறு தரப்பினருடன் விரிவான கலந்தாய்வு நடத்தி வக்பு சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

இன்று நாடு முழுவதும் 9 இலட்சம் ஏக்கருக்கும் கூடுதலாக நிலங்கள் 8 இலட்சம் சொத்துகளாக நீடிப்பதாகத் தகவல்கள்!

இந்திய அரசமைப்புச்சட்டப் பிரிவுகள் 25,26, 29(1) ஆகியவை அவரவர் மதக் கடமைகளைப் பின்பற்ற அடிப்படை உரிமையாக வழங்குகிறது. இந்தப் பின்னணியிலேயே இந்து, ஜெயின், பார்சி, புத்தம், இசுலாம், நாட்டார் சமயங்களைச் சேர்ந்தோர் தங்கள் வழிபாட்டு முறை, சமயக் கடமைகளைத் தொடர ஏற்பிசைவு உள்ளது.

பல சமயங்கள், பல வழிபாட்டு முறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவும் நாட்டில் பொது உரிமைக்கு இடர்படாமல் தங்கள் சமயக் கடமைகளை தொடர்ந்து வருகின்றனர். இந்த பன்மைத்துவ சமய வாழ்வுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் வக்பு சட்டத்தைக் கடுமையாகத் திருத்தி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறது, பாஜக மோடி அரசு. எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்தபின்னர் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவுக்கு சட்டவரைவு அனுப்பப்பட்டது. கூட்டுக்குழுவின் ஆய்விற்குப் பிறகு தாக்கல் செய்யப்பட்ட வக்பு திருத்தச் சட்ட முன்வடிவில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் மாற்றுக் கருத்துகள், குறிப்புகள் ஆகியவை முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் வக்பு திருத்தச் சட்டம் இசுலாமிய மக்களிடமும் சனநாயக பொதுசமூகத்திடமும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஏற்கெனவே இசுலாமியர்களின் வழிபாட்டுத் தலங்களில் ஆய்வு எனும் பெயரில் இந்துத்துவ அமைப்புகளின் விருப்பத்திற்கேற்ப உள்ளூர் நீதிமன்றங்கள் அத்துமீறலில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நடவடிக்கை இசுலாமியர்களின் வழிபாட்டுத் தலங்கள் பறிபோகுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் சட்டத்தின் பெயரால் முசுலிம் வழிபாட்டு இடங்களும் அவர்களின் வாழ்விடங்களும் இடித்துத் தள்ளப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழலில் வக்பு திருத்தச் சட்டம் வந்திருக்கிறது. இதுவரை நடைமுறையில் இருந்த வக்பு சட்டத்தில் வக்பு வாரியங்களுக்கு வக்பு சொத்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் இருந்தது. அந்த உரிமை தற்போது மாவட்ட ஆட்சியருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அவர் நினைத்தால் ஆவணங்கள் இல்லை என காரணங்காட்டி வக்பு சொத்துகளை அரசுச் சொத்துகளாக மாற்ற முடியும். அடுத்ததாக, வக்பு கவுன்சிலில் முசுலிம் அல்லாதோரை உறுப்பினர்களாக நியமிக்கலாம் என திருத்தச் சட்டம் கூறுகிறது. இது ஏற்கெனவே நடைமுறையிலுள்ள இந்து, செயின் அறப்பணிகள், அறநிலையத் துறை சட்டங்களில் முறையே இந்து, செயின் மக்கள் மட்டுமே அவர்கள் மதம் தொடர்பான அறப்பணிகள் வாரியங்களில் பதவி வகிக்க முடியும் என்கிற நிலைக்கு மாறாக முசுலிம்களுக்குப் பாகுபாடு இழைக்கிறது.

மாநில வக்பு வாரியங்களுக்கு நடைபெறும் தேர்தலை நீக்கிவிட்டு மாநில அரசுகளே நியமன உறுப்பினர்களை நியமித்துக் கொள்ளலாம் என புதிய திருத்தம் கூறுகிறது. இது சனநாயக முறைக்கு குழி தோண்டுவதோடு ஊழலுக்கும் முறைகேடுகளுக்கும் வழிவகுக்கும்.

இதுவரை வக்பு சொத்துகளை அடையாளம் காண்பதற்கு அளவை ஆணையர்கள் இருந்தனர். தற்போது அவர்கள் நீக்கப்பட்டு செயல் அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கு முசுலிம் சொத்து குறித்த எந்த அறிவும் இருப்பதற்கான வாய்ப்பு இருக்காது. வக்பு சொத்துகள் தொடர்பான வழக்குகளுக்கு இவர்கள் உதவவும் முடியாது.

முசுலிம்கள் இந்த நாட்டில் வாழலாம்; ஆனால் அவர்கள் சம உரிமை கேட்கக் கூடாது என ஆர்எஸ்எஸ்சின் சர் சங் சலக் தனது சிந்தனைக் கொத்துகள் நூலில் குறிப்பிட்டுள்ளார். அதனை மெல்ல மெல்லச் செயல்படுத்தும் வகையில் வழிபாட்டுத் தலங்கள் சட்டத்தை சட்டப்படி இல்லாமலாக்குவதுபோல வக்பு சட்டத்தைத் திருத்தி முசுலிம்களின் சொத்துகளை கையகப்படுத்திக் கொள்ள பா.ஜ.க. முயன்றுவருகிறது. தமிழ்நாட்டில் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இந்து அறநிலையத் துறையை இந்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என ஓலமிடாதபடியாகக் கூவிவரும் சங்பரிவார், வக்பு சொத்துகளை அரசு கையகப்படுத்த வேண்டும் என நாடகமாடுகிறது.

முசுலீம்களின் அடையாளங்களை, இருப்பை அழித்து நாட்டை பார்ப்பனிய ஒற்றைமத இராச்சியமாக மாற்ற பா.ஜ.க. சட்டங்களை ஆயுதங்களாக மாற்றிவருகிறது.

மதச்சார்பின்மை நாட்டில் மதநல்லிணக்கத்தை விரும்பும் அனைவரும், ஒன்றிய அரசின் இந்தச் சிறுபான்மை மதப் பகைப் போக்கை எதிர்த்துக் குரல்கொடுப்பது சனநாயகக் கடமை.

●

---

கட்டுரையாளர்: எழுத்தாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | ரூபன் சிவராஜா

# எலோன் மஸ்க் கைகளில் அமெரிக்க ஆட்சி நிர்வாகம்!

**சந்தைச் சக்திகளின் நன்மைக்காக நிறுவனங்களை மறுசீரமைக்க அவற்றின் நிர்வாக இயக்குநர்கள் தன்னிச்சையான முடிவுகளைச் செயற்படுத்துவதென்பது அடிப்படையான மூலதனவாதக் கோட்பாடு. வழமையான முதலாளித்துவவாதிகள் சிந்திப்பது போலவே, பொதுத் துறையைத் தனியார் அமைப்புகளைப் போலக் கையாளலாம் என்று மஸ்க் நினைப்பது ஆச்சரியம் தரும் நிகழ்வல்ல.**

### ட்ரம்ப் நிர்வாகமும் வணிக-செல்வந்த உயரடுக்குகளும்

Facebook -நிறுவனர் மார்க் சக்கர்பெர்க், Amazon -நிறுவனர் ஜெஃப் பெசோஸ், Google-தலைமைச் செயல் அதிகாரி சுந்தர் பிச்சை மற்றும் X-தள உரிமையாளரும் உலகின் முதற்பெரிய செல்வந்தருமான எலோன் மஸ்க் ஆகிய சர்வதேச தகவற்தொழில்நுட்ப, வணிகப் பெருமுதலாளிகள் ஜனவரி 20ஆம் திகதி இடம்பெற்ற அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பதவியேற்பு நிகழ்வில் முன்வரிசையில் அமரவைக்கப்பட்டிருந்தனர். டொனால்ட் ட்ரம்ப் அரசாங்க அமைச்சர்கள் உட்பட்ட முதன்மைப் பிரமுகர்கள் பின்தள்ளப்பட்டு பிரதான முன்னிருக்கைகளில் மேற்சொன்ன நிறுவனங்களின் தலைவர்கள் அமர்ந்திருந்தனர்.

இந்த நிகழ்வு ஒரு பெரும் செய்தியைத் தகவல்பூர்வமாகவும் காட்சிபூர்வமாகவும் அப்பட்டமாக வெளிப்படுத்துகின்றது. உலகளாவிய தகவல் ஊடகத் தொழில்நுட்பங்களைக் கையில் வைத்திருக்கும் பெரும்சக்திகள் ட்ரம்ப் நிர்வாகத்தோடு கைகோர்த்துள்ளன. ஜனநாயகமும் கருத்துச்சுதந்திரமும் ஆபத்தான திசைவழி இட்டுச்செல்லப்படுவதையும் இந்நிகழ்வும் அதனைத் தொடர்ந்து அமெரிக்க ஆட்சியில் இடம்பெறும் சம்பவங்களும் மாற்றங்களும் வெளிப்படுத்துவதாக விமர்சகர்கள் கருதுகின்றனர்.

### கட்டற்ற அதிகாரக் கையளிப்பு

எலோன் மஸ்க் எனும் உலகப் பெருமுதலாளிக்கு கூடுதல் அதிகாரத்தை வழங்கும் உத்தரவிலும் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் கைச்சாத்திட்டுள்ளார். மஸ்க் தலைமையில் ட்ரம்ப் நிர்வாகம் புதிதாக உருவாக்கியுள்ள அரசாங்கச் செயற்திறன் அமைச்சகத்திற்கும் (Department of Government Efficiency - DOGE) மேலதிக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரம் அமெரிக்க அரசாங்கத்தின் பொதுச் சேவைத் திணைக்களங்கள் மீது அதிகாரம் செலுத்துதல், கட்டுப்படுத்துதல், அவற்றுக்கான நிதிஒதுக்கீடுகளிற் பெரும் வெட்டுகளை நடைமுறைப்படுத்துதல், அரச பணியாளர்களைக் குறைத்தல் என்பதான அதிகாரங்களை உள்ளடக்கியதாகும்.

அரசாங்கத்தின் பொது நிர்வாக மற்றும் சேவைத் திணைக்களங்கள் மஸ்க் தலைமையிலான அமைச்சகத்துடன் ஒத்துழைக்கவேண்மென்ற உத்தரவும் ட்ரம்பினால் வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க செயற்திறன் துறை (Doge) டொனால்ட் ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் பதவியேற்ற அதே நாளில் உருவாக்கப்பட்டது. ஏமி க்ளீசன் (Amy Gleason) அதன் தலைமைப் பொறுப்பினை வகிக்கின்றார். டொனால்ட் ட்ரம்பின் சிறப்பு ஆலோசகராகவும் அதேவேளை அமெரிக்க அரச இயந்திரத்தினைச் செயற்திறன் மிக்கதாக மாற்றும் பொறுப்பும் எலோன் மஸ்க்கிற்கு வழங்கப்பட்டுள்ளது.

எலோன் மஸ்க் உலகின் முதலாவது செல்வந்தர். அவருடைய ஆண்டு வருமானம் 349 பில்லியன் டொலர்களாகும். கடந்த ஆண்டு (2024) தேர்தற் பரப்புரைக் காலத்திலேயே

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மஸ்க் - ட்ரம்ப் உறவு குறித்த பல்வேறு விமர்சனங்கள் வெளிக்கிளம்பியிருந்தன. டொனால்ட் ட்ரம்பின் 'நிழல் ஜனாதிபதி'யாக மஸ்க் உத்தியோகபூர்வமற்ற செல்வாக்கைப் பெறப்போகின்றார் என்பதான பேச்சுகளும் நிலவின. ட்ரம்பின் தேர்தற் பிரசாரத்திற்கு மஸ்க் பெரும் நிதித்தொகையை முதலீடு செய்திருந்தார். தேர்தலில் ட்ரம்பிற்காக மஸ்க் செலவுசெய்த தொகை, 250 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதற்குக் கைமாறாகவே தற்போது அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அவருக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள பொறுப்புத் தொடர்பாகவும் ட்ரம்ப் தேர்தல் வெற்றிக்கு முன்னரே வாக்குறுதி அளித்திருந்தார்.

## நிதிவெட்டு - பணிநீக்கம் - பொதுநலத் திட்டங்கள் நிறுத்தம்

திணைக்களங்களுக்கு இறுக்கமான விதிமுறைகளும் விதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக நிதிப்பரிபாலனம் மற்றும் செயற்திட்டங்கள் தொடர்பான அதிகாரப்பிரயோகம் மிக்க நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அரசுக்குச் சொந்தமான பயன்பாட்டில் இல்லாத கட்டடங்கள் உட்பட்ட சொத்துகள் குறித்த பட்டியல் கோரப்பட்டுள்ளது. அவற்றை விற்பதே பட்டியற் கோரலின் நோக்கம்.

இந்தச் சர்ச்சைக்குரிய புதிய அமைச்சகம் ஏலவே (*United States Agency for International Development - USaid*) சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க நிறுவனத்தின் செயற்பாடுகளை நிறுத்துவதற்குக் காரணமாகியிருந்தது. வோசிங்ரன் நகரில் அமைந்துள்ள USaid நிறுவனத்தின் முன்பாக 28.02.25 எலோன் மஸ்க்கிற்கு எதிரான பெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருந்தது. '*Musk, You lied about USaid*' எனும் பதாகையை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். உலகின் முதன்மையான உதவி-அபிவிருத்தி நிறுவனம். இந்த முற்றுமுழுதான நிறுத்தம் என்பது உலகின் பல மில்லியன் வறிய மக்களின் உயிர்ப்பலிகளுக்குக் காரணமாகப்போகின்றது.

அமெரிக்க அரச ஊழியர்கள் மட்டத்தில் ட்ரம்ப் மற்றும் மஸ்க் ஆகிய இருவரும் பெரும் அச்சுறுத்தலாகப் பார்க்கப்படும் நிலை தோன்றியுள்ளது. அரச ஊழியர்கள் பலர் அரசுக்கு எதிராக வழக்குகளையும் தொடுத்துள்ளனர். டிரம்ப் மீதும் அவரது நிர்வாகத்திற்கு எதிராகவும் இதுவரை 90க்கும் மேற்பட்ட வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அவற்றில் எதுவும் தொடக்கச் சுற்றுகளைத் தாண்டவில்லை. ஆனாலும் இந்த வழக்குகள், தற்போதைய பாரிய மாற்றங்கள் பணியாளர்களின் அனுபவ மற்றும் நோக்கு நிலையிலிருந்து எவ்வாறு பார்க்கப் படுகின்றன என்பதற்கான ஒரு வகையான கண்ணோட்டத்தை வழங்குவதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் புதிய அமைச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ள கட்டற்ற அதிகாரம் அமெரிக்க சிவில் நிர்வாக மற்றும் பொதுச்சேவைத் திணைக்களங்களின் மக்கள் நலத் திட்டங்களைச் சிதைப்பதோடு, ஆட்சி நிர்வாகத்தினைப் பெரும் வணிக இலக்குகள் கொண்ட கூடாரமாக மாற்றும் முயற்சி என விமர்சனங்கள் எழுந்துள்ளன. பெரும் நிதிவெட்டுகள், பெருமெடுப்பிலான பணி(யாளர்) நீக்கங்கள் ஏலவே நடைமுறைப்படுத்தத் தொடங்கப்பட்டுவிட்டன.

## மஸ்க் அதிகாரபூர்வமற்ற ஜனாதிபதி' அல்லது 'நிழல் ஜனாதிபதி'

'அதிகாரபூர்வமற்ற அரசதலைவர்' அல்லது 'நிழல் ஜனாதிபதி என எலோன் மஸ்க் விளிக்கப்படுகின்றார். ஏனெனில் அந்தளவிற்கு அமெரிக்க உள்நாட்டு அரசியலிலும் சர்வதேச அரசியலிலும் பெரும் தாக்கம் செலுத்தும் நபராக அவர் ஆகியிருக்கின்றார் என்கிறார் நோர்வேஜிய அரசறிவியற்துறைப் பேராசிரியரும் ஆய்வாளருமான ஹில்மர் மியெல்ட - *Hilmar Mjelde. (Aftenposten, 02.01.2025)*

செல்வந்தர்கள், வணிகப்பெருநிறுவன முதலாளிகள், உயரடுக்குகள் அமெரிக்க அரசியலிற் செல்வாக்குச் செலுத்துவது புதிய விடயமல்ல. ஆனால் இன்றைய பாரிய தகவற் தொழில்நுட்ப புரட்சியின் திசையைத் தீர்மானிக்கும் சக்தியாக மஸ்க் ஒரு பெரும் வகிபாகத்தினைக் கொண்டுள்ள நபர். அப்பேர்ப்பட்ட ஒருவருக்கு, ஓர் ஏகாதிபத்திய அரசாங்கத்தின் ஆட்சியதிகாரத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்தும் அதிகாரவெளியும் சேர்ந்துள்ளது. பொருள்முதல்வாதம் நேரடியாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆட்சியதிகாரத்திற் செல்வாக்குச் செலுத்துகின்றது அல்லது ஆட்சியதிகாரத்தில் நேரடிப் பங்குவகிக்கின்றது.

இதன் இன்னுமோர் முக்கிய அம்சம் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் பற்றியதுமாகும். செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்ப முதலீட்டாளர் மற்றும் அதனைப் புதிய உயரங்களுக்கு வளர்த்துச் செல்லும் ஒருவராக மஸ்க் உள்ளார். சீனாவுடனும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளார். சீனாவுடனான மஸ்க்கின் உறவு எவ்வாறான விளைவுகளை உண்டுபண்ணும். சீனாவுடன் நெகிழ்வுப் போக்கினை ட்ரம்ப் பின்பற்றும் நிலை உருவாகுமா என்ற கேள்வியையும் எழுப்புகின்றார் ஹில்மர் மியெல்ட.

கல்வித்திணைக்களத்தினை மூடும் தீர்மானமும் ட்ரம்ப் நிர்வாகத்தினால் மஸ்க் ஆலோசனை, தலைமையில் எடுக்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது. கல்வித்துறையில் பெருமெண்ணிக்கையான பணியிடங்களை நீக்கத் தொடங்கியுள்ளது ட்ரம்ப் நிர்வாகம். அத்துறையை முற்றிலும் இல்லாமற் செய்யும் நீண்டகாலத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே பணிக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இதுவரை கிட்டத்தட்ட 1300 பணியாளர்களை நீக்கியதன் மூலம், பணியாளர்களின் எண்ணிக்கையை 4000-லிருந்து 2183ஆகக் குறைத்துள்ளது. கொங்கிரஸின் ஒப்புதலின்றி கல்வி அமைச்சகத்தினை நீக்கம்செய்யும் ஒரு நிர்வாக ஆணையை கையொப்பமிடும் திட்டத்தினை ஜனாதிபதி ட்ரம்ப் கசியவிட்டுள்ளார். பெருமெண்ணிக்கையிலான பணிநியமனங்களை நீக்குதல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நிர்வாக ஆணை என்பன ட்ரம்ப் நிர்வாகத்தின் நடவடிக்கைகளின் சட்டப்பூர்வத்தன்மையைக் கேள்விக்கு உட்படுத்தியுள்ளன. சுகாதார அமைச்சர் *Robert F. Kennedy jr.* தடுப்பூசித் திட்டங்களையும் நிறுத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவும் பாரிய சுகாதார ரீதியிலான பாரிய எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்தும்.

### ட்ரம்ப் - மஸ்க் ஆட்சியில் நேரவுள்ள அபாயங்களின் முன்னோட்டம்

ட்ரம்ப் நிர்வாகத்தின் தான்தோன்றித் தனத்தினையும் அரசாங்க ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அச்சத்தையும் புரிந்து கொள்ள ஊடகங்களில் வெளிவந்த ஒரு சம்பவத்தினை முன்வைப்பது பொருத்தமாகும் (*Aftenposten, 28.02.2025*)

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்ற அடுத்த நாள், ஒரு சிறு குழு வெள்ளை மாளிகைக்குள் நுழைந்தது. தற்காலிக உள்நுழைவு அட்டைகளை (*Access Cards*) வைத்திருந்த அவர்கள், அமெரிக்க எண்ணிம சேவையகத்திற்குள் (*Digital Service*) நேராகச் சென்றனர். எண்ணிம சேவையானது அமைச்சுத் துறைகளுக்குக் கணினித் தொழில்நுட்பப் பிரச்சினைகளை கையாள உதவிய ஒரு அலகாகும். உள்நுழைந்தவர்கள் தம்மை அடையாளப்படுத்த மறுத்தனர். ஆனால் அவர்கள் அங்கிருந்த பணியாளர்களை நேர்காணல் செய்யத் தொடங்கினர். அந்நிகழ்வினை அடுத்து 21 பணியாளர்கள் தமது பணிகளைத் துறந்தனர். அவர்களின் பணிவிலகற் கடிதங்கள் அங்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துகின்றன. அரசியல் விசுவாசம் பற்றிய கேள்விகள் அவர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. பணியாளர்களை ஒருவருக்கொருவர் எதிராக நிறுத்தும் கைங்கரியத்திலும் அக்குழுவைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்ற செய்தி வெளியாகியுள்ளது. வெள்ளை மாளிகையின் எண்ணிமச் சேவையகப் பணியாளர்கள் மீது நிகழ்த்தப்பட்ட இந்த அணுகுமுறையானது ட்ரம்ப் - மஸ்க் ஆட்சியில் என்ன நேரவுள்ளது என்பதற்கான முன்னோட்டம் என்று கருதப்படுகின்றது.

மஸ்க் தலைமை வகிக்கும் அரசாங்கச் செயற்றிறன் துறையானது (*DOGE*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிரடியாகவும் கடுகதியிலும் பல அரச திணைக்களங்களைக் கட்டுப்படுத்தத் தொடங்கியுள்ளது. இதன் ஊடான செயற்பாடுகள் மூலம் ஊழல், வீண்விரையம், அதிகாரத்துவச் சதிகளை முடியடிக்கும் அரசியற் கொள்கையின் பாற்பட்ட அரசியலைத் தாம் முன்னெடுப்பதாக ட்ரம்ப் மற்றும் மஸ்க் கூறுகின்றனர். ஆனால் இவர்கள் தமது அரசியல் அதிகார மீறல்களுக்கு எதிரான தடைகளை அகற்றும் வேலைகளையே இந்தச் செயற்திறன் அமைச்சகத்தின் போர்வையில் முன்னெடுப்பதாக விமர்சகர்கள் கருதுகின்றனர். அரசியலமைப்பின் ஊடாக அனுமதிக்கப்படும் அதிகாரத்திற்கு மேலதிகமாகத் தனிப்பட்ட அதிகாரத்தைத் தன்வசப்படுத்துவதில் ட்ரம்ப் அதீத பிரயத்தனம் கொண்டுள்ளார். இதனால் தோற்கடிக்கப்பட்டவர்களும் பாதிக்கப்படுபவர்களும் கொங்கிரஸ் சபையின் மக்களாற் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளுமே.

ட்ரம்புடனான தனது அணுக்கமான உறவினை மஸ்க் தவறாகப் பயன்படுத்துவதாக அமெரிக்காவின் அரசசார்பற்ற பல நிறுவனங்கள் கவலை வெளியிட்டுள்ளன. (The Washington Post, 19.12.2024). எலோன் மஸ்க், அரசாங்கப் பதவிக்கு ஜனநாயக ரீதியிற் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல. ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர். 2024 டிசம்பரில் X-தளத்திற் (முந்தைய Twitter) தனக்கிருக்கும் செல்வாக்கினைப் பயன்படுத்தி, உறுப்பினர்கள் சபையில் (House of Representatives) வரவுசெலவுத் திட்ட முன்மொழிவினை நிராகரிக்கச் செய்துள்ளார். திட்ட முன்மொழிவின் உள்ளடக்கத்தைப் பற்றிய பல தவறான கூற்றுகளை உள்ளடக்கிய கருத்துகளைப் பிரச்சாரப்படுத்தினார். டிரம்ப் மற்றும் துணை ஜனாதிபதி JD Vance ஆகியோர் அத்தீர்மானத்திற்கு எதிராக கருத்து தெரிவித்தனர். இதன் விளைவாக அந்தத்தீர்மானம் சபையில் அங்கீகாரம் பெறாமற்போனது.

### அமெரிக்க ஜனாதிபதிகளின் வணிகப் பின்னணி

ட்ரம்ப் அடிப்படையில் ஒரு வணிகர். ட்ரம்பிற்கு முன்னரே அமெரிக்க வரலாற்றில் பெருவணிகர் ஒருவர் ஜனாதிபதியாக பதவிவகித்துள்ளார். அவர் 1789 இல் அமெரிக்காவின் முதலாவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோர்ஜ் வோஷிங்டன் (George Washington). ஜோர்ஜ் வோஷிங்டன் ஒரு முதலீட்டாளரும் வெற்றிகரமான தொழில்முனைவோராகவும் விளங்கியவர். ஆனால் வணிகத்தை நடத்துவதற்கும் அரசாங்கத்தை நடத்துவதற்கும் இடையேயான வேறுபாட்டைத் தெளிவாகப் புரிந்துகொண்டவராக அவர் இருந்துள்ளார்.

ட்ரம்ப், அரசாங்கத்தை ஒரு வணிகமாக நடத்துகின்றார். அதற்கு ஏதுவாக தொழில்நுட்பப் பெருவணிகரான எலோன் மஸ்க்கிற்கு அதிகாரங்களை வழங்கியுள்ளார். அரச ஊழியர்களின் எண்ணிக்கையில் பெரிய குறைப்புகளை செய்துள்ளதால், 65 பில்லியன் டொலர்கள் மிகிதப்படுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஊழியர் குறைப்பு சட்டவிரோத வரையறைக்குள் அடங்குவதாகக் கூறப்படுகின்றது. ஜோர்ஜ் வோஷிங்டன் பெருவணிகராக இருந்தாலும், ஒரு திறமையான அரசாங்கத்தை நடாத்துவதற்கு ஏதுவாக கொங்கிரஸ் சபையுடன் ஒத்துழைப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

ஜோர்ஜ் வோஷிங்டன் 1792 இல் மீண்டும் இரண்டாவது முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றி பிரித்தானியாவுடனும் ஐரோப்பிய வல்லரசு சக்திகளுடனும் சீரான உறவைப் பேணிய அவரது நடுநிலைத்தன்மை நூறு ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்காவின் வெளியுறவுக் கொள்கைக்கான திசைகாட்டியாக அமைந்தது.

விர்ஜீனியா (Virginia) மாநிலம் உட்பட்ட ஆறு மாநிலங்களிற் பெருமளவு சொத்துகளை அவர் கொண்டிருந்தார். ஒஹியோ (Ohio) நதி பள்ளத்தாக்கில் பூர்வீகக் குடிகளின் நிலங்கள் மீதும் உரிமைகளைக் கொண்டிருந்தார். பல்வேறு மாநிலங்களில் சொத்துகளையும் முதலீடுகளையும் கொண்டிருந்த காரணத்தால், பாரிய போக்குவரத்துத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய முதலாவது ஜனாதிபதி என்ற பெயரும் அவருக்கு உண்டு. நீராவிக்கப்பல் உருவாக்கப் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டார்.

மிக முக்கியமாக வோஷிங்டன் ஒரு விவசாயியாகவும் விளங்கியவர். வடக்கு விர்ஜீனியாவில் புகையிலை, கோதுமை ஆகியவற்றைப் பயிரிட்டதோடு, அரைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலையையும் இயக்கினார். இறக்கும்போது அவரிடமிருந்த ஆரம்பச் சொத்துக்களை விட நான்கு மடங்கு அதிகமான சொத்துகளைக் கொண்டிருந்தார். 8000 ஏக்கர் பயன்பாட்டு விவசாய நிலங்களையும் காடுகளையும் கொண்டிருந்ததாகத் தரவுகள் கூறுகின்றன. வோஷிங்டனின் பொருளீட்டலின் பெரும்பகுதி அடிமைத் தொழிலாளர்கள் மூலம் ஈட்டப்பட்டதாகும்.

### அரசியலமைப்பினை மீறும் மாற்றங்கள்

தற்போதைய நடவடிக்கைகளிற் பலவும் அரசியலமைப்பினை மீறுகின்ற மிகப் பெரிய மாற்றங்கள். சுயாதீன நிர்வாக அலகுகளுக்கு அரசியல் சார்பற்றவர்களை இயக்குனர்களாக நியமிப்பதா அல்லது ட்ரம்ப் தனது விசுவாசிகளை நியமிப்பதை அனுமதிப்பதா என்பது தொடர்பாக உச்சநீதிமன்றம் விரைவில் தீர்மானிக்க வேண்டிய நிலை வரக்கூடும். நிர்வாக அலகுகளுக்கு இடையில் ட்ரம்ப் நிர்வாகம் தன்னிச்சையாக வளங்களைக் குறைப்பது அல்லது மறுசீரமைப்பதன் ஊடாக அரசியலமைப்பைசவாலுக்குஉட்படுத்துகின்றது. ஒரு சட்டம் அல்லது வரவு-செலவு சார்ந்த தீர்மானத்தின் மூலம் வளங்கள் ஒரு குறிப்பிட்ட முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை கொங்கிரஸ் அவை நிர்ணயித்துள்ளது. இப்படியிருக்க ஜனாதிபதியின் அதிகாரம் சட்டமன்றத் தீர்மானத்தால் எவ்வளவு தூரம் கட்டுப்படுத்தப்படுகிறது மற்றும் கட்டுப்படுத்தப்பட முடியும் என்ற கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன.

சந்தைச் சக்திகளின் நன்மைக்காக நிறுவனங்களை மறுசீரமைக்க அவற்றின் நிர்வாக இயக்குநர்கள் தன்னிச்சையான முடிவுகளைச் செயற்படுத்துவதென்பது அடிப்படையான மூலதனவாதக் கோட்பாடு. வழமையான முதலாளித்துவவாதிகள் சிந்திப்பது போலவே, பொதுத் துறையைத் தனியார் அமைப்புகளைப் போலக் கையாளலாம் என்று மஸ்க் நினைப்பது ஆச்சரியம் தரும் நிகழ்வல்ல. ஆனால் ஜனாதிபதி என்பவர் வணிக நிறுவன நிர்வாக இயக்குநர் அல்ல, மற்றும் கொங்கிரஸ் சபை பங்குச்சந்தையிற் கூடுகின்ற பங்குதாரர்களும் அல்ல. பொது துறையை வணிகத்துறையின் வழிமுறைகளுக்கு ஊடாக அணுகுவதென்பது அடிப்படையில் ஜனநாயகத்திற்கு மாறான அதிகாரப் பிரயோகம் அல்லது அதிகார மீறல்.

### செல்வக்குழு ஆட்சி - சிறுகுழு ஆட்சி (Richest plutocrats - Oligarchy)

இதனை ஒரு ஆட்சிக்கவிழ்ப்பு நிலையுடன் ஒப்பிடுகின்றார் சுவீடன் நாட்டைச் சேர்ந்த எழுத்தாளரும் *'Katalys think tank'* சிந்தனைக் குழாமின் தலைவருமான டானியல் சுஹோனென் *(Daniel Suhonen)* மட்டுமல்லாமல் ஒரு பாசிச அதிகாரக் கையேற்பு என்றும் ட்ரம்ப் - மஸ்க் கூட்டினை வர்ணிக்கின்றார் அவர். அரசினை செல்வந்த உயரடுக்குகளுக்கு *(Richest Plutocrats)* சாதகமான அரசாக மாற்றும் ஒரு ஆட்சிப்போக்கு இது எனவும் (செல்வந்த உயரடுக்குகள் இல்லாத) அனைவருக்கும் எதிரான செல்வந்தர்களின் கிளர்ச்சி எனவும் இதனைச் சித்தரிக்கின்றார்.

*'Richest Plutocrats'* என்பதைத் தமிழில் 'செல்வக்குழு ஆட்சி' எனலாம். அடிப்படையில் ஒரு பெரும் சமூகத்தை, தேசத்தை மிகச் சிறுபான்மையான செல்வந்தக் குழு ஆள்வதை இச்சொல் குறிக்கின்றது. இச்சொல்லாடல் முதன்முதலில் 1652இல் பயன்படுத்தப்பட்டது. மக்களாட்சி, முதலாளித்துவம், பொதுவுடைமை, ஜனநாயகம் போன்று இத்தகைய முறைமை நிறுவப்பட்ட ஓர் அரசியற் தத்துவமாக பயன்பாட்டில் இல்லை. செல்வந்த உயரடுக்குகள் இம்முறையை மறைமுகமாகவோ, ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் முறைமைகளின் போர்வைகளிலேயோ செயற்படுத்த முயல்வர். இதனை 'சிறுகுழு ஆட்சி' *(Oligarchy)* என்ற முறைமையுடனும் ஒப்பிடலாம். இதில் ஒரு சிறிய குழுவினர்; மற்றவர்களை ஆட்சி செய்யும் அதிகாரத்தினைக் கொண்டுள்ள அமைப்பியல் அல்லது கட்டமைப்பாகும்.

*'Oligarchy'* ஆட்சியானது ஜனநாயகம் மற்றும் சர்வாதிகார ஆட்சிமுறைகளிலிருந்து வேறுபடுகிறது. ஆனால் அதனைச் சர்வாதிகார ஆட்சியாகக் கருதுகின்ற பொதுவான புரிதல் நிலவுகின்றது. கிரேக்கத் தத்துவஞானி அரிஸ்டோட்டில் அவர்களால் 'ஒலிகார்சி - *Oligarchy*' எனும் இந்தச் சொல்லாடல் முதன்முதவலாகப் பயன்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. அன்றைய கிரேக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிமுறையை ஒரு சிறிய குழு பொதுநலனைக் கருதாமற் தமது சொந்த நலன்களை முன்னேற்றுவதற்காக ஆட்சி செய்யும் முறையாகக் கண்டதன் விளைவாக இச்சொல்லில் அதனை விளித்தார் எனப்படுகின்றது (*https://snl.no/oligarki*).

இன்றைய காலத்தில் இந்தச்சொல் அரசாங்க ஆட்சிமுறையை அல்லாமல், சமூகத்தின் உட்குழுக்களின் அரசியற் கட்டமைப்பைக் குறிக்க அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒலிகார்சியை ஊக்குவிக்கும் சூழ்நிலைகளுக்கு எடுத்துக்காட்டாக சமூக அமைப்புகளின் நிர்வாக, தலைமைத்துவ அதிகாரப்பிடியைக் குறிப்பிடலாம். நிர்வாக மற்றும் தலைமைப் பொறுப்புகள் குறுகிய கால அளவுகளில் ஜனநாயக முறையிலான தேர்தல் முறைமைகளைக் கொண்டிருத்தல்; ஒலிகார்சியைத் தடுக்க உதவக்கூடியன.

### ஐரோப்பிய ஜனநாயகத்திற்கு முதுகு காட்டும் ட்ரம்ப்

ஒப்பீட்டளவில் ஐரோப்பிய நாடுகளில் ஜனநாயக ஆட்சிகள் தமது பிடியை இழக்காமல் உள்ளன. ஐரோப்பிய ஜனநாயகத்திற்கு முதுகு காட்டத்தொடங்கியுள்ளார் ட்ரம்ப். தங்களின் நலன்களை மற்றவர்களிடமிருந்து காக்கும் செல்வந்த உயரடுக்கு அதிகார சக்திகள், மக்கள் சமூகத்தை நசுக்க, இயற்கையை அழிக்க, கொலைகளைச் செய்யவும் கொலைகாரர்களைத் தப்பிக்கவைக்கவும் தயாராக உள்ளனர். மனிதகுலத்திற்கு எதிரான எவ்விதச் செயல்களையும் அவர்கள் சாதாரணமாக முன்னெடுப்பர். அமெரிக்க அரச இயந்திரத்தின் மீது தமது அதிகாரத்தைக் குவிக்கும் முகமான செயற்பாடுகளில் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் மற்றும் எலோன் மஸ்க் ஆகியோர் முழுமூச்சாக இறங்கியுள்ளமை அமெரிக்காவிலும் சர்வதேச ரீதியிலும் பெரும் பேசுபொருளாகியுள்ளது. அரசியலமைப்புச் சட்டவிதிகளை மீறுவது டிரம்ப்பிற்குப் புதிதல்ல, மஸ்க் 'விரைந்த நகர்வும் மீறலும் - *Move fast and break things*' என்ற கோட்பாட்டால் வழிநடத்தப்படுபவர். இருவரின் கூட்டும் தன்னிச்சையான அதிகார மீறல்களின் உச்சமான விளைவுகளுக்கு இட்டுச் செல்லுமென்ற எச்சரிக்கை பல மட்டங்களில் எழுந்துள்ளன.

இன்றைய இந்த அதிகார மீறல் நிலையை அரசியலமைப்புச் சட்ட நெருக்கடி என்று குறிப்பிட வேண்டும் என்று பல சட்டத்துறைப் பேராசிரியர்கள் பலர் இணைந்து கூட்டாக ஒரு மனுவில் கையெழுத்திட்டுள்ளனர். அரசாங்க மற்றும் பொது நிர்வாகங்களிற் பெரும் கட்டமைப்பு மாற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. குறுகிய காலத்தில், டிரம்ப் பல்வேறு அரசியலமைப்புச் சட்ட உரிமைகளைக் கடுமையாக மீறியுள்ளதோடு, மேலும் நீதிமன்றங்களுக்கு மதிப்பளிக்காதும் நடந்துவருகின்றார்.

ஜனாதிபதி, அதிகாரத்துவம் (*Bureaucracy*) மற்றும் கொங்கிரஸ் இடையேயான உறவில் பெரும் நெருக்கடி தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொல்வதானால் பாரிய அளவில் நிதித்தொகைகளை நிறுத்திவைப்பது, உறைநிலைப்படுத்துவது, அதிகாரங்களைத் துருவமயப்படுத்துவது, ஊழியர்களைப் பணிநீக்கம் செய்வது. மறுசீரமைப்பு அல்லது அரச நிர்வாகத்தின் செயற்திறனை அதிகரிப்பது எனும் பதாகையின் கீழ் முன்னெடுக்கப்படும் மாற்றங்களின் நடைமுறை மற்றும் சமூக விளைவுகள் அமெரிக்க சமூகத்திற்குப் பெரும் பாதகங்களுக்குட் தள்ளப்போகின்றது என்ற அச்சம் பலமட்டங்களில் வெளிப்படுகின்றன.


**உசாத்துணை**

- The conversation | 10.03.2025 | George Washington, a real estate investor and successful entrepreneur, knew the difference between running a business and running the government | Eliga Gould
- The conversation | 12.03.2025 | Mass layoffs at Education Department signal Trump's plan to gut the agency | Joshua Cowen
- Klassekampen | 11.03.2025 | Rike menns revolt (Rich Men's Revolt) | Daniel Suhonen
- Klassekampen | 25.02.2025 | There is an ongoing constitutional crisis in the USA, which is taking the form of an efficiency process | Tarjei Ellingsen Røsvoll
- Aftenposten | 27.02.2025 | Trump gives the world's richest man and his efficiency office even more power
- Aftenposten | 28.02.2025 | Why US government employees fear Elon Musk and Donald Trump | Kjetil Hanssen
- Aftenposten | 02.01.2025 | Many fear that Musk is gaining too much power: – A kind of unofficial chief | Ole Alexander Saue


●

கட்டுரையாளர்: எழுத்தாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | நெல்லை சு.முத்து

# தொல் தமிழ்நாட்டில் இரும்பு யுகம் (கி.மு.3350)




சங்க இலக்கியங்களில் இரும்பு பற்றிய குறிப்புகள் ஏராளமாக இடம்பெற்றுள்ளன.

ஆவூர்கிழார் மகனார் கண்ணனார், "குருகு ஊது மிதி உலை" (அகநானூறு 202:6), கச்சிப்பேட்டு நன்னாகையார் "உலை வாங்கு மிதி தோல்" (குறுந்தொகை 172:6) என்றும் மிதி உலை குறிக்கப்பெறுகின்றது. மிதி உலை என்பது கொல்லன் துருத்திக்கு ஆகுபெயர், காலாலே மிதித்துத் துருத்தியை ஊதச் செய்தலை இன்றும் சில கிராமப்புறங்களில் காணலாம்.

**.....மென்தோல்**
**மிதி உலைக் கொல்லன் முறி கொடிற்று அன்ன**
**கவைத்தாள் அலவன்**
(பெரும்பாணாற்றுப்படை 206-208)

- என்னும் வரிகள் மென்மையான தோல் துருத்தியை அமுக்கி ஊதி உலையில் தொழில் செய்கின்ற கொல்லனின் முறிந்த குறட்டினை ஒத்த, பிளவு உடைய காலையுடைய நண்டு குறித்து மருத நிலக் கழனிகளில் காணும் காட்சியைப் பெரும்பாணாற்றுப்படை சித்திரிக்கிறது. அன்றியும்,

**இரும்பு வடித்தன்ன மடியா மென் தோல்**
**கருங்கை வினைஞர் காதல்அம் சிறாஅர்**
(பெரும்.221-222)

-என்றவாறு இரும்பைத் தகடு ஆக்கினாற்போல் உள்ள சுருக்கம் இல்லாத மெல்லிய தோலையும் உடைய, வலிய கையால் தொழில் செய்பவர்களின் விருப்பமுடைய அழகிய சிறுவர்கள் பற்றிய குறிப்பிலும் பெரும்பாணாற்றுப்படை, மெல்லிய இரும்புத்தகடு குறித்துப் பாடுகிறது.

**மழை விளையாடும் கழை வளர் அடுக்கத்து,**
**அணங்குடை யாளி தாக்கலின், பல உடன்**
**கணம் சால் வேழம் கதழ்வுற்றாங்கு,**
**எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை**
**விசயம் அடூஉம் புகை சூழ் ஆலைதொறும்,**
**கரும்பின் தீம்சாறு விரும்பினிர் மிசைமின்**
(பெரும்.257-262)

- என்றவாறு "முகில்கள் விளையாடும் மூங்கில் வளர்கின்ற பக்கமலையில், தம்மை வருத்தும் யாளி என்னும் விலங்கு தாக்குதலால், பல ஒன்றாகக் கூடி யானைகள் கலங்கிக் கதறினாற்போல, எந்திரம் ஒலிக்கும், ஆரவாரிக்கும் மாறாத ஓசையுடைய, கரும்புச் சாற்றைக் கட்டியாகக் காய்ச்சும் புகைசூழ்ந்த ஆலைதோறும் கரும்பின் இனிய சாற்றை விருப்பமுடையவர்களாக நீங்கள் பருகுங்கள்" என்னும் உரையில் இரும்பு ஆலைகள் மட்டுமன்றி, கரும்பு ஆலைகளும் குறிப்பிடப் பெறுகின்றன. அன்றியும்,

**புனல் ஆடு மகளிர் இட்ட பொலங்குழை**
**இரை தேர் மணிச்சிரல் இரை செத்து எறிந்தெனப்**
**புள் ஆர் பெண்ணைப் புலம்பு மடற் செல்லாது**
**கேள்வி அந்தணர் அருங்கடன் இறுத்த**
**வேள்வித் தூணத்து அசைஇ யவனர்**
**ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட**
**வைகுறு மீனின் பைபயத் தோன்றும்**
**நீர்ப்பெயற்று எல்லை** (பெரும்.311-319)

- என்று தொண்டைமான் இளந்திரையனைப் பாடும் கடியலூர் உருத்திரங் கண்ணனார் விளையாட்டுக் கூட்டத்துடன் குடிக்கும் நீருடைய துறையில் நீராடுகின்ற மகளிர் போட்டு விட்டுப் போன பொன்னால் செய்த காதணியினை உணவைத் தேடும் நீலமணி நிற சிச்சிலிப் பறவை (மீன்கொத்திப் பறவை) தனக்கு இரை என்று எண்ணி எடுத்துக்கொண்டு, பறவைகள் நிறைந்திருக்கும் பனையின் தனித்த மடலில் போகாமல், நூல் கேள்வி உடைய அந்தணர்கள் செய்தற்கரிய கடனாகச் செய்த நட்ட தூணின் மேல் இருந்து, யவனர்களின் கப்பல் கூம்பின் மீது இட்ட அன்ன விளக்குப் போலவும், உயர்ந்த வானில் உள்ள வைகறையில் தோன்றும் வெள்ளி மீன் போலும் மிக்க ஒளி இல்லாது மெல்ல மெல்லத் தோன்றும் நீர்ப்பாயற்றுறை என்னும் ஊரின் எல்லையையும் குறிப்பிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு 'யவனர் ஓதிம விளக்கு' (314-315) நச்சினார்க்கினியர் உரையின்படி 'சோனகர் கூம்பின் மேலிட்ட அன்ன விளக்குப் போல' யவனர் - அயோனியா என்ற கிரேக்க நாட்டின் பகுதியிலிருந்து வருபவர்களை இச்சொல் குறித்தாலும் இது பின்னால் வந்த ரோமானியர், துருக்கர், எகிப்தியர் ஆகியோரையும் குறித்திருக்கலாம் எனச் சில அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஜோனகர் - ஜனகர் - ஜைனர் ஆன பழஞ்சீனரோ என்றும் தோன்றுகிறது. ஏனெனில் புத்தர்கள் வாழ்ந்த காஞ்சி ஆகிய கச்சுமூதூரின் சிறப்பு பற்றிய குறிப்பும் இந்நூலில் இடம்பெறுகிறது.

**அவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வாய்**
**அந்தி வானத்து ஆடுமழை கடுப்ப,**
**வெண்கோட்டு இரும்பிணம் குருதி ஈர்ப்ப,**
**ஈர் ஐம்பதின்மரும் பொருது களத்து அவியப்**
**பேர் அமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்**
**ஆராச் செருவின் ஐவர் போல,**
**அடங்காத் தானையோடு உடன்று மேல்வந்த**
**ஒன்னாத் தெவ்வர் உலைவிடத்து ஆர்த்துக்**
**கச்சியோனே கைவண் தோன்றல்!**
**நச்சிச் சென்றோர்க்கு ஏமம்** (பெரும்.412-421)

- என இளந்திரையனின் போர் வெற்றியைப் பாடும் புலவர் அழகிய இடத்தையுடைய வளரும் பிறையைச் சூடிச் சிவந்த இடத்தையுடைய அந்திப்பொழுதின் செவ்வானத்தில் அசையும் முகில்களை ஒப்ப உள்ள வெள்ளை மருப்புகளையுடைய (தந்தங்களையுடைய) கரிய யானைப் பிணத்தைக் குருதியாகிய ஆறு இழுத்துக்கொண்டு போகும்படி, துரியோதனன் முதலிய நூறு பேரும் போர்க்களத்தில் அழியும்படி, பெரிய போரில் வெற்றிபெற்ற, கொடிஞ்சி உடைய உயர்ந்த தேரினையுடைய, தொலையாத போரினையுடைய பாண்டவரைப் போன்று, அடங்காத படையுடன் சினந்து வந்த, தன் ஏவலுக்கு ஒத்துக்கொள்ளாத பகைவர் தோன்றும்போது வெற்றிக்களிப்புடன் ஆரவாரித்தவன், காஞ்சிபுரத்தில் உளன் ஆவான் என்றும், வழங்கும் தன்மைகளில் தலைமை சான்ற தொண்டைமான் இளந்திரையன். தன்னை விரும்பி வந்தவர்களுக்குப் பாதுகாவலாக இருப்பவன் என்றும் பாடும்போது வடக்கே நிகழ்ந்த மகாபாரதக் கதையையும் கடியலூர் உருத்திரங் கண்ணனானர் அறிந்து உணர்ந்தே இசைக்கிறார் அல்லவா? இதனால் காஞ்சியில் இரும்பு புழக்கத்தில் இருந்தது என்று அறியலாம்.

**கொடுவாய் இரும்பின் மடிதலை புலம்பப்**
**பொதி இரை கதுவிய போழ்வாய் வாளை**
(பெரும்.256-257)

கயிற்றில் கட்டப்பட்ட வளைந்த வாயினையுடைய தூண்டிலின் மடிந்த தலை இரையின்றித் தவிக்கும்படி, அத் தூண்டிலின் இரும்பு மறையப் பொதிந்த இரையைக் கவ்வி அகப்படாத பிளந்த வாயையுடைய வாளை மீன் இங்குப் படம்பிடிக்கப்படுகிறது.

**பகுவாய் வராஅல் பல் வரி இரும் போத்துக்**
**கொடுவாய் இரும்பின் கோள் இரை துற்றி**
(அகநானூறு 36:1-2)

- என்ற பாடலில் வையை ஆற்று வரால் மீனைப் பிடிக்கும் தூண்டிலின் இரும்பு முள் பற்றிய குறிப்பு உள்ளது. "இரும்பு வடித்தன்ன கருங்கைக் கானவன்" (அகநானூறு 172:6) - என்ற மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார் வரியில் இரும்பை உருக்கி வார்த்து இயற்றியது போன்ற வன்மையான கையையுடைய குறவன் பற்றிய வர்ணனை இடம்பெறுகிறது. இந்த இரண்டு குறிப்புகளும் மதுரையை ஒட்டிய நாகரிகத்தினை வெளிப்படுத்துபவை.

கானப்பேர் எயில் கடந்த உக்கிரப் பெருவழுதி இந்த மன்னன் உக்கிரப் பெருவழுதி, பாண்டிய வேந்தருள் பழையோருள் ஒருவன். இவன் காலத்து பிற முடிவேந்தரான சேரமான் மாரி வெண்கோவும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் இவனுக்கு நண்பராய் இருந்தனர். இம்மூவரும் ஒருங்கிருந்த காட்சி கண்டு ஔவையார் மகிழ்ந்து பாடியுள்ளார். அகநானூற்றைத் தொகுப்பித்தவன் இவன் என்பர். இவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்குப் பிறகு பாண்டிய நாட்டை ஆண்ட மன்னர்களில் ஒருவன் என்று வரலாற்று ஆசிரியர்களால் சொல்லப்படுகிறது.

கானப்பேர் என்பது இப்போது காளையார் கோயில் என வழங்குகிறது. இது பாண்டிய நாட்டிலுள்ளது. தற்போதைய மதுரையிலிருந்து 63 கி.மீ தொலைவில் உள்ளது. உக்கிரப் பெருவழுதியின் காலத்தே இவ்வூர் வேங்கை மார்பன் என்ற குறுநில மன்னனுக்கு உரிய நல்ல அரணாக அமைந்து விளங்கிற்று. இவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்நாட்டின் ஆரம்பக்கால இரும்புக் கால மக்களின் குடியேற்ற முறை, அவர்கள் முதிர்ச்சியடைந்தவர்களாக இருந்ததையும், அவர்கள் பெரிய நதிகளின் பள்ளத்தாக்குகள் வழியாகவோ அல்லது அவற்றின் துணை நதிகள் வழியாகவோ தமிழ்நாட்டின் உட்பகுதியை நோக்கிப் பரவியதைக் குறிக்கிறது.**

---

அம்மன்னனை வென்று அக்கானப் பேரெயிலைத் தனதாக்கிக் கொண்டான். அதனால் இவனுக்குக் கானப் பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி எனப் பெயர் வழங்குகிறது.

கானப் பேரெயில் கடந்து வெற்றி கொண்டு விளங்கும் மேம்பாட்டைக் கண்டு வியந்து ஐயூர் மூலம் என்ற ஊரைச் சேர்ந்த ஐயூர் மூலங்கிழார் என்னும் சான்றோர் இப்பாட்டில் இக்கானப் பேரெயிலின் அரண் சிறப்பை எடுத்துச் சொலி, அதற்குரியவனான வேங்கை மார்பன், 'இனி, நம் அரண் இரும்புண்ட நீரினும் மீட்டற்கரிது' என இரங்குமாறு இவன் அதனைக் கடந்த செய்தியைப் பாராட்டுகிறார்.

அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்பு ணீரினு மீட்டற் கரிதென
வேங்கை மார்ப னிரங்க வைகலும்
ஆடுகொளக் குழைந்த தும்பைப் புலவர்
(புறநானூறு 21: 5-10)

'அதியமான் நெடுமான் அஞ்சி'யின் தலைநகர் - தகடூர். இரும்பை வெட்டியெடுத்து அதை தகடாக்கும் தொழில் செய்யும் ஊர் என்பதால் அதற்கு தகடூர் என்று பெயராமே. இரும்பு வணிகத்தில் கொடிகட்டிப் பறந்த அதியமான், கடல் கடந்து பல்வேறு தேசங்களில் தனது இரும்பு வணிகத்தை நிலை நாட்டினார். அதிலொன்று துருக்கி நாடு. உருக்கி என்பது தான் துருக்கி என்று விளங்கியிருக்க கூடும் என்பர் சிலர். அனடோலியா ஆகிய அந்த துருக்கியில் இன்றும் அதியமான் பெயரில் நகரம் இருக்கிறதாம். அங்கு வாழ்பவர் துருக்கர்-பின்னாளில் துலுக்கர் என்ற சொல், அங்கு வாழ்ந்த இஸ்லாமியரைச் சுட்டும் வழக்கும் ஆனது.

**பண்டையத் தமிழ்நாட்டின் இரும்பு உலைகள்**

"சென்னைப் பல்கலைக்கழகத்தின் இணை ஆராய்ச்சியாளர் பி.சன்செரபன் 'இந்தியன் ஜர்னல் ஆஃப் ஹிஸ்டரி ஆஃப் சயின்ஸ்' (*Indian Journal of History of Science, 37.1: 2002: 17-29)* இந்திய வரலாற்றியல் அறிவியல் இதழில் 'பண்டைய காலத்தில் தமிழ்நாட்டு உலோகம் மற்றும் உலோகத் தொழில் - ஒரு தொல்லியல் ஆய்வு' *(Metallurgy And Metal Industry In Ancient Tamilnadu - An Archaeological Study)* வெளியிட்ட ஆய்வுகள் இவை (26 டிசம்பர் 2001) :

"இருபதாம் நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வு, தமிழகத்தின் தருமபுரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள குட்டூர் மற்றும் கொடுமணல் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட இரும்பு மற்றும் எஃகு உலைகள் மற்றும் இந்த மையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்பு கலைப்பொருட்கள், இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டிலும் கி.மு.500இல் இரும்பு உருக்குத் தொழில்துறை தளங்கள் இருப்பதைக் காட்டியது. இந்தியாவில் கி.மு.19ஆம் நூற்றாண்டின் கடைசி காலாண்டில் இருந்து மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆய்வு மற்றும் அகழ்வாராய்ச்சிகள், உலோகக் கலைப்பொருட்கள் மற்றும் உருகும் உலைகளின் அம்பலப்படுத்தப்பட்ட பகுதிகள் வடிவில் ஏராளமான பழங்கால பொருட்களை நமக்கு வழங்கியுள்ளன.

"இந்தியாவில் உள்ள தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் (பானர்ஜி) பண்டைய உலோகங்கள் பற்றிய ஆய்வு மற்றும் பிற அறிஞர்கள் (நியோக்), பி.பெஸ்மகர் (இந்தியா) மற்றும் டாக்சிலா (பாகிஸ்தான்) ஆகியவற்றில் உள்ள பொருட்களை வேதியியல் பகுப்பாய்வு மற்றும் நுண் கட்டமைப்பு ஆய்வுகளுடன் ஹாட்ஃபீல்ட் ஆய்வு செய்தபோது இந்தியாவில் பண்டைய உலோகவியல் பற்றிய ஆராய்ச்சி தொடங்கியது (சக்ரபர்தி: 1992, ப.13). பஞ்சனன் நியோகி, தில்லி இரும்புத் தூண் மற்றும் கொனார்க்கில் இருந்து இரும்புத்தண்டுகள் போன்ற தொல்பொருள் கண்டுபிடிப்புகளிலிருந்து இரசாயன மற்றும் உலோகவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுப்பாய்வு, இழுவிசை வலிமை முறைகளின்படி துருப்பிடிக்காததன் காரணத்தை ஆராய்ந்தார். (சக்ரபர்த்தி: 1999, ப.15). அவர் ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையையும் செய்தார்

"கி.மு.1000ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில், கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து தமிழகத்திற்கு அன்றாட வாழ்வில் உலோகத்தைப் பயன்படுத்துபவர்களின் வருகையைக் கண்டனர். இந்த மாநிலங்களின் எல்லையில் உள்ள தமிழ்நாட்டின் கோயம்புத்தூர், சேலம், தருமபுரி மற்றும் வட ஆற்காடு ஆகியமாவட்டங்கள், இரும்புக் கால கலாச்சாரத்தின் மைய மண்டலத்தை உருவாக்கி, அங்கிருந்து தமிழ்நாட்டின் பிற பகுதிகளை நோக்கி மேலும் பரவியது.

"குட்டூர் (IAR 1982 p.68) மற்றும் மல்லப்பாடி (IAR 1977-78, p.50) தருமபுரி, பாளையம்பள்ளி (IAR. 1964- 66, ப.40;1967-68, ப.81) மற்றும் அப்போக்கல்லாவில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் (IAR 1976-77, ப.69) வட ஆற்காடு மற்றும் பேரூரில் (IAR 1965-64, ப.40) கோயம்புத்தூர் மற்றும் தருமபுரியில் தொகரப்பள்ளி மற்றும் முள்ளிக்காடு ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட மண்ணடுக்கு அகழாய்வில் (நரசிம்மலா: 1980, ப.182) விவசாய மேய்ப்புப் பொருளாதாரத்தில் மிகவும் நிபுணத்துவம் பெற்ற சமூகம் இருப்பதை வெளிப்படுத்தியது. இந்த தளங்களில் இரும்புப் பொருள்கள், குறிப்பாக விவசாயக் கருவிகள் அதிகமாகக் காணப்படுவது அவர்கள் மத்தியில் திறமையான கைவினைஞர் பணியாளர்கள் இருப்பதைக் குறிக்கிறது. கனிம வளங்கள் நிறைந்த சில பகுதிகளில் இரும்புச்செறிவு அங்கு வந்து குடியேறியவர்களின் ஜனப்பெருக்கம் இந்த வளங்களை அவர்கள் நம்பியிருப்பதைக் காட்டுகிறது.

"தமிழ்நாட்டின் ஆரம்பக்கால இரும்புக் கால மக்களின் குடியேற்ற முறை, அவர்கள் முதிர்ச்சியடைந்தவர்களாக இருந்ததையும், அவர்கள் பெரிய நதிகளின் பள்ளத்தாக்குகள் வழியாகவோ அல்லது அவற்றின் துணை நதிகள் வழியாகவோ தமிழ்நாட்டின் உட்பகுதியை நோக்கிப் பரவியதைக் குறிக்கிறது. (உதயராவி மூர்த்தி: 1994, ப.44). தர்மபுரி மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள இரும்புக் காலத்தின் குடியேற்றங்கள், பெண்ணையாறு அல்லது அதன் துணை நதிகளின் போக்கில் அவற்றின் செறிவை வெளிப்படுத்துகிறது.

"இரும்புக் காலத்து மக்கள் தமிழ்நாட்டில் நுழைந்த இடத்திலிருந்து உள் பகுதிக்கு இடம்பெயர்வது, எளிய கிராம மக்களில் இருந்து முக்கியமாக ஆயர் பொருளாதாரத்தை சார்ந்து வணிகம், வணிகம் மற்றும் தொழில் வளர்ச்சியடைந்த பெரிய நகரங்களை நிறுவுவது வரை அவர்களின் முன்னேற்றத்தைக் காட்டுகிறது. வளர்ச்சியானது தமிழ்நாட்டின் வரலாற்றுக்கு முந்தைய காலகட்டத்திலிருந்து ஆரம்பகால வரலாற்றுப் பண்பாட்டிற்கு மாறுவதற்கும் வழிவகுத்தது.

பொதுவாக உள்நாட்டு கருவிகள் மற்றும் ஆயுதங்கள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மேலாதிக்க பொருட்களைப் பிரதிபலிக்கும் கற்காலம், வெண்கலக் காலம், இரும்புக்காலம் என மனித நாகரிக வரலாறு மூன்று காலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கல் மற்றும் வெண்கல யுகங்களைத் தாண்டிய காலத்தைக் குறிக்க செப்புக் காலம் ('சால்கோலிதிக்', *Chalcolithic*) என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

*2025* ஜனவரி *23* அன்று, தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடத்திய 'இரும்பின் தொன்மை' (தமிழ்), '*ANTIQUITY OF IRON:Recent Radiometric dates from Tamilnadu*' (ஆங்கிலம்) ஆகிய இரண்டு நூல்கள் வெளியீடு; கீழடி, கங்கைகொண்ட சோழபுரம் திறந்தவெளி அருங்காட்சியகம் அடிக்கல் நாட்டுதல்; கீழடி தொல்லாய்வியல் இணைய தளம் திறப்பு என மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தொடங்கி வைத்த நிகழ்வில் பார்வையாளராகக் கலந்துகொண்டபோது, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் தொல்லாய்வியல் பேராசிரியர் திலீப் குமார் சக்ரவர்த்தி அவர்கள், இந்தியத் தொல்லியல் துறை மேனாள் தலைமை இயக்குநர் முனைவர் ராஜேஷ் திவாரி ஆகியோர் தமிழ்நாட்டில் இரும்பின் பயன்பாடு கி.மு.நாலாயிரம் ஆண்டுகளின் முற்பகுதித் தொன்மையுடையதெனக் குறிப்பிட்டு ஆற்றிய ஆய்வுரைகள் அறிவியல் ஆதாரம் மிக்கவை.

- தொடரும்

●

கட்டுரையாளர்: விஞ்ஞானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | **கி.இரா.சங்கரன்**

# நொபொரு கராஷிமாவின் வரலாற்றுப்போக்கில் தென்னகச் சமூகம்

சென்ற இதழ்த் தொடர்ச்சி...

**நாயக்கர்களும் நாட்டவர்களும்:** *16-ஆம் நூற்றாண்டில் தென்னாற்காடு, சேலம், திருச்சி வட்டாரங்களில் நாட்டவர்பற்றி பேசும் கல்வெட்டுகள் நாட்டவர்களுக்கும் நாயக்கர்களுக்கும் இடையிலான உறவுபற்றி விளக்குகின்றன. இச்சான்றுகளில் நாட்டவர்கள் நாட்டுவேளான் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். நாட்டவரும் நாயக்கரும் இணைந்து கோயில்களுக்கு நிலக்கொடைகளையும் வரிவிலக்கினையும் அளித்துள்ளனர். நாயக்கர்களின் ஆட்சியில், நாட்டவர்களும் (ruling structure) இயங்கினர். ஒருகல்வெட்டில் நாட்டவர் ஒருவர் நாட்டில்முதலியார் என்று சுட்டப்பட்டுள்ளார். உள்ளூர் உற்பத்திமுறை (local production) நாட்டார்கள் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. மேலே சொல்லப்பட்ட நூற்றாண்டில் வெள்ளாற்றுச்சமவெளியின் மத்தியப்பகுதியில் ஆதிக்கம்கொண்டிருந்த தந்திரிமார்கள் எனப்பட்ட தமிழ்த்தலைவர்களை கன்னட, தெலுகு நாயக்கர்கள் ஓரங்கட்டினர். பெரியநாட்டார் அமைப்போடு ஒட்டியிருந்த கைவினைஞர்கள் அதிலிருந்து விலகி நாயக்கர்களோடு சேர்ந்தனர். நாட்டவர்கள் காணியாளர் உரிமைகொண்ட நிலக்கிழார்களின் முகவர்களாக இயங்கினர். இவர்கள் நாட்டுக்காணிக்கை, நாட்டு விநியோகம் போன்ற வரிகளை வசூலிப்பவர்கள். இருந்தாலும் நாயக்கர் ஆட்சியில் நாடு என்ற உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை குறைந்தது. உள்ளூர் ஆட்சிஅலகு (unit of local administration) நாட்டிலிருந்து பற்று என்ற அலகிற்கு பலவட்டங்களில் மாறியது. இதனால், சோழர்காலத்தில் வெள்ளாளர்கள் மட்டுமே நிலக்கிழார்களாக இருந்தநிலைமாறி விஜயநகர் ஆட்சிக்காலத்தில் பிற இனத்திலும், வணிகர்கள், கைவினைஞர்கள் மத்தியிலும் நிலக்கிழார்கள் எழுந்தனர். தமிழ்நாட்டில் நாயக்கர்காலத்தின் ஆட்சியினை ஐரோப்பாவில் நிகழ்ந்த நிலமானிய முறையோடு (feudal lord-vassal) ஒப்பிடலாம் என்று விளக்கும் நொபொரு கராஷிமா சோழர்காலத்தின் தொடக்கத்தில் சலுகைகள் பெற்ற பிராமணர் சோழராட்சியின் இறுதிப்பகுதியில் தனியாருடைமை அதிகரிக்கும்போதுதங்களின் நிலவுடைமையினை இழக்க நேரிட்டது என்கிறார். இப்போக்கு தமிழ்நாட்டின் வடபகுதியில் நிகழ்ந்ததனை செங்கல்பட்டு வட்டாரத்தில் உக்கல் என்றஇடத்தில் கிடைத்த கல்வெட்டுமூலம் நிரூபிக்கிறார். இது இடைக்காலத்தில் உருவான புதியமாற்றத்தினை விளக்கும் ஆர்வந்தரும் சான்று. மூன்றாம் இராஜராஜன் ஆட்சியில் நிலவுடைமைகொண்ட ஒரு பிராமணசபை தங்களூரின் கிழக்குப் பகுதியான பிடாகையினை ஒரு தனியாருக்கு விற்றது. வாங்கியவர் பட்டியர்போயன் பெருங்கண் தேவப்பெருமான் என்பவர். இவர், பிராமணர் அல்ல; உடையான் பட்டம் கொண்டவர். விற்கப்பட்ட பிடாகையின் கூறுகள்: நீர்நிலம், கொல்லைநிலம், ஊர் நத்தம், மனை, மனை படப்பை, மரம், கிணறு, வழி, குளம், வழிப்போக்கு போன்றவை. இவற்றுடன், நீர், நீர்போக்கு, நீர்பாய்ச்சல் போன்ற உரிமைகளும் விற்கப்பட்டன. மேலும், ஆற்றிலிருந்து பாசனத்திற்காக விற்கப்பட்ட நிலத்திற்கு வரும் நீரில் ஐந்தில் இரு பங்கும் கிடைத்தது. பாசனவாய்க்கால் தோண்டிக் கொள்ளும் உரிமையும் கிட்டியது. அந்நிலத்தினை வாங்கியவர், நிலத்தினை விற்கலாம் ஒத்திவைக்கலாம் தலைமுறை தலைமுறையாக (inheritance) இறுத்திக் கொள்ளலாம். உடையான் பட்டம் கொண்ட இதுபோன்ற பல நிலக்கிழார்கள் சோழராட்சியின் இறுதிக் காலத்தில் அதிகரித்தனர். இதுபோன்று விஜயநகர் ஆட்சியின் இரண்டாம் ஹரிஹரனின் ஆட்சியில் உக்கல் மகாசபையார் அவ்வூரின் கிழக்குப் பகுதியான அரசாணி பாலையினை பல்லவரையன் என்ற பட்டம்கொண்ட ஒருவருக்கு விற்றனர். இவர் சோழமண்டலத்தில் கும்பகோணத்தினை சேர்ந்தவர். வரிச்சுமையினால் இந்நிலம் விற்கப்பட்டது என்று அறிய முடிகிறது. சோழராட்சி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறியபோது விஜயநகர் ஆட்சியில் பிராமணரின் பொருளியல் நிலை இவ்வாறு மாறியது.

**விஜயநகர் ஆட்சியில் அடிமைகள்:** நிலவுடைமையின் மாற்றம் சமூகமாற்றத்தினை உருவாக்கியது. விஜயநகர் ஆட்சியில் புதியநிலக்கிழார்கள் உருவாகியபோது புதிய புதிய உழுகுடிகளும் உருவாக்கப்பட்டனர் என்று கல்வெட்டுக் குறிப்புகள் சான்றளிக்கின்றன. நிலக்கிழார்களால் ஆளப்பட்ட உழுகுடிகள் அடிமைகள் எனப்பட்டனர்; கோயில் நிலத்தினை உழுவோர் குடிகள் எனப்பட்டனர். 1374-ஆம் ஆண்டின் ஒரு கல்வெட்டு (திருப்பழத்துறை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்) நிலக்கொடைபற்றி பேசுகிறது. மழவதரையர் களத்தூருடையான் என்ற ஒரு நிலக்கிழார் ஒரு பெண்ணிற்கும் அவருடைய மகளுக்கும் "காதல் கொடையாக" "ப்ரீதி தானம்" என்ற பெயரில் சுமார் 9 வேலி நிலமும் ஒரு வீடும் கொடையளித்தார். அந்நிலத்திற்கு உழுகுடிகளாக இரு வெவ்வேறு அடிமைகள் வழங்கப்பட்டனர்: (1) மூன்று வெள்ளாளர்கள். இவர்கள் வெள்ளாள அடியார் எனப்பட்டனர் (2) இரு ஜோடி புலையர். இவர்கள் புலை அடியார் எனப்பட்டனர். புலை அடியார்கள் நாகபட்டினத்திலிருந்து ஒரு முகவர் மூலமாக வாங்கப்பட்டனர். பெண் வெள்ளாள அடிமைகள் சிறு பல வெள்ளாட்டிகள் என்று அழைக்கப்பட்டனர். மற்றொரு கல்வெட்டில் (திருக்கழுகுன்றம், செங்கல்பட்டு மாவட்டம், 1388) நில விற்பனைபற்றி ஒரு குறிப்பு உள்ளது. விற்கப்பட்ட அந்நிலத்தோடு 3 வெள்ளாளர்களும், 16 பறை அடியார்களும் விற்கப்பட்டனர். விற்றவர், கிழவன் பட்டம் பூண்டவர். வாங்கியவர், தொண்டனார் கண்டராயர் என்று குறிக்கப்பட்டுள்ளார். மேலும், இவர் தலைமுறை தலைமுறையாக அரையன் பட்டம் கொண்டவர். இங்கு வெள்ளாள அடிமைகள் வெள்ளாள பிள்ளைகள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். அதாவது, இவர்கள் வெள்ளாள பிள்ளைகளுக்கு வேலையாள்களாக இருந்தவராவார். நிலத்தோடு சேர்த்து அடிமைகளாக விற்கப்பட்டதால் இந்நிலவிலையாவணம் காணி-அடிமை-மனைவிலை பிரமாணம் என்று சுட்டப்பட்டுள்ளது. 1338-ஆம் ஆண்டின் மற்றொரு கல்வெட்டில் (குளித்தலை தாலுக்கா, திருச்சிராப்பள்ளி மாவட்டம்) ஒரு பிராமணர் 4 வெள்ளாளர் அடிமைகளை ஒரு வணிகருக்கு (செட்டி) 270 பணத்திற்கு விற்றுள்ளார். இதில், இவ்வடிமைகள் வெள்ளாண் அடிமைகள் என்று குறிக்கப்பட்டுள்ளனர். அப்பிராமணர் இவர்களை தம் தங்கையிடமிருந்து வாங்கியுள்ளார். இவர்கள் தலைமுறை தலைமுறையாக அடிமையாக இருக்கவேண்டுமென்று கல்வெட்டு சுட்டுகிறது.

**விஜயநகர் ஆட்சியில் வணிகம்:** விஜயநகர் ஆட்சிகாலத்தில் அரபியர்கள், சீனர்கள், ஐரோப்பியர்கள் வணிகத்திற்காக இந்தியத் துணைக் கண்டத்திற்கு வந்தனர். அவர்களில் பலர் தென்னிந்திய வணிகர்களின் வெளிநாடுகளுடனான வணிக நடவடிக்கைகள் பற்றி எழுதியுள்ளனர். அக்காலத்தின் கல்வெட்டுகளில் பேட்டைகள், சந்தைகளில் விற்கப்பட்ட பொருள்களை பற்றிய குறிப்புகளை தருகின்றனர். தமிழ்நாட்டின் கடற்கரையோரங்களில் கிடைத்த சீனக் களிமண் சில்லுகளும் இதனை உறுதி செய்கின்றன. இது தொடர்பாக செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருக்கழுகுன்றத்தின் ஒரு கல்வெட்டு செய்தியளிக்கின்றது. அதில் திருக்கழுகுன்றம், சதிரவாசன்பட்டினம் என்ற இரு ஊர்கள் அரசுக்கு அளிக்கவேண்டிய வரிகள்பற்றி பேசுகிறது. அவ்வரிகளை குமாரகம்பனோ உள்ளூர் ஆட்சியரோ அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும். அவ்வரிகள்: பட்டடை நூலாயம், ஆட்டை - சம்மதம் (அதாவது ஒரு ஆண்டுக்கான பரிசு), பேர்-சம்மதம் (அதாவது தனிநபர் செலுத்தவேண்டிய வரி), மாவிரட்டை அதியமாதம் (அதாவது குறிப்பிட்ட மாதங்களுக்கு இடையில் அளிக்கப்படவேண்டிய வரி). தவிர, நெய்யப்பட துணிகளுக்கு நெசவாளர்கள் வரிசெலுத்த வேண்டியிருந்தது. இவர்கள், ஓராண்டுக்கு மொத்தமாக 70 பணம் செலுத்த வேண்டியிருந்தது. மற்றோர் கல்வெட்டு கோயில் முகவருக்கு வரிசெலுத்த வேண்டிய பல குழுக்களை குறிக்கிறது. அவை: செட்டியள் (வணிகர்கள்), கைக்கோலர் (நெசவாளர்), கவரையாள் (வணிகர்கள்), கச்சவாட வாணியர் (சில்லரை வணிகர்), செக்குவாணியர் (எண்ணை வணிகர்), சேனைக்கடையர் (வெற்றிலை வியாபாரி). பிறிதொரு கல்வெட்டு மேற்குறிப்பிடப்பட்ட பட்டினம் பற்றிய கூடுதலான செய்திகளை தருகிறது. இது, 3 வெவ்வேறு குழுக்களின் செயல்களை விளக்குகிறது. திருக்கழுகுன்றத்தின் ஊரவர்கள், வெளியிடங்களில் இருந்துவந்த வணிகர்கள் (இவர்கள் பரதேசிகள் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்பட்டுள்ளனர்), நானாதேசிகள் (இவர்கள் பல திசைகளில் இருந்தும் வணிகம் செய்ய வந்தவர்கள்) அனைவரும் திருக்கழுகுன்றத்தின் மலைமேலுள்ள பெருமாள் கோயிலை செப்பனிடுவதற்கு முயற்சி எடுத்துள்ளனர். தங்களின் வணிகப் பொருள்களுக்கு (முத்து, துணை, எண்ணை) அரசுக்கு செலுத்தவேண்டிய வரியினை கோயிலை செப்பனிடும் வேலைக்கு பயன்படுத்த முடிவெடுத்தனர். அவ்வணிகப் பொருள்கள் வெவ்வேறு நாடுகளில் இருந்து வந்தவை. செங்கல்பட்டு வட்டாரத்தின் நாகலாபுரத்து கல்வெட்டு இதுபோன்றதொரு செய்தியினைத் தருகிறது. அங்கிருந்த வணிகர்கள் கரியமாணிக்கப்பெருமாள் கோயிலில் நிகழ்த்தப்படும் விழாவிற்கான செலவினை ஏற்கத் தலைப்பட்டனர். இவ்வணிகர்கள், வடக்கிலிருந்து வந்த வைசியர்கள். அவர்கள் கூட்டாக பட்டணஸ்வாமிகள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களின் பெயர்கள்: சித்தம் செட்டியார், இலக்ஷ்மிபதி செட்டியார், பட்டபிள்ளை செட்டியார், பழவேற்காடு (புலிகாட்) ஸ்வாமிகள், நாராயண செட்டியார், திருவடிப்பிள்ளை செட்டியார். ஆனால், விழாவிற்கான செலவினை ஊர்மக்களிடமிருந்து வசூலித்தனர். அனந்தநாராயணபட்டினம் என்ற பழவேற்காடு துறைமுகத்தில் தொங்கு கப்பல் என்ற ஒருவகை கப்பல் துணிமூட்டைகளை ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கு வரிவசூலிக்கப்பட்டது. இது, அயல்நாட்டு வணிகத்தோடு தொடர்புடையது. திருப்பதியிலுள்ள ஒரு கல்வெட்டின்படி 9 வகையான பொருள்களுக்கு அரசாணை வரிவிலக்களித்தது. அப்பொருள்கள், நவசரண்யசவர்க்கம் தெப்பத்து சரக்கு எனப்பட்டது. இவை வெவ்வேறு இடத்திலிருந்து வந்த மணப்பொருள்கள். அவற்றின்மேல் வசூலிக்கப்பட்ட வரிகளின் பெயர்கள்: ஆயம், உள்ளாயம், பேராயம், அனுப்பு, மகைமை, மூலைவீசம், தரகு போன்றவை. இதுபோன்று அச்சுதப்ப நாயக்கரின் ஆணையினால் காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பரநாதர், காமாக்ஷியம்மன் கோயில்களுக்கு வரும் சில பொருள்களுக்கு வரிவிலக்களித்தார். அப்பொருள்கள்: கற்பூரம், புனுகு, கஸ்தூரி, பன்னீர், குங்குமப்பூ, சாம்புராணி, சல்லாபட்டு, பட்டாவளி.

தமிழ்நாட்டில் சீனக் களிமண் சில்லுகள்: 9-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டுவரை உலகின் பல இடங்கில் சீனக்களிமண் சில்லுகள் கிடைக்கின்றன. மன்னார் வளைகுடாவின் பெரியபட்டினத்தில் 1000 சீனக்களிமண் சில்லுகள் கிடைத்துள்ளன. இவற்றில், சுமார் 500 சில்லுகள் தரைமேற்பரப்பிலேயே கிடைத்தவை. இவை, சீனாவின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள சூளைகளில் சுடப்படவை. தரைமேல் கிடைத்தவை, 9-10 ஆம் நூற்றாண்டினை சார்ந்தவை. இவை, நீலம் மற்றும் வெள்ளை நிறங்களில் உள்ளன. பழையகாயல், தேவிப்பட்டினம், நாகப்பட்டினம் போன்ற இடங்களில் அகழாய்விலும் சீனக்களிமண் சில்லுகள் கிடைத்தன. இவை 16-ஆம் நூற்றாண்டினை சார்ந்தவை. கும்பகோணத்தருகேயுள்ள தாராசுரம் கோயிலின் உள்ளாளையிலும், வேலூர் கோட்டையிலும் இதுபோன்ற சில்லுகள் கிடைத்தன. இவற்றின் காலம் 17-18-ஆம் நூறாண்டுகள். கங்கைகொண்ட சோழபுரத்தின் அகழாய்வில் 11-12-ஆம் நூறாண்டினை சார்ந்த சில்லுகள் கிடைத்தன.

**சமூக முரண்:** 15-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இரு வெவ்வேறு சமூகக் கூட்டங்களுக்கு இடையில் முரண்பாடு (conflict) இருந்தது. ஒருபுறம் விஜயநகர் ஆட்சியரும், நிலக்கிழார்களும் மறுபுறம் விவசாயிகளும் கைவினைஞரும் இருந்தனர். இது தமிழ்நாட்டின் வரலாற்றில் ஏற்பட்ட ஒரு சமூகமாற்றம். 16-ஆம் நூற்றாண்டில் நாயக்கராட்சியில் ஐரோப்பியரின் வணிக நடவடிக்கை நிறுவப்பட்டது (institutionalised). இது, இன்னொருமாற்றம். இப்போக்கு தென்னிந்தியாவின் பொருளியலையும் மாற்றியது. இக்காலகட்டத்தின் கடல்தாண்டிய வணிகத்தில் துணி, மணப்பொருள்கள், குதிரைகள் முக்கியம் பெற்றன. 17-ஆம் நூற்றாண்டின் விஜயநகராட்சியின் வீழ்ச்சியும் தொடர்ந்துவந்த ஐரோப்பியரின் அரசியல்தலையீடும் அயல்நாட்டுவணிகத்தினை வீழ்த்தின. இதனாலும் சமூகமாற்றம் உண்டானது. இம்மாற்றம், முன்பிருந்த சமூகக்கட்டமைப்பினை உடைத்தது. அடுத்து, தென்னிந்தியாவுடன் இயைந்து தமிழ்நாடு அடுத்தகட்ட மாற்றத்திற்குள் புகுந்தது. அதற்கு காலனியகாலம் வழிதிறந்தது.

(முடிவுற்றது)

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுபோல இன்னொன்று எளிதில் வராது!

## அந்நியமாதல்



அந்நியமாதல் (Alienation) - உலகிலுள்ள மொழிகளில் மிக அதிகளவிலான பொருளும் விளக்கங்களும் கூறப்பட்டுவருகிற, ஆனால், இன்னமும் முற்றுமுழுதாக ஒருவராலும் அறுதியிட்டுக் கூற முடியாத சொல்.

தமிழ்நாட்டிலும் தமிழின் சித்தர் மரபிலும் ஆன்மிக இலக்கியங்களிலும் வெளிப்படையாகவும் மறைபொருளாகவும் வெவ்வேறுவிதமாக அந்நியமாதல் பேசப்படுகிறது; விவாதிக்கப்படுகிறது, இன்னமும்கூட முழுவதும் அறியப்படாத, பேராய்வுக்குரிய பொருளாகத் தொடருகிறது. கண்டவரும் இல்லை; விண்டவரும் இல்லை!

இதேபோல, பல்வேறு மதங்களின் சிந்தனைகளிலும் பல்வேறு தத்துவங்களிலும் காலங்காலமாகப் பேசுபொருளாக இருக்கிற அந்நியமாதல் என்ற கருதுகோள் முடிவின்றித் தொடருகிறது. உளவியலிலும் பெரும் பங்காற்றுகிறது அந்நியமாதல்.

தோழர் எஸ்.வி. ராஜதுரை எழுதி வெளிவந்துள்ள அந்நியமாதல் நூலைப் படித்து முடித்த பின் ஆழமாகப் பார்க்க, பொதுவுடைமைச் சிந்தனையிலும் மனிதகுல முன்னேற்றத்திற்கான தத்துவத்திலும் அந்நியமாதலுக்குரிய மிகப் பெரிய பங்கை யாராலும் மறுக்கவியலாது.

எனினும், கம்யூனிஸ்ட்கள் மத்தியிலேயேகூட அந்நியமாதல் என்ற சொல்லுக்கு, சிந்தனைக்கு உரிய இடம் அல்லது முக்கியத்துவம் தரப்படவில்லையோ என்றே தோன்றுகிறது. இன்னமும் சொல்லப் போனால், அந்நியமாதல் என்ற சொல்லேகூட சில சிந்தனைக் குழுவினரால் தீண்டத் தகாததாகப் புறக்கணிக்கப்படுகிறது; அந்நியமாதலைப் பேசுவோரையும் சேர்த்து.

அந்நியமாதல் பற்றிய மார்க்ஸின் கருத்தாக்கங்கள் இன்னமும், (அந்நியமாதல் இடம்பெறும்) 'பொருளாதார - தத்துவக் கையெழுத்துப் படிகள் - 1844' என்ற அவருடைய நூல் வெளியிடப்பட்ட காலத்திலிருந்து - 81 ஆண்டுகளாக் - கம்யூனிஸ்ட்களிடையேயும் கம்யூனிஸ்ட் அல்லாதவர்களிடையேயும் - ஒரு சரச்சையாக விவாதிக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கிறது.

அந்நியமாதலைப் பற்றித் தனது இளமைக் காலத்திலும் முதுமைக் காலப் படைப்புகளிலும் தீவிரமாக எழுதியும் நுட்பமாக விவரித்தும் வந்திருக்கிறார் கார்ல் மார்க்ஸ்.

தம் எழுத்துகளில், அந்நியமாதலைத் திட்டவட்டமான முதலாளிய, பொருளாதாரச் சூழலைக் கொண்டு விளக்குகிற மார்க்ஸ், மனிதர்களின் உற்பத்தி ஆற்றலுக்கும் அதன் விளைபொருள்களுக்குமான உறவு எந்த நிலையில் உள்ளதோ, அதில்தான் அந்நியமாதலின் மூலகாரணத்தைக் கண்டறிய முடியும் என்பதையும் தொடர்ந்து குறிப்பிடுகிறார்.

இன்றைக்கு சுமார் அரை நூற்றாண்டுக்கு முன், 1979-ல், தமிழில் முதன்முதலாக வெளியான தோழர் எஸ்.வி. ராஜதுரை எழுதி வெளிவந்த 'அந்நியமாதல்' நூலின் - பெரிதும் விரிவுபடுத்தப்பட்ட - இரண்டாம் பதிப்பு தற்போது வெளிவந்திருக்கிறது - அதே க்ரியா பதிப்பகத்திலிருந்து அதே அட்டை வடிவத்துடன், அச்சு அசலாக. ஆனால், கம்யூனிஸ்டுகள் ஒவ்வொருவருக்குமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுயபரிசோதனைக்குரிய வினோதம் என்னவென்றால், அன்றைக்கு முதல் பதிப்புக்கான முன்னுரையில் தோழர் எஸ்.வி. ராஜதுரை குறிப்பிட்டிருக்கிற சூழலும்கூட இப்போதும் மாறாமல் இருப்பதுதான்.

'இன்று உலகம் முழுவதிலுமுள்ள மார்க்சிய இயக்கம் சிக்கலும் குழப்பமும் முரண்பாடுகளும் பிளவுகளும் கொண்டதாக உள்ளது' என்பதுடன், 'சோசலிசம் மானுட வாழ்வுக்கான தலையாய மதிப்பீடுகளில் ஒன்று என்ற வகையில் "மீண்டும் மார்க்சிடமே" என்ற போக்கு தவிர்க்க முடியாததாகிவிட்டது. இவ்வுண்மையே இந்நூலுக்கான முக்கிய உந்துசக்தி' என்று குறிப்பிடுகிறார் தோழர் எஸ்விஆர் - இன்றும் அதுவே தொடருகிறது.

இந்தப் புத்தகத்தின் நோக்கம், அந்நியமாதல் பற்றிய மார்க்ஸின் வரலாற்றுரீதியான ஆய்வை அறிமுகப்படுத்துவதுதான் என்று குறிப்பிடும் தோழர் எஸ்விஆர், சில பிரதிபலிப்புகள் என்ற தொடக்க இயலிலேயே கன்னட ஞானியான பசவேசரின் பாடலுடன், நம்மில் பலருக்கும் தெரிந்த மற்றும் தெரியாத பலருடைய வரிகளின் உதவியுடன் அந்நியமாதலை அறிமுகப்படுத்துகிறார். கூடவே, மார்க்ஸால் மிகத் திட்டவட்டமான பொருளில் கையாளப்பட்ட 'அந்நியமாதல்' என்ற கருத்தாக்கம் இன்று மார்க்சியத்துக்கு முற்றிலும் புறம்பான பல்வேறு முதலாளியச் சிந்தனையாளர்களின் தத்துவ விளக்கத்துக்கான அடித்தளமாகிவிட்டது என்றும் எச்சரிக்கிறார்.

மனிதனால் படைக்கப்பட்ட பொருள்கள் அவனுக்கு மேலான சக்தி பெற்று, அவனை அந்நியமாக்குகிற நிகழ்ச்சிப் போக்குகள் பன்னூறு ஆண்டுகளாக இங்கு நிலவுவதற்குச் சான்றாக ஆயுத பூஜையையும் லட்சுமி பூஜையையும் குறிப்பிட்டு விளக்குவதுடன், வெகுமக்களின் அந்நியமாதலுக்குத் தெளிவான சான்றாக எம்ஜிஆரும் (இப்போது நடிகர் விஜய்?) எவ்வாறு மாறுகிறார்கள் என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

'மார்க்ஸின் லட்சியம் முழு மனிதனைப் படைப்பதாகும்' என்ற எர்னெஸ்ட் பிஷரின் மேற்கோளுடன் தொடங்கும் 'அந்நியமாதல் - மார்க்ஸியப் பார்வை' இயலில் மார்க்ஸைப் பொருத்தவரை மதம்தான் மானுட அந்நியமாதலின் மிக அடிப்படையான, முதன்முதலான வெளிப்பாடு என்று குறிப்பிடும் தோழர் எஸ்விஆர், அதைப் பற்றித் தன் இளமைக் காலத்தில் எழுதியவற்றை மார்க்ஸ் ஒருபோதும் மாற்றிக் கொள்ளவில்லை என்பதுடன், 'மதம் என்பது ஒடுக்கப்பட்ட பிறவியின் பெருமூச்சு, இதயமற்ற உலகத்தின் இதயம், ஆன்மாவற்ற நிலைமைகளுக்கான ஆன்மா; அது மக்களுக்கு வாய்த்த அபின்' என்ற வரிகளுடன் மதத்தை அம்பலப்படுத்தி மார்க்ஸ் எழுதிய முழுப் பத்தியையும் தருகிறார்.

'ஆளும் வர்க்கத்தின் கருத்துகளே ஒவ்வொரு சகாப்தத்திலும் 'ஆளும்' வர்க்கத்தின் கருத்துகளாகவும் இருக்கின்றன... பொருள் துறை உற்பத்திச் சாதனங்களைத் தன் கைவசம் வைத்திருக்கும் வர்க்கம், அந்தக் காரணத்தாலேயே சிந்தனைப் படைப்புச் சாதனங்களையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இதனால் சிந்தனைப் படைப்புச் சாதனங்கள் இல்லாதவர்களின் கருத்துகள் ஒட்டுமொத்தமாகவே ஆளும் வர்க்கத்திற்குக் கீழ்ப்பட்டவையாக இருக்கின்றன' என்ற மார்க்ஸின் வரிகள், இன்றைய அயோத்தி ராமர் கோவிலுடனும் கும்பமேளா கோலாகலங்களுடனும் ஊடகங்களுடனும் பொருத்திப் பார்க்க, ஏதோ இந்திய நிலைமையைப் பற்றி முன்னுணர்ந்து எழுதியதைப் போன்றே இருக்கின்றன.

மானுடச் செயல், மானுட சாரம், மானுட ஆற்றல்கள், தேவைகள், இயற்கை மனிதன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன மனிதன் ஆகிய மார்க்சியக் கருத்தாக்கங்களைப் புரிந்துகொண்டால்தான் அந்நியமாதல் பற்றியும் புரிந்துகொள்ள முடியும் என்று குறிப்பிடும் எஸ்விஆர், இவற்றை மானுட சாரம் என்ற மிக நீண்ட இயலில் விரிவாக விளக்குகிறார்.

ஃபயர்பாஹ் போன்ற பொருள்முதல்வாதிகளால் புறக்கணிக்கப்பட்ட, மனிதனின் உணர்வுபூர்வமான செயல் என்ற அம்சத்தைப் பற்றிக் குறிப்பிடும் எஸ்விஆர், மனிதனின் அகத்தன்மை சார்ந்த, உணர்வுபூர்வமான செயல் என்ற அம்சம், கருத்துமுதல்வாதிகளால் சிந்தனை, தத்துவம் என்ற வடிவத்தில் தீவிரமாக வளர்க்கப்பட்டதையும் வெறும் சிந்தனையே, கருத்தே, அறிவே, உணர்வே உலகைப் படைக்கிறது என்ற நிலைப்பாடு வளர்க்கப்பட்டதையும் விவரிக்கிறார்.

தொடர்ந்து, 'நோக்கம் கருதிய செயல், அறிவால் வழிகாட்டப்படுகிற செயல் என்பது மானுட குலத்துக்கு மட்டுமே உரிய சிறப்பான விளைபொருளாகும். மேலும், மனிதன் மனிதனாகப் பரிணமிக்கக் காரணமானதே இந்தப் படைப்புச் செயல்தான். இது, விலங்கின் இயல்புணர்வைக் கடந்த படைப்புச் செயல். முற்றிலும் மானுடச் சிறப்பான இந்த உழைப்பை அடிப்படையாகக் கொண்டே இதுவரை தோன்றிய சமுதாய வடிவங்கள் சாத்தியமாகின. இனிமேல் தோன்றப் போகிற சமுதாய வடிவங்களுக்கும் இதுவேதான் அடிப்படையாக இருக்க முடியும்' என்ற மானுட உழைப்பைப் பற்றிய ஹாரி ப்ராவர்மன் கருத்தையும் சுட்டிக்காட்டுகிறார்.

மனிதனை இனப் பிறவி என்றும் மானுட வாழ்வை இன வாழ்வு என்றும் குறிப்பிடும் மார்க்ஸ், மனிதனுக்கே உரிய இன ஆற்றலாகக் கருதிய உணர்ச்சிகள் பற்றிக் கொண்டிருந்த கருத்துகளையும் புலனுணர்வு பற்றிய அவதானிப்புகளையும் விளக்குகிறார் எஸ்விஆர்.

ஃபயர்பாஹின் ஆய்வுரைகள் நூலிலிருந்து, 'மானுட சாரம் என்பது ஒவ்வொரு தனிமனிதனிலும் சார்ந்துள்ள அருவமான பொருள் அல்ல; அது உண்மையில் சமுதாய உறவுகளின் கூட்டுத்தொகைதான்' என்ற மார்க்ஸின் வரிகளை மேற்கோள் காட்டும் அவர், மார்க்ஸைப் பொருத்தவரை அந்நியமாதல் என்பது மனிதனின் சாரத்துக்கும் அவனது வாழ்வுக்கும் இடையேயான முரண்பாடாகும் என்று முடிக்கிறார். மார்க்ஸ் சொல்லும் சாரம் - எசென்ஸ் என்ற சொல்லுக்குரிய சரியான விளக்கத்தை உணராமல் அவருடைய அந்நியமாதல் கோட்பாட்டைப் புரிந்துகொள்ள முடியாது என்று குறிப்பிடும் எஸ்விஆர், பலவித கண்ணோட்டங்களையும் கொண்டு சாரம் பற்றி விவரிக்கிறார்.

அந்நியமாதல் என்ற துணைத் தலைப்பின் கீழ்வரும் பக்கங்களை நூலின் தனிச் சிறப்பு மிக்கவை என்றே குறிப்பிடலாம்.

"சுரண்டல் உறவும் ஆதிக்க உறவும் அந்நியமாதலை உக்கிரப்படுத்திப் பரவலாக்குகின்றன... உற்பத்திச் சாதனங்களில் தனியுடைமை ஏற்பட்டதும் படைப்பாளியான மனிதன், அடிமையாக, பண்ணையடிமையாக, கூலி உழைப்பாளியாக மாறுகிறான். இப்போது அவனிடத்தில் உற்பத்திச் சாதனங்கள் இல்லை. படைப்பு இயக்கத்தில் அவனுக்கு இருக்க வேண்டிய கட்டுப்பாடும் இல்லை.... இலக்குகளை அடைவதற்கான சாதனமாக, உற்பத்தி இயக்கத்திலுள்ள ஓர் அம்சமாக மட்டுமே இருக்கிறான்... உழைப்புப் பிரிவினை வளர்ச்சியடைய, அவனுடைய வேலைகள் ஒரேமாதிரியான, மானுடத் தன்மையற்ற, அவனுடைய உணர்ச்சியையும் விருப்பத்தையும் மழுங்கடிக்கிற தன்மையைப் பெறுகின்றன. இறுதியில் தொழிலாளி, எந்திரத்தின் துணை உறுப்பாக மாறுகிறான்."

சமுதாய ஆற்றல் ஒருசிலர் கரங்களில் தனிநபர் ஆற்றலாக மாறியுள்ளது என்ற மார்க்ஸின் வரிகளைச் சுட்டிக்காட்டும் எஸ்விஆர், தனியுடைமை என்பது அந்நியமாதலின் மிக மேம்பட்ட வடிவம் என்பதுடன், மூலதனம் என்பது மனிதனுக்கு மேலான சக்தியாக, அந்நியமான, மானுட விரோதமான சக்தியாக மாறிவிட்ட, மானுட குலத்தின் அந்நியமாக்கப்பட்ட ஆற்றலே தவிர வேறல்ல என்கிறார்.

மார்க்ஸ் உழைப்புச் செயலை இரண்டாகப் பிரிக்கிறார். ஒன்று வாழ்வின் புலப்பாடு. இரண்டாவது வாழ்வின் அந்நியமாதல். உழைப்புச் செயல் எப்போது வாழ்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியமாக்குகிறது? நான் உயிர் பிழைப்பதற்காக வேலை செய்யும்போது, ஒரு பிழைப்புச் சாதனத்தை உருவாக்குவதற்காக வேலை செய்யும்போது, எனது வேலையே என் வாழ்க்கையாக இல்லாதபோது. மனிதன் படைக்கிற பொருள்களும் அமைப்புகளும் உறவுகளும் அவனுக்கு இல்லை என்கிறபோது, அவனே அவனுக்கு இல்லை என்றுதானே பொருள்!

அந்நியமாக்கப்பட்ட உழைப்பில் உழைப்பாளிக்கும் உழைப்புச் செயலுக்கும் உள்ள உறவை விளக்கும் எஸ்விஆர், வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட, நிர்பந்திக்கப்படுகிற உழைப்பானது ஒரு தேவையின் நிறைவு அல்ல, அதற்கு வெளியேயுள்ள தேவைகளை நிறைவு செய்வதற்கான சாதனமே என்ற மார்க்ஸ் வரிகளைச் சுட்டிக்காட்டுகிறார்.

அந்நியமாக்கப்பட்ட உழைப்பானது, மனிதனிடமிருந்து இயற்கையையும் (பிறர் உடைமையாக்கப்பட்ட புறப்பொருள்கள்), அவனையும் (அவனது செயல்கள்) அந்நியமாக்குவதன் காரணமாக இன வாழ்விலிருந்தும் அவனை அந்நியமாக்குகிறது. இன வாழ்வை (அவனது ஆக்கபூர்வமான படைப்புச் செயலை) தனி மனிதன் உயிர் பிழைப்பதற்கான சாதனமாக்கிவிட்டது என்று குறிப்பிடும் எஸ்விஆர், இங்கே மேற்கோளாக, மனிதன் தன்னுணர்வு கொண்டவன் என்பதாலேயே, அவன் தன் வாழ்வை, அதாவது தன் சாரத்தையே கேவலம் உயிர் பிழைப்பதற்கான கருவியாகவும் ஆக்குகிறான். என்ற மார்க்ஸின் வரியைக் குறிப்பிடுகிறார்.

மார்க்ஸின் கருத்துப்படி முதலாளிய சமுதாயத்தில், மானுட உணர்வானது பெரும்பாலும் உயிர் பிழைத்திருப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதிலேயே செலவிடப்படுகிறது. 'மனிதனை மனிதன் தின்னும் சமுதாயத்தில்' இத்தகைய முனைப்பு இருந்தால்தான் ஒருவனால் ஓரளவேனும் தாக்குதலைச் சமாளிக்க முடிகிறது என்கிற எஸ்விஆரின் வரிகள், பெரும்பாலும் முதலாளியமாக அல்லது அவற்றின் தொங்குசதைகளைப் போல மாறிவிட்ட ஒட்டுமொத்த உலகிலும் தற்போது மனிதகுலம் பட்டுக்கொண்டிருக்கும் அவலத்தைக் குறிப்பிடுகிறது. உண்மையே.

உலகில் வாழ்க்கையை உண்மையிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் எவ்வளவு பேர்? சில ஆயிரம் குடும்பங்களாக அல்லது சில லட்சம் குடும்பங்களாக வேண்டுமானால் இருக்கலாம்; மற்றபடி அனைவரும் அவரவர் வசதிக்கேற்ப, வழக்கத்துக்கேற்ப, வாழ்நிலைக்கேற்ப, உயிர் பிழைத்திருப்பதற்கான முயற்சிகளை மட்டும்தான் தங்கள் வாழ்நாள் முழுவதுமே மேற்கொண்டிருக்கின்றனர்.

உழைப்புப் பிரிவினையும் தனிச்சொத்தும் இயலில் புதிய வேலை வடிவங்களும் பொருள்சாரா உழைப்பும் பற்றி சிறந்த அவதானிப்புகளை முன்வைக்கிறார் எஸ்விஆர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொழிற்சாலைகளிலிருந்த வேலை வடிவங்களுடன் மாறுபடுகின்ற வேலை வடிவங்கள் இருபத்தியோராம் நூற்றாண்டில் காணப்படுகின்றன என்பது உண்மைதான் என்றாலும், மார்க்ஸ் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பார்த்த, புரிந்துகொண்ட, அந்நியமாக்கப்பட்ட சமூக உறவுகளும் வேலை நடைமுறைகளும் இன்றும் அப்படியே தொடரத்தான் செய்கின்றன.

மார்க்ஸைப் பொருத்தவரை அந்நியமாதல் என்பது முதலாளியத்தை உருவாக்கும் சமூக உறவுகளில் - உற்பத்தி சாதனங்களைத் தன் உடைமையில் வைத்திருக்கும் வர்க்கம், தன் உழைப்பை விற்கின்ற வர்க்கம் என்று பிரிவுபட்டிருப்பதில், உழைப்பு ஒரு சரக்காக மாற்றப்படுவதில் - வேர்கொண்டிருக்கிறது. அவரைப் பொருத்தவரை குறிப்பிட்ட வகை உழைப்போ,குறிப்பிட்ட வகைத்தொழில்கூடமோ அந்நியமாதலுக்கான முக்கிய அம்சங்கள் அல்ல. அவர் அக்கறை காட்டியது புதிய எந்திரங்களும் தொழில்நுட்பங்களும் உருவாக்கிய சமூக உறவுகளையும் வேலை நிலைமைகளையும் பற்றிதான்.

இன்றைய வேலை வடிவமும் தொழிலாளிகளும் மார்க்ஸ் காலத்திலிருந்தவற்றை விட வேறுவிதமானவையாகக் காட்சியளிக்கலாம். ஆனால், இந்த மேல் தோற்றத்தைக் களைந்துவிட்டுப் பார்ப்போமேயானால், பழைய வடிவத்துக்கும் புதிய வடிவத்துக்குமுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்த தன்மையைக் காண முடியும் என்று குறிப்பிடுகிறார் எஸ்விஆர்.

மார்க்சியப் பொருளாதாரம் பற்றிப் பேசும் இயலில், பொருளாதார, தத்துவக் கையெழுத்துப் படிகளில் தொகுக்கப்பட்டுள்ள கட்டுரைகளில் ஒன்றில் மார்க்ஸ் கூறும் அந்நியமாதல், அந்நியமாக்கப்பட்ட உழைப்பு என்ற கருத்தாக்கத்தின் வளர்ச்சியாகவும் நீட்சியாகவுமே அவர், மூலதனம் நூலின் முதல் பாகத்தில் சரக்குகளின் மாயமந்திரத் தன்மை (*Fetishism of Commodities* - பீனி அடம்ஸாக்கின் பொதுவுடைமை குழந்தைகளுக்காக என்ற நூலை நான் மொழிபெயர்த்தபோது மிகக் கடுமையான உழைப்பைக் கோரிய சொல் இது) என்ற கருத்தாக்கத்தை உருவாக்குகிறார் என்கிற எஸ்விஆர், இதுதொடர்பான மூலதனத்தின் பத்திகளையும் விரிவாகத் தந்திருக்கிறார்.

வர்க்கங்களும் வாழ்வும் இயலில், போட்டியும் பகைத் தன்மையும் சுயநலமும், சக மனிதர்கள் மீது நாம் கொள்ளும் நிலைப்பாடு, மனோபாவங்கள்தொட்டு அரசியல் கட்சிகள் வரை அனைத்திலும் ஊடுருவியுள்ளன. ஏதோ ஒரு வர்க்கத்தின் நலன்களை நேரடியாகவோ, மறைமுகமாகவோ போற்றி வளர்க்காத அரசியல் கட்சிகளும் சமுதாய நிறுவனங்களும் வர்க்க சமுதாயத்தில் இருக்க முடியாது. இங்கு யாரும் நடுநிலை வகிக்க முடியாது. இங்குள்ள அரசியல் கட்சிகள், தொடர்பு சாதனங்கள், சமய நிறுவனங்கள், அரசு ஆகிய அனைத்துமே வர்க்கச் சார்புள்ளவையே. இவையனைத்தும் சமுதாய மனிதர்களின் உண்மைத் தேவைகளை, மானுடத் தேவைகளை பூர்த்தி செய்பவை அல்ல. வர்க்க மனிதர்களின் அந்நியமான தேவைகளை பூர்த்தி செய்பவை. எனவே, இவற்றுக்கும் பயன் மதிப்பும் பரிவர்த்தனை மதிப்பும் உண்டு என்கிற எஸ்விஆர், "அந்நியமாதல் என்பது உற்பத்தித் துறையில் மட்டுமே நடக்கிற நிகழ்ச்சிப் போக்கல்ல, மானுட வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஏற்படுகிற ஒன்று. சமயம், குடும்பம், சட்டம், அறநெறி, அறிவியல், கலை முதலியனவும் தனிச்சொத்துக்குரிய விதியின் கீழ் வரும் உற்பத்தி முறையாகும்" என்ற மார்க்ஸ் வரிகளை மேற்கோளிடுகிறார்.

மார்க்ஸின் பொருளாதார, தத்துவக் கையெழுத்துப் படிகளின் பிரதியிலிருந்து காத்திரமான வரிகளை எடுத்துக்கொண்டு, கடந்து செல்லுதல் இயலில் விளக்குகிறார் எஸ்விஆர்.

"இந்த கம்யூனிசம் மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள, மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள முரண்பாட்டுக்கான உண்மையான தீர்வாகும். இருத்தலுக்கும் வாழ்தலுக்கும், புறவயமாக்குதலுக்கும் சுய உறுதிப்படுத்துதலுக்கும், சுதந்திரத்துக்கும் கட்டாயத் தேவைக்கும், தனிநபருக்கும் இனத்துக்கும் உள்ள முரண்பாட்டுக்கான உண்மையான தீர்வாகும். கம்யூனிசம் என்பது வரலாற்றின் புதிர்களுக்கான தீர்வு. தானே இந்தத் தீர்வு என்பதை அது அறிந்துள்ளது."

கம்யூனிசம் என்பதை மானுடப் பிரச்சினைகளுக்கான தீர்வாகக் காண்கிறார் மார்க்ஸ். தனியுடைமைச் சமுதாயத்துக்குள்ளேயே மானுட குலம் முழுவதும் இதுவரை ஈட்டிய சாதனைகள் அனைத்தும் திரட்டப்பட்டுத் திரும்பப் பெறுதலே கம்யூனிசம் என்கிறார். இது வரலாற்றின் புதிர் விடுவிக்கப்பட்ட நிலை.

கம்யூனிசம்என்பது மனிதன் அந்நியமாதலுக்கு இரையாகாத வளர்ச்சியில் செல்வதற்கான சூழல், பாதை, உத்தரவாதம். தாம் விவரித்த மானுட அந்நியமாதலைக் கடந்துசென்ற நிலையாகவே கம்யூனிசத்தை மார்க்ஸ் கருதினார். மானுட விமோசனம், மானுட சுதந்திரம் ஆகியவை நனவாக்கப்படும் நிலை இது. சுதந்திரம், விமோசனம் ஆகியவற்றைச் சமயவாதிகள், மரபுவழித் தத்துவவாதிகள், கற்பனா உலகவாதிகள் போல பரிபூரணமான, முற்றான கருத்தாக்கங்களாக மார்க்ஸ் கருதவில்லை. 'மாற்றம்' என்பது மட்டுமே அவரது அகராதியில் முற்றான ஒன்று.

மார்க்சியம் எல்லாவிதமான முழுமுற்றுகளையும் எதிர்க்கிறது.'பரிபூரணமான விடுதலை' என்ற கையாலாகத்தனத்தை நிராகரிக்கிறது. முழுமுற்றுகள் சுரண்டும் வர்க்கங்களைப் பாதுகாக்கும் கவசங்கள் எனக் கருதுகிறது என்று குறிப்பிடுகிறார் எஸ்விஆர்.

மார்க்சிய, மார்க்சியர் அல்லாத வட்டாரங்களில் தொடர்ச்சியாக விவாதிக்கப்பட்டுவரும் பிரச்சினையாகவுள்ள அந்நியமாதல் பற்றிய விஷயத்தில் மார்க்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் ஒரே மாதிரியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்திருக்கிறார் என்பதை எண்ணற்ற எடுத்துக்காட்டுகள், பல்வேறு மேற்கோள்கள் உதவியுடன் மற்றும் விவரங்களுடன் இளம் மார்க்ஸ் - முதிய மார்க்ஸ் இயலில் உறுதி செய்கிறார் எஸ்விஆர்.

மார்க்ஸைப் பொருத்தவரை உற்பத்தி என்பது தொழிற்சாலையில் தொழிலாளர்கள் தங்கள் உழைப்பால் உருவாக்குபவை மட்டுமல்ல, சமயம், குடும்பம், சட்டம், அறநெறி, அறிவியல், கலை முதலியனவும் தனிச்சொத்துக்குரிய விதியின் கீழ் வரும் உற்பத்தி முறையாகும் என்று கூறி, இந்த நிலையைக் கடந்து வருவதற்கான தீர்வே கம்யூனிசம் என்று வரையறுக்கிறார்.

மார்க்ஸ், அந்நியமாதல் என்பதைத் திட்டவட்டமான ஒரு சமுதாய, வரலாற்றுச் சூழலில், முதலாளிய சமுதாயத்தில், முதலாளி உற்பத்தி உறவுகளில் வைத்தே பார்க்கிறார்; அந்நியமாதல் என்பது வரலாற்றுரீதியாகத் திட்டவட்டமான ஒன்று என்பதால், அந்நியமாதல் நீங்கிய ஒரு வாழ்வை, சமுதாயத்தை, உற்பத்தி உறவுகளைத் திட்டவட்டமான இன்னொரு வரலாற்றுச் சூழலில் சாதிக்க முடியும் என்று கருதுகிறார் என்று நூலின்வழி நிறுவுகிறார் தோழர் எஸ்விஆர்.

'மார்க்சியம் ஒரு நடைமுறையாக வேரூன்றுவதற்கு முன் அது ஒரு தீவிரமான கற்றலுக்கு உள்பட வேண்டும். ஓர் ஆழமானதும் அறிவார்ந்ததும் ஆத்மார்த்தமானதுமான விவாதத்துக்கு உள்படுத்தப்பட வேண்டும். ஒரு தார்மிக வேகம் கருதி நம்மை ஒன்றிணைத்து உறுதிப்படுத்தும் சித்தாந்தம் நமக்குள்ளேயே ஏற்படுத்திவிடுகிற தற்சாய்வுகளையும் ஒருதலைச் சார்பான சிதைவுகளையும் குருட்டுத்தனமான நம்பிக்கைகளையும் போக்குவதற்கும், நமது சிந்தனைக்கும் நடைமுறைக்கும் ஒரு மகத்தான திறப்பை உருவாக்கிக் கொள்வதற்கும் இத்தகைய விவாதங்கள் நிறையத் தேவை' - முதல் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டிருப்பதையே இன்றைக்குமான என்றைக்குமான தோழர் எஸ்.வி. ராஜதுரையின் அறைகூவலெனக் கொள்ளலாம்.

இயற்கையிடமிருந்து மனிதன் அந்நியமாதல் தொடர்பாகச் சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் ஆகியன பற்றிய சொல்லாடல்களில் மார்க்சியர்கள் அல்லாதவர்களால் புரிந்துகொள்ளப்படாதவையாகவோ அல்லது புறக்கணிக்கப்படுபவையாகவோ உள்ள மார்க்ஸின் எழுத்துகளைப் பற்றி அறிமுகம் செய்துவைக்கும் ஓர் அத்தியாயத்தை இந்த நூலில் எழுத முடியாமல் போனது பெரும் குறை என்று குறிப்பிட்டிருக்கிறார் தோழர் எஸ்.வி.ஆர். உள்ளபடியே, மிகவும் அவசியமும், தற்காலத் தேவையுமான இந்தத் தலைப்பில் குறுநூல் ஒன்றையாவது அவர் எழுதத்தான் வேண்டும்.

மார்க்சிய - பெரியாரிய ஆய்வு நூல்களையும் ஸரமாகோ, சார்த்தர், கிராம்ஷி என எண்ணற்ற இலக்கிய, தத்துவ எழுத்தாளர்களைப் பற்றியும் இன்ன பிறவுமாக நூற்றுக்கு நெருக்கமான எண்ணிக்கையில் நூல்களை எழுதியிருக்கும் தோழர் எஸ்.வி. ராஜதுரையின் நூல்களிலேயே (மிகச் சிலவற்றைத் தவிர அனைத்தையுமே வாசித்திருக்கிறேன் என்ற துணிவில்) ஆகத் தலைசிறந்தவை (மாஸ்டர் பீஸ்) என்றால், பெரியாரைப் புதிய வெளிச்சத்தில் சுடரச் செய்யும் 'பெரியார்: சுயமரியாதை சமதர்மம்', சமகாலப் பார்வையுடன் ஆழமும் விரிவும் கொண்டதான 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை (தமிழாக்கம், விளக்கக் குறிப்புகள், கட்டுரைகள்)' ஆகிய இரண்டும்தான் என்றே இவ்வளவு காலமும் நினைத்திருந்தேன். இப்போது அறிக்கையின் இடத்தை அந்நியமாதல் பிடித்துக்கொள்கிறது. ஏனெனில், அறிக்கைக்கு இணையாக இன்னொன்று எதிர்காலத்தில் ஒருவேளை வரலாம். ஆனால், பொருளாதாரம், அரசியல், தத்துவம், அறவியல், அழகியல், வரலாறு ஆகியவற்றை ஒன்றிணைத்து மார்க்சியம் என்ற ஈடிணையற்ற புரட்சிகரத் தத்துவக் கோட்பாட்டை வெளிப்படுத்தும் அந்நியமாதலுக்கு இணையாக இன்னொரு நூல் எழுதப்படுமா? என்பது ஐயமே. பாட நூலைப் போல மீண்டும் மீண்டும் படித்துணர வேண்டிய நூல் - அந்நியமாதல்!

**அந்நியமாதல் - எஸ்.வி. ராஜதுரை, பக்கங்கள் - 304, விலை - ரூ. 350, க்ரியா, 2, 17-வது கிழக்குத் தெரு, திருவான்மியூர், சென்னை - 600 041**

**(ஏப்ரல் 10: தோழர் எஸ்.வி. ராஜதுரை பிறந்த நாள்)**

●

---

கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | சுப்ரபாரதி மணியன்

# அருப ரூபா

## [ உருவம் இல்லாத உருவம் ]

## அல்லது

# ஆரஞ்சு நிறத்தைக் கபளீகரம் செய்த காவி

## (ஒடிய ஆவணப்படம்)

மகிமா சுவாமியைப் பின்பற்றுகிறவர்கள் சிறிய ஆரஞ்சு நிற உடையை இடுப்பில் கட்டுகிறவர்கள். எளிய வாழ்க்கையின் அடையாளம் இந்த ஆரஞ்சு ஆடை.

19ஆம் நடுப்பகுதியில் மகிமா சுவாமிகள் மகிமா தர்ம வழிபாட்டு முறையை அறிமுகப்படுத்துகிறார். அப்போது இருந்த பிராமணிய ஆதிக்கம், இறுக்கமான சாதி அமைப்பு போன்றவற்றை எதிர்த்து இவர்கள் முழுக்க எதிர் அமைப்பை உருவாக்கி இருக்கிறார்கள். பெரும்பாலும் துறவிகள் என்று சொல்லப்படுகிறது. ஆண்கள் மட்டுமே துறவிகள் ஆக முடியும் என்றக் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள். தங்கள் செய்தியைப் பரப்புவதில் அதிக நேரத்தைச் செலவிடுகிறார்கள். அந்தச் செய்தி அன்புதான். அனைவரையும் இணைக்கும். ஜாதிகள் இல்லை என்று வலியுறுத்துகிறார்கள். இவர்களிலும் பக்தர்கள் இருக்கிறார்கள். முதல்நிலை பக்தர்கள் ஒரு ஆரஞ்சுத் துணியை இடுப்பில் கட்டி இருக்கிறார்கள். இரண்டாவது பக்தர்கள், மூன்றாவது பக்தர்கள் என்று வருவோர்கள் மரத்தின் பட்டையிலிருந்து வடிவமைக்கப்பட்ட துணிகளை அணிகிறார்கள். அந்த வகையில் அவர்கள் சூரியனை வணங்குவது இவர்களின் முக்கியமான கடமை என்கிறார்கள்.

கோவில்கள் என்பது அறியாமையின் அடையாளம். புத்திசாலிகள் போகும் இடமல்ல அது. உள்ளமே கோவில் என்கிறார்கள். பீகார், அசாம், சட்டிஸ்கர் போன்று ஆரேழு வடகிழக்கு மாநிலங்களில் வலிமையானதாக மகிமாதர்மம் போற்றும் இந்த இயக்கம் இப்போது திசைமாறிவிட்டது.



பழைய நாட்டுப்புற வழிபாட்டு முறை போன்றவற்றை ஞாபகப்படுத்தும் இவர்களின் நம்பிக்கையைத் தொடர்கிறார்கள் பிரபஞ்ச உரிமை, ஆன்மீக நம்பிக்கையில் மனிதர்கள் எல்லாரும் சமமாகவும் இருக்க வேண்டும் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறார்கள்.

இவர்கள் சமீபமாய்க் காவியால் கபளீகரம் செய்யப்படுகிறார்கள்.

எப்படி?

பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மகிமா சுவாமியைப் பின்பற்றுகிறவர் பீமா பாய் என்ற ஒரு துறவி. அவர் உலகத்தில் சாதிகள் இரண்டு. ஆண் சாதி, பெண் சாதி. மூன்றாவது சாதி என்று எதுவுமே இல்லை என்று மக்களை ஒரே சாதியாகக் காட்டியவர். முன்னவர் சொன்ன சாதி, உருவ வழிபாடு, பக்தி யாத்திரை முறைகள், சமூகப் படிநிலைகள் காரணமான அரசியல் அதிகாரம் இவற்றை எதிர்த்து இயக்கங்களை நடத்தி இருக்கிறார். இந்தக் கருத்துக்களை முன்வைத்து வடகிழக்கு மாநிலங்களில் இவருடைய சீடர்கள் எப்போதும் யாத்திரைகளும் பிரச்சாரங்களும் செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மகிமா சுவாமியைப் பின்பற்றுகிறவர் பீமா பாய் என்ற ஒரு துறவி. அவர் உலகத்தில் சாதிகள் இரண்டு. ஆண் சாதி, பெண் சாதி. மூன்றாவது சாதி என்று எதுவுமே இல்லை என்று மக்களை ஒரே சாதியாகக் காட்டியவர். முன்னவர் சொன்ன சாதி, உருவ வழிபாடு, பக்தி யாத்திரை முறைகள், சமூகப் படிநிலைகள் காரணமான அரசியல் அதிகாரம் இவற்றை எதிர்த்து இயக்கங்களை நடத்தி இருக்கிறார். இந்தக் கருத்துக்களை முன்வைத்து வடகிழக்கு மாநிலங்களில் இவருடைய சீடர்கள் எப்போதும் யாத்திரைகளும் பிரச்சாரங்களும் செய்து வருகிறார்கள்.**

வருகிறார்கள். அவர்கள் சைவ உணவைப் பற்றி அதிகம் பேசுகிறார்கள். சூரியன் அஸ்தமானத்திற்கு முன்பே சாப்பிட்டுவிட வேண்டும் போன்ற பழக்கங்களை வலியுறுத்துகிறார்கள். இப்படி மதம் இல்லாத ஒரு மதமாக அவர்கள் உருவாகி வளர்ந்து நிற்கிறார்கள் ஆரஞ்சு, காவிஉடை தான் அவர்களுக்கு. தலை மொட்டை தான். வாழ்க்கையில் பிடிப்பு என்பது மற்றொருவரை அரவணைப்பது, அன்பு செலுத்துவது என்று இந்த இயக்கம் சென்றுகொண்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு அந்த இயக்கத்திற்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது.

இப்போது இந்த இயக்கத்தின் அடிப்படை இந்து தர்மம் தான் என்று திரும்பத் திரும்ப ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் வலியுறுத்துகிறார்கள். அவர்களின் மாநாடுகளில் கலந்துகொண்டு உரையாற்றுகிறார்கள். அவர்களைத் தங்களுடைய நிலைப்பாடுகளில் இருந்து மாற்றிக் கொள்வதற்கான நிறைய செயல்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து ஒன்றிய அரசின் மத ரீதியான செயல்பாடுகளும் மற்றும் ஒன்றிய அரசு சார்ந்த கட்சியினரின் தொடர்ந்த கருத்து ரீதியான தாக்குதல்களும், நிதியுதவிகளும் தாக்குப் பிடிக்காமல் இந்த இயக்கம் தன் பழைய தத்துவங்களை எல்லாம் கைவிட்டு இந்து மதம் சார்ந்த ஒரு இயக்கமாக மாறிவிட்டது.

இந்த அவலத்தை இயக்குனர் டேபா ரஞ்சன் என்ற ஓர் ஒடிய இயக்குநர் ஆவணப் படமாக எடுத்திருக்கிறார்.

சமீபத்தில் ஆர். பி. அமுதன் ஏற்பாடு செய்திருந்த மதுரை குறும்பட ஆவணப்பட விழாவில் இந்தப் படத்தைப் பார்த்தபோது அதிர்ச்சியாக இருந்தது.

தொடர்ந்த அழுத்தங்கள் மூலம் ஒரு சாதாரண இயக்கம் நீர்த்துப் போய் இருப்பதையும் இந்துத்துவா இயக்கப் போக்குள் வந்துவிட்டதையும் காண முடிந்தது. தங்களைக் கடவுளாக நினைத்துக்கொள்வதற்கு எதிராகச் சாதாரண மக்களைக் கடவுளாக அழைக்கச் சொல்லி மகிழ அவர்கள் வலியுறுத்துகிறவர்கள் இந்து மதம் சார்ந்த அழுத்தங்களால் புதையுண்டு போகிறார்கள். ஆடு மேய்ப்பவராக இருந்தவர் பார்வையில்லாமல் தடுமாற்றம் காரணமாகக் கிணற்றில் விழுந்துவிட்டார். அந்த இடம் கோவிலாகிவிட்டது, கும்பிடுகிறார்கள் என்று ஒருவர் இதில் பேசுகிறார். ஆனால் கோவிலுக்கு எதிரானவர்கள் என்கிறார்கள். இதில் உள்ள ஒருவர் பற்றிய குறிப்பு அது. ஆடு மேய்ப்பவர்கள், விவசாயிகள் எனப் பலர் இந்த ஆவணப் படத்தில் பேட்டி தந்திருக்கிறார்கள். அந்தப் பேட்டிகளில் அவர்கள் வலியுறுத்தும் விஷயம் சகோதரத்துவம் அன்பு என்ற அரவணைப்புத்தான். ஆனால் இன்றைக்கு இந்த இயக்கம் இந்து மதவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது பலருக்கு அதிர்ச்சியைத் தரக்கூடிய விஷயமாகத்தான் இருக்கிறது. அந்த அதிர்ச்சியை இந்த ஆவணப்படம் சொல்கிறது.

இது போல் இந்துத்துவாக்குள் தள்ளப்பட்ட பல இயக்கபோக்குகளை இனி நாம் பார்க்க இருப்பதன் துயர அடையாளம் இப்படம் . எங்கெங்கெல்லாம் இருந்து இதற்கான அழுத்தங்கள் கிடைக்கின்றன என்பதை நாமும் சமீபமாய் நிறையத் தெரிந்து கொள்கிறோம்.

இதன் இயக்குனர் டேபா ரஞ்சன் இந்துத்துவாவாதிகளின் கடுமையான பார்வையில் சிக்கியிருப்பவர். ஒடிய ஆதிவாசிகள், சுரங்கத் தொழிலில் சுரண்டல், விளிம்பு நிலை மக்களின் பிரச்சினைகள் சார்ந்து முன்னரே பல முறை காவல்துறையின் அச்சுறுத்தலுக்குள்ளும் ஆளானவர். கைது செய்யப்பட்டவரும் கூட.

●

கட்டுரையாளர்: ஆசிரியர், 'கனவு' இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்த புதிய விவாதம்?

பொதுவாக உலகில் மக்களின் சிந்தனைப் போக்கில் ஒரு மாற்றம் கொண்டுவர எண்ணுவோர் ஒரு விவாதத்தை முன்னெடுப்பர். அந்த விவாதத்தைப் பெருவிவாதமாக்குவர். அதைப் பரப்பி மக்கள் சிந்தனைப் போக்கில் கொண்டு வந்து செயல்பட வைத்துவிடுவர். அப்படித்தான் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே 1909ஆம் ஆண்டில் "இந்த் சுவராஜ்" என்ற ஒரு சிறு நூலை உருவாக்கி ஒரு பெரு விவாதத்தை முன்னெடுத்தார் மகாத்மா காந்தி. அந்த நூல் இந்தியாவுக்கானது மட்டுமல்ல, உலகிற்கானது. அதைப் புரிந்து கொள்ளுவதற்கு முன்பே அவரின் பிரதான சீடர்களே புறம் தள்ளிவிட்டனர். அதன் பின் இந்தியா சுதந்திரம் அடையும் நேரத்தில் காந்தி அந்த விவாதத்தை முதன்மைப்படுத்த விரும்பினார். அப்பொழுதும் அது நிராகரிக்கப்பட்டது. காரணம் அந்த நேரத்தில் உலகத்தில் இருந்த சிந்தனை என்பது சமூகம் விடுதலை அடைவதற்கு நாட்டை உருவாக்கி, அரசைக் கட்டுவது மக்களாட்சியை நிறுவுவது என்பது தான். தொழிற் புரட்சியால் விளைந்த நன்மையை வைத்து வறுமையை ஒழிப்பது. அரசாங்கத்தைப் பொறுப்பெடுக்க வைப்பது என்பதுதான் உலக மக்களின் குறிப்பாக நாட்டு உருவாக்கத்தில் ஈடுபட்ட அனைவரின் சிந்தனைப் போக்காக இருந்தது. அந்தச் சிந்தனை ஓட்டம் என்பது காட்டாற்று வெள்ளம் போன்றது. காந்தியின் கருத்து தெளிந்த நீரோடை போன்றது. ஆகவே அந்த நீரோடை காட்டாற்று வெள்ளத்திற்கு முன் நிற்க முடியவில்லை. ஆனால் அந்தக் கருத்தியலில் இருந்த அக்கினிக் குஞ்சு இன்றுவரை விடுவதாக இல்லை. உலக மக்களின் சிந்தனையில் மீண்டும் மீண்டும் கிளர்ந்து எழுந்து விவாதத்துக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

அரசு, அரசியல், நிர்வாகம், அரசின் மக்கள் மேம்பாட்டுத் திட்டங்கள், நிதி ஒதுக்கீடு என்பவைகள்தான் பெரும் விவாதப் பொருள்களாக இருந்து வந்தன நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு. ஆனால் இவற்றிலெல்லாம் மக்கள் யார், அவர்களின் பங்கு பணி என்ன என்பதற்குச் சரியான விளக்கத்தைத் தர அரசாங்கத்தைக் கட்டி எழுப்பியவர்களால் தர முடியவில்லை. இவை அனைத்திலும் மக்கள் நடுநாயகமாகப் பங்கேற்பாளர்கள், அனைத்திலும் அவர்களுக்குப் பொறுப்புக்கள் உண்டு, கடமைகள் உண்டு, அவை அனைத்தையும் மக்கள் நிறைவேற்ற வேண்டும். அப்படி செயல்பாடுகள் வடிவமைத்து அவற்றில் மக்கள் பங்கேற்கும்போது அரசு அமைப்புக்கள் மக்களுக்கானதாக மாறும். இந்திய நாட்டில் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளை எந்த நாளும் அரசாங்கத்தால் மட்டுமே தீர்க்க இயலாது. மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு அரசுடன் மக்கள் கைகோர்க்கும்போது தான் என, பலகாலம் இந்திய மேம்பாட்டு வரலாற்றை ஆய்வு செய்தவர்கள் கூறிவரும் கருத்தாகும். அதைத்தான் காந்தி வலியுறுத்தினார். இந்த நாட்டு மக்களின் தலைவிதியை அவர்களே தீர்மானித்துக் கொள்ளுவார்கள் என்று கூறினார். அதற்கான தன்நம்பிக்கையை அவர்களிடம் உருவாக்க அவர்களின் சுயமரியாதையைப் பாதுகாக்க வழிவகை செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். வறுமையை வறுமையில் இருப்போர் ஒழித்து விடுவார்கள். அதை அரசாங்கத்தால் ஒழிக்க முடியாது. அதற்கு அரசாங்கம் மக்களுக்கு உதவ வேண்டும். இந்த உண்மையை இந்தியாவுக்கு இந்தியா சுதந்திரம் அடைந்து 50 ஆண்டுகளுக்குப் பிறகு கூறி இந்திய அரசாங்கத்தை ஏற்க வைத்தது. அதன் ஒரு பகுதிதான் தமிழ் நாட்டில் நடைபெற்ற புது வாழ்வுத் திட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய அரசாங்கம் நாடு சுதந்திரம் அடைந்தவுடன் நாட்டை ஒற்றுமையாக வைத்துக்கொள்வதுதான் மிகவும் சவாலான, பணி வேண்டும் என்ற ஒற்றைப் புள்ளியில் நின்று பொதுமக்களைப் பயனாளிகளாக்கி, அவர்களிடமிருந்த பொறுப்புக்களையெல்லாம் அரசு எடுத்துக் கொண்டு செயல்பட்டதன் விளைவு நாடு ஒன்றாக இருக்கிறது, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் களைய ஏழு தசங்கள் முடிந்த பின்னும் இயலவில்லை. இதை 30 ஆண்டுகளுக்கு முன்னே உணர்ந்தபின், மீண்டும் காந்தியின் பாதைக்கு நம் நாட்டைத் திருப்ப ராஜிவ் காந்தி முனைந்து தோல்வி கண்டார். அவர் ஒன்றில் வெற்றி கண்டார், அதுதான் இந்தியாவை மூன்றாவது தொழில் புரட்சியின் பக்கம் திருப்பி விட்டது. ஆனால் இந்தியாவை மக்கள் பக்கம் திருப்புவதில் தோல்வி அடைந்தார். ஆனால் அவர் வைத்த கேள்வி வெற்றி பெற்றது. ஏன் மக்களுக்கு அதிகாரம் கொடுக்கக்கூடாது என்ற கேள்வி அனைவர் மத்தியிலும் எடுபட்டது. அதன் விளைவு அரசமைப்புச் சாசனத்தின் மூலம் அதிகாரப் பரவலுக்கான விடை கிடைத்தது 1992ஆம் ஆண்டு.

ஒரு புதிய அரசாங்கம் உருவானது மக்களுக்கு அருகாமையில். அந்த அரசாங்கத்தில் இதுவரை தன் தேவைகளுக்காக மனுக்கள் கொடுத்து அதிகாரிகளிடம் வேண்டி நின்ற காலம் மாறி தனக்கான ஒரு பாராளுமன்றத்தில் (கிராம சபையில்) தன் கருத்தைப் பதிவு செய்து நிறைவேற்றிக் கொள்ளும் நிலை உருவாக்கப்பட்டது. இந்த புதிய வாய்ப்புக்களை மக்களிடம் எடுத்துச் சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தி, அந்த வாய்ப்புக்களைப் பிடித்து மக்களைச் செயல்பட வைத்திருந்தால் கடந்த முப்பது ஆண்டுகளில் மிகப்பெரிய அடிப்படை மாற்றங்கள் இந்தியாவில் குறிப்பாக கிராமப்புறங்களில் உருவாகி இருக்கும். அது மட்டுமல்ல 2,50,000 கிராமக் குடியரசுகள் உருவாகி இருக்கும். இந்த முப்பது ஆண்டு காலத்தில் அது சாத்தியமானதா அல்லது சாத்தியமாக்குவதில் உள்ள தடைகள் சவால்கள் என்னென்ன என்பதை விவாதிக்க சமீபத்தில் (பிப்ரவரி 22, 23, 24 தேதி) ஒரு சர்வதேசக் கருத்தரங்கு கேரளத்துக் கண்ணனூரில் நடந்தது. 1200க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். கருத்தாளர்கள், உயர் அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள், என பலதரப்பட்டவர்கள் கலந்து கொண்டு இந்தியாவில் உருவாக்கப்பட்ட புதிய உள்ளாட்சி அரசாங்கத்தின் செயல்பாடுகளை ஆய்வு செய்தனர். கேரளத்தின் உள்ளாட்சி பற்றி தனியாக ஓர் ஆய்வரங்கு உருவாக்கப்பட்டுக் கேரளத்து உள்ளாட்சியை அடுத்த நிலைக்கு எப்படி எடுத்துச் செல்வது என்பதை விவாதித்தனர். இந்தக் கருத்தரங்கின் நோக்கமே இந்தியாவில் சமீபகாலமாக அதிகாரப்பரவல் பற்றி யாரும் பேசுவது கிடையாது, விவாதிப்பது கிடையாது என்ற காரணத்தால், ஒரு கருத்தாக்கத்தைப் பொதுவெளியில் உருவாக்கி விவாதப் பொருளாக்க வேண்டும் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டதுதான்.

**இந்தியாவில் அதிகாரப்பரவல் என்ற முயற்சியில் ஈடுபட்டுச் செயல்பட்டு வந்த அதே நேரத்தில் பொருளாதார வளர்ச்சி, புதிய பொருளாதாரம் உருவாக்க அடிப்படை மாற்றங்கள் என்ற கருத்தாக்கத்தில் அதிகாரக் குவியலை முன்னிலைப்படுத்தி அரசாங்கங்கள் செயல்பட்டு வரும் சூழலில் இந்தக் கருத்தரங்கம் நடைபெற்றது.**

இந்தியாவில் அதிகாரப்பரவல் என்ற முயற்சியில் ஈடுபட்டுச் செயல்பட்டு வந்த அதே நேரத்தில் பொருளாதார வளர்ச்சி, புதிய பொருளாதாரம் உருவாக்க அடிப்படை மாற்றங்கள் என்ற கருத்தாக்கத்தில் அதிகாரக் குவியலை முன்னிலைப்படுத்தி அரசாங்கங்கள் செயல்பட்டு வரும் சூழலில் இந்தக் கருத்தரங்கம் நடைபெற்றது பலருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது. இந்தப் பன்னாட்டுக் கருத்தரங்கில் பங்கேற்க எனக்கும் ஒரு வாய்ப்புக் கிட்டியது. கேரளத்திற்குச் செல்வது என்பதே ஒரு இன்பச் சுற்றுலா செல்வதுபோல் காரில் சாலை வழியாகச் செல்வது எனது வழக்கம். எனவே ஒன்பது மணி நேரம் செலவழித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனூர் சென்று பங்கேற்றேன். அந்தக் கருத்தரங்கில் ஓர் அமர்வு கேரளத்தில் புதிய உள்ளாட்சியை வலுப்படுத்த முயற்சி எடுத்த அத்தனை முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர்களையும் அழைத்திருந்தனர். அனைவரும் வந்திருந்தனர். அவர்களை அங்கு பாராட்டினர். அந்தக் கருத்தரங்கில் பங்குகொள்ள பல கேரள அமைச்சர்கள் வந்திருந்தனர். அதில் மற்றொரு சிறப்பு உள்ளாட்சித்துறை மத்திய அமைச்சராக இருந்த மணிசங்கர் அய்யரும் அழைக்கப்பட்டிருந்தார். அவரும் வந்து அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தார். இவ்வளவு அமைச்சர்களும், வந்து போனதே தெரியாமல் எளிமையாக அந்த அரசியல்வாதிகள் நடந்து கொண்டது அனைவராலும் பாராட்டப்பட்டது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் ஒன்றாக மேடையில் அமர்ந்தது, அடுத்து கருத்தாளர்களை மையத்தில் வைத்து அமைச்சர்கள் ஓரத்தில் அமர்ந்தது, அமைச்சர்கள் வரும்போதும் செல்லும் போதும் தனியாகச் சென்றது, அனைத்தும் நம் ஊர் காக்காய்க் கூட்ட அரசியல்போல் இல்லாமல் வித்தியாசமாக இருந்தது. அது ஒரு கேரள அரசியல் கலாச்சாரம். இங்கு எப்போது அப்படி ஒரு கலாச்சாரம் வருமோ என்று ஏக்கமாகவே இருக்கிறது.

இந்தக் கருத்தரங்கில் ஆய்வுகள் மூலம் கொண்டு வரப்பட்ட கருத்துக்கள் பல. இதற்கு ஆதாரங்களாக உலக வங்கி ஆய்வு அறிக்கைகள், இந்திய அரசாங்கத்தின் ஆய்வு அறிக்கைகள் பல்வேறு ஆய்வு நிறுவனங்களின் ஆய்வு அறிக்கைகள் முன் வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. அவற்றில் சிலவற்றைக் குறிப்பிடுவது விவாதத்தை முன்னெடுக்க உதவியாக இருக்கும். இந்தப் புதிய உள்ளாட்சி அரசாங்கமாக அரசமைப்புச் சாசனத்தின் மூலம் உருவாக்கப்பட்டபோது மிகப்பெரிய எதிர்பார்ப்பு உலக நாடுகளுக்கு இருந்தது. பல நாட்டுத் தூதரகங்கள் மக்களாட்சி விரிவாக்கம் என்ற அடிப்படையில் உள்ளாட்சியை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டன, ஆனால் இன்று பல நாடுகள் ஏமாற்றத்துடன் தாங்கள் நிதி தருவதை நிறுத்திக் கொண்டன.

முப்பது ஆண்டுகளில் இந்தப் புதிய உள்ளாட்சி அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருப்பதே பெரிய சாதனைதான். காரணம் இன்று அதிகாரப் பரவல் என்பது முன்னிலைப்படுத்தப்படவில்லை, மாறாக அதிகாரக் குவியல் முன்னிலைப் படுத்தப்படுகிறது. இருந்தபோதிலும் உள்ளாட்சியை வலுப்படுத்த மத்திய மாநில அரசுகள் எடுத்த நடவடிக்கைகளைப் பட்டியலிட்டனர். ஒரே அரசமைப்புச் சாசனம்தான் மூன்று அரசாங்கங்களுக்கும் அதிகாரங்களை வழங்குகின்றன. மக்களுக்கு அருகாமையில் செயல்படும் அரசாங்கம்தான் முதல் அரசாங்கம். அதுதான் நேரடி சனநாயகத்தை நடத்தும் அரசாங்கம். ஆனால் முறையாக அதற்குத் தேர்தல் நடத்திடவே நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டி உள்ளது என்றால் நம் மாநிலங்கள் உள்ளாட்சியை எப்படிப் பார்க்கிறது என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அதே நேரத்தில் உருவாக்கப்பட்ட புதிய உள்ளாட்சி அரசாங்கத்தை முறையாகப் பயன்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை எடுத்து எதற்காக புதிய உள்ளாட்சி அரசாங்கம் உருவாக்கப்பட்டதோ அந்தக் குறிக்கோள் நிறைவேறியதா இந்த முப்பது ஆண்டுகளில் என்பதனையும் இந்தக் கருத்தரங்கில் விவாதித்தனர். இந்தப் புதிய உள்ளாட்சியின் அடிப்படை நோக்கமே, மத்திய மாநில அரசாங்கங்கள் தொடமுடியாத சமூகங்களைத் தொட்டு அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், சமூக நீதிக்கும் செயல்படுவதுதான், அந்தச் செயல்பாடு முன்னெடுக்கப்பட்டதா என்பதில்தான் சிறப்பான செயல்பாட்டைச் செய்தன நம் உள்ளாட்சிகள் என்று கூற இயலவில்லை. இருந்தபோதிலும் உள்ளாட்சிகளில் அதிகாரிகள் செயல்பட்ட காலத்தைவிட மக்கள் பிரதிநிதிகள் செயல்பட்ட காலத்தில் மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை இந்தக் கருத்தரங்கில். அடுத்து இந்தச் செயல்பாடுகள் அனைத்திலும் மக்கள் பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும். இதற்கும் மேலாக கிராமங்களை மறுசீரமைக்க மக்கள் பங்கேற்புத் திட்டம் ஒன்று தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். இதனையும் கடந்து மக்களாட்சியை விரிவுபடுத்த, ஆழப்படுத்த செயல்பட வேண்டும் என்பதும் முக்கியக் குறிக்கோள். மேற்கூறிய அத்தனை அடிப்படை மாற்றங்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய உள்ளாட்சி அரசாங்கமாக அரசமைப்புச் சாசனத்தின் மூலம் உருவாக்கப்பட்டபோது மிகப்பெரிய எதிர்பார்ப்பு உலக நாடுகளுக்கு இருந்தது. பல நாட்டுத் தூதரகங்கள் மக்களாட்சி விரிவாக்கம் என்ற அடிப்படையில் உள்ளாட்சியை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டன, ஆனால் இன்று பல நாடுகள் ஏமாற்றத்துடன் தாங்கள் நிதி தருவதை நிறுத்திக் கொண்டன.**

நம்முடைய உள்ளாட்சிகள் செயல்பட்டனவா என்ற கேள்விக்குச் சிறப்பாகச் செயல்பட்டன என்று கூற இயலாது. செயல்பட முடியாததற்கான காரணங்களையும் விவாதித்தனர். அதில் மிக முக்கியமாக எது மையப்படுத்தப்பட்டது என்றால், உள்ளாட்சி வலுப்படக்கூடாது என்பதற்குத் திட்டமிட்டு ஒரு சாரார் வலுவாக உள்ளாட்சிக்கு எதிராகச் செயல்படுகின்றனர் என்பதை விரிவாக விவாதித்தனர் கருத்தாளர்கள் இந்தக் கருத்தரங்கில். புதிய உள்ளாட்சியின் வலு, மகத்துவம், சக்தி ஆகியவற்றைப் பொதுமக்களுக்குக் கேரளாவைத் தவிர்த்து எந்த மாநிலத்திலும் கொண்டு சேர்க்கவில்லை. கேரளத்தில் மட்டும்தான் கிராமசபையை வலுப்படுத்த கேரளத்து அமைச்சர் ஒருவர் ஊர் ஊராகச் சென்று மக்களைச் சந்தித்தது ஒரு வரலாற்று நிகழ்வு என்பதை விளக்கினர். கேரளத்திற்கே ஒரு சிறப்பு உண்டு. எந்த அடிப்படை மாற்றத்திற்கும், கேரளத்தில் மக்களை ஒருங்கிணைத்து இயக்கமாக்கிச் செயல்படுவது ஒரு முறைமை. அப்படித்தான் சமூக நீதிக்குச் செயல்பட்டனர். நாராயண குரு, இடதுசாரிகள், காந்தியர்கள், கிருத்துவ அமைப்புக்கள் என அனைவரும் இணைந்து செயல்பட்டு தங்கள்மேல் விழுந்த கறையைப் போக்கிக் கொண்டனர். இதே முறைமையைத்தான் நில சீர்திருத்தத்திற்கும் எழுத்தறிவு இயக்கத்திற்கும், அறிவியல் இயக்கத்திற்கும் பயன்படுத்தி அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வந்தனர். அதேபோல்தான் அதிகாரப்பரவலுக்கும் ஓர் மக்களை ஒருங்கிணைத்து இயக்கமாக்கிச் செயல்பட்டனர் என்பதை விளக்கினர். அந்தக் கேரளத்தில்கூட பல்வேறு இடையூறுகள், தடங்கல்கள் இருப்பதையும் விளக்கியது ஒரு சிறப்பாக இருந்தது. நம் ஊரில் புகழ்வதுதான் கலாச்சாரம். கேரளத்தில் விவாதிப்பது கலாச்சாரமாக இருக்கிறது என்பதை என்னுடன் வந்த இரண்டு இடதுசாரி நண்பர்கள் என்னுடன் காரில் வரும்போது சிலாகித்து விவாதித்துக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து இந்தியாவில் இன்று அதிகாரப் பரவலில் இருக்கும் தேக்க நிலையை விவாதித்து, அதற்கு என்ன செய்ய வேண்டும் என்றும் விவாதித்தனர். அடிப்படையில் இந்தப் புதிய உள்ளாட்சி ஆட்சியை, ஆளுகையை, நிர்வாகத்தை மக்களிடம் ஒப்படைக்கிறது. எனவே இந்தப் புதிய உள்ளாட்சியைப் பயன்படுத்த முதலில் தயார் செய்ய வேண்டியது அடித்தட்டு மக்களை என்பதை விவாதித்தனர். இன்று ஒரு புது விவாதத்தை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். இந்திய மக்களின் பிரச்சினைகள் மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகின்றன. பெரும்பாலான மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு மத்திய அரசாங்கத்திலும் இல்லை, மாநில அரசாங்கத்திலும் இல்லை. உள்ளாட்சியால் மட்டுமே தீர்க்க முடியும் என்பது நிரூபணம் ஆகி இருக்கிறது என்பதைக் கடந்தகால வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது. மத்திய அரசும் மாநில அரசும் உள்ளாட்சியை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தினர். அடுத்து மக்களைத் தயார் செய்யும் பணி என்பதுதான் மிகப்பெரும் பணி. இந்தப் பணி என்பது மக்களின் உளவியலில் மாற்றம் ஏற்படுத்தும் பணி. பயனாளி உளவியலில் பொறுப்பற்று இயங்கும் மக்களைப் பங்காளி உளவியலுக்கு மாற்றும் பணி. அந்தப் பணிதான் இன்று ஓர் இயக்கம்போல் எடுத்துச் செயல்பட வேண்டியுள்ளது என்ற பரிந்துரையுடன் அந்த நிகழ்வு நிறைவுற்றது. அங்கு ஒரு பிரகடனத்தை வெளியிட்டனர். அதற்குக் "கண்ணனூர் பிரகடனம்" என்று பெயரிட்டு, பங்கேற்பாளர்கள் மத்தியில் படித்துக் காண்பித்து அனைவரின் ஒப்புதலோடு அதை வெளியிட்டனர். ●

கட்டுரையாளர்: பேராசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | டாக்டர் சு. நரேந்திரன்

# மருத்துவத்தில் தமிழை பயிற்றுமொழியாக்க எந்தத் தடையும் இல்லை!

தற்போது இந்தியாவின் கல்விக் கொள்கை என்பது அந்தந்த மாநிலங்களுக்கு ஏற்புடைய மொழிகளை மாணவர்கள் கற்க வேண்டும் என்பதை நோக்கியும், மாணவர்கள் விருப்பப்பட்ட தனது தாய்மொழிக்கான மொழித் தேர்வுகளையும் தானே இறுதி செயல்படுத்திக்கொள்ள வழிவகை செய்கிறது. இந்திய ஒன்றிய அரசு நிறுவனமான தேசிய மருத்துவ ஆணையம் 2021 ஆம் ஆண்டு வரை ஆங்கிலமே மருத்துவக் கல்விக்கு பயிற்றுமொழி எனக் கூறியது. ஆனால் இதற்கு மாறாக தற்போது ஆங்கிலத்துடன் அசாமி, பெங்காலி, குஜராத்தி, ஹிந்தி, மலையாளம், மரத்தி, ஒடியா, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகளில் மருத்துவக் கல்வியைப் போதிக்கலாம் என்று கூறியுள்ளது.

இதனை ஒட்டி 2022ஆம் ஆண்டு அக்டோபர் மத்திய பிரதேசத்தில் போபாலில் முதலாம் ஆண்டு எம்.பி.பி.எஸ் பாடத்திற்கான "உடற்கூறு, உடல் இயங்கியல், மருத்துவ உயிர் வேதியியல்" ஆகிய பாடநூல்கள் இந்தியில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவால் வெளியிடப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து உத்தரகாண்ட் அரசும் முதலாமாண்டு மருத்துவக் கல்வியைத் தாய்மொழியில் வழங்கக் கொள்கை முடிவு எடுத்துள்ளது.

இதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் 2021-22 மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியபடி இலக்கியம், இயற்பியல் மருத்துவம் முதலிய துறைகளில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்காக ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள சிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து, தொடர்புடைய பதிப்பகங்களோடு இணைந்து தமிழ்நாடு பாடநூல் கழகத்தால் கூட்டு வெளியீடாக, ரூ.2 கோடி அரசு ஒதுக்கீட்டால் நூல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இது முத்தமிழ் அறிஞர் மொழிபெயர்ப்பு எனும் மாபெரும் திட்டம் ஆகும். இத்திட்டத்தின் கீழ் மொழிபெயர்ப்பில் மருத்துவத்துறையில் 13 தரநிலை பாடநூல்கள் (*Standard text books*) தமிழில் வெளியிடப்பட உள்ளன. இப்பணியில் ஈடுபட்டுவரும் ஆசிரியர்கள் மகப்பேறியல் - டாக்டர் ஜெயஸ்ரீ சர்மா; என்.ஏ.ஜெயவேலன்; டாக்டர் டி.ராஜலிங்கம்; அறுவை மருத்துவர் டாக்டர் சு.நரேந்திரன், டாக்டர் ந.ஜூனியர் சுந்தரேஷ்; டாக்டர் ச.குமரவேல்; கண் மருத்துவம் டாக்டர் ஆர்.செல்வரங்கன்; உடல்செயலியல் டாக்டர் பாலசுப்பிரமணியன்; டாக்டர் ரூபா(தொகுப்பாசிரியர்) இந்த பாடநூல்கள் தற்போது கிராமப்புற மாணவர்களுக்குத் தமிழில் கிடைக்க வேண்டும் என்பதே இந்த திட்டத்தின் நோக்கம். இந்நூற்களைக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக நூலகங்களில் வைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று உயர்க் கல்வித்துறை அறிவித்துள்ளது. இந்நூற்களில் இதுவரை உடல்செயலியல் நூல் வெளிவந்துள்ளது என்பது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும்.

**இன்றைய நிலைக்கு இந்நூல்கள் பயன்படுமா?**

இவ்வாறு நமது தமிழக அரசு மேற்கொண்டு வரும் இந்த முயற்சி தமிழ் வழியாக எம்.பி.பி.எஸ் இளங்கலை மருத்துவம் பயில விரும்பும் மாணவர்களுக்கு பெருந் துணையாக விளங்கும். வெவ்வேறு பிரிவுகளில் படிக்கும் மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் நுழைகிறார்கள். அவர்களால் ஆங்கிலத்தில் வழங்கப்பட்ட பாடங்களைச் சமாளிக்க முடியவில்லை. மருத்துவநூல்கள் தமிழில் இருந்தால்? பாடங்களை எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். இந்த நூல்களின் வழியாக மருத்துவம் தமிழ் வழியாக வரும்போது நீட் தேர்வுக்கு நாம் பயப்படத் தேவையில்லை. கிராமப்புற மாணவர்களிலிருந்து, நகர்ப்புற மாணவர் வரை கல்வி சீராக விளங்க வழிவகுக்கும். சமத்துவமும் சமூக நீதியும் நிலை நாட்டப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் வழியாக வெளிவந்துள்ள தமிழ் மருத்துவ நூல்களைப் பயன்படுத்தி மருத்துவக் கல்லூரிகளில் தமிழார்வம் உள்ள ஆசிரியர்கள் மூலம் தமிழ்வழிப் பயிற்சி பெற்றுக்கொள்ள விருப்பம் உள்ள மாணாக்கர்களுக்கு, ஆரம்பகட்டத்தில் தமிழ்வழி மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் மருத்துவம் பயிற்றுவிக்க வழிவகை செய்யப்படவேண்டும்.**

---

முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் வழியாக வெளிவந்துள்ள தமிழ் மருத்துவ நூல்களைப் பயன்படுத்தி மருத்துவக் கல்லூரிகளில் தமிழார்வம் உள்ள ஆசிரியர்கள் மூலம் தமிழ்வழிப் பயிற்சி பெற்றுக்கொள்ள விருப்பம் உள்ள மாணாக்கர்களுக்கு, ஆரம்பகட்டத்தில் தமிழ்வழி மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் மருத்துவம் பயிற்றுவிக்க வழிவகை செய்யப்படவேண்டும். சென்னையில் தமிழ்வழியில் புதிய மருத்துவக் கல்லூரியைத் தொடங்கப்படும் என தமிழ்நாடு அரசு நலவாழ்வுத்துறை அமைச்சர் அறிவிப்பும் வரவேற்கத்தக்கது. அண்மையில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தரால் மருத்துவக் கல்வி ஆங்கிலத்திலும் தமிழிலும் பாடம் நடத்தப்படும் என்றும் நேர்முகத் தேர்வுகளிலும் இம்முறையே அமுல்படுத்தப்படும் என்றும் கூறியுள்ளது இங்கு கவனம் பெறுகிறது. இந்நிலையில் மருத்துவநூல்கள் அதிக அளவில் விரைவில் எழுதி வெளிவர, ஆய்வறிஞர்களுக்குப் பயன்பட முத்தமிழ் அறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டமும் சிறப்புற நடைபெற கீழ்க்காணும் பரிந்துரைகள் மிகவும் உதவும்.

இத்துடன் பற்பல அறிவியல், கலை பாடநூல்களைத் தமிழ்மொழியில் வெளியிடும் இச்சாதனை தமிழக அரசுக்கு தொடர்ந்து சிறந்தமுறையில் நூல்கள் வெளிவர சில வேண்டுகோள். முன் வைக்கப்படுகின்றன. ஏனெனில் கீழ்கண்ட கருத்துக்களால் நூல்கள் எளிதில் எழுத வாய்ப்புகள் மிகுதியாகும்

கலைச்சொல்லுக்கான ஓர் தீர்வகத்தை நிறுவுதல் *(A Clearing House for Tamil Medical Glossary)*

கலைச்சொல் மொழியாக்கத்தினைத் தரப்படுத்தும் குழு (அறிவியலாளர், தமிழறிஞர், மொழியியலாளர் ஆகியவர்களைக் கொண்ட குழு) - *(A Committee for standardisation of Tamil Medical Terminology consisting of a medical specialist, Tamil scholar and a linguist)*

அவ்வப்போது வெளியாகும் ஆங்கில மருத்துவம் சார்ந்த நூல்களையும் இதழ்களையும் தமிழில் மொழிபெயர்க்க தனி நிரந்தர இயக்ககம் *(A Separate dedicated centre for Tamil Translation of English Medical Textbooks and Journals)*

தற்போதைய தொழில்நுட்பக் கருவிகளான, செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் *(Artificial Intelligence)* மொழிபெயர்ப்புக் கருவி *(Google Translate Tool)* பேசப்படுவதை உள்வாங்கி மொழிபெயர்க்கும் ஒலி உணரிகள் *(Voice Translators)* எழுத்துக்களை அறிந்து மொழிபெயர்க்கும் எழுத்து உணரிகள் *(Text readers)* எழுத்து வடிவங்களை அறிந்து மொழிபெயர்க்கும் எழுத்துரு உணரிகள் *(Optical Character Readers-OCR)* போன்ற தொழில்நுட்பங்கள் மொழிபெயர்ப்பாளர்களுக்குக் கிடைக்கும் வண்ணம் அரசு ஆவன செய்தால் மொழிபெயர்ப்புப் பணி எளிதாகி விரைந்து முடியும்.

தமிழ்வழி மருத்துவக் கல்வியினை ஊக்கப்படுத்தும் வண்ணம் அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் நூல்களையும் இதழ்களையும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், கிடைக்க ஏதுவாக அவற்றினை முறைப்படி சந்தைப்படுத்துதல் *(Proper marketing to ensure avilability of the translated Tamil medical Textbooks and Journals)*

**முடிவுரை**

நூல்கள் வெளிவருவதற்கு முன் அத்துறை சார்ந்த வல்லுநர் சீர்தூக்குவதோடு அந்நூலை தமிழறிஞர், மொழியறிஞர் ஆகியோரின் துணையுடன் மெய்ப்புத் திருத்துவதோடு, கலைச்சொல் சீர்மை, உரைநடை ஆகியவைகளையும் சீரமைத்து வெளியிட வேண்டும்.

●

---

கட்டுரையாளர் : முதுநிலை மருத்துவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | இரா.முரளி

# ஸ்ரீ நாராயண குரு :
# ஆன்மீகத்தின் மூலம் ஒரு சமூகப் புரட்சி

பொதுவாக எல்லா கருத்தியல்களையும், கோட்பாடுகளையும் கருத்து முதல் வாதம் என்ற பிரிவிற்குள்ளோ அல்லது பொருள் முதல் வாதம் என்ற அடையாளத்திற்குள்ளோ அடைத்து விடுவது நடைபெறுகின்றது. அதிலும் பொருள்முதல்வாதம் பேசுபவர்கள் மட்டுமே முற்போக்கு சிந்தனையாளர்கள் என்ற பெருமையையும் பெறுகின்றனர். ஆனால் இந்த இரு பெரும் நிலைப்பாடுகளைத் தாண்டி பல்வித நிறங்களில் கோட்பாடுகளும், செயல்பாடுகளும், மெய்யியல் உலகில் இருக்கத்தான் செய்கின்றன என்பது மட்டுமல்ல, அவை மானுட விடுதலை,சமூக நீதி மற்றும் சமத்துவம் வலியுறுத்தும் கருத்துக்களையும் செயல்பாடுகளையும் முன்வைக்கும் முற்போக்குத் தன்மை கொண்டவையாக உள்ளதை நாம் மறைத்துவிட முடியாது.

வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் அமைந்த சமூக அரசியல் பண்பாட்டுக் கூறுகள் மக்களின் வாழ்வியலில் முக்கிய பங்காற்றியுள்ளன. பேரரசுகள் உருவாகுவதற்கு முன் இருந்த இனக்குடிகள், திணை சார் வாழ்க்கை முறைகள், மதிப்பீடுகள் பின்னர் மாற்றமடைகின்றன. ஏற்றத் தாழ்வுகள் அதிகரிக்கின்றன. அதிகாரக் குவிப்பு நடைபெறுகின்றது. பெரும் சமயங்களின் செல்வாக்கு பீடிக்கத் தொடங்கிய நிலையில் அரசு அதிகாரத்தின் ஆணிவேராகவும் அவை ஆகத்தொடங்கின. சாதிய வேறுபாடுகளும், இன வேறுபாடுகளும் கூர்மையடைந்த நிலையில், சொத்துரிமை என்பதும் ஏற்றத் தாழ்வினை அதிகரித்ததுடன், விளிம்பு நிலை என்பது விரிவாக்கப்பட்டது. பண்பாடு என்பது அதிகார வர்க்கத்தின் ஆயுதமானது. சாதியம் கூர்மையானது. அது தீண்டாமை என்பதை சமூகத்தில் தீவிர நடைமுறையாக்கும் அளவிற்கு தீமையானது. தருக்கம் அறிவு மேம்பாட்டிற்கு என்ற நோக்கம் இல்லாமல் சமயங்களின் மேம்பாட்டிற்கு என்றாகிப் போனது. மேற்கத்திய அரசியல் கோட்பாடுகளும், விளக்கங்களும் எட்டாத கல்விநிலையில், மக்களின் சமூக விடுதலை என்பதை வேறு யாரும் பேசத்துணிய முடியாத நிலையில் ஆன்ம விடுதலைப் பேசிய ஞானிகள் சமூக மாற்றம் குறித்தும் பேசினார்கள் மற்றும் செயல்பட்டார்கள். இவர்கள் வரிசையில் இடம் பெறும் மிக முக்கியமான மெய்யிலாளர் ஸ்ரீ நாராயண குரு ஆவார்.

*1854* இல் திருவனந்தபுரத்தின் அருகிலிருந்த தென்பழஞ்சி என்ற ஊரில் பிறந்தார் நாராயணன். பின்னர்தான் இவர் நாராயண குருவானார். கேரளத்தில் அப்போது சாதிப் பிரிவினை தீவிரமாக பின்பற்றப்பட்டு வந்தது. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களில் ஒவ்வொரு சாதியினரும் உயர் சாதியினரிடமிருந்து ஒவ்வொரு அளவிற்குத் தள்ளி நிற்க வேண்டும் என்ற விதி இருந்த்து. இவர் பிறந்த ஈழவர் சாதியினர் பத்து அடிகள் தள்ளி நிற்கவேண்டுமாம். நாரயணன் இந்தக் கொடுமையை நீக்க தீவிரமாக செயல்பட்டார்.

இவர் தமிழை முறையாக ஆசான் தைக்காவு அய்யாவுவிடம் பயின்றவர் என்பது மட்டுமல்ல, திருக்குறளை மலையாளத்தில் மொழி பெயர்த்ததும் முக்கியமான செய்தியாகும். திருமந்திரத்தையும் முழுமையாகப் பயின்றவர். வேதங்களையும், உபநிடதங்களையும் அவர் கற்றார். அவருக்கு சாதி வேறுபாடு பார்க்காமல் அவற்றைக் கற்றுக் கொடுத்த குருநாதரும் இருந்தார். ஆன்மீகக் கல்வியில் ஆழங்கால் பதித்தவர். சமஸ்கிருதம் பயின்றார்.

தனது இருபத்தி மூன்றாவது வயதில் வாழ்வின் அர்த்தம் தேடி பயணம் மேற்கொண்டு கன்னியாகுமரி அருகே உள்ள மருத்துவக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குகையில் ஆறு ஆண்டுகள் தவமிருந்தார். இந்தத் தியான அமர்வு அவருக்கு பல மெய்யியல் சார்ந்த கேள்விகளுக்கு பதில்களைத் தந்தது. இதில்தான் இவர் தன் சுயத்தை தரிசனம் செய்ததாக பதிவிட்டுள்ளார். சிவனை மனதில் இருத்தித் தவம் செய்ததாகப் பதிவிட்டிருக்கின்றார். இந்தப் பிரபஞ்சம் ஒற்றை இயற்கை ஆற்றலினால் இயங்குகின்றது, அதில் வேறுபாடுகள் இல்லை. அது இயங்கு சக்தியாக இருக்கின்றது. கடவுள் பிரதிபலிக்காத பொருள் இல்லை என்பதையும் தான் இந்தத் தவத்தின் பயனாக உணர்ந்ததாகக் கூறினார். பெரும்பாலும் அத்வைதக் கோட்பாட்டையே இவர் தழுவி நின்றார். இந்தப் புரிதலினால்தான் எல்லோரும் சமமானவர்கள் என்ற சமூகப் புரிதலுக்கு இவர் வந்தார். இந்தப் புரிதலே எழுச்சி மிக்க சமூக சீர்திருத்தவாதியாக அவரை ஆக்கியது என்கின்றார். நாற்பதிற்கும் மேற்பட்ட நூல்களை இவர் எழுதியுள்ளார். ஆத்ம உபதேச சாதகம் என்ற இவருடைய முக்கிய நூலில் தான் தவத்தினால் தான் ஒரு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கியதாக குறிப்பிடுகின்றார்.

### ஈழவ சிவனின் தோற்றம்

பின்னர் நெய்யாறு அருகில் உள்ள அருவிப்புரதில் உள்ள காட்டிற்கு வருகின்றார். அங்கும் தவத்தைத் தொடரலானார். மக்களும் தங்கள் வாழ்நாள் நீடிக்கவேண்டும் என்பது போன்ற பல வேண்டுதல்களுடன் இவரைத் தரிசிக்க வரலானார்கள். பெரும்பாலும் பெரும் கோவில்களில் வழிபாட்டு உரிமைகள் மறுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட இனத்தைச் சார்ந்த ஏழை மக்களே இவரின் அருள் வேண்டி வரலானார்கள். உயர் சாதியினர் இவரை முதலில் கண்டுகொள்ளவில்லை. நாராயண குருவிடம் தங்களால் ஆலய வழிபாடு செய்யமுடியவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர். இந்திய மெய்யியல் பற்றிய ஆழமான புரிதல் கொண்ட நாரயண குரு புதியதொரு தீர்வை முன்வைத்தார். ஆலயப் பிரவேசம் என்ற ஒரு வகைப் போரட்டத்தை காந்தி அவர்கள் முன்வைத்துப் போராடத் தொடங்கிய காலம் அது. ஆனால் நாரயண குரு அதை முன்வைக்காமல் நாம் நமக்கான கோவிலை நாமே உருவாக்குவோம், என்ற திட்டத்தை முன்வைத்தார். நானே மந்திரம் சொல்லி சிலைகளை நிறுவிக் கொடுக்கின்றேன் என்று கூறினார். அதன்படியே அவ்வூரில் ஒரு சிறு கோவில் ஒன்று கட்டப்பட்டது. ஆனால் இதுவரை குல தெய்வ வழிபாட்டில் இருந்த சமூகத்தின் கீழ் நிலையில் வைக்கப்பட்டிருந்த பல்வேறு சாதியினர் இவர் எந்தக் கடவுளை பொதுவாக இந்தக் கோவிலில் வைக்கப்போகின்றார் என்பது குறித்து அறிய ஆர்வம் காட்டி குவிந்தனர். அந்த இரவு நீண்ட நேரம் கண்மூடி தியானத்தில் இருந்த நாராயணகுரு, பிறகு ஆற்றில் இறங்கி முழ்கி பின்னர் கையில் ஒரு சிவலிங்கத்துடன் கரையேறினாராம். அது லிங்கமா அல்லது ஒரு கல்லா என்றும் தெரியவில்லை. அதையே அவர் சிவலிங்கமாக இந்தக் கோவிலில் நிறுவினார். தங்களுக்கான ஒரு கோவில் உருவானதை அவர்கள் மகிழ்வோடு கொண்டாடினர். நாரயணகுரு ஊர் போற்றும் ஈழவ சாதியைச் சேர்ந்த ஞானியாக அங்கீகரிக்கப்பட்டதால் இந்தக் கோவில் புனிதத்துவத்தைப் பெற்றது. எப்படியும் உயர்சாதியினர் பிரச்சினை செய்வார்களோ என்று மக்கள் அஞ்சிய தருணத்தில், நாராயணகுரு , "இது ஈழவ சிவன், அவர்கள் சிவன் அவர்கள் கோவிலில் இருகின்றார். இது நம்முடைய சிவன், இது நம் கோவில், இங்கு வேறுபாடுகளின்றி யார் வேண்டுமானாலும் வழிபடலாம். இங்கு அன்பும் சகோதரத்துவமும்தான் போற்றப்படும். இனி நம்மவர்கள் நமக்கான கோவிலை அவரவர்கள் ஊரில் நாமே எளிமையாகக் கட்டிக் கொள்வோம்." என்று கூறினார். இந்தக் கோவில் வழிபாட்டு முறைகளையும் அவரே வகுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் துகள்களாகவே அனைவரும் உள்ளனர். அனைவரும் சமமானவர்கள் என்பதே சத்தியம். இதைப் பிரதிபலிப்பதே கோவிலும், கடவுளும், வழிபாட்டுமுறைகளும் ஆகும் என அவர் விளக்கினார். உயர்சாதியினரின் பெரும் கோவில் வழிபாடுகளின் அடிப்படையான வேதங்களையும் தாழ்த்தப்பட்டவர்கள் கற்க வேண்டும் அதைத் தாண்டியும் சிந்திக்க வேண்டும். என்று அவர் வலியுறுத்தினார். அன்று உயர்சாதியினரால் புனிதமான அறிவுக் கூறாகவும் சிலருக்கு மட்டுமே அது வழங்கப்பட வேண்டும் என்று மதிக்கப்பட்ட வேத அறிவை, தாழ்த்தப்பட்டோரும் பெற்றுவிட்டால் மேல் சாதியினர் கட்டிவைத்திருந்த புனிதம் என்பது கட்டுடைக்கப்படும், அறிவும் ஜனநாயகப்படுத்தப்படும் என்று அவர் நம்பினார்.

தாழ்த்தப்பட்டோர் மேலாடை அணிந்தால் தண்டனை என்ற அடிமை நிலை நிலவிய மோசமான அந்தத் தருணத்திலே, கோவில் பிரவேசப் போராட்டம் என்பது எளியவர்கள் மீது பெரும் பாதிப்பைத்தான் உண்டாக்கும் எனவும் அவர் கணித்தார். ஒடுக்கப்பட்டவர்களுக்கான ஒரு கூட்டு சக்தியை உருவாக்கும் தலமாக கோவிலை அவர் கணித்தார். கோவிலை அவர் வெறும் வழிபாட்டுத் தலமாக அவர் கருதவில்லை. அதை ஒரு கல்வி நிலையமாகவும் மாற்றுகின்றார். பண்பாட்டு அதிகாரத்தைப் பெறக் கூடிய மையமாக அதை மாற்றினார். முள்ளை முள்ளால் எடுப்பது போல எப்படி கோவிலை வைத்து பார்ப்பனியம் அதிகாரத்தை கைப்பற்றியதோ அதே முறையில் உரிமை மறுக்கப்பட்டவர்களும் அதிகாரத்தைப் பெற அவர்கள் நிர்மாணிக்கும் கோவில்கள் உதவும் எனக் கருதினார். ஆனால் இவருடைய கோவில்கள் சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவை. அனைவருக்கும் பொதுவானவை. இவர் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளை கைவிடக் கோருகின்றார். இது பின் காலனியப் புரிதலில் ஒரு முரண் கொண்டதாகத் தெரியும்.ஆனால் நாராயணகுரு அன்றைய கேரளத்தின் சிறு தெய்வ வழிபாடுகள் பல மூடநம்பிக்கைகளையும், சாதி வேறுபாடுகளையும் கொண்டவையாக இருப்பதால் அவை நீக்கப்படவேண்டும் என வலியுறுத்தினார். இறைவன் என்பவன் ஒருவனே என்ற நிலைப்பட்டை முன்வைத்தார். அதே போல கடவுளுக்கு எல்லோரும் சமமானவர்கள் என்பதையும் அவர் புரிய வைத்தார். ஆனால் இவர் 1888இல் முதல் ஈழவ சிவன் கோவிலை உருவாக்கியது கேரளா முழுவதும் உயர் சாதி மக்களுக்கு அதிர்ச்சியை உண்டாக்கியது. உனக்கு இப்படி சிவனை பிரதிஷ்டை செய்ய யார் அதிகாரம் கொடுத்தது என நாராயண குருவை அவர்கள் கோபமாகக் கேட்ட போது, இது எங்கள் ஈழவரின் சிவன். உங்கள் சிவன் உங்கள் கோவில்களில் பத்திரமாக இருக்கின்றார் என்று பதிலளித்தார். தீண்டமையை அவரும் அனுபவித்தவர். அவர் ஒரு முறை குளத்தில் குளித்து எழுந்தபோது, குளமே தீட்டாகிவிட்ட்து என அடிக்கவந்த மேல் சாதியினரிடம் என்னை அடித்தாலும் உங்களுக்குத் தீட்டு வந்துவிடுமே! என்று நையாண்டி செய்து களத்தில் எதிர்த்து நின்றார். இவர் ஈழவ மக்களுக்காக மட்டும்செயல் படவில்லை. அனைத்து தாழ்த்தப்பட்ட இனத்தினருக்கானவராகவும் செயல்பட்டார். இவரது அத்வைதம் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கானதாகத்தான் இருந்தது. பலத்த எதிர்ப்புகளையும் மீறி, மக்களைத் திரட்டி இவர் கேரளத்தின் பல ஊர்களில் இந்த சிவன் கோவில்களைக் கட்டினார். இவரின் இந்தச் செயல் இந்தியாவின் பல பகுதிகளில் இருந்த சமூக சீர்திருத்தவாதிகளின் கவனத்தை ஈர்த்தது.

டாக்டர் பால்பூ எனும் பத்மநாபன் நாரயணகுருவைப் பார்க்க வருகின்றார். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த இவர் கிருத்துவ நிறுவனங்களின் ஆதரவோடு உயர்கல்வியைப் பயின்று, முனைவர் பட்டமும் பெறுகின்றார். இவர் முயற்சியால் ஸ்ரீநாரயணகுரு தர்ம பரிபாலன சபை என்பதை நிறுவினார். இதன் மூலம் பல ஆளுமைகள் இணைத்துக் கொள்ளப் பட்டார்கள். சாதி ஒழிப்பு என்பதைப் பிரதான நோக்கமாக இந்த இயக்கம் கொண்டிருந்தது.

நாரயண குரு கோவில்களில் வழிபாட்டு பூசைகள் எப்படி மேற்கொள்ளப்படவேண்டும் என்பதற்கான முறைகளை வகுத்தார். இவரின் பூசைக்கான பாடல்களின் அடிப்படை, உலக இறை பக்தர்கள் அனைவரும் ஒன்று சேருவோம் என்பதாகும். ஏழை எளிய மக்களை சாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதமின்றி ஒருங்கிணைக்கும் ஒரு பணியை அவர் கோவில் எனும் நிறுவனத்தின் மூலம் மேற்கொண்டார். இவர் உருவாக்கிய கோவில்களில் அர்ச்சகர்களாக தாழ்த்தப்பட்ட சாதியினர் நியமிக்கப்பட்டனர். இன்றும் இது தமிழகத்திலும் பிற மாநிலங்களிலும் சாத்தியப்பட முடியாததாகவே உள்ளது. இதன் நீட்சியாக இன்று கேரளத்தில் பெருவாரியான கோவில்களில் அதிகாரப் பகிர்வு என்பது தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர நாரயண குரு சாதி கலப்புத் திருமணத்தை முன்மொழிந்து ஆங்காங்கே நடத்தலானார்.

1922 இல் நவம்பர் மாதம் இரவீந்திரநாத் தாகூர் தன்னுடைய சாந்தி நிகேதன் பல்கலைக் கழகம் நிறுவதற்கு கேரள அரசரிடம் கொடை பெறுவதற்காக கேரளா வந்தவர் நாராயணகுருவை சிவ கிரியில் அவருடைய ஆஸ்ரமத்தில் சந்திக்கின்றார். பலத்த வரவேற்பு அவருக்கு அங்கே அளிக்கப்பட்டது. இவரை சந்தித்தப்பின் தாகூர், "நான் இவரைப் போன்ற மகத்தான ஆன்மீக குருவை இதுவரை இந்தியாவில் கண்டதில்லை" எனக் கூறினார்.

1925ல் மாகத்மா காந்தி அவர்கள் ஆலயப் பிரவேசப்போராட்டம் நடத்ததிருவதாங்கூருக்கு வருகின்றார். பெரும்பாலும் ஆன்மீகக் குருநாதர்களை காந்தி சந்திப்பதை தவிர்த்து வந்தார். ஆனால் அவர் நாராயண குருவை சந்திக்க விரும்பினார். சந்தித்து உரையாடினார். அவர் சந்தித்த போது காந்தியுடன் இராஜாஜியும், பெரியாரும் உடன் இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. அப்போது நாராயணகுருவிடம் இந்து மதத்தில் வர்ணாஸ்ரம தர்மம் இல்லாத ஒரு தர்மம் இருக்கின்றதா என்று கேட்டார். இதற்குப் பதிலளித்த நாரயணகுரு, "சமய நூல்களில் நிலையான தர்மம் இதுதான் என்று எங்கும் குறிப்பிடப்படவில்லை. எல்லா தர்மங்களும் காலத்திற்கேற்ப மாறுதல்களுக்கு உட்படுபவைதான். இந்த காலத்தின் கட்டாயம் என்பது சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதே தர்மம் ஆகும். இதை இந்து மதம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். சாதி பேதமின்றி பண்பாட்டு உரிமைகள் அனைவருக்கும் உறுதி செய்யப்படவேண்டும்" என்று பதிலளித்தார். ஒரு பெரிய சமூக ஆய்வாளராக நாராயணகுரு முன்வைத்த இந்த விளக்கம் காந்தியை மிகவும் பாதித்தது. இதன் விளைவாக அவர் நவஜீவன் என்ற பெயரில் நடத்தி வந்த பத்திரிக்கையின் பெயரை ஹரிஜன் என்று மாற்றினார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தீவிர செயல்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்ற உத்வேகம் காந்திக்கு நாராயண குருவை சந்தித்தபின்தான் ஏற்படுகின்றது. காந்தியின் ஆலயப்பிரவேசத்தில் பங்கு பெற அழைக்கப்பட்டும் நாரயண குரு அதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை எனத் தெரிகின்றது. மற்றொரு சமயத்தில் காஞ்சிபுரத்தில் இவர் ஈழவ சிவன் கோவிலை நிர்மாணிக்க வந்த போது இரமண மகரிஷியை சென்று சந்தித்தார். இரமணருக்கு பெரும் மகிழ்ச்சி. பெரியவர் வந்துவிட்டார் என இவரைப் புகழ்கின்றார்.

### நாரயண குருவின் அத்வைதம்

நாராயணகுரு எழுதியவற்றில் தர்சன மாலா மற்றும் ஆத்ம உபதேச சாதகம் ஆகிய இரு நூல்களில் இவர் அத்வைத கோட்பாட்டையே வலியுறுத்துகின்றார். சங்கரரின் அத்வைதம் ஞானத்தை சமூகத்திலிருந்து விலக்கி மேலே வைத்தது. ஆனால் நாரயணகுருவின் அத்வைதம் சமூகத்துடன் கலந்து நின்றது. சமூகத்தில் ஒவ்வொருவரிடமும் சூழப்பட்டுள்ள அறியாமை எனும் மாயையை அகற்றினால் எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் பிரம்மம்தான் என்ற புரிதல் ஏற்படும் என்றார் இவர். இதை விளக்கும்போது இவர் ஆன்மீகத்தின் உச்சநிலையான தன்னுணர்வை பிரபஞ்ச சக்தியுடம் ஐக்கியப்படுத்தும் தூய நிலை என்பதை முன்மொழிகின்றார். இதையே சங்கரரும் கூறியிருக்கின்றார் என்றாலும் சங்கரரைப் பொருத்தவரை இந்த ஞானம் அனைவருக்கும் சாத்தியமில்லை என்பதாகும். ஆனால் நாரயணகுருவைப் பொருத்தமட்டில் இறைகுறித்த அறிவை அனைத்து மனிதர்களும் பெறுவதற்குத் தகுதியானவர்கள் என்பதாகும். இந்த அறிவைப் பெற்றவர்கள் உலக சமாதானத்திற்கு பாடுபடுவார்கள் என உறுதியிடுகின்றார். இந்த பிரம்ம அறிவு என்றால் என்ன என்பதைப் பற்றி கவிதை நூலாக எழுதினார். இது ஒரு தூய அறிவு என்றும், இதை வாழ்க்கையை வாழ்தலின் ஊடாகவே பெறமுடியும் என்கின்றார். இங்குதான் இவர் சங்கரரிடமிருந்து வேறுபடுகின்றார். இது தவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வாழ்க்கையென்பது பொய்யான மாயை அல்ல என்றும் உண்மையானது என்றும் கூறுகின்றார். சமூகத்தின் அவலங்கள், வலிகள் உண்மையானவை அவற்றை எதிர்கொள்ள அத்வைத அறிவு தேவை என்கின்றார். ஆன்மீகம் பத்து படிநிலைகளைக் கொண்டது. உச்சகட்ட நிலையில் வேண்டுமானல் இந்த மாயைக் கோட்பாடு பொருத்தமுடையதாக இருக்கலாம். ஆனால் யதார்த்த வாழ்வியலுக்கு அல்ல என்று விளக்குகின்றார். இந்த வாழ்வு உண்மையானது என்று விளக்கும்போது ஒரு நவீன பௌத்தனாக அவர் தோற்றமளிக்கின்றார். தத்துவங்களை நிராகரிப்பது என்பதை விட தள்ள வேண்டியதைத் தள்ளி ஒருங்கிணைப்பு செய்வது என்பதையே அவர் விரும்பினார். சுரண்டப்பட்ட மக்களுக்கு சுரண்டுபவர்களின் ஞானம் எதற்கு என்ற வினாவை எழுப்பினால், நாராயண குரு இந்த அறிவு ஒரு சாரருக்கு மட்டுமே உரிமையானது அல்ல. அனைத்து மக்களுக்கும் பொதுவானது என்கின்றார்.

### கோவில்களுக்குப் பதிலாக கல்விக் கூடங்கள்

1923 இல் சர்வ சமய ஒற்றுமை மாநாடு என்பதை ஆலுவேயில் நடத்தினார். இந்தியாவில் நடைபெற்ற முதல் சர்வ சமய மாநாடு ஆகும் இது. கேரளத்தில் இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்துவதை அவசியமாகக் கருதினார். கீழ் சாதி என்ற ஒன்று உருவானதற்குக் காரணம் ஒரு பிரிவினர் இவர்களை கீழே தள்ளி மேலே அதிகாரத்தைக் கைப்பற்றியதுதான் என்று தெளிவான அரசியல் விளக்கம் தரும் இவர் இந்தப் பிரச்சினை தீர தாழ்த்தப்பட்டவர்களும் அந்தப் பண்பாட்டு உரிமைகளை திரும்பப் பெறவேண்டும் என்று வலியுறுத்துகின்றார். அதற்கான இயக்கத்தைத்தான் நாராயண தர்ம பரிபாலன சபை மேற்கொண்டது. ஆனால் வெறுப்பு மற்றும் மறுப்பு அரசியல் மூலம் இந்த உரிமைகளைப் பெற முடியாது, இதைப் பெற உயர்ச்சியின் மூலம்தான் சாத்தியம் என்கின்றார். உயர்வு என்பது மெய்யியல் சார்ந்த உச்ச நிலை அறிவைப் பெறுவது என்ற புரிதலை அடிப்படையாகக் கொண்டு அடைவது என்றும் கூறுகின்றார். இப்படிப்பட்ட புரிதலுடன் அவர் கோவில்கள் கட்டுவதை நிறுத்திவிட்டு அடுத்தக் கட்டமாக அனைவருக்குமன கல்வியை வழங்க பள்ளிக் கூடங்கள் உருவாக்கத் தொடங்கினார். கோவில்கள் மூலம் ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள் இதற்கு ஆதரவாக செயல்படத் தொடங்கினர். இந்த முயற்சி பெரும் வெற்றி அடைந்தது. நாரயண தர்ம பரிபாலன சபை கேரளத்தில் பல இடங்களில் உருவானது. அத்வைத ஞான சபையையும் உருவாக்கி கடவுளின் கண்களில் அனைத்து மக்களும் சமம் என்றார்.

### சிலை வழிபாட்டிற்கு பதிலாக அற வழிபாடு

அடுத்தக் கட்டமாக சிலை நிறவுவதை நிறுத்திவிட்டு இனி கோவில் கருவறைகளில் சிலைக்குப் பதிலாக அறக்கோட்பாடுகளை வைத்து வழிபட வேண்டும் என்கின்றார். வள்ளலார் போல அங்கு தீபஒளியை வைத்து கருணை சார்ந்த அறங்களை வழிபட வலியுறுத்தினார். இவரும் ஒரு கண்ணாடியை வைத்து அதைப் பார்த்து வழிபடசொல்லுகின்றார். சிலை வழிபாட்டில் தொடங்கி, அறக்கோட்பாட்டை முன்வைத்து, பின்னர் தன்னைத் தான் அறிவது என்பதை வழிபாடாக முன்வைத்தார். அத்வைதத்தை கடைபிடிக்க இப்படிப்பட்ட வழிமுறைகளை அவர் வகுத்தார்.

கேரள கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முதல் தொடக்கப் புள்ளி ஶ்ரீ நாரயணகுருதான் என நம்பூதிரிபாத் சொல்லுகின்றார். சாதி ஒழிப்பு என்பதை வெற்றிகரமாக நாரயணகுரு கொண்டு சென்றது என்பதையும், அதே சமயம் தொழில் துறையில் ஈழவர்கள் முன்னுக்கு வர கைத்தொழில்களை அவர்கள் மேற்கொள்ள வழி காட்டியதையும், பள்ளிக் கூடங்களை உருவாக்கியதையும் கணக்கில் எடுத்து இப்படி நம்பூதிரி பாத் சொல்லியிருக்கின்றார்.

ஆன்மீக பலம் என்பதை முன்வைத்து ஒரு சமூக புரட்சியை உருவாக்க செயல்பட்ட ஶ்ரீ நாரயணகுருவைப் பற்றி பாரதி பாடியுள்ளார். இன்றும் அவரின் வழிகாட்டுதல்கள் கேரளத்தில் செயல் படுத்தப்படுகின்றது. ஶ்ரீ நாரயணகுருவின் மாதிரி என்பது இன்றைக்கும் சமூக மாற்றத்திற்குரிய ஒரு வடிவமாகவே இருக்கின்றது. முற்போக்காளர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்கள் நிறையவே இடம்பெற்றுள்ளன.

●

கட்டுரையாளர்: பேராசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | கு. மகுடீஸ்வரன்



# திருவிடர் கழகம் கண்ட விருதை சிவஞான யோகிகள் (1840-1924)

சைவ மரபு என்பது ஒரு சமய மரபாக இருப்பினும், அம் மரபிற்குள் ஒரு தத்துவ மரபைக் கட்டமைக்க முயன்று தமிழ்ச் சான்றோர் பலர். கி.பி.1900க்கு முன் அவ்வகை மரபின் ஆணிவேராகச் சுந்தரம்பிள்ளை தோன்றினார். தமிழையும், சைவ மரபையும் இரு கண்களாகக் கொண்ட அவரின் தொடர்ச்சியாக அக்காலத்தில் பலர் உருவாயினர். அவர்களில் ஒருவரே விருதை சிவஞான யோகிகள் ஆவார். திராவிட இயக்கத்தின் தோற்ற விதையை விதைத்தும், சுப்பிரமணியனைப் "பாரதி" ஆக்கியதும் எனப் பல செயல்கள் யோகியால் நிகழ்ந்ததை அவரின் வரலாறு காட்டுகிறது.

### பிறப்பு

கொங்கு நாட்டிலுள்ள அவினாசியில் 1840 ஆம் ஆண்டு இராமசாமிப் பிள்ளை - கிருட்டிணம்மையாருக்கு மகனாகப் பிறந்தார். சிவஞானம் என்பது பிள்ளைப் பருவத்தில் இடப்பட்ட பெயர், யோகி என்பது பிற்காலத்தில் யோக நிலைமையில் தேர்ச்சி பெற்றமையால் உண்டான சிறப்புப் பெயர். இளம் வயதினிலேயே பெற்றோரை இழந்த சிவஞானம் மாமன்மார்கள் ஆதரவில் வளர்ந்து, கல்வியும் கற்றார். ஆங்கிலமும், தமிழும் கற்றுக் கொண்டார்.

### பயணங்கள்

சிவஞானத்திற்குப் பதினாறு வயது நிரம்பிய காலத்தில் குன்னூரில் வாழ்ந்த இளைய மாமன் ஒருவர், அங்கு அழைத்துச் சென்று மேலும் கல்வி கற்கச் செய்தார். பல்லடம் என்ற ஊரில் சிவஞானத்தின் வேறொரு மாமனார் வாழ்ந்திருந்தார். சிவஞானம் அவ்வூருக்குச் சென்று அங்கு சில திங்கள் தங்க நேர்ந்தது. அவ்வூரிலே அருளானந்த அடிகள் என்னும் பெயருடைய பெரியார் எழுந்தருளினார். புகழ்பெற்ற அவரைச் சிவஞானம் அடிக்கடி சென்று சந்தித்து அருளுரை பெற்றார்.

வாழ்க்கை நடத்துவதற்கு ஏதேனும் ஓர் அலுவல் மேற்கொள்ளுதல் நலம் என்று எண்ணி, வெல்லிங்டன் என்னும் ஊரையடைந்து ஒரு பெரும் வணிகரிடம் வேலைக்கு அமர்ந்தார். அந்நாளில் சச்சிதானந்த அடிகள் என்னும் பெரியார் ஒருவருடைய நட்பு இவருக்கு ஏற்பட்டது. சச்சிதானந்த அடிகள் சித்த மருத்துவத்திலே சிறந்த் புலமை பெற்றவராகத் திகழ்ந்தார். சிவஞானம் அந்தப் பெரியாரிடம் மருத்துவக்கலையை நன்கு கற்றுத் தேறினார். மேலும் அவரிடமே யோகப் பயிற்சியும் பெற்றார்.[1]

சிறிது காலத்திற்குப்பின் உடுமலைப்பேட்டை அருகேயுள்ள மடத்துக்குளத்திற்கு வந்து சிவபூசை, தேவார திருவாசகம் ஓதல் முதலிய செயல்களை மேற்கொண்டிருந்தார். அங்கிருந்து பழனியை அடைந்து, கண்பார்வையிழந்த பெரும் புலவரான மாம்பழக் கவிராயரிடம் சென்றார். இலக்கண இலக்கியங்களையும் சங்க நூல்களையும் அவரிடம் பாடம் கேட்டார்.. பல சிவப்பதிகட்கும் சென்று இறை வழிபாடு செய்து விருதுநகரையடைந்தார். அங்கு ஒரு மருத்துவச் சாலையை அமைத்து, சித்த மருத்துவத்தின் மேன்மை உயரப் பணி செய்தார்.

### சித்த மருத்துவப் பணிகள்

சித்த மருத்துவம் தொடர்பான துறையில் சிவஞான யோகியின் பயணம் மிக நீண்டதாகும். சித்த மருத்துவமனையமைத்து மக்களுக்கு சேவை செய்ததுடன், "தமிழ் வைத்தியம்" என்ற பெயரில் மாத இதழையும் நடத்தினார். இவருடைய முக்கியமான சீடர்களில் ஒருவரான

---

1 இராமசாமிப் புலவா் எழுதிய தமிழ்ப்புலவா் வரிசை - 9, பக் : 49-56



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூத்துக்குடி வைத்தியர் இ.மு. சுப்பிரமணிய பிள்ளை சுமார் ஏழு வருடங்கள் சித்த மருத்துவ இரகசியங்களை யோகியிடம் கற்றறிந்தார். வ.உ.சி.அவர்கள் தீவிர மூட்டு வாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தபோது, யோகியின் சீடரான சுப்பிரமணிய பிள்ளையே மருத்துவம் சிகிச்சை தந்து குணப்படுத்தினார்.[2] "தமிழும் மருத்துவமும்" என்ற நூலையும் சிவஞானயோகி எழுதியுள்ளார். 21.04.1920இல் தமிழ் வைத்திய சங்கத்தைக் கோவில்பட்டியில் யோகிகள் தொடங்கினார்.

### திருவிடர் கழகம் (The Thiruvidar Association):

சைவம், சித்த மருத்துவம் ஆகிய துறைகளில் இருந்த ஆர்வத்தை விட மொழிப்பற்றில் யோகிகளுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. "தொன்று இவ்வினத்தில் இணங்கா நாற்குல மியற்றினர் பின்னோர்" எனத் தமிழர் தொன்மை எனும் கவிதையில் பாடினார். இப்பாடல் 19.11.08ல் குற்றாலத்தில் கூடிய கூட்டத்தில் சிவஞான யோகிகளால் பாடப்பட்டது. அன்றேதான் "திருவிடர் கழகம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அந்த அமைப்பின் நோக்கங்களாக ஆறு கொள்கைகள் வரையறுக்கப்பட்டன. திருவிடரின் பழைய வரலாறுகளையும், திருவிட மொழியின் உண்மை வரலாறுகளையும் ஆராய்ச்சி செய்தல், தமிழ் மொழி வளர்தலுக்குரிய செயல்களைத் தேர்ந்து செய்தல், தமிழின் பெருமைகளை நூலாகக் கொண்டு வருதல் என்பன கொள்கைகளில் சிலவாகும்.[3]

சுவாமி விருதை சிவஞான யோகிகள் இந்த அமைப்பின் நிலையுற்ற அமைச்சர். இதன் தலைவர் சீர்காழி கே.சிதம்பர முதலியார், துணைத்தலைவர்கள் 1.பூவை கலியாண சுந்தர முதலியார் 2.ஏ.பால்பண்ணை முதலியார் 3. மு.ரா.கந்தசாமிக் கவிராயர் ஆகியோராவர். கழக உறுப்பினர்களாக 59 பேர் கொண்ட பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் சிலர். 1.மறைமலையடிகள் 2.அரசஞ்சண்முகனார் 3.பண்டிதமணி மு.கதிரேசஞ்செட்டியார் 4.நாவலர் சோமசுந்தரபாரதி 5.வெ.ப. சுப்பிரமணிய முதலியார்

1913இல் 2அணா விலையில் "திராவிடர் கழகம்" என்ற சிறுநூல் வெளிடப்பெற்றது. திராவிட இனப்பற்றில் தோன்றிய இக்கழகம் சிவஞான யோகிகள் காலம் வரையே உயிர்ப்புற்றிருந்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பல அடிப்படைச் சித்தாந்தங்களை "தமிழகவொழுகு மக்கட் சட்டம்" என்ற யோகியின் நூலிலிருந்து கையாண்டுள்ளனர். நாவலர் இரா. நெடுஞ்செழியன் எழுதிய "தி.மு.க.வரலாறு" எனும் நூலில் யோகியாருடைய "திருவிடர் கழகம்" குறித்த பதிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

### பாரதிப்பட்டம் தந்தவர்

சுப்பிரமணி ஐயர் "பாரதி" யாராக ஆனது பற்றிய சர்ச்சைகள் ஏராளம். தமிழ்ப் புலவர் வரிசை 9ஆவது நூலில் " சிவஞானயோகிகள் சுப்பிரமணி ஐயரின் பாடல்கள் கேட்டு மகிழ்ந்து, அவருக்குப் "பாரதி" என்னும் பட்டத்தை வழங்கினார். என இராமாசாமிப் புலவர் குறிப்பிட்டுள்ளார்.[4]

சுப்பிரமணி ஐயரின் திருமணத்திற்குச் சென்ற போது, அங்கு அவரின் கவித்திறமை கண்டு "பாரதி" எனும் பட்டத்தை புலவர்கள் சிலர் (?) அளித்ததாகவும் ஒரு செய்தி உண்டு.[5]

### இதழ்களில் கட்டுரைகள்

கவிஞராகவும், உரைநடையாளராகவும், சிறந்த பேச்சாளராகவும் யோகிகள் விளங்கினார். பல இதழ்களில் அக்காலத்தில் அவருடைய கட்டுரைகள் வெளியாகின 21.08.1917 திராவிடன் இதழில் "இந்தியாவுக்குப் பொது பாஷை" எனும் கட்டுரையில் ஆங்கிலத்தின் அவசியத்தை வலியுறுத்தினார்.[6]

திருவிடர் கழகம் ஆரம்பிக்கும் சில மாதங்களுக்கு முன் சுதேசமித்திரன் வெள்ளி விழா நடந்தது. 1908இல் நடந்த அவ்விழாவில் அவர் பேசிய சுதேசிய இயக்கப் பேச்சுக்கள்

2 சிவஞான யோகிகள், 'திருவிடர் கழகம், 1913இல் வெளியான சிறுநூல் சுருக்கம்

3 இராமசாமிப் புலவா், தமிழ்ப்புலவா் வரிசை-9, பக்:49-56

4 "கடையம்" என்ற ஊரில்தான் சுப்புவிற்குத் (சுப்பிரமணி ஐயர்) திருமணம் கூடியது. சோமு (சோம சுந்தரபாரதி) இல்லாமல் திருமணம் நடைபெறுமா? எல்லோரும் கடையம் சென்றனர். மணக்கோலத்திலிருந்த சுப்பிரமணியத்திற்கும், தோழமையாயிருந்த சோமசுந்தரத்திற்கும், அங்கு வந்திருந்த புலவா் பெருமக்களால் அளிக்கப்பெற்ற பட்டமே 'பாரதி' பட்டமாகும். அப்போது சோமுவுக்கு வயது 15, சுப்புவிற்கு வயது 12. (கி.ஆ.பெ.விசுவநாதம் படைப்புகள், தொகுதி-3 ப:4.09)

5 பெ.சு.மணி, ஆய்வுக் கட்டுரைகள், ப:90

6 கோவிற்புரி புராணம், வாழ்த்துரைப் பகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சைவம், சித்த மருத்துவம் ஆகிய துறைகளில் இருந்த ஆர்வத்தை விட மொழிப்பற்றில் யோகிகளுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. "தொன்று இவ்வினத்தில் இணங்கா நாற்குல மியற்றினர் பின்னோர்" எனத் தமிழர் தொன்மை எனும் கவிதையில் பாடினார். இப்பாடல் 19.11.08ல் குற்றாலத்தில் கூடிய கூட்டத்தில் சிவஞான யோகிகளால் பாடப்பட்டது. அன்றேதான் "திருவிடர் கழகம்" என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.**

அவ்விதழிலேயே வெளியாயின. 5.3.1908ல் யோகிகள் பேசிய சுதேசியத்தைப் பற்றிய பேச்சு சுதேசமித்திரனில் வெளியாகி அரசாங்கத்தின் கண்டனத்திற்கு ஆளாகியது. 1914இல் நடைபெற்ற வி.சுப்பிரமணிய ஐயரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின் போது 128 வரிகள் கொண்ட வாழ்த்துப் பாவை யோகிகள் பாடினார்.5

### வ.உ.சி.யின் நட்பு:

வ.உ.சி. அவர்களுக்கும் சிவஞான யோகிகளுக்குமிடையே மிகுந்த நட்பிருந்தது. கோவில்பட்டி புராணமாகிய கோவிற்புரி புராணம் எனும் நூலை யோகிகள் எழுதிய போது மறைமலையடிகளும், வ.உ.சியும் வாழ்த்திப் பாராட்டினர். வ.உ.சி. அவர்கள் "சிவஞான போதமொடு சேர்த்துரைத்தான். நம்மின் சிவஞான யோகி தெளித்து" என்பார். மேலும் "மாம்பழக் கவிஞன் சீர்கால் அடியிருந்து கற்ற தமிழால்" சிவ ஞான யோகி இந்நூலைப் படைத்ததாக முன் வரலாற்றை நினைவுபடுத்திப் பாராட்டுவார். இந்திய வரலாற்றில் வ.உ.சி. என்று நூலில் என்.தண்டபாணி பிள்ளை எழுதிய குறிப்பு, "கோவில்பட்டியில் பக்கத்து வீட்டிலிருந்த விருதை சிவஞான யோகிகளுடன் 292, சைனா பஜாரில் நான் வைத்திருந்த கதர்க்கடைக்கு வ.உ.சி.வருகை தந்தார்" என்று உள்ளது.[7]

### இயற்றிய நூல்கள்:

சிவஞான யோகிகள் தாம் இயற்றிய நூல்களை ஒன்று திரட்டி, புத்தகமாக அவரே வெளியிட்டுள்ளார். யோகிகள் எட்டயபுரத்தில் வசித்த குருநாதக் கலைஞர் எனும் வடமொழிப் புலவரிடம் வடமொழி நூல்களை நன்கு கற்றார். அவருடைய உதவியைக் கொண்டு பதஞ்சலி யோக சூத்திரம், பிரம சூத்திரம் ஆகிய வடமொழி நூல்களைத் தமிழிலே மொழி பெயர்த்தார். சென்னையில் சைவசித்தாந்த சண்டமாருதமாக விளங்கிய சோமசுந்த நாயகரிடம் மாணவனாக இருந்து சைவசித்தாந்த நூல்கள் எழுதும் ஆற்றல் பெற்றார். யோகிகள் எழுதிய நூல்கள் 1.செப்பறை வெண்பா 2. நெல்லையந்தாதி மாலை 3.திருச்செந்திற் சிலேடை வெண்பா 4.பதஞ்சலி யோக சூத்திர மொழிபெயர்ப்பு 5. பிரம சூத்திர மொழிபெயர்ப்பு 6.தமிழ் மொழியும் சிவநெறியும் 7.தமிழர் தொன்மை 8.வேதாகம உண்மை 9.கீதாமிர்த மஞ்சரி 10.சிவகான விளக்கம் 11. சுவேதாசுவதர உபநிடத மொழி பெயர்ப்பு 12.தமிழும் மருத்துவமும் 13.தமிழகவொழுக்கம் என்னும் மக்கட் சட்டம் 14. கோயில் புரி புராணம் 15.தேவோபா சனா தீபம் (இந்நூலுக்கு உ.வே.சா.சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார் 28.7.07. இவையல்லாது பல நூல்களுக்கும் யோகிகள் சிறப்புப் பாயிரங்கள் பாடியுள்ளார். கனகசபை பிள்ளை எழுதிய வருண சிந்தாமணி எனும் நூலுக்கு யோகிகள் எழுதிய சிறப்புப் பாயிரம் குறிப்பிடத்தக்கதாகும்.

பொதுவாகத் "திராவிட இயக்கங்களின் தொடக்க காலச் செயல்பாட்டினைப் பெ.சுந்தரம் பிள்ளையின் வழிபட்ட சைவப் புலமையாளர்களின் செயல்பாட்டின் தொடர்ச்சியாகவே கருத முடியும். ஒவ்வொரு காலகட்டத்திலும் திராவிட இயக்கத்திற்கும், வைசப் புலமையாளருக்கும் சில கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டிருப்பினும் அவற்றுக்கிடையேயுள்ள பிணைப்புகளின் தொடர்ச்சியைக் காண முடியும்.[8] திருவிடர் நலன், தமிழ்மொழி நலன் என 84 ஆண்டுகள் உழைத்த சிவஞான யோகிகள் தன் இறுதியாக வாழ்ந்த கோவில்பட்டியில் 1924இல் மறைந்தார். திராவிடத்தின் ஆணி வேர் ஒன்று மறைவுற்றது.

•

கட்டுரையாளர்: பேராசிரியர்

7 ப. முத்துக்குமாரசுவாமி, இந்திய வரலாற்றில் வ.உ.சி, ப:306

8 கு.கலைவாணன், ஆய்வு கட்டுரைகள் பன்னிரண்டு, ப: 30

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




THE ZUSAANLI GROUPS
TZG
Since 1992

# முடியில்லா பிரச்சனைகளுக்கு தீர்வு

# NAYAGARA
## HAIR GRIP OIL

## மூச்சு குழாயின் சுவாசம் இலேசாகும்!
## ஆயுர்வேதம் தந்த அற்புதம்

மூலிகை ஆராய்ச்சியில் 33 வருடங்களாக ஈடுபட்டுள்ள மூலிகை ஆராய்ச்சியாளர் மற்றும் 15 வருடங்களாக ஆயுர்வேதத் துறையில் உள்ள ஆயுர்வேத மருத்துவர் ஆகியோரின் அற்புதமான தயாரிப்பு **ஸ்வாசஃப்ரீ.**

**நாட்பட்ட ஆஸ்துமா, சளி, இருமல், தும்மல் உள்ளிட்ட நுரையீரல் சம்மந்தப்பட்ட அனைத்திற்கும் மிகச்சிறந்தது.**

கொரியர் / தபாலில் அனுப்பி வைக்கப்படும்.




கிடைக்குமிடம் :

**வெற்றி விநாயகர் மெடிக்கல்ஸ்**

தி சுசான்லி அக்குபஞ்சர் & ஆயுர்வேதிக் கிளினிக் வளாகம்,
11-A, பாரதிதாசன் தெரு, பிள்ளையார் கோயில் எதிரில்,
மஞ்சக்குப்பம், கடலூர்-1.

**செல் : 93676 22248, போன் : 04142-355418**

மேலும் விபரங்களுக்கு : **96003 09546, 93676 22256**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | **இரா.எட்வின்**

# 65/66

19.03.2025 அன்று அதிகாலை சுனிதா வில்லியம்ஸ் பூமிக்கு திரும்பி இருக்கிறார். முதலில் அவருக்கு நமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம். அவரது திரும்புகை திட்டமிட்டபடி சரியான நேரத்தில் இயல்பாக நடந்து முடிந்திருக்கிறது.

ஆனால் அவர் ஏதோ விண்ணில் சிக்கித் தவித்ததாகவும் எலான் மஸ்க் விண்வெளி வீரர்களை அனுப்பி உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த சுனிதாவை மீட்டுக்கொண்டு வந்தது போலவும் நிமிடத்திற்கு நிமிடம் பரபரப்பாக செய்திகள் வெளியாகிக்கொண்டே இருக்கின்றன.

இதன் உச்சமாகவும் நகைச்சுவையாகவும் சங்கிகள் ஒன்றைப் பரப்புகிறார்கள். விண்ணில் தவித்துக்கொண்டிருந்த சுனிதாவை எப்படி மீட்பது என்று ஆலோசனை கேட்பதற்காகத்தான் ட்ரம்ப் நமது பிரதமரை அமெரிக்காவிற்கு அழைத்ததாராம். இவர் சென்று வழங்கிய ஆலோசனையின்படி செயல்பட்டுதான் ட்ரம்ப் சுனிதாவை மீட்டதாகவும்கூட பலர் நம்பவும் செய்கிறார்கள். ஏதோ சுனிதா மட்டும் யாருமே இல்லாத ஒரு மோன வெளியில் சிக்கிக்கொண்டு போராடிக்கொண்டு இருப்பதுபோன்ற ஒரு கதையை உலகம் முழுக்கக் கட்டமைத்தார்கள். ஆனால் அவர் தனது சகாக்களுடன் தொடர்ந்து சுறுசுறுப்பாக ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் செய்திகள் வந்தன. அவர் விண்வெளியில் தீபாவளியைக் கொண்டாடியதாகவும் செய்திகள் வந்தன.. கேக் வெட்டி அங்குள்ளோர் கிறிஸ்துமஸ் கொண்டாடிய காணொலிகளையும் நம்மால் பார்க்க முடிந்தது.

அமெரிக்கத் தேர்தல் நேரத்தில் ட்ரம்ப் இதை பிரச்சாரம் செய்தார். சுனிதாவை பாதுகாப்பற்ற முறையில் விண்ணிற்கு பைடன் அனுப்பி வைத்ததாக அவர் கூறினார். அவரது உயிருக்கு ஆபத்து உருவாகியுள்ளதாக குற்றம் சாட்டினார். தான் அதிபரானதும் தனது நண்பர் எலான் மஸ்க் உதவியோடு சுனிதாவை மீட்க இருப்பதாகக் கூறினார். இப்படியாக இது சூடான அரசியலாக மாறியது. ஏற்கனவே சுனிதாவின் குடும்பம் இந்திய அரசியலில் ஒரு பலியைக் கொடுத்திருக்கிறது. இதுபோலவே அமெரிக்க அரசியலுக்காக அவரே பலியாகிவிடுவாரோ என்ற பரபரப்பை சில அரசியல் நோக்கர்கள் முன்வைத்தனர்.

செப்டம்பர் 2024இல் ஒன்பது நாள் ஒப்பந்தத்தில் விண்வெளிக்கு சென்ற இருவரில் சுனிதாவும் ஒருவர். இது அவருக்கு மூன்றாவது விண்வெளிப் பயணம். இதையும் சேர்த்து மூன்று முறையும் இவர் பணிநீட்டிப்பு பெற்று அடுத்தடுத்த அணியினரோடும் பணியாற்றிவிட்டு அவர்களோடுதான் திரும்பி இருக்கிறார். எப்போதும் போலவே இந்த முறையும் கிளம்பும் வரைக்கும் சுறுசுறுப்போடும் மகிழ்வோடும் தனது ஆராய்ச்சிகளை முன்னெடுத்திருக்கிறார். வழக்கமாக ஆறுமாத கால ஆய்விற்காகத்தானே வீரர்கள் விண்வெளிக்கு அனுப்பப்படுவார்கள். அது என்ன ஒன்பதுநாள் ஒப்பந்தம் என்பதுகுறித்து அலசினால் இப்போது வாசிக்கிற சூடில் பரப்பப்பட்ட இந்தக் கதைகளின் வேரைப் பிடிக்க முடியும். விண்வெளி ஆராய்ச்சி மையம் எப்போதும் விண்வெளி வீரர்களால் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டே இருக்கக்கூடிய இடம். அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் ஏழுபேர் பணியாற்றுவார்கள். ஒரு அணியினரின் பணிக்காலம் முடியும்போது அடுத்த அணியினர் வருவார்கள். புதியவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு ஏற்கனவே இருப்பவர்கள் திரும்புவார்கள். இது தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கக்கூடிய வழமை.

2006ஆம் ஆண்டில் விண்வெளிக்கு தனது 14 வது அணியை நாசா அனுப்பியது. அந்த அணியில் இருந்த ஏழுபேரில் ஒருவர்தான் சுனிதா. அந்த அணியில் சென்றவர்களில் சுனிதாவின் சுறுசுறுப்பும் கூர்மையும் அர்ப்பணிப்பும் நாசாவை ஈர்க்கவே அங்கேயே தங்கி இன்னுமொரு ஆறுமாதம் அடுத்த அணியினரோடு பணிபுரிய முடியுமா என்று சுனிதாவை கேட்கிறது. சுனிதா சம்மதிக்கிறார். 14வது அணியில் சென்ற மீதமுள்ள ஆறுபேரை அழைத்துக்கொண்டு 15 வது அணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுபேரை மட்டும் விண்ணிற்கு நாசா அனுப்புகிறது. ஆக, நாசாவின் 14வது அணியினரோடுவிண்வெளிக்கு முதல்முறையாக ஆறுமாத ஒப்பந்தத்தில் சென்ற சுனிதா 15 வது அணியினரோடும் பணியாற்றிவிட்டு ஓராண்டு கழித்தே பூமிக்குத் திரும்புகிறார். 2012 இல் நாசா அனுப்பிய 32 வது குழுவில் இரண்டாவது முறையாக விண்ணிற்கு சென்ற சுனிதா இந்த முறையும் பணி நீட்டிப்பு பெற்று 33 வது குழுவினரோடும் பணியாற்றிவிட்டு ஓராண்டு கழித்தே பூமிக்குத் திரும்பினார். மூன்றாவது முறையும் இதேதான் நிகழ்ந்தது. ஆனால் இந்தமுறை அவர் சென்றது ஆராய்ச்சிக்காக அல்ல. 01.02.2003 அன்று கல்பனா சாவ்லா விண்வெளி ஓடம் வெடித்து இறந்ததற்குப் பிறகு அமெரிக்கா ரஷ்யாவின் ஓடங்களிலேயே தனது வீரர்களை அனுப்பி வந்தது. இந்த நேரத்தில் முதல்முறையாக ட்ரம்ப் பதவி ஏற்கிறார். அவர் அமெரிக்காவே விண்வெளி ஓடங்களை சொந்தமாகத் தயாரிக்க வேண்டும் என்று முடிவெடுக்கிறார். எலான் மஸ்கின் SPACE X, மற்றும் போயிங் ஸ்டார் லைனர் ஆகிய இரு நிறுவனங்களிடமும் ஒப்பந்தம் போடப்படுகிறது. முதலில் எலான் மஸ்க் செய்து தருகிறார். இந்த நிலையில் போயிங் ஏர்லைனரும் ஒரு ஓடத்தை தயாரிக்கிறது. அதன் வெள்ளோட்டத்திற்காகத்தான் ஒன்பது நாட்கள் பயணமாக 2024 செப்டம்பரில் சுனிதா விண்வெளி போகிறார். போகும்போதே ஓடத்தில் பழுது ஏற்படுகிறது. எப்படியோ ஒருவழியாக விண்வெளி ஆராய்ச்சி மையத்தை அடைந்துவிடுகிறது. பழுதுநீக்க நடந்த முயற்சிகள் தோல்வியில் முடிய விண்கலம் திரும்பப் பெறப்படுகிறது.

சென்ற இருவரிடமும் திரும்புகிறீர்களா அல்லது அங்கு ஒரு பணிக்காலத்தை நிறைவு செய்கிறீர்களா என்று நாசா கேட்கிறது. இருவரும் பணிநீட்டிப்பை ஏற்கிறார்கள். இப்படியாகத்தான் செப்டம்பர் 2024 இல் விண்வெளிக்குச் சென்ற சுனிதா 18.03.2025 வரை விண்வெளியில் பணியாற்றிவிட்டு 18.03.2025 இல் புறப்பட்டு 19.03.2025 அதிகாலை பூமிக்குத் திரும்புகிறார். சுனிதா புறப்பட்டபோது பைடன்தான் அமெரிக்க அதிபர். அவர் புறப்பட்ட காலத்தை ஒட்டி அமெரிக்க தேர்தல் வருகிறது. ஒன்பது நாள் ஒப்பந்தத்தில் சென்ற சுனிதா பணிநீட்டிப்பு பெறுகிறார். இங்குதான் லாவகமாக இதை தனது தேர்தலுக்காகத் திருப்புகிறார் ட்ரம்ப். மோடியின் நண்பரென்றால் சும்மாவா. இந்தப் பணி நீட்டிப்பையோ, சுனிதா விரும்பி இருந்தால் அடுத்த ஓடத்தை அனுப்பி அவரை அழைத்துக்கொள்ள நாசா தயாராக இருந்ததையோ மறைக்கிறார். ஓடம் பழுதானதால் ஏதோ தன்னந்தனியாக விண்வெளியில் சுனிதா சிக்கிக் கொண்டிருப்பதாகவும் தான் ஆட்சிக்கு வந்தால் தனது நண்பர் எலான் மஸ்கின் துணையோடு அவரை மீட்பேன் என்றும் கூறி மக்களிடம் வாக்கு கேட்கிறார். இப்போதும் சுனிதா பூமிக்கு திரும்பியுள்ள நிலையில் அது எலான் மஸ்கினால் நிகழ்ந்ததாகவே அவரை வாழ்த்தி கட்டமைக்க முயல்கிறார் ட்ரம்ப். எலான் மஸ்கும் சுனிதாவை மீட்டு அழைத்து வந்த தனது சகாக்களுக்கு நன்றி என்று கூறி சுனிதா தன்னால் மீட்கப்பட்டதாகவே கட்டமைக்க முயல்கிறார். இந்தக் கட்டுக்கதைகளை எல்லாம் வாயைத் திறப்பதன் மூலம் சுனிதா தவிடுபொடியாக்கிவிட முடியும். ஆனால் சுனிதா வாயைத் திறக்க மாட்டார் என்றே தெரிகிறது. காரணம் ட்ரம்ப் யார் என்பது அவருக்குத் தெரியும்.

குஜராத்தில் பாஜக அமைச்சராக இருந்த ஹரேன் பாண்டியா 2003 இல் கொல்லப்பட்டார். அந்த வழக்கோடு இன்றைய ஒன்றிய அமைச்சர்களுக்கு தொடர்பு இருப்பதாகவே வழக்கு இருந்தது. அது ஒரு மர்ம மரணம் என்று முடித்து வைக்கப்பட்டது. இப்போதுகூட சுனிதா பூமிக்கு திரும்பியபிறகான ஒரு விஷயமாக காங்கிரஸ் இந்த வழக்கை மீண்டும் நடத்த வேண்டும் என்று கோருகிறது.

ஹரேன்பாண்டியா சுனிதாவிற்கு மாமா அல்லது சித்தப்பா பெரியப்பா முறை உறவு. அரசியல் என்ன செய்யும் என்பதை சுனிதா நன்கு உணர்ந்தவராகவே இருப்பார். எனவே யாரும் அவர் வாயைக் கிளறவேண்டாம் என்று கேட்டு வைப்போம்.

ஒன்று இருக்கிறது சொல்ல, இன்னொருமுறை பணி நீட்டிப்பு வேண்டுமா என்று கேட்டிருந்தால் சுனிதா அதை மகிழ்வோடு ஏற்றிருப்பார் என்றே தோன்றுகிறது.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | மு.வெற்றிச்செல்வன்

# நவதாராளமயமாகும் கடல் வளங்கள்

தமிழ்நாடு கடலோரப்பகுதிகளில் ஹைட்ரோகார்பன் எடுப்பதற்கான ஏல அறிவிப்பை ஒன்றிய அரசு பிப்ரவரி 2025இல் வெளியிட்டுள்ளது. குறிப்பாக தென் தமிழ்நாட்டு ஆழ்கடலோரப் பகுதியில் சுமார் 9990.96 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்த இருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் கடலோர வளங்கள் தனியார் நிறுவனங்களுக்குத் தாரைவார்க்கப்படும். இந்தியாவெங்கும் சுமார் 25 வட்டாரங்களைச் சேர்ந்த 1,91,986 சதுர கிலோமீட்டர் கடற்பகுதிகள் இந்த ஏல அறிவிப்பில் இடம்பெற்றுள்ளன.

இந்திய அரசமைப்புச்சட்டம், இந்நாட்டின் இயற்கை வளத்தின் பயன்பாடு என்பது சமூகத்தின் பொது நலனுக்குப் பயன்படுகின்ற வகையில் அரசு செயல்பட வேண்டும் என்று 39-பி பிரிவில் கூறுகிறது. மேலும், கனிமங்களை வளப்படுத்தவும், வெட்டியெடுப்பதற்குமான அதிகாரத்தை அரசமைப்புச்சட்டம் ஒன்றிய அரசுக்கு வழங்குகிறது.

1957ஆம் ஆண்டு கனிமங்களை, எடுப்பதற்கும் விற்பனை செய்வதற்குமான கூறுகளை வகைப்படுத்துகிற வகையில் சுரங்கம் மற்றும் கனிமச் சட்டம் இயற்றப்பட்டது. மேலும், இந்தச் சட்டம் பாறை, மணல் போன்றவற்றைச் சிறு கனிமங்கள் என அடையாளப்படுத்துகிறது. சிறு கனிமங்களைத் தவிர்த்த கனிமங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் ஒன்றிய அரசிற்கே வழங்கப்பட்டுள்ளது. மணல் மற்றும் பிற கற்குவாரிகளைக் கட்டுப்பட்டுத்தும் அதிகாரம் மட்டுமே மாநில அரசிற்கு வழங்கப்பட்டுள்ளது.

கனிமச் சட்டம், எரிசக்திக்காகப் பயன்படுத்தப்படும் பெட்ரோல், எண்ணெய், மற்றும் இயற்கை எரிவாயுகளைக் கட்டுப்படுத்தாது. இவ்வகை எரிசக்திக் கனிமங்களைக் கட்டுப்படுத்த 1948ஆம் ஆண்டுஎண்ணெய்க் கிணறுக்கான சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் தான் ஹைட்ரோ கார்பன், மீத்தேன் திட்டம் போன்றவை அனுமதிக்கப்படுகின்றன.

மேற்கூறிய இரண்டு சட்டங்களுமே இயற்கை கனிம வளங்களை அரசுடைமையாகக் கொண்டு இயங்கியது. இந்த நிலை 1990களுக்குப் பின்பாக மாற்றப்பட்டது.

நரசிம்ம ராவ் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தேசிய கனிமக் கொள்கை 1993ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. உலகமயபொருளாதார நடைமுறைக்குப் பின்பாக அறிவிக்கப்பட்ட இக்கொள்கை கனிமவளங்க்ளைத் தனியார்மயமாக்க உருவாக்கப்பட்டது. மேலும், ஆழ்கடல்சார்ந்த கனிமங்களை வணிகமயமாக்குவதற்கான திட்டமும் இதில் வகுக்கப்பட்டது. 2008ஆம் ஆண்டு அடுத்த தேசிய கனிமக் கொள்கை அறிவிக்கப்பட்டது. இதற்குப் பின்பு 2019ஆம் ஆண்டு புதிய தேசிய கனிமக் கொள்கை அறிவிக்கப்பட்டது. ஹைட்ரோ கார்பன் போன்ற எரிசக்தி சார்ந்த கனிமங்களைத் தனியார்மயமாக்க வாஜ்பாய் தலைமையிலான பாரதிய ஜனதா அரசு 1999ஆம் ஆண்டு “ஆய்வுரிமைக்கான புதிய கொள்கை” (New Exploration Licensing Policy) என்னும் புதிய கொள்கையை அறிமுகம் செய்தது.

இக்கொள்கையின் மூலம் இயற்கை எரிவாயுக்கள் தொடர்பான வர்த்தகத்தில் அந்நிய முதலீடு 100 சதவீதம் அனுமதிக்கப்பட்டது. அதுவரை லாபகரமாக இயங்கி வந்த அரசு நிறுவனமான ஓ.என்.ஜி.சி.இயற்கை எரிவாயு மற்றும் எண்ணெய் வளங்களைப் பற்றிய தகவல்களைக் (தனியார் நிறுவனங்களுக்கு) கொடுக்கும் மையமாக மாறிப்போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் வர்த்தகத்தை மேம்படுத்த, 2006ஆம் ஆண்டு ஒன்றிய பெட்ரோலிய அமைச்சகத்தின் கீழாக, எண்ணெய்க் கிணறுக்கான சட்டத்தின்படி ஹைட்ரோ கார்பன் பொது இயக்குநகரம் புதிய வகையில் மாற்றி அமைக்கப்பட்டது.

1999ஆம் ஆண்டு ஹைட்ரோ கார்பன் கொள்கை பின்வாக்கப்பட்டு, 2014ஆம் ஆண்டில் ஹைட்ரோ கார்பன் ஆய்வு மற்றும் அனுமதிக்கான கொள்கை (Hydrocarbon Exploration Licensing Policy) மோடி தலைமையிலான அரசு அறிவித்தது. இந்தத் திட்டத்தின் கீழ் தான் தமிழகத்தில் மீத்தேன் எடுப்பதற்கான உரிமை தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. எல்லா இயற்கை எரிவாயுக்களிலும், கச்சா எண்ணெயிலும் ஹைட்ரோ கார்பன் நிச்சயமாக இருக்கும். கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக்களை மரபு ஹைட்ரோ கார்பன்கள் (Conventional Hydrocarbons) என்றும், நிலக்கரிப் படுகை மீத்தேன் (Coal Bed Methane), நிலக்கரிச் சுரங்க மீத்தேன் (Coal Mining Methane), ஷேல் எரிவாயு (Shale Gas), டைட் எரிவாயு (Tight Gas) போன்ற இயற்கை எரிவாயுக்களை மரபுசாரா ஹைட்ரோ கார்பன்கள் (Unconventional Hydrocarbons) என்றும் இந்தக் கொள்கை வகைப்படுத்துகிறது.

மரபுசாரா ஹைட்ரோ கார்பன் வகையிலுள்ள புதிய எரிவாயுக்களின் பயன்பாடுகள் கண்டறிந்த பின்பு, பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு விதிகளில் பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. குறிப்பாக 2003இல் கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தத்தின் அடிப்படையில் மீத்தேன் எரிவாயு குறித்தான பிரிவுகள் முதன்முதலாகச் சட்ட விதிகளில் சேர்க்கப்பட்டது. மேலும், இயற்கை எரிவாயுக்கான விளக்கமும் விரிவாக்கப்பட்டன. அதாவது மீத்தேன், ஷேல் போன்ற புதிய வகை எரிவாயுக்களை வர்த்தக ரீதியில் தனியார் நிறுவனங்களும் எடுப்பதற்குத் தேவையான சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், ஆழ்கடல் சார்ந்த கனிமங்களை ஒழுங்குப்படுத்துவதற்கான ஆழ்கடல் நிலப்பரவு சார்ந்த கனிமச் சட்டம் 2002ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இந்தச்சட்டத்தில் பல திருத்தங்களை ஒன்றிய அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. 2024ஆம் ஆண்டில் கடல்சார் கனிமங்களைத் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமாக்கும் வகையில் புதிய விதிகளை இயற்றியது. பல சட்டத் திருத்தங்களையும் செய்துள்ளது.

2015இல் ஒன்றிய விளிம்புநிலைக் கொள்கையை (Marginal Field Policy) அறிமுகம் செய்தது. இக்கொள்கைப்படி தான் நெடுவாசல், காரைக்கால் உள்பட இந்தியாவெங்கும் பல இடங்களில், ஒற்றை அனுமதி மூலம் தனியார் நிறுவனங்கள் மரபு மற்றும் மரபுசாரா ஹைட்ரோகார்பன் வகை எரிவாயுக்களை எடுப்பதற்கான உரிமையை ஒன்றிய அரசு வழங்கியது. நெடுவாசலில் ஹைட்ரோகார்பன் இயற்கை எரிவாயுக்களை எடுப்பதற்கான அனுமதியை ஜெம் லேபோரட்டிரிஸ் என்னும் தனியார் நிறுவனத்திற்கு அரசு வழங்கியது. அதாவது ஜெம் நிறுவனம் நெடுவாசலில் மரபு மற்றும் மரபுசாரா ஹைட்ரோகார்பன் என இரண்டு வகை ஹைட்ரோகார்பன் எடுபதற்கு உரிமை பெற்றது.

**2012இல் மீத்தேன் திட்ட எதிர்ப்பு இயக்கம் உருவானது. இந்த இயக்கத்தின் தொடர் செயல்பாடுகள் காரணமாக 2015இல் மீத்தேன் திட்டத்திற்கான இடைகாலத்தடையைத் தமிழ்நாடு அரசு பிறப்பித்தது. மேலும், 2019இல் காவிரிப் படுகையைப் பாதுகாக்கும் வகையில் தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் புதிய ஹைட்ரோ கார்பன் திட்டங்கள் காவேரி மண்டலப் பகுதிகளில் மாநில அரசால் தடைசெய்யப்பட்டன. ஆனால், பிற பகுதிகளில் ஹைட்ரோகார்பன் திட்டங்களை மத்திய அரசு நடைமுறைபடுத்த முயன்றுகொண்டே இருக்கிறது.**

இத்தகைய திட்டங்களுக்கு எதிராக 2012இல் மீத்தேன் திட்ட எதிர்ப்பு இயக்கம் உருவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இயக்கத்தின் தொடர் செயல்பாடுகள் காரணமாக 2015இல் மீத்தேன் திட்டத்திற்கான இடைகாலத்தடையைத் தமிழ்நாடு அரசு பிறப்பித்தது. மேலும், 2019இல் காவிரிப் படுகையைப் பாதுகாக்கும் வகையில் தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் புதிய ஹைட்ரோ கார்பன் திட்டங்கள் காவேரி மண்டலப் பகுதிகளில் மாநில அரசால் தடைசெய்யப்பட்டன. ஆனால், பிற பகுதிகளில் ஹைட்ரோகார்பன் திட்டங்களை மத்திய அரசு நடைமுறைபடுத்த முயன்றுகொண்டே இருக்கிறது. அதேபோல பழைய ஹைட்ரோ கார்பன் திட்டங்களும் இயங்கி கொண்டே இருக்கின்றன.

2019இல் கடலோர ஒழுங்கு மண்டலச் சட்டவிதிகள் புதிதாக அறிவிக்கப்பட்டது. இச்சட்டவிதிகள் மூலம் பாதுகாக்கப்பட்ட கடலோரப் பகுதிகளின் எல்லை குறைக்கப்பட்டது. மீனவர்கள் வாழ்வுரிமையும் வெகுவாகப் பறிக்கப்பட்டது. இந்த நிலையில் தான் தமிழக ஆழ்கடல் பகுதிகளில் ஹைட்ரோகார்பன் எடுப்பதற்கான ஏல அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டுள்ளது. ஒன்றிய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், திறந்தவெளி அனுமதிக் கொள்கை (*Open Acreage Licensing Policy*) எனும் ஹைட்ரோகார்பன் எடுப்புக் கொள்கையின் இந்த ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

.தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் நிலப்பகுதியை ஒட்டிய ஆழமற்ற கடற்பகுதிகளில் 30ஆயிரம் சதுர கிலோ மீட்டர் பரப்பிலும்.ஆழமான கடற்பகுதியில் 95 ஆயிரம் சதுரகிலோமீட்டர் பரப்பிலும் ஹைட்ரோகார்பன் இருப்பு உள்ளதாக ஒன்றிய பெட்ரோலியத்துறை அமைச்சகம் கண்டறிந்துள்ளது. இதனை ரிலையன்ஸ், வேதாந்தா, ஓ.என்.ஜி.சி., பாரத் பெட்ரோலியம் உள்ளிட்ட நிறுவனங்கள் எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தொடர்ச்சியாக நடைபெற்று வரும் திறந்தவெளி அனுமதி கொள்கை(OALP) அடிப்படையில் ஏல ஒப்பந்தத்தில் இந்த கடற்பகுதிகளை ஒன்றிய அரசு வேதாந்தா மற்றும் ஓ.என்.ஜி.சி. உள்ளிட்ட நிறுவங்களுக்கு வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டை ஒட்டிய கடற்பகுதிகளில் அரியவகை பாதுகாக்கப்பட்ட ஆவுளியா உள்ளிட்ட 25 பாலூட்டிகள், ஆமைகள், உயிர்வாழ்கின்றன. டால்பின்கள், திமிங்கலங்கள் போன்ற உயிரினங்கள் குறைந்த அதிர்வெண் கொண்ட ஒலியை எழுப்புவதன் மூலமே தங்களுக்குள் தகவல்களைப் பறிமாறிக் கொண்டு தங்களது பயண வழிகளையும் தீர்மானிக்கின்றன. மேலும் பல ஆயிரம் வகையிலான உரியினங்கள் நம் கடலோரப் பகுதியில் வாழ்கின்றன.

கடற்பகுதியில் ஹைட்ரோகார்பன் இருப்பை ஆய்வு செய்ய பயன்படுத்தப்படும் நில அதிர்வுச் சோதனையின்போது எழுப்பப்படும் வெடிச்சத்தம் கடல்வாழ் உயிரினங்களை மிகவும் பாதிக்கிறது. அதுமட்டுமின்றி எண்ணெய், எரிவாயு எடுக்கும்போது வெளியிடப்படும் ரசாயனக் கழிவுகளால் மீன்வளம் பெருமளவில் குறையுமென்றும் ஆவுளியா, ஆமைகள் போன்ற முக்கியமான பல கடல்வாழ் உயிரினங்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயரும் அல்லது இறந்துபோகும் என்கின்றனர் கடல்சார் ஆய்வாளர்கள்.

மேலும் மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றிலும் அழிக்கப்படும். நிலப்பகுதியில் ஹைட்ரோகார்பன் எடுப்பதற்கான திட்டத்திற்குச் சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்களிடையே கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த வேண்டும் என்பது சட்டவிதி. ஆனால் ஆழ்கடல் பகுதியில் கனிமங்களை எடுப்பதற்கான சுற்றுச்சூழல் அனுமதிக்கு கருத்துக் கேட்புக் கூட்டம் நடந்த வேண்டிய தேவை இல்லை என சட்டதிருத்தமும் செய்யப்பட்டுள்ளது. ஆக, கடல்சார் மக்களான மீனர்வகளைக் கேட்காமல் அவர்கள் வளத்தை அழிக்கும் திட்டம் தான் கடல்சார் ஹைட்ரோகார்பன் எடுப்புத் திட்டம். எனவே, இத்திட்டம் குறித்த பொது உரையாடலை உருவாக்க வேண்டிய தேவை இருக்கிறது.

இந்திய அரசைமப்புச்சட்டம் இந்நாட்டின் இயற்கைவள பயன்பாடு அனைத்து மக்களுக்குச் சமமாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. இதனை உறுதி செய்ய வேண்டியது நம் கடமை. •

---

கட்டுரையாளர்: வழக்கறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தது, நீலப் புரட்சி!



தமிழ் எழுத்தாளர்களில் மிக அரிதான வாழ்க்கைத் தடத்துக்கு உரியவர் ஜோ டி குருஸ். "புலம்பல்கள்" என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் எழுத்துப் பயணத்தைத் தொடங்கினார். பிறகு, தனது முதல் நாவலான, பாரம்பரிய மீனவர்களின் வாழக்கை பற்றிய "ஆழி சூழ் உலகு" மூலம் இலக்கிய உலகை திரும்பி மட்டுமல்ல, தீவிரமாகவும் பார்க்க வைத்தார். இந் நாவலுக்கு தமிழ்நாடு அரசு விருது கிடைத்தது. அடுத்து, பாய்மரக்கப்பல் மீனவர்களின் வாழ்க்கை மற்றும் வரலாற்றைப் பேசும் "கொற்கை" நாவல் வெளிவந்தது. சாகித்ய அகாதெமி விருதைப் பெற்றார். மூன்றாவதாக, வணிகக் கப்பல் வாழ்க்கையின் உள்ளோட்டத்தைப் பேசிய நாவல் "அஸ்தினாபுரம்" (காக்கை வெளியீடு), தொடர்ந்து, அவரது சுயதேடலான "யாத்திரை" (காலச்சுவடு), கடலோரப் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை குறித்த "கவனம் தேடும் கடலோரம்" (காக்கை), புத்தக விமர்சனங்களின் தொகுப்பான "படைப்புகளின் உரையாடல்" (ஜீவா பதிப்பகம்) என்பதாக அவரது படைப்புகள் ஒவ்வொன்றும் அடுத்தடுத்து தனிக் கவனத்தை ஈர்த்தன.

எழுத்து மட்டுமின்றி, கடலோர மக்களின் வாழ்வையும் சிக்கல்களையும், காட்சிப்படுத்தும் 4 ஆவணப்படங்களையும் இயக்கியிருக்கிறார். அவை: விடியாத பொழுதுகள், விடியலை நோக்கி, எனது சனமே... மற்றும் இனயம் - கள நிஜங்கள்.

கடலோர மனிதர்களின் வாழ்வியலை திரைக்கதையாக்கி, தனுஷ் நடிப்பில் பரத் பாலா இயக்கத்தில் வெளிவந்த "மரியான்" (2013) படத்துக்கு வசனம் எழுதியிருக்கிறார்.

தொழில்ரீதியாக, வணிகக் கப்பல் துறையில் உயர்நிலைப் பொறுப்புகளில் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து பணியாற்றி வரும் ஜோ டி குருஸ், இத்துறையில் இந்திய அளவில் முதன்மையான ஆளுமைகளுள் ஒருவர்.

இவையெல்லாம் அன்றி, முக்கியமான இன்னொரு பங்களிப்பு - இரண்டு ஆய்வறிக்கைகளை மத்திய அரசுக்கு அளித்திருக்கிறார். கடலோர வாழ்க்கை மற்றும் அதன் நிர்வாகம் குறித்த, சாத்தியமான பரிந்துரைகளை உள்ளடக்கிய "Coastal Governance" என்ற ஆய்வறிக்கையை மத்திய அரசின் கவனத்துக்கு 2014-ம் ஆண்டு அளித்திருக்கிறார். அதே ஆண்டில், "பாக் ஜலசந்தி பிரச்சினைகள்: மூலம், விளைவுகள், தீர்வுகள்" என்ற தலைப்பிலான இன்னொரு ஆய்வறிக்கையையும் அளித்திருக்கிறார்.

களநிலவரத்தின் நீரோட்டம் அறிந்து நேரடியாக நாட்டுக்குப் பலனளிக்கும் பரிந்துரைகளை தமிழ் எழுத்தாளர்கள் யாரேனும் அரசுக்கு இவ்வாறு அறிக்கையாக அளித்திருக்கிறார்களா என்று தெரியவில்லை.

இலக்கியம் மற்றும் கல்விக்கான பங்களிப்புக்காக 2024-ம் ஆண்டு பத்மஸ்ரீ விருதைப் பெற்ற எழுத்தாளர் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"நீலப் பொருளாதாரத்தில் சீனா மிக உன்னிப்பாக இருக்கிறது. இதர துறை பொருளாதாரத்துக்கு அளிக்கக்கூடிய அதே முன்னுரிமையை நீலப் பொருளாதாரத்துக்கும் அவர்கள் அளிக்கிறார்கள். வடகிழக்கு கடற்பகுதியில் எப்போதும் உறைபனி. தென்கிழக்குப் பகுதி மட்டும்தான் பயன்படக்கூடியது. ஆனாலும் உலகத் தரம் வாய்ந்த பத்து துறைமுகளில் ஏழு சீனாவில் இருக்கிறது. ஷாங்காய் துறைமுகம் பல பத்தாண்டுகளாக முதலிடத்தில் இருக்கிறது."**

---

பெருமையையும் பெற்றிருக்கிறார் ஜோ டி குருஸ். எழுத்து, இலக்கியம், களச் செயல்பாடுகள் வழியாக கடலோர மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியதற்காகவும் கடற்கரை சமூகம் பற்றிய புரிதலை இதர மக்களிடையே உருவாக்கியதற்காகவும் இந்த விருது அளிக்கப்பட்டிருக்கிறது. (இந்த ஆண்டு பாரதி ஆய்வாளர், முதுபெரும் எழுத்தாளர் சீனி. விஸ்வநாதனுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.)

மிகச் சமீபத்தில், "நீலப் பொருளாதாரம்" - கடல்சார் வாழ்வும் வாழ்வாதாரமும் (காலச்சுவடு) என்ற தலைப்பிலான புத்தகம் வெளிவந்திருக்கிறது. கடந்த ஐந்தாண்டுகளில், வெவ்வேறு இதழ்களில் அவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இது. "மீன்பிடித்தல், கப்பலோட்டம், கடலோர வாழ்வு, அதன் பொருளாதாரம் குறித்த எளிய புரிதலை வாசகர்களுக்கு ஏற்படுத்தலாம்" என்ற எண்ணத்தில் இந்தப் புத்தகத்தை வெளிக்கொணர்ந்ததாக அவரே முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

"தன்னளவில் நாட்டுக்கோ வீடுக்கோ எந்தப் பங்களிப்பையும் செய்யாதவர்களே அனைத்திலும் குறைகாண்கிறார்கள்" என்று அவர் முன்னுரையில் கூறியிருப்பது கவனத்திற்குரியது. பொதுவிலும், குறிப்பாக தமிழ் எழுத்துலகில் இப்படியான "பிரமுகர்களை" நாம் நிறைய பார்க்க முடியும்.

அதே முன்னுரையில், "எழுபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து நிற்கும் சுதந்திர இந்தியாவில், 2017இல் சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகமான பிறகும்கூடத் தனிமனித வருமான வரி நீக்கப்படவில்லை. காரணம், அரசிடமும் ஆட்சி செய்வோரிடமும் மனநிலையில் எந்த மாற்றமுமில்லை" என்கிறார். தமிழில், இப்படியான புரிதலுடன் வெளிப்படும் மைய நீரோட்ட எழுத்தாளர்கள் மிகக் குறைவு.

பொருளாதாரத்தில் எம்.ஏ. மற்றும் எம்.பில். பட்டம் படித்தவர் ஜோ டி குருஸ். அதுமட்டுமல்ல, கடல் பொருளாதாரம் சார்ந்த முனைவர் பட்ட ஆய்வுக்காக ஒரு பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து அதற்கான வேலைகளையும் முன்நகர்த்தியவர். நமது உயர்கல்வி "சிஸ்டத்தின்" அதிரவைக்கும் உள்முகம் கண்டு, திடுக்கிட்டுப் பின்வாங்கிவிட்டார்; அல்லது வெளியேறும் கட்டாயத்துக்கு உள்ளாக்கப்பட்டார் என்றும்கூட சொல்லலாம். இது பல்லாண்டுகளுக்கு முந்தைய, பழைய கதை. இன்று, தேசம் - அவருக்கு இலக்கியம் மற்றும் கல்விக்காக பத்ம விருது அளித்திருக்கிறது.

நிற்க. நீலப் புரட்சிக்கு வருவோம்.

நீலப் புரட்சி அல்லது நீலப் பொருளாதாரம் பற்றியதான *Blue Economy* என்ற சொல்லாடல், பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த பொருளாதார நிபுணர் குந்தர் பாலி 2010-ல் எழுதிய புத்தகத்துக்குப் பிறகுதான், பரவலாக அறியப்பட்டு பலதளங்களிலும் பேசப்பட்டு வருகிறது. மத்திய அரசிடம் இதுபற்றிய சிந்தனை சமீப ஆண்டுகளில் விரிந்திருக்கிறது.

இப்படியான நீலப் பொருளாதாரத்தை தமிழில் முன்வரிசை பேசுபொருளாக நகர்த்துவதற்கு ஜோ டி குருஸ், ஒரு எழுத்தாளராக, அரங்க உரையாளராக, சமூகச் செயற்பாட்டாளராக - தொடர்ந்து தீவிரமாகக் குரல் கொடுத்து வருகிறார்.

சமீபத்தில் ஒரு நண்பகலில் அவரது இல்லத்தில் சந்தித்த போது, நீலப் பொருளாதாரத்தை அடிப்படையில் நாம் எப்படிப் புரிந்துகொள்வது எனப் பேச்சைத் தொடங்கினேன்.

"பூமித் தாய் என்று சொல்கிறோம். ஆனால் அந்த பூமித் தாயையே கடல் ஒரு தாய் போல அரவணைத்துப் பாதுகாக்கிறது. நிலப் பரப்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கும் தட்பவெப்ப மாறுதல் உள்பட இந்தப் பூமியில் நமது வாழ்க்கை இயல்பாக நடந்து கொண்டிருப்பதற்கு கடல் முக்கியப் பங்களித்துக் கொண்டிருக்கிறது என்பது நம்மில் ஒருசிலருக்குத் தெரியும். ஒருசிலருக்கு தெரியாது. ஒருசிலருக்கு தெரிந்தாலும் தெரியாதது போலிருக்கிறார்கள். நிலத்தை எப்படி அறிந்து, ஆராய்ந்து பன்முகத்தன்மையோடு பயன்படுத்தினார்களோ அதுபோல கடலையும் பயன்படுத்த முனையும் காலம் தொடர்வதை நாமறிவோம்."

"எனினும், கடலில் ஆய்ந்தறிந்தது ஐந்து சதவிகிதம்தான் என்கிறார்கள். இந்நிலையில், நிலம் சார் பொருளாதாரம் கடந்து, கடல்சார் பொருளாதாரத்தை குறிவைத்து நாடுகள், தலைவர்கள், தொழில் நிறுவனங்கள் என எல்லா தரப்பினரும் தீவிரமாக இயங்கத் தொடங்கியிருப்பதையே நீலப் பொருளாதாரம் குறிக்கிறது. இது மீன்பிடித்தல் மட்டுமல்ல. கடலோர வாழ்க்கை, கப்பலோட்டம், பெட்ரோலியம், எரிவாயு போன்ற வளங்களை எடுக்கும் முயற்சிகள், இணையத் தொடர்புக்காக கடலுக்கடியில் எடுத்துச் செல்லும் நவீன கம்பி வடங்கள் உள்பட பலவும் அடங்கும்."

மத்திய அரசின் கவனம் சமீப ஆண்டுகளில் நீலப் பொருளாதாரம் மீது திரும்பியிருப்பதை கோடிட்டுக் காட்டும் ஜோ டி குருஸ், அது சார்ந்த முயற்சிகள், திட்டங்கள், நடவடிக்கைகள் எல்லாமும் பாமர மீனவர்கள் வரை அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்திச் சொல்கிறார்.

"முன்பு பல திட்டங்களில் ஒன்றாகப் பேசப்பட்டது, நீலப் பொருளாதாரம் என்ற சொல்லாடலுக்குப் பிறகு, தனிப் பொருளாதார வியூகமாக மாறியிருக்கிறது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்" என்கிறார்.

"கடல் சார் பயணங்களில், உண்மையின் அருகில் சென்று பார்ப்பதற்கான பல வாய்ப்புகள் எனக்கு கிடைத்திருக்கிறது. அந்த வகையில் ஒன்றை கவனப்படுத்த விரும்புகிறேன். நல்லதண்ணி தீவு, உப்புத்தண்ணி தீவு போன்று பல பெயர்களில் இராமேஸ்வரம் தீவுப் பகுதிகளுக்கு தெற்கில் 21 தீவுகள் இருப்பதாக நாமறிவோம். இவை ஒரு காலகட்டத்தில், பாரம்பரிய மீனவர்கள் வாழ்பகுதிகளாக, செழிப்பாக இருந்தன. இன்று நிலைமையே வேறு."

"பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வனத் துறை உள்பட கண்காணிப்பு அல்லது பாதுகாப்பு கேந்திர வளையத்துக்குள் வந்த பிறகு, இத்தீவுகளிலிருந்த பழங்குடிகள் அங்கிருந்து புறந்தள்ளப்பட்டு, அவை அதிகார வர்க்கத்தின் கொண்டாட்ட மையங்களாக மாறிவிட்டன."

பாரம்பரியமாகத் தொழில் செய்யும் மீனவர்களை ஒதுக்கிவிட்டு, புதிய பொருளாதாரப் பாதையை முன்னெடுத்துவிட முடியாது என்ற கருத்தை, அவர் கண்ட உண்மை நிலவரத்தை எடுத்துக்காட்டி, கவனப்படுத்துகிறார்.

பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி வரிசையில் நீலப் புரட்சியைப் பார்க்கலாமா?

"நமது இயற்கையான விவசாய முறை எல்லோருக்கும் தேவையான உணவை அளிக்கவில்லை என்ற நோக்கில், நமது விஞ்ஞானிகள் கொண்டு வந்தது - பசுமைப் புரட்சி. ஆனால் நமது பசியாற்றிட வந்த புரட்சி, நமது நிலத்தை மலடாக்கிவிட்டது."

"பால் வளத்தைப் பெருக்கிய வெண்மைப் புரட்சி குஜராத்தில், டாக்டர் குரியனால் முன்னெடுக்கப்பட்டது. சிறு, குறு பால் உற்பத்தியாளர்களையும் இணைத்து அத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அதுதான் அமுல். இன்றும் வெற்றிகரமாக இயங்கி வருகிறது."

"பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி - இரண்டிலிருந்தும் நமக்கு வெவ்வேறு படிப்பினைகள் கிடைத்திருக்கின்றன. இதனடிப்படையில் சாதக, பாதக அம்சங்களை மதிப்பிட்டு, நீலப் புரட்சியை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அனுபவப் பாடம் என்பதே நமது அதிகார வர்க்கத்திடம் இல்லை என்பதை பெரிய பிரச்சினையாக கருதுகிறேன்."

நீலப் பொருளாதாரம் சார்ந்த சாத்தியங்களை விரித்துப் பேசுகையில் ஜோ டி குருஸ் மேலும் சொல்கிறார்:

"இந்தியாவுக்கு 8118 கி.மீ. நீளமுள்ள கடற்கரை உண்டு. உலகிலேயே பயன்படக்கூடிய மிக நீளமான கடற்கரை, அதாவது வெப்ப மண்டலத்தில் இருக்கக்கூடிய கடற்கரை என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் ரஷ்யா, சீனா போன்ற நாடுகளுக்கு பெரும் கடற்கரைப் பகுதி உறைபனிப் பகுதியாகத்தான் இருக்கிறது. அதையும் கடந்துதான் அவர்கள் கப்பல் தொழிலில் கோலோச்சிக் கொண்டிருக்கிறார்கள்."

"கடற்பகுதிகளைக் கொண்ட 13 இந்திய மாநிலங்களில், தமிழ்நாடு 1075 கி.மீ. நீளமுள்ள கடற்கரையைக் கொண்டது. நமது பாரம்பரிய மீனவர்கள் புழங்கக்கூடிய - கரைக்கடலும் அண்மைக் கடலும் இணைந்த *Continental Shelf* என்று சொல்லக்கூடிய பகுதி நமக்கு பெரிய சாதகம் என்று சொல்லமுடியாது. காரணம், தென் தமிழகத்தை வடமேற்கு இலங்கையின் தீவுகள் முட்டி நிற்கிறது. அதுதான் மீனவர்கள் பிரச்சினைகளுக்கெல்லாம் முக்கியக் காரணம். அதே நேரத்தில் சுனாமி நடந்தபோது, அப்பகுதிகள் பாதுகாகக்கப்பட்டதற்கும் அதுதான் காரணம். அண்டை மாநிலமான கேரளத்தைப்போல, தமிழ்நாட்டுக்கு கடற்பகுதி மிகுந்த பயனுள்ளதாகச் சொல்வதற்கில்லை. காரணம், இயற்கையான அமைப்பு அப்படி."

"இதற்குள் நமக்கு என்னவெல்லாம் சாத்தியம்..? மீன்பிடிப்பு மட்டுமல்ல, பல வாய்ப்புகள் நம் வசம் உள்ளன. மிகப் பெரிய வாய்ப்பை அரசு இன்னும் முன்னெடுக்காமல் இருக்கிறது. கரைக் கடலில், முட்டளவு ஆழத்தில் விளையக்கூடிய ஒருவகை கடற்பாசி இருக்கிறது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது. இது தமிழ்நாட்டு கடலோரங்கள் முழுவதும் பரவலாக்கப்பட்டால், கடல் விவசாயம் நடக்கும்."

"அதுபோல, நெரிசலும் விபத்துகளும் மிகுந்த சாலைப் போக்குவரத்துக்குப் பதிலாக கடல்வழிப் போக்குவரத்துக்கான சாத்தியங்களும் நமக்கு உண்டு."

"இராமேஸ்வரம், நாகப்பட்டினம், காரைக்கால் துறைமுகங்களிலிருந்து பொருள்களை சாலை வழியாக இல்லாமல், கடல்வழியாக சென்னை துறைமுகத்துக்கு கொண்டு வரலாம். சென்னையிலிருந்து புதுவைக்கு, புதுவையிலிருந்து நாகப்பட்டினம், அங்கிருந்து இராமேஸ்வரம் - அங்கிருந்து இலங்கையை சுற்றி வர முடியாது - வடகடல் பகுதியில் ஒரு இறங்கு துறை - *Jetty* அமைத்து, அங்கிருந்து தூத்துக்குடி, கன்னியாகுமரி செல்வது போல நீர்வழிப் போக்குவரத்துகளை திட்டமிடலாம்."

இந்த சாத்தியங்கள் இருந்தும் ஏன் இதுவரை நடக்கவில்லை?

"ஆட்சிகள் மாறும்போது, ஒருவர் மேற்கொண்ட திட்டத்தை இன்னொருவர் கண்டுகொள்ளாமலிருப்பது இன்றைய நிலைமைக்கு முக்கியக் காரணம். திட்டங்களில் தொடர்ச்சி இல்லை."

இன்றைய சூழலுக்கு முற்றிலும் பொருந்தாத பிரிட்டிஷ் காலத்து சட்டங்கள் இன்னொரு முக்கியத் தடை என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

உலக அளவில், நீலப் பொருளாதாரம் சார்ந்து இந்தியாவுக்கும் பிற நாடுகளுக்கும் உள்ள வாய்ப்புகள் குறித்தும் ஜோ டி குருஸ் பல முக்கியமான அம்சங்களை நமது கவனத்துக்கு முன்வைக்கிறார்.

"நீலப் பொருளாதாரத்தில் சீனா மிக உன்னிப்பாக இருக்கிறது. இதர துறை பொருளாதாரத்துக்கு அளிக்கக்கூடிய அதே முன்னுரிமையை நீலப் பொருளாதாரத்துக்கும் அவர்கள் அளிக்கிறார்கள். வடகிழக்கு கடற்பகுதியில் எப்போதும் உறைபனி. தென்கிழக்குப் பகுதி மட்டும்தான் பயன்படக்கூடியது. ஆனாலும் உலகத் தரம் வாய்ந்த பத்து துறைமுகளில் ஏழு சீனாவில் இருக்கிறது. ஷாங்காய் துறைமுகம் பல பத்தாண்டுகளாக முதலிடத்தில் இருக்கிறது."

"நாம் வெப்ப மண்டலத்தில் இருக்கிறோம். இயற்கையாகவே இந்தியாவுக்கு சாதகமான கடற்பகுதி இருக்கிறது. இந்தச் சூழ்நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழப் புரிந்து கொண்டு, உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டியபொறுப்பு ஆட்சியாளர்களுக்கு இருக்கிறது."

"நீலப் பொருளாதாரம் போன்ற புதிய வாய்ப்புகளுக்கான பொருளாதாரத் திட்டங்களை தீவிரப்படுத்த வேண்டுமெனில், மத்திய - மாநில அரசுகளிடையே சுமூக உறவும் ஒருங்கிணைப்பும் மிக அவசியம்" என்று கூடுதலாக வலியுறுத்துகிறார்.

"இந்தியாவில் 13 பெரிய துறைமுகங்களும் 200-க்கும் மேற்பட்ட சிறிய துறைமுகங்களும் இருக்கின்றன. இருந்தும்கூட, நாம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யும் சரக்குகளில் 97 சதவிகிதத்தை வெளிநாட்டுக் கப்பல்கள்தான் சுமந்து வருகின்றன அல்லது செல்கின்றன. நீலப் பொருளாதாரம் வழியாக இந்தியா எத்தனை பெரிய வாய்ப்பை கைக்கொள்ள முடியும் என்பதற்கு இதுவே சான்று" என்று அவர் கூறுவது, நம்மை நிறைய யோசிக்க வைக்கிறது.

"அரசு அதிகாரிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளை மட்டும் செய்கிறார்கள். அது கடந்து, கள அறிவுடன்கூடிய தேசத்தின் முன்னேற்றம் குறித்த கற்பனைக் கண்ணோட்டம் வேண்டும்" என்கிறார்.

நமது "சிஸ்டம்" பற்றி பல கோணங்களிலும் ஜோ டி குருஸ் ஆழ்ந்து யோசிக்கிறார் என்பது புரிகிறது.

இன்னொரு முக்கியமான கேள்வியையும் அவரிடம் கேட்டேன்.

கடலில் கொட்டப்படும் கழிவுகள் 2017-ல் 1 நிமிடத்துக்கு ஒரு லாரி என்பதிலிருந்து, 2030-ல் நிமிடத்துக்கு 2 லாரி என்று அதிகரித்து 2050-ல் நிமிடத்துக்கு 4 லாரியாக உயரும் என்று மதிப்பிடப்படுகிறது. அதாவது கடலில் கலக்கும் நெகிழிக் கழிவுகள் மீன்களைவிட அதிகமாக இருக்கும் என்கிறார்கள். நீலப் புரட்சிக்கு பெரும் தடையாக இருக்கப் போகும் இந்த சவாலை எப்படி எதிர்கொள்வது?

"சமூக அக்கறையுள்ள குடிமகன்களாக நாம் அனைவரும் உயர வேண்டும். வாழ்வதன் மூலம் சமூகத்துக்கு என்ன பங்களிக்கிறோம் என்ற சிந்தனை வேண்டும். இது கடலோரப் பகுதி மக்களுக்கு மட்டுமின்றி சமவெளிப் பகுதியில் வாழும் மக்களுக்கும் வேண்டும். கடலை வெறும் குப்பைத் தொட்டியாகப் பயன்படுத்தப் போகிறோமா... அல்லது ஒரு தாயாக பேணிப் பாதுகாக்கிறோமோ என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பொறுப்பு இருக்கிறது. அந்த தனிமனித உணர்வுகள் இணைந்து ஒரு சக்தியாக மாறும்."

கடைசியாக ஒரு கேள்வி.

நீலப் பொருளாதாரத்தை வேகமாக முன்னெடுத்துச் செல்வதற்கு நமது மத்திய -மாநில அரசுகளுக்கு நீங்கள் பரிந்துரைக்கும் உடனடிச் செயல்திட்டங்கள் என்னவாக இருக்கும்?

"சர்வதேச அளவில் நீலப் பொருளாதாரம் குறித்து நடக்கும் ஆய்வுகள்... அதன் அடிப்படையில் இந்தியச் சூழலை எவ்வாறு கையாள்வது என்பது பற்றிய தெளிவு வேண்டும். இதற்காக அமைக்கப்படும் தனிக் குழுவில் ஆட்சியாளர்கள், அதிகாரிகள், அரசியல்வாதிகள், படிப்பாளிகள் மட்டுமின்றி சாதாரண மீனவர்களும் இடம்பெற வேண்டும். இவ்வாறு பன்முகத் தன்மை கொண்ட குழுவின் கண்காணிப்பில் முனைப்புடன் செயல்பட்டால், உலகத் தரத்தில் நீலப் பொருளாதாரத்தை இந்தியா முன்னெடுத்துச் செல்ல முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்."

ஜோ டி குருஸ், முதன்மை மற்றும் முன்வரிசை ஆட்சியாளர்களின் கவனத்திற்கு பல முக்கியமான செயல் நிரல்களை முன்வைத்திருக்கிறார்.

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உள்ள பொறுப்பையும், அவற்றின் ஒட்டுமொத்த குவிமையம் எவ்வாறாகப் பலன் தரும் என்பதை முன்வைத்து உணர்த்தியிருக்கிறார்.

பல புரட்சிகளைக் கண்ட மண் இது. ஏதேனும் ஒரு புரட்சியை - கடைசியாகப் பார்த்து நாளாகிவிட்டது.

நடக்கட்டும், நீலப் புரட்சி.

விரிந்த உரையாடலுக்கான காணொளிக்கு, காண்க:
https://www.youtube.com/@kudhirvirtual

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் அறிமுகம் | பொன். தனசேகரன்

## மனிதர்நோக மனிதர் பார்க்கும் வாழ்க்கை

# அமரந்த்தாவின் சிறுகதைகள் காட்டும் பெண்கள் உலகம்



"பெண் இயக்கம் ஒரு பறக்கும் பறவையாக இருக்கவில்லை. அது கூண்டு பெரிதாகவும் அழகாக வேண்டும் என்ற பறவை. ஒரு சாதுப்பறவை. கொஞ்சம் வெளியே மறந்தாலும் கூண்டை நோக்கி மறக்காமல் வந்த பறவை. இத்தனை ஆண்டுகளில் அலைவீச்சுகளுடன், இந்த கூட்டு திரும்பும் பறவையின் சித்திரத்தை மனதில் கொண்டால்தான் எழுபதுகளின் இறுதியில் தொடங்கப்பட்ட பெண் உரிமை இயக்கக் குழுக்களின் மாறுபட்ட கொள்கை வீச்சும் அவற்றின் முன் நிற்கும் பிரச்சினைகளின் பிரமாண்டமும் புரிய வரும்"

இப்படி 'கூண்டு கேட்ட பறவைகள் -தமிழ்நாட்டுப் பெண் இயக்கத்தின் ஆரம்பங்கள்' என்ற கட்டுரையில் (மே, 1981 படிகள்) க்ராந்தி என்ற பெயரில் அம்பை எழுதினார்.

அகம் புறம் என்று வாழ்க்கையை களவொழுக்கம் கற்பொழுக்கம் என்று அன்பை மிகவும் சௌகரியான கூறுகளாகப் பிரித்துக் கொண்டது தமிழ் கலாச்சாரம் என்பதைக் குறிப்பிட்டுள்ள அவர், தானே சுமத்திக் கொண்ட இத்தகையக் கூறுபோடும் தன்மை பெண்களுக்கென்று குறிப்பிட்ட வட்டத்தையும் ஆண்களுக்கென்று குறிப்பிட்டவட்டத்தையும் உருவாக்கியதில் ஆச்சரியமில்லை. இலக்கியப் படைப்புகள் பலவும் இத்தகைய மதிப்பீடுகளையே வெளியிட்டன என்கிறார் அவர். இந்தச் சூழ்நிலையில் பெண்களின் வாழ்க்கை நிலையை பெண்களே எழுதிய பல கதைகளும் நாவல்களும் இருக்கின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றில் அதற்குத் தனி முக்கியத்துவமும் இருக்கிறது.

எழுபதுகளில் தமிழ் இலக்கிய உலகில் தீவிர எழுத்துகளுக்கும், வித்தியாசமான கதைக்களங்களும், புதிய படைப்புகளுக்கும், புதிய பார்வைகளுக்கும், புதிய கருத்துகளுக்கும், சிந்தனைப் போக்குகளுக்கும், சோதனை முயற்சிகளுக்கும் சிறுபத்திரிகைகள் இடம் அளித்தன. வெகுஜன ஊடகங்கள் வெளியிட தயங்கும் கதைகளுக்கு சிறுபத்திரிகைகள் களம் அமைத்துக் கொடுத்தன. இந்த சூழ்நிலையில், வெகுஜன ஊடகங்களில் அங்கீகாரத்தைத் தேடாமல், 80களில் சிறுபத்திரிகைச்சூழலில் வளர்ந்த எழுத்தாளர் அமரந்தா.

1983இல் கார்ஸியா மார்க்வெஸிற்கு நோபல் பரிசு கிடைத்த காலகட்டத்தில் 'செவ்வாய்க்கிழமை பகல் தூக்கம்' என்ற கதையை இவர் தமிழில் மொழிபெயர்த்து அது 'படிகள்' இதழில் வெளியானது இன்றும் எனது நினைவில் இருக்கிறது. லத்தீன் அமெரிக்கச் சிறுகதைகளை மட்டுமல்ல அரசியல் ஆக்கங்களையும் தமிழில் கொண்டு வந்ததில் அவரது பங்கு முக்கியமானது.

1983இல் 'கணையாழி' நடத்திய தி. ஜானகிராமன் நினைவுக் குறுநாவல் போட்டியில் வெற்றி பெற்ற 'சுற்றத்தார்' குறுநாவலிலிருந்து கடந்த 40 ஆண்டுகளில் தமிழ் இலக்கியத் துறையில் மொழிபெயர்ப்பு, கதைகள், கட்டுரைகள் என்று பல்வேறு தளங்களில் தொடர்ந்து இயங்கி வருபவர். இவரது சிறுகதைகள் 'வலி' என்ற பெயரில் 2017இல் வெளியாகி இருக்கிறது. அதைத் தொடர்ந்து, 'மீதம் இருக்கும் மனிதம்' என்ற பெயரில் அவரது 20க்கு மேற்பட்ட கதைகள் தொகுக்கப்பட்டு தற்போது புத்தகமாகியுள்ளது.

"பெண்களின் இருத்தலுக்குப் பாதுகாப்பான அமைப்பு என்ற பொய்யைச் சொல்லிச் சொல்லி குடும்பம் என்ற லாடத்தை வலுக்கட்டாயமாக ஆணி அறைந்து திணித்து விடுகிறது சமூகம்" என்று கூறும் அமரந்தா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த குடும்ப அமைப்பு பெண்கள் மீது நிகழ்த்தும் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு குறைவின்றி கடமையாற்றி குடும்பத்தை நடத்திச் செல்ல வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது" என்கிறார். தனது வாழ்க்கை அனுபவங்களுடன், தானறிந்த, தன்னைச் சுற்றியுள்ள பெண்களின் சோகங்கள்தான் அவரது கதைகளின் மையப்புள்ளி.

அவரது சிறுகதைகளின் மாந்தர்கள் சென்னை போன்ற பெருநகரங்களில் வாழும் நடுத்தர அல்லது அதற்கும் கீழாக உள்ள விளிம்பு நிலைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள். அவர்களது வாழ்க்கைத் துயரங்கள், வலிகள், உணர்வுகள், துரோகங்கள், ஏமாற்றங்கள் கதைகளாகி விடுகின்றன. அவரது 'சுற்றம்' கதை, சென்னை நகரில் திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் போன்ற பகுதிகளில் உள்ள ஒண்டிக் குடிதனங்கள் பற்றிய வாழ்க்கைச் சித்திரம். பால்கட்டு, பூப்பு, சும்மா, ஹார்ட் பேசண்ட், புவனாவின் கடைசிக் கடிதம் போன்ற கதைகளில் வரும் பெண்களின் சோக வாழ்க்கையும் எதிர்கொள்ளும் துயரங்களும் நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கும். தனித்து வாழும் பெண்களை அவர்களது விருப்பமில்லாமல் பாலியல் உறவு கொள்ள முயலும், சமூகத்தின் நல்லவர்கள் போல உலாவும் போலி மனிதர்களின் முகமூடிகளைக் கிழித்தும் போடுபவை நிஜநாடகம், பீடா போன்ற கதைகள்..

குடும்பத்துக்காக திருமணத்தைத் தள்ளிப்போடும் பெண்கள், குடும்பச் சுமையை ஏற்று நடத்தும் பெண்களைத் திருமணம் செய்வதற்காக தங்கமனசுக்கார ராஜகுமாரனுக்காகக் காத்திருக்கும் பெண்கள், தனது கஷ்டங்களை சக தோழியிடம் பகிர்ந்து கொள்ள சென்றால் அவரது வாழ்க்கையிலும் அதுபோன்ற துயரம் (தெளிவு), எப்பாடுபட்டாவது பட்டம் பெற்று விட வேண்டும் என்ற பெண் படும் படாதபாடுகள், வீட்டு வேலை சுமையுடன் குடும்பத்துக்காக வெளியில் வேலைக்குச் செல்ல வேண்டிய சுமையையும் தாங்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளான பெண்கள், கணவர்களின் மனிதநேயமற்ற செயல்பாடுகளால் துயரப்படும் பெண்கள்... இப்படி நடுத்தர வர்க்கத்தினர் சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் படும் அவதிகளையும் அவஸ்தைகளையும் நமது மனதில் தைக்கும்படி சொல்கின்றன அமரந்த்தாவின் கதைகள்.

'சிதைவு' கதையில் சொல்வது போல, "காலம் இரக்கமற்றது. ஓட்டமாக ஓடிக் களைத்துவிட்டேன். சற்று நின்று பார்த்தால் கமறல் எடுக்கும் தூசும் ஒட்டடையும் படித்து இடிந்து கிடக்கிறது. மனக்கோட்டை. இடிபாடுகள் நடுவே அலையும் சுடராக சின்னஞ்சிறு இதயம் தனது இருப்பைக் காட்டிக் கொண்டிருக்கிறது."

கணவனின் கொடுமையும் துரோகத்தையும் தாளாமல் திருமண பந்தத்திலிருந்து விடுதலைப் பெற விரும்பும் பெண் படும் அவஸ்தைகளைச் சுட்டிக்காட்டுகிறது உடைப்பு. அதை இயல்பாகப் போகிற போக்கில் எளிதாகச் சொல்லிக் கடந்து விடுவது என்பதுதான் அவரது கதைகளின் தனித்துவம். ஆனால் அந்தக் கதைகள் வாசகர்களின் மனசாட்சியை உலுக்கிவிடுகின்றன.

'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே' கதையில் நாட்டு நடப்பு நிகழ்வுகளை மட்டுமே சொல்லி நமக்குக் கிடைத்துள்ள சுதந்திரத்தின் நிகழ்கால யதார்த்தத்தைப் புரிய வைக்கிறார். திருவையாறு தியாராஜர் சமாதியில் பெங்களூர் நாகரத்தினம்மாவுக்கு இழைக்கப்பட்ட துரோகம் குறித்து, 'துரோகம்' கதையில் சொல்லிச் செல்கிறார். இதைபோல மொழிபெயர்ப்பாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைச் சுட்டிக்காட்டும் கதை 'யேவாரம்'. அவரது மற்ற கதைகள் மாதிரி இல்லாமல், வேறுபட்ட கதைக் களங்களில் இயங்கும் இந்த மூன்று கதைகளும், இந்த சமூகத்தில் நிலவும் அவலங்கள் குறித்த தார்மீக கோபங்களின் வெளிப்பாடு .

இவரது கதைகளில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய மற்றொரு அம்சம், அமரந்த்தாவுக்கு இசையில் இருக்கும் ஆர்வம். சாமானிய மக்களின் கதைகளில் கதையின் போக்கோடு எங்கே வந்து எங்கே மறைகிறது என்று நமக்குத் தெரியாமல் அவரது இசை அனுபவம், மெல்லிய தென்றல் காற்றைப் போல மனதை வருடிச் சென்றுவிடும்.

"மிக மெல்லிய ஸ்தாயியில் ஹரிப்ரசாத்தின் குழலுக்கு ஏற்ப விரல்களை தப்லாவில் பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாமல் ஒரு நிலையில் வைத்து ஜாகீர் ஹுசைன் மிகமிக மெல்லிய ஒலி எழுப்ப, மறுபடி அதைவிட மெலிதாக குழலோசை வர, சளைக்காமல் ஜாகீர் இன்னும் மென்மையாக ஒலியெழுப்ப, 'ஆஹா' என்று பெரிதாக ரசிகர்களின் குரல் வந்தது. தொடர்ந்து இன்னும் சன்னமாக குழல் கொஞ்ச, கைகளை உயரத் தூக்கிய நிலையில் ஜாகீரின் முகத்தில் ஆச்சரியமும் குறும்பும் கலந்த சிரிப்பு குமிழியிட்டது. குழலிசைக்குப் பதிலாக நிறைந்தது ரசிகர்களின் கைதட்டல் ஓசைதான். என்ன நடந்தது என்று புரியவே பல வினாடிகள் ஆயின. கைதட்டலின் நேரக்கணக்கை அளந்து ஜாகீர் ஹுசைன் கைகளை அந்தரத்தில் உறையவிட்டுவிட்டார். இதுபோதாதென்று வினாயக்ராம் வேறு. அப்படியொரு குதியாட்டம். கடம் எத்தனை கணீரென்று ஓசைஎழுப்பும் என்று அன்றுதான் முதல் முறையாக உணர்ந்தேன். ஜமாயத்துவிட்டார் மனுஷன்." 'தொடரும் கதை'யில் வரும் இந்த வரிகளை ஒரு தேர்ந்த இசை ரசிகரால்தான் எழுத முடியும் என்பதைப் படிக்கும்போதே நாம் புரிந்து கொள்ள முடியும்.

வலி என்பது நோயின் அறிகுறி. அந்த அறிகுறியைக் கூட கண்டும் காணாமல் இந்த சமூகம் இருப்பதைத்தான் இவரது கதைகள் சுட்டிக்காட்டுகின்றன. அவரது கதைகளில் வரும் நிகழ்வுகளையும் அன்றாட வாழ்வில் நாம் பார்த்து கடந்து செல்லும் பல்வேறு தரப்பட்ட பெண்களையும் சந்திக்கிறோம். படோபம் இல்லாத, எளிய உரையாடல் மூலமாகக் கதையை நகர்த்திச் செல்கிறார். அதன் மூலம் அந்தப் பெண்களின் வலியை நமக்குக் கடத்தி விடுகிறார்.

'வலி' கதைத் தொகுப்புக்கு ஆர். வத்ஸலா எழுதிய அணிந்துரையில் குறிப்பிட்டதைப் போல, "பெண்களின் வலிகளை புலம்பலோ ஆக்ரோஷமோ இல்லாமல், அதேசமயம் வாசகர் மனதைப் புரட்டிப் போட்டு வயிற்றைப் பிசைய வைக்கும் வகையில் எழுத்தில் வடித்திருக்கிறார்." "அமரந்த்தாவின் கதைகள் மிக ஆழமான நதியோட்டத்தைப் போல அமைதியாகப் போகிற போக்கில் பல விஷயங்களை நமக்கு உணர்த்தி நம் நிம்மதியைக் கெடுத்துச் செல்கின்றன"

"ஆண்களில் நல்ல மனிதர்கள், பெண்ணை



**'காக்கைச் சிறகினிலே' மாத இதழுக்கு படைப்புகளை அனுப்பும் எழுத்தாளர்களின் கவனத்துக்கு:**

**கட்டுரை மற்றும் சிறுகதை 1200 வார்த்தைகளுக்கு மிகாமலும் நூல் அறிமுகம், நூல் மதிப்புரை 600 வார்த்தைகளுக்கு மிகாமலும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.**

**பக்கங்களின் அளவு கருதி பல படைப்புகளை உடனுக்குடன் அந்தந்த இதழில் வெளியிட முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.**

**-ஆசிரியர்**

பண்டமாக அல்லாமல் மனுசியாக மதிப்பவர்கள், அன்பு செலுத்துபவர்கள் இல்லையா என்ற கேள்வி எழுவது கேட்கிறது. இருக்கிறார்கள். எல்லையற்ற வானில் அவ்வப்போது கண் சிமிட்டும் நட்சத்திரங்களைப் போல, இங்கொன்றும் அங்கொன்றுமாக, கைக்கெட்டாத் தொலைவில் எங்கோ சிலர்" என்கிறார் அமரந்த்தா.

எந்த பிரச்சாரமும் இல்லாமல், புலம்பலும் இல்லாமல், சமூகத்தில் புரையோடிப்போன முரண்பாடுகளை இயல்பான போக்கில் எளிமையாக, ஆனால் அதேசமயம் ஆழமாகவும் தீவிரமாகவும் அமரந்த்தா எழுதிய கதைகள், வாசித்து முடித்த பிறகும் நம்மிடம் அதிர்வலைகளை ஏற்படுத்தி நமது பார்வையையும், நமது சிந்தனைப் போக்குகளையும் செயல்பாடுகளையும் கேள்விக்குள்ளாக்கிறது. இதுதான் அவரது கதைகளின் வெற்றி.

**மீதம் இருக்கும் மனிதம், அமரந்த்தா**
**போதிவனம் வெளியீடு, விலை ரூ.330**

*கட்டுரையாளர்: மூத்த பத்திரிகையாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை | ஜெ.பார்வதி

# தாயே
# தாரக மந்திரம்



பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு (358)

விடியற்காலை ஊட்டிக் குளிர் சில்லென்று அடிக்க சலசலவென ஓடையின் குரல் கேட்க தொலைவில் பனிமூட்டத்தை சன்னலில் வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் பூந்தளிர். 15 வயது சிறுமி.எழிலோவியம். எல்லையில்லா காவியம்.

தளிர் என்னமா ஆச்சு. உடம்புக்கு ஏதேனும் பிரச்சினையா என்று கேட்டவாறுஅருகில் வந்து நின்றாள் அன்னை அபூர்வா.

அபூர்வா பேரில்தான் அபூர்வம்.மத்தபடி 37 வயதில் வாழ்வில் படவேண்டிய அனைத்து சிரமங்களையும் பட்டு ஓய்ந்துப் போய் ஒடுங்கிப் போயிருந்தாள்.ஒட்டிப் போன கன்னம் ,ஒடிசலான தேகம்.

தினமும் கொத்தனார் வேலையில் செங்கல் தூக்கும் சுமைதாங்கி. 22 வயதில் காதலனை நம்பி வீட்டை விட்டு ஓடி வந்து வயிறு நிரம்பி கைவிடப்பட்டவள்.பிறந்த வீட்டுக்குப் போக அச்சப்பட்டு ஊட்டியிலே கூலி வேலை செய்து இருந்து விட்டாள்.

பக்கத்து வீட்டு சோலையம்மாள் தயவில் பிள்ளைப் பெற்று 15 வயது வரை பூந்தளிர் ஆளாக்கி விட்டாள்.இனிமேல் என்ன வழி என எண்ணாமல் கடவுள் விட்ட வழி என வாழ்ந்துக் கொண்டிருப்பவள்.

தளிரு என தோளை உலுக்கிய பின் சுய நினைவுக்கு வந்தாள் தளிர். பொழுதும் சூரியனின் கரங்களால் வெளிச்சமாகிக் கொண்டிருந்தது. ஒன்றும் இல்லை அம்மா என குளியறைக்கு சென்று தாழிட்டுக் கொண்டாள். என்னவாயிற்று இவளுக்கு என மனதில் எண்ணியவாறு சமைக்கச் சென்றாள் அபூர்வா.

மனதிற்குள் சுமையாய் அழுத்திக் கொண்டிருக்கும் வேதனையை அழுதுத் தீர்த்தாள். காதல் வயப்பட்டிருந்தாள். நல்லது கெட்டது புரியாத வயது.அப்பா இல்லாத வளர்ப்பு. தீவினை தெரியாத நிலை. இனக்கவர்ச்சிதான் உண்மைக்காதல் இதுவல்ல என உணர்த்த ஆளில்லை.

பள்ளிக்கு அருகே கடை வைத்திருக்கும் 20 வயது காளையாய் சிலிர்க்கும் யுகேந்திரன் பேச்சு வீச்சால் மயங்கிப் போயிருந்தாள்.நாளை விடியற்காலை ஓடிப்போக நாள் குறித்து இருந்தான். நான் வேணும் எனில் வா என குழப்பிவிட்டிருந்தான்.

அம்மா தான் பட்ட கஷ்டங்களை எல்லாம் சொல்லியிருந்தாலாவது புரிந்திருக்கும்.தன் கஷ்டம் சொல்லி மகள் வேதனைப்பட வேண்டாம் என அபூர்வா சொல்லாமல் மறைத்த விதி சிரித்தது.

முகம் கழுவி வெளியே வந்தாள் தளிர். முகம் தெளிந்திருந்தது. நமக்குத் தேவை யுகேந்திரன். இராணி மாதிரி வைத்திருக்கிறேன் என்கிறான். இதைவிட வேறு என்ன வேண்டும் என மனதில் நினைத்தவாறு அம்மா பசிக்கிறது என்றாள்.

அம்மா குரல் எதிரொலி இல்லாததால் வெளியே எட்டிப் பார்த்தாள். அம்மா சோலையம்மா பாட்டியிடம் பேசிக் கொண்டிருந்தாள்.

“நீ வேணுமின்னா பாரு சோலையம்மா! என் தளிர் நன்கு படித்து அரசாங்க வேலைக்குப் போய் என்னை நன்றாக பார்த்துக் கொள்வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் எதிர்காலமே அவள்தான்". என்றாள் அபூர்வா.

"ஏண்டி அவன் அப்பன் புத்தி அவளுக்கு இருந்தா என்ன பண்ணுவ. போடி போக்கத்தவளே. எவ்வளவோ சொன்னேன் கருவை கலைச்சிட்டு உனக்கு ஒரு வாழ்க்கை அமைச்சிக்கோனு. அந்த கடன்காரன் கூட வாழ்ந்த 2 மாசம் வாழ்க்கைக்கு 15 வருசம் சன்னியாசியா வாழ்ந்திட்ட" என சோலையம்மா வேதனையைக் கொட்டினாள்.

"சோலையம்மா! என் இரத்தம் அவள். அவளுக்கு சோறு மட்டும் போட்டு வளர்க்கல. என் கண்ணீரையும் சேர்த்துதான் போட்டு இருக்கிறேன். அவள் என்னை நல்லாப் பார்த்துக் கொள்வாள்" என்றாள் அபூர்வா.

காதால் கேட்ட தளிர் செருப்படி பட்டவாறு நிமிர்ந்தாள். 'என்ன காரியம் செய்ய இருந்தேன் நான் அப்பன் ஏமாத்தினாலும் என்னை அழிக்காமல் ஆளாக்கிவிட்ட தாய் மனம் எங்கே? நன்றிக் கடன் தீர்க்காமல் காதல் மாயையால் ஓடிப்போக எண்ணிய நான் எங்கே' சவுக்கடிகள் எழுந்தன தளிருக்கு.

"அம்மா பசிக்கிறது சோறு போடு" என அன்னையின் கரங்களை பிடித்தவாறு நின்றாள் தளிர். கரங்களுக்குள் இருந்த இறுக்கம் சொல்லியது.

சாகும்வரை கரங்கள் விலகாது காக்கும் உன்னை என் அன்னையே. மாயச்சூழல் மறைந்துவிட்டது. மதி தெளிந்துவிட்டது.

'தாயே என் தாரக மந்திரம்' என மந்திரப் புன்னகை பூத்தாள் பூந்தளிர்.

●

---

கதாசிரியர் : எழுத்தாளர்

# மடல் திறப்பு

**கா**க்கை ஒவ்வொரு மாதமும் அரிய பல தகவல்களுடன் சிறகடிக்கிறது. பகத், சுகதேவ், ராஜகுரு வரிசையில் கிஷோரிலால் இருந்ததை பற்றி தேடித் தேடி கிடைத்த தகவல்களை நமக்கு அளிக்கும் எட்வின் அவர்களுக்கு பாராட்டும் நன்றியும்.சாமி எல்லாம் இருக்கும் கோயில் என்ற சிறுவனின் பதில் மதவாதத்திற்கு சாட்டையடி. துருவன் அவர்களது கட்டுரையின் மூலம் உலகை கலக்கும் சீனாவின் deep Seek பற்றி விரிவாக அறிய முடிகிறது.

**லலிதா மோகன், சென்னை**

**இ**ந்தியத் திருநாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழகத்தின் செயல்பாடுகள் பெருமளவில் இருட்டடிப்பு செய்யப் பட்டுள்ளதை கொஞ்சம் கொஞ்சமாக வெளிக்கொணர்ந்து வந்து கொண்டுள்ளோம் என்பதில் மாபெரும் மகிழ்ச்சி ஏற்பட்டாலும், வெளிக்கொணரப்படும் நிகழ்வுகள் ஒரு இனத்தைச் சார்ந்த தலைவர்களை மட்டும் முன்னிறுத்தாமல் அனைத்து இன மக்களையும் உள்ளடக்கியதாகத்தான் இருக்க வேண்டுமென்ற அக்கறையையும் புறந்தள்ளிவிட முடியாதென்றே எண்ணுகிறேன். ஏனென்றால் போராட்டம் என்பதே அனைத்து மக்களையும் உள்ளடக்கியதாகத்தானே இருக்க முடியும். வரலாற்று நாயகர்களை குறிப்பாக விடுதலைப் போராட்ட வீரர்களின் பெயர்களை குழந்தைகளுக்கு வைப்பது வழக்கமென்றாலும், அப்பெயர் அவ் வீரனோடு சம்பந்தப்பட்ட நிகழ்வை எண்ணத்தில் மீட்டுருவாக்கம் செய்யுமென்ற சிந்தனையோடு பெயர் வைப்பதென்ற முறை புதுமையாகத் தோன்றுகிறது. காந்தியின் கொள்கைகளையும் அதன் இன்றைய தேவையையும் கிருஷ்ணம்மாளின் சேவையையும் இரத்தினச் சுருக்கமாக அறிந்து கொண்டது வாழ்வின் பயணத்தில் மற்றொரு துணையைக் கண்டறிந்ததைப் போன்றதொரு உணர்வைத் தந்தது. குடிப்பெயர்ச்சிகளின் வகைகளையும் அதன் மூல காரணத்தையும் ஆராய்ந்த விதம் அருமை. குடிப்பெயர்ச்சியில் மேலொங்கியிருக்கும் குணமாக ஆணாதிக்கமே உள்ளது அதனால் தான் சக இனமான பெண்ணினத்தை கொலை செய்யும் அளவிற்கு துணிவும் வந்துவிடுவதாக எண்ணத் தோன்றுகிறது. அத்துடன் தன் இருப்பின் சுவடை விட்டுச் செல்ல வேண்டுமென்ற எண்ணம் தோன்றும் சமயங்களிலெல்லாம் சாதிய இறுக்கத்தை கடைபிடிக்க முயல்வதில்லை அதுமட்டுமல்லாது இனத்தூய்மை எண்ணமும் தலைதூக்குவதில்லை. இவ்வளவு காலமும் கடத்தப்படாத ஒரு விசயம் 'உலகில் தூய்மையான இனம் என்ற ஒன்று எங்கும் எப்போதும் இருந்ததில்லை' என்பதே. மற்றொன்று அனைவருமே சாதி மட்டுமே தன்னை தகவமைத்துக் கொள்வதாக தொடர்ந்து எழுதி வருவது. மனிதர்கள்தான் சாதி என்னும் உணர்வுக்காக தங்களை தகவமைத்துக் கொள்கிறார்கள் என்றெழுதுவதே சாலப் பொருத்தமாக இருக்கும். நொபொருவின் நூல்கள் புதிய சாதிகளின் உருவாக்கத்திற்கு நிலத்தின் மீதான உரிமையே மூல காரணமாக இருந்திருக்கிறதென்பதை வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது. அத்துடன் அவரின் நூல்கள் பல்வேறு ஆய்வுகளுக்கும் இட்டுச் செல்லும் வாய்ப்பை நிறையவே பெற்றுள்ளதென்பதை ஆணித்தரமாக சொல்லலாம். பெண்களை தேவதாசிகளாக்கும் சடங்கு நிகழ்வை படிப்பதற்கே குலை நடுங்குகிறது என்றால் அதை செய்தவர்கள் பட்ட வேதைனையை எண்ணிப்பார்க்க கூட மனதில் துணிவில்லை

**சி சு ஜெகன்நாதன், பெங்களூரு**

**ரூ**பன் சிவராஜா கட்டுரை மிக நன்றாக உள்ளது. நிறைய விவரங்களைக் கொடுத்துள்ளார். பா.பாவேந்தன் கட்டுரையும் நன்று.

**பீட்டர் துரைராஜ், சென்னை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை | துருவன்

# பூமியைத் தாக்குமா 2024 YR4 சிறுகோள்?



**நா**ம் வாழும் இந்த பூமியை ஒரு சிறு கோள் இன்னும் ஏழு ஆண்டுகளில் தாக்க வாய்ப்பு இருப்பதாக நாசா விஞ்ஞானிகள் முதலில் தெரிவித்தனர்.

*2024 YR4* என்று பெயரிடப்பட்ட சிறுகோள் *(Asteroid)* ஒன்று, வரும் *2032*ஆம் ஆண்டு டிசம்பர் *22*ஆம் தேதி பூமியுடன் மோதுவதற்கு வாய்ப்புள்ளதாக நாசா அறிவித்திருந்தது. பிப்ரவரி *18* ஆம் தேதி கணிப்பின்படி *3.1*சதவீத சாத்தியங்கள் உண்டு என்று நாசா விஞ்ஞானிகள் அறிவித்தார்கள். இந்த சிறுகோள் முதலில் *1* சதவீத சாத்தியம்தான் இருந்தது. பிப்ரவரி முதல் வாரத்தில் இது *2.3* சதவீதமாக இருந்தது. தற்போது அது *1.5* சதவீதமாக குறைந்துள்ளது. ஆனாலும், இது குறித்து இன்னும் அதிக தரவுகள் திரட்டப்பட்டு கொண்டிருக்கின்றன. வரும் *2028* ஆண்டில் இந்த சிறு கோளை பூமியில் இருந்து தொலைநோக்கி வழியாக பார்க்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளதால், அப்போது அது பூமியை தாக்குவதற்கான வாய்ப்புகள் எத்தனை சதவீதம் உள்ளது என்பதை தெளிவாக அறிய முடியும்.

*'2024 YR4'* இல் உள்ள *'YR4'* என்பது சிறுகோளுக்கு வழங்கப்பட்ட அடையாளத்தைக் குறிக்கிறது, இங்கு *'Y'* என்பது டிசம்பர் *2024* இன் இரண்டாம் பாதியில் கண்டுபிடிக்கப்பட்டது என்பதைக் குறிக்கிறது, மேலும் *'R4'* என்பது அந்தக் காலகட்டத்தில் நிகழ்ந்த *117*வது சிறுகோள் கண்டுபிடிப்பாகும்.

இந்த சிறுகோள் *27* டிசம்பர் *2024* அன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த சிறுகோள் *40* முதல் *90* மீட்டர் அளவுதான் உள்ளது. இது சுற்றி வரும் வேகம் என்பது மிகவும் அதிகமாகும். அதாவது மணிக்கு ஒரு லட்சம் கிலோ மீட்டருக்கும் அதிகமான வேகத்தில் பூமியின் மீது மோதும் போது சுமார் எட்டு மெகா டன் டிஎன்டி *(TNT)* வெடிமருந்து வெடித்ததுபோல இருக்கும். அதாவது இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் வீசப்பட்ட அணுகுண்டை விட *500* மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கும். ஒரு பெருநகரமும் அதன் சுற்றுப்பகுதி நகரங்களும் ஒரே நிமிடத்தில் பொசுங்கிவிடும். அதோட இது ஏற்படுத்தும் அதிர்வலைகள் மிக மிக அதிகமாகும் . இந்த சிறுகோள் பூமியின் மீது மோதினால் சுமார் ஒரு கோடிக்கும் அதிகமான மக்கள் பெரும் ஆபத்தைச் சந்திக்க வேண்டி வரும்.

இதுபோன்ற விண்கல் மோதலின் அறிவித்தல்கள் வரும் ஆனால் வராது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்த சிறுகோள் 40 முதல் 90 மீட்டர் அளவுதான் உள்ளது. இது சுற்றி வரும் வேகம் என்பது மிகவும் அதிகமாகும். அதாவது மணிக்கு ஒரு லட்சம் கிலோ மீட்டருக்கும் அதிகமான வேகத்தில் பூமியின் மீது மோதும் போது சுமார் எட்டு மெகா டன் டிஎன்டி (TNT) வெடிமருந்து வெடித்ததுபோல இருக்கும். அதாவது இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் வீசப்பட்ட அணுகுண்டை விட 500 மடங்கு சக்தி வாய்ந்ததாக இருக்கும்.**

போல இருக்கும். இந்த முறையும் அதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாகவே தெரிகிறது. இருந்தாலும் சில நாட்களுக்கு முன்பு நாசா இந்த சிறுகோள் பூமியை தாக்கும் வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக கூறியது, இதனால் அறிவியலாளர்கள் உட்பட பலரும் உலகம் முழுவதும் பதட்டம் அடைந்தனர்.

வானியற்பியலாளர்கள் இந்த சிறுகோளை மிகவும் முக்கியமானதாக பார்க்கின்றனர். ஜேமஸ் வெப் தொலைநோக்கி மார்ச் மாதம் இதை நோக்கி திருப்பி, முழுமையான தகவல்களைத் திரட்டுவதற்கு ஆயத்தப்படுகிறது. சர்வதேச விண்வெளி கண்காணிப்பு அமைப்புகளான, "International Asteroid Warning Network (IAWN)", "The Space Mission Planning Advisory Group (SMPAG)" ஆகியவை இணைந்து மிகத்தீவிரமாக கண்காணித்து வருகின்றன.

இந்த 2024 YR4 விண்கல், 'அப்போலோ மாதிரி விண்கல்' (Apollo Type Asteroid) எனப்படுகிறது. புவிபோல இதுவும் சூரியனைச் சுற்றிவரும் ஒரு விண்கல்தான். ஆனால், பூமியின் பாதையின் குறுக்கே வெட்டிச்செல்லும் விதத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது. இதுவரை அதில் எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால், 2032 ஆம் ஆண்டு, அக்குறுக்கீடு கிட்டத்தட்ட மோதலுக்கான நெருக்கத்தை அடையக்கூடுமா? என்று ஆய்வு செய்து வருகின்றனர். இன்றைய தினம் வரை இந்த சிறுகோள் பூமியை தாக்குவது மிக மிக குறைவே என்று தெரியவந்துள்ளது.

இந்த சிறு கோளின் மோதல் சதவீதம் மேலும் அதிகரித்தால், ஆபத்து மிகவும் அதிகரித்துவிடும். உலக நாடுகள் ஒன்று சேர்ந்துதான் இந்த ஆபத்தைத் தடுக்க முடியும்.

### ஆஸ்டிராய்டு (சிறு கோள்கள்)

ஆஸ்ட்ராய்ட்ஸ் என்பது சிறு கோள்களாகும். சிறு கோள்களும் சூரியனை சுற்றி வருகின்றன. இவை வெள்ளி, செவ்வாய், பூமி போன்ற கோள்களை விட மிகச் சிறியதாக இருக்கும். சூரிய குடும்பம் உருவானபோது அதிலிருந்து சிதறடிக்கப்பட்ட வான் பொருள்தான் சிறுகோள்கள். கோள்களை போல் கோள வடிவத்தில் இவை காணப்படுவதில்லை, வித்தியாசமான வடிவங்களில் காணப்படும். இதனுடைய அளவுகளும் வேறுபடும், ஒரு சிறிய உருளைக்கிழங்கு அளவில் இருந்து பல கிலோமீட்டர் விட்டம் கொண்ட ( ஒரு பெரிய டைட்டானிக் கப்பல் அளவு)சிறு கோள்கள் உள்ளன. இந்த சிறு கோள்களில் நிக்கல் மற்றும் இரும்பு ஆகிய உலோகங்கள் அதிக அளவில் உள்ளன. சிறு கோள்கள் செவ்வாய் மற்றும் வியாழன் கோள்களுக்கு இடைப்பட்ட பகுதியில் லட்சக்கணக்கில் காணப்படுகின்றன.



சில ஆயிரக்கணக்கான சிறு கோள்கள் பூமிக்கு அருகிலும் சுற்றி வருகின்றன .(அருகில் என்பது பல லட்சக்கணக்கான கிலோமீட்டர் தொலைவு கொண்டதாகும்) இந்த சிறு கோள்களில் தங்கம், பிளாட்டினம் போன்ற உலோகங்கள் காணப்படுகின்றன. சில, சிறு கோள்களில் தண்ணீரும் காணப்படுகிறது.

சில ஆஸ்ட்ராய்டுகள் கோள்களின் சுற்றுப்பாதையை கடந்து செல்லும். இது குறித்து ஆய்வு செய்யும் பொழுது சூரிய குடும்பம் ஆரம்பம் எப்படி இருந்தது என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விஞ்ஞானிகளால் கண்டறிய முடியும். ஆஸ்ட்ராய்ட் பட்டையில் இதுவரை எண்ணப்பட்டுள்ள ஆஸ்ட்ராய்டுகளில் எண்ணிக்கை என்பது 90 ஆயிரம் ஆகும்.

### நியோவைஸ் தொலைநோக்கி:

நியோவைஸ் தொலைநோக்கி என்பது NASA விண்வெளி தொலைநோக்கி ஆகும், இது பூமியை அச்சுறுத்தும் சிறுகோள்கள் மற்றும் வால்மீன்களை கண்டுபிடிக்க உதவியது. . இது முதலில் 2009 இல் வைட் ஃபீல்ட் இன்ஃப்ராரெட் சர்வே எக்ஸ்ப்ளோரராக (WISE) தொடங்கப்பட்டது. NEOWISE பூமியை 95 நிமிடங்களுக்கு ஒரு முறை, ஒரு நாளைக்கு 15 முறை சுற்றி வந்தது.

பூமிக்கு அருகிலுள்ள பொருட்களை (NEOS-Near Earth Objects) அடையாளம் காணவும் வகைப்படுத்தவும், இது அகச்சிவப்பு நிறக்கதிர்களை பயன்படுத்தி வானத்தை மீண்டும் மீண்டும் ஆய்வு செய்து வந்தது. இது சிறுகோள்கள் மற்றும் வால் நட்சத்திரங்களின் அளவு, சுற்றுப்பாதை உள்ளிட்ட தரவுகளை சேகரிக்கிறது. இந்த தொலைநோக்கி மூலம் ட்ரோஜன் சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது. சிறுகோள்கள் மற்றும் வால் நட்சத்திரங்களின் சுற்றுப்பாதைகளைச் செம்மைப்படுத்த உதவியது. 44,000 க்கும் மேற்பட்ட சூரிய மண்டலப் பொருட்களின் மீது 1.45 மில்லியன் அகச்சிவப்பு அளவீடுகள் செய்யப்பட்டன

புகழ்பெற்ற வால்மீன் NEOWISE உட்பட 215 வால் நட்சத்திரங்கள் இதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன. இது பூமிக்கு அருகில் உள்ள பொருட்களைப் பற்றிய நமது புரிதலை அதிகரித்துள்ளது. இந்த தொலைநோக்கியை ஆகஸ்ட் 8, 2024 அன்று உறக்கநிலையில் வைத்தனர்.

### நியோ சர்வேயர் - NEO Surveyor

NEOWISE விண்வெளி தொலைநோக்கியின் வெற்றியின் அடிப்படையில், பூமிக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய பெரிய அளவிலான சிறுகோள்கள் மற்றும் வால்மீன்களைக் கண்டுபிடிப்பதற்காக NEO சர்வேயர் என்ற விண்கலம் உருவாக்கப்பட்டுள்ளது. இது விரைவில் விண்ணில் செலுத்தப்பட உள்ளது. இதன் மூலம் பூமியை தாக்க வரும் வான் பொருட்கள் எவை எவை என்ற விவரங்கள் நமக்கு கிடைக்கும். அதற்கு ஏற்ப தக்க நடவடிக்கைகள் எடுக்க இந்த விண்கலம் மனிதர்களுக்கு உதவும்.

●

கட்டுரையாளர்: எழுத்தாளர்

Owned and Published and Printed by V.Muthiah and Published from 22/32 M.J.B Street,Triplicane, Chennai-600005 and Printed at Sekar Offset Printers, 50/168, Big Street, Chepauk, Chennai-600005. Editor: V.Muthiah

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சனாதனம் அறிவோம்

2ஆம் பக்கத் தொடர்ச்சி...

கல்யாணம் மற்றும் சிரார்த்த சடங்குகள் செய்யும்போது பூணூல் அணிவிப்பதன் மூலம் அவனை தற்காலிகமாக இருபிறப்பாளர்கள் ஆக்குகிறார்கள். பூணூல் அணிவிக்கும்போது அவனுக்குள் ஒரு அற்ப சந்தோசம் ஏற்படுகிறது. மஹாபாரதத்தில் பக்கத்திற்குப் பக்கம் பிராமணர்களின் மேன்மை, சாதுரியம், அருமை, பெருமை பேசப்படுகிறது. ஆங்கிலேயரது ஆட்சிவரை, மன்னர்கள் குற்றவியல், உரிமை வழக்குகளுக்கு தர்ம சாஸ்திர நூல்களைக் கொண்டு தீர்ப்பு கொடுத்தனர், என்று சொல்லி மனுதரும சாஸ்திரம், விதுர நீதி, சுக்கிர நீதி, பிரகஸ்பதி ஸ்மிருதி, யாக்யவல்கிய ஸ்மிருதி போன்றவை உள்ளிட்ட 21 நூல்களின் பெயர்களைத் தருகிறார். இவைகளில் மனு தர்ம சாஸ்திரம் தவிர முழுமையாக மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் இன்று வரை இல்லை என்கிறார். இதுபோன்ற எண்ணற்ற குறிப்புகள் இந்த நூலில் வருகின்றன. இது படிக்க சுவாரசியமாக உள்ள நூல்தான்.

ஒடுக்கப்பட்டவர்கள் சனாதனிகளல்ல, கீதை கூறும் ஸநாதநம், ஸனாதன மாநாடு, சோழர்கள் மநுவின் வம்சாவளி, பதியை இழந்தவள் இருந்தும் இறந்தவளே - போன்ற 52 தலைப்புகளில் கட்டுரைகள் உள்ளன. ஒவ்வொரு கட்டுரையும் 4,5 பக்கங்களில் உள்ளது. ஒவ்வொரு கட்டுரையின் பெரும்பகுதியிலும், சனாதனம் குறித்த எழுதப்பட்டவைகள் அப்படியே கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியப் பகுதியில், அது தொடர்பான தனது விளக்கங்களை ஆசிரியர் கொடுத்துள்ளார்.

சாதி ஒழிப்புக்கு அடிப்படையானது, கருத்தியல் போராட்டமாகும். மக்களின் மனோபாவத்தில் மாற்றம் வராமல் சாதி ஒழிப்பு சாத்தியம் இல்லை. மதுரை பேராசிரியர் இரா. முரளி, 'சாதிய தாக்குதல்களுக்கு முக்கிய விதையிட்டது ஆதி மூலமாகிய சனாதனம்தான் என்பதை ஆதாரப்பூர்வமாக நிலைநாட்ட எடுத்துள்ள முயற்சி பெரும்பாலும் வெற்றி அடைந்ததாக' இந்த நூல் பற்றி அணிந்துரையில் கூறுகிறார். 'வார்த்தைகளால் வசைபாடாமல் வாசகர் சிந்தனைக்கு விட்டுவிட்டுள்ளது சிறப்பு' என்றும் கூறுகிறார். இவர் தத்துவம் குறித்து தொடர் வகுப்புகளை முன்னெடுத்தவர். மக்கள் உரிமைக் கழகத்தின் ஆர்வலர் என்பதும் பலருக்குத் தெரிந்திருக்கலாம்.

சோழர்கள் மனுதர்மத்தை அடியொற்றியே ஆட்சிசெய்தனர். அதனால்தான் மனுநீதி சோழன், மனுகுலதீபன் போன்ற பெயர்களை விரும்பி ஏற்றுக் கொண்டனர். சிரார்த்தம், திதி, திவசம், தர்ப்பணம் என பித்ருக்களுக்கான சடங்குகள் ஆண்மகனை வைத்தே செய்யப்படுகிறது. இதனால் ஒரு ஆண் குழந்தையாவது வாரிசு வேண்டும் என்ற வழக்கம் வந்தது. இதனால் ஆண் ஆதிக்கம் நிலைபெற்றது. பால்ய விவாகம்தான் சாஸ்திரீயம்; எனவே விவாஹ விஷயத்தில் சாரதாபில் (குழந்தை திருமண வயதை உயர்த்தும் சட்டம்) கூடாது, மத விவஹாரங்களில் அரசாங்க தலையீடு கூடாது என்று ஸனாதன மகாநாடு (1931) இயற்றிய தீர்மானங்களையும் இந்த நூல் விவரிக்கிறது. தீண்டாமையை விலக்க வேண்டும் என்று காந்தி அபிப்பிராயம் சொன்னால், அவரது அபிப்பிராயத்திலிருந்து ஸநாதன மகாநாடு விலகிக் கொள்கிறது, என்பது போன்ற செய்திகளும் வருகின்றன.

இந்து மதத்திற்குள் சீர்திருத்தம் வேண்டி ஆரிய சமாஜ இயக்கத்தினை நிறுவிய தயானந்த சரசுவதி சாமிகள், 'போலி பிராமணர்' என்ற தலைப்பில் சதி, பால்ய விவாகம், சிலை வணக்கம், பலியிடுதல், வர்ணாசிரம சாதிப்பிரிவினை போன்றவைகளை எதிர்த்து எழுதி இருக்கிறார். சாஸ்திரம் என்றால் கட்டளை என்று பொருள்; அதில் எழுதியுள்ளது: 'பெண்ணானவள் அடிக்கடி சிரிக்கலாகாது. நெருப்பை வாயினால் ஊதலாகாது', என்பதும் சாஸ்திரம்தான்.

விவேகானந்தரின் உரை புகழ்பெற்ற ஒன்று. அதில் 'இந்தியாவில் உள்ள எல்லா சாதியினரும் சமஸ்கிருதம் படிப்பதற்காக ஏன் முயற்சிக்கக் கூடாது ? பண்பாட்டிற்கு காவலாக இருப்பவன் பிராமணன். அவன் இப்போது அதை எல்லா மக்களுக்கும் வாரி வழங்க வேண்டும்' என்கிறார். 'ஒரு ஜாதியிற் பிறந்தவன் தன் ஜாதிக்குரிய தர்மங்களை அனுஷ்டித்தாலும், அவனுடைய நிகழ்காலப் பிறவி முடியும்வரையில் அவன் அந்த ஜாதியைச் சேர்ந்தவன்தான்' என்று பகவான் கீதையில் சொல்கிறான் என்கிறார்.

அடிப்படையில், சனாதனம் குறித்த பல்வேறு பார்வைகளை தொகுத்து ஒரே நூலில் வழங்கியுள்ளார் ஆசிரியர். கடின உழைப்பில்லாமல் இது சாத்தியமில்லை. வைதிக மதம் என்ன சொல்கிறது என்பதை தெரியப்படுத்த வேண்டும் என்ற உறுதிப்பாடு காரணமாகவே இதை ஆசிரியர் செய்திருக்கிறார். எனவே, இது தத்துவப் புலத்தில் மிக முக்கியமான வேலை. இது ஒரு கருத்துப் போராட்டம்தான். இந்தநூல் எழுப்பும் கேள்விகள், தொடர்வினைகளுக்கு உந்துசக்தியாக இருக்கும்.

செ.தினகரனின் இந்த நூலை (பக்கம் 432 - ரூ.500) நியூ செஞ்சுரி புத்தக நிலையம் வெளியிட்டு, பாராட்டத்தக்க பணியைச் செய்துள்ளது.

●

*கட்டுரையாளர்: எழுத்தாளர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kaakkai Cirakinile (Monthly) Register of Newspapers for India No. TNTAM / 2012 /43921
Postal Registration No. TN/CH(C)/617/2024-2026
ISSN 2348 - 4160 Date of Publication, 25th of Every Month Posted at patrika channel, Egmore. between 29th-4th of every month






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org